# மௌனம் பேசியதே!

அமுதவல்லி கல்யாணசுந்தரம்



# மௌனம் பேசியதே!

அமுதவல்லி கல்யாணசுந்தரம்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மௌனம் பேசியதே! |
| ஆசிரியர் | : அமுதவல்லி கல்யாணசுந்தரம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : மார்ச், 2013 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 300 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.140.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




## முன்னுரை

அன்பு வாசக நெஞ்சங்களே.
வணக்கம்.

இது என்னுடைய இருபத்தி ஐந்தாவது நாவல். இந்த நாவலை இந்திய எல்லையில் இரவும் பகலும் அயராது காவலுக்கு நிற்கும், ராணுவ வீரர்களுக்கு சமர்ப்பணம் செய்கிறேன். இந்த நாவலின் மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. மறைந்து வரும் கூட்டுக் குடும்ப அமைப்பினைத் தொடர வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும், விட்டுக் கொடுத்தலே குடும்பத்தில் நிலையான சந்தோஷத்தைக் கொடுக்கும் என்ற கருத்தையும் சொல்லி எழுதப்படும் என் கதைகளுக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமணம் முடிந்த ஒரு வருடத்திலேயே, இளம் விதவையாக நிற்கும் ஒரு பெண்ணிற்கு மறுவாழ்வு கொடுக்கும் ஒரு ராணுவ வீரனின் கதை இது.

அப்பெண்ணிற்கு ஒரு வளமான எதிர்காலத்தை அமைக்க, முயற்சி செய்யும் மாமியாரைப் பற்றிய கதை இது. பெண்ணுக்கு பெண்ணே முதல் எதிரி என்ற சொற்றொடரை அழிக்க பிறந்த கதை இது. படித்து ரசியுங்கள். உங்களின் விமர்சனங்களுக்காக காத்திருக்கிறேன்.

எனது மின்னஞ்சல் முகவரி amuthakalyan@gmail.com

அன்புடன்

அமுதவல்லி கல்யாணசுந்தரம்

## பதிப்புரை

நாளுக்கு நாள் வாசகர்களின் பேராதரவு பெற்று வரும் எழுத்தாளர் திருமதி அமுதவல்லி கல்யாணசுந்தரத்தின் 25வது நாவல் 'மௌனம் பேசியதே' என்பது குறிப்பிடத் தக்கது.

நாளுக்கு நாள் வாசகர்களின் பேராதரவு கிடைத்து வருவது மகிழ்ச்சிக்கு உரியது.

நல்ல சுவையான கதை அமைப்பும், நீரோட்டமான தமிழ் நடையும் அன்றாடப் பிரச்சனைகளை அலசி ஆராய்கிற தன்மையும் மிகவும் பாராட்டுக்கு உரியது.

மேலும் மேலும் வாசகர்களின் ஆதரவு பெருகப் பெருக ஆசிரியையின் ஆர்வமும், திறமையும் புகழும் பெருகும் என்பதில் ஐயமில்லை.

மேலும் மேலும் படியுங்கள். கருத்தினை எழுதுங்கள்.

- அருணோதயம் அருணன்

## ஆசிரியரின் பிற படைப்புகள்

1. பிரியமுடன்
2. என்னுயிரே
3. அன்புள்ள மன்னவனே
4. அன்பெனும் மழையில்
5. நீ பாதி நான் பாதி
6. வானம் வசப்படும்
7. வசந்தம் தேடும் வானவில்
8. நெஞ்சுக்குள்ளே இன்னாரென்று
9. காதல் சொன்ன கணமே
10. பூமாலையே தோள் சேரவா
11. பார்த்த ஞாபகம் இல்லையோ
12. உறவுகள் தொடர்கதை
13. என்றென்றும் அன்புடன்
14. உயிரே உறவாக வா
15. கண்களின் வார்த்தைகள் புரியாதோ?
16. உனக்கென நான் பிறந்தேன்
17. பிரிவோம் சந்திப்போம்
18. கண்ணன் வரும் வேளை
19. கண்மணியே பேசு
20. தொடத் தொட மலர்ந்ததென்ன
21. அன்பில் விளைந்த ராகமே
22. ஒரு தாயின் ஜனனம்
23. நிழலாக நானிருப்பேன்
24. பூங்கதவே தாழ் திறவாய்!
25. மௌனம் பேசியதே!

# மௌனம் பேசியதே!

**சத்யமூர்த்தியின் டைரி குறிப்பு 1**

இன்று பதினெட்டாவது பிறந்த நாள்! குழந்தை பருவத்தை சட்ட ரீதியாகத் தாண்டி, ஆண்மகன் என்ற தகுதி கோட்டிற்குள் அடி எடுத்து வைக்கும் நாள் என்ற சந்தோஷமும், ஆசிரம விதிப்படி, பதினெட்டு வயதைத் தாண்டியவர்கள் அங்கே தங்கி இருக்க முடியாது என்ற அடிப்படையில், வேறு இடத்திற்கு இடம் பெயர வேண்டும் என்ற எண்ணம் தந்த வருத்தமும் சேர்ந்தே இருந்தது.

அந்த நாள் முடியும் போது, நாலு லட்ச ரூபாய் பணமும், மூன்று செண்ட் நிலமும், அதில் ஒரு பழைய வீடும் இருப்பது கைக்கு வந்து அவனின் வருத்தத்தை அதிகரித்தது.

தனக்காக சில லட்சங்கள் பெறுமானமுள்ள இடத்தைக் கொடுத்து, வங்கிக் கணக்கில், சில லட்சங்களை

டெபாசிட் செய்ய முடிந்த பெரிய மனிதர்களால், நேருக்கு நேர் நின்று, நான் அன்னை, நான் தந்தை, என்று ஒரு உறவு முறை சொல்லி, பாசத்தைக் காட்ட முடியாமல் போனது மனதை உலுக்கியது. அந்த இளம் வயதிற்குரிய கோபமும் ஆத்திரமும் பொங்க, அதை யாரிடமும் வெளிக்காட்ட முடியாது என்பதால், ஆதங்கம் எழுந்தது.

**சத்யமூர்த்தியின் டயரி குறிப்பு 2**

'இந்த வீட்டை இப்போதைக்கு பயன்படுத்திக் கொள்' என்ற ஆசிரம தலைவரின் அறிவுரையை மனமின்றி ஏற்றுக்கொண்ட அந்த நாள் அவன் வாழ்க்கையில் பணத்தின் அருமையை உணர்த்தியது.

'படிப்பை முடிக்கும் வரை இதைப் பயன்படுத்திக் கொள்கிறேன். ஒரு வேலையில் அமர்ந்த உடனே, இந்த வீட்டை ஆசிரமத்திற்கு எழுதித் தருவது தான் முதல் வேலை' என்ற உத்திரவாதத்துடன் அந்த வீட்டைப் பயன்படுத்தினான்.

ப்ளஸ் டூ வரை ஆசிரமத்தில் தங்கி, அரசு பள்ளியில் படித்தவன், இப்போது உதவி தொகையுடன் பொறியியல் படிப்பு படிக்கக் காரணம் பிரசன்னா. பெற்றோர், உற்றார், உறவினர் என்று யாரும் இல்லாமல் தனிமையில் உழன்ற எனக்கு தோழமை தந்தவன்.

பகலில் கல்லூரிப் படிப்பு, காலையிலும் மாலையிலும், பத்து பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதமும் அறிவியலும் கற்றுக் கொடுக்கும் பணி, என்று மூச்சு விட நேரம் இல்லாமல் ஓடிக் கொண்டு இருந்த காலத்தில், தோழமை கொடுத்தவன்.



படிப்பிற்கான உதவி, தொகை, பண்டிகை நாட்களில் புத்தாடைகள், பலகாரங்கள், அவ்வப்போது உணவு என்று தொடர்ந்து ஆதரவு காட்டிய அவனுக்கு என்னால் அந்த அன்பை ஒன்றுக்குப் பத்தாக வழங்குவதைத் தவிர என்ன நன்றி செலுத்த முடியும்?

**சத்யமூர்த்தியின் டயரி குறிப்பு 3**

இன்று தீபாவளி பண்டிகை. இருபத்தி ஒரு வயதில், தன் சுய சம்பாத்தியத்தில், சொந்த வீடு கட்டிய பெருமிதத்துடன் உலா வந்த நாள். கல்லூரி படிப்பில் இறுதி ஆண்டில் இருப்பதால், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு எழுதி, இந்தியன் ஆர்மிக்கு தொழில் நுட்ப பிரிவில் தேர்ச்சி பெற்று இருந்த சந்தோஷத்தை பிரசன்னாவுடன் பகிர்ந்து கொண்ட நன்னாள்.

பத்துக்கு பத்திலான அறையும், முன்னால், கீற்றினால் கூரை வேய்ந்து இருந்த அந்த தாழ்வாரமுமே அவனுக்கு பெரிய அரண்மனையில் வசிப்பதை போன்ற பெருமித உணர்வை ஏற்படுத்தி இருந்தது.

பாடம் சொல்லிக் கொடுப்பதன் மூலம் கிடைத்த சொற்ப வருமானத்தில், தானே சம்பாதித்துக் கட்டியது என்ற பெருமையில் தலை கால் புரியாத சந்தோஷமும் இருந்தது. பண்டிகையை பிரசன்னாவுடன் கொண்டாடி விட்டு, சைக்கிளில் வீடு திரும்பியவனை தெரு முனையில் கண்ட காட்சி உறைய வைத்தது.

ஒரு சிறுமியை, அவளை விட மூத்தவளாக இருக்கக் கூடிய ஒரு பெண், கை நீட்டி அறைந்த கட்சி அவன் கண்ணில் பட்டு திகைக்க வைத்தது. அதுவும் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று அறைகள், கண்ணிமைக்கும்

நேரத்தில் இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி விழுந்து அவனைப் பதற வைத்தது.

திமிர் பிடித்தவள், பாவம் சின்ன பெண்ணை இப்படி பொது இடத்தில் லஜ்ஜையின்றி கை நீட்டுகிறாளே! தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற அகங்காரமா?

“ஏய்! நில்லு, எதற்கு அந்த சின்னப் பெண்ணை போட்டு இப்படி அடிக்கிறாய்? என்ன கொழுப்பா? உன்னை தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற தைரியமா?” என்று தான் வந்த சைக்கிளை போட்டு விட்டு ஓடி வந்து சிறுமியை விலக்கி விட்டு அவளை அறைய கை ஓங்கினான். ஓங்கிய கை அவளின் கன்னத்தில் இறங்கவே இல்லை. சீறும் நாகம் போல அவனை நிமிர்ந்து வெறித்தவள் கண்களில் என்ன இருந்தது?

தானே ஆறடியைத் தொட்டுக் கொண்டு இருக்க அவள் தன் தோள் வரை வந்தாள். அவள் கண்களில் இருந்த குற்றம் சாட்டும் பாவனையும், கோபமும் அவனைப் பல கணங்கள் உறைய வைக்க, ஒரு சின்ன தலை சிலுப்பலுடன், பிடியில் இருந்து விலகி பக்கத்துத் தெருவில் நுழைந்து சென்று விட்டாள்.

அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி, வீட்டுக்கு வந்து சேர்ந்தால், அங்கே வாசலில், வாசலில் சிதறிக் கிடந்த கிழிசல் துணிகளுடனும், வாசலில் ரத்தக் காயத்துடன், ஒரு நாய் படுத்து இருந்தது. கூடவே வீட்டின் முன்புறம் இருந்த பக்கவாட்டு கூரை வேய்ந்த பகுதியில், தீ பிடித்து கருகிய அடையாளமும், அவசரமாக நீர் ஊற்றி அணைத்த தடமும் தெரிய, என்ன நடந்து இருக்கக் கூடும் என்று ஊகிக்க முடிந்தது.



நாய் வாலில் பட்டாசு வைத்தது சிறியவள். அதை அவள் கண்டித்து இருக்கிறாள். பொறுப்புடன் நடந்து கொண்டவளை குற்றம் சொன்னால் எப்படி இருக்கும்? அது தான் அந்தக் கோபம். இவளை நான்கு ஆண்டுகளில் இங்கே பார்த்ததே இல்லையே?

யார் இவள்? அவளைத் தேடி அடுத்த தெருவில் சில மணி நேரம் கழித்து விசாரித்தபோது அவள் கிளம்பி இருந்தாள். அங்கே இல்லை. அவளை மீண்டும் சந்திக்க வேண்டும். சந்தித்தால், அவசரப்பட்டு அவளை கை ஓங்கியதற்கு மறக்காமல் மன்னிப்பு கேட்க வேண்டும். கூடவே தன் சுய சம்பாத்தியம், தீ விபத்தில் எரிந்து சாம்பலாகாமல் தடுத்ததற்கு ஒரு நன்றியும் சொல்ல வேண்டும்.

**நிர்மலா தேவியின் டயரி குறிப்பு 1**

மனம் ஆறவே இல்லை! ச்சே! தீபாவளி பண்டிகையும் அதுவுமாக, வசுந்தரா செய்த குறும்புக்கு அவளை அடிக்க கை ஓங்கி விட்டானே? யார் அவன்? யாராக இருந்தால் அவளுக்கென்ன?

தங்கள் வீட்டில் பண்டிகை இல்லை. குழந்தைகள் ஏமாற வேண்டாமே! என்று தாய் மாமா வீட்டிற்குத் தங்களை வெளியூர் அனுப்பி வைத்தால், இப்படி தான் காரியம் செய்வாளா? இவளின் குறும்புத் தனத்திற்கு ஒரு அளவே இல்லாமல் போய் விட்டது. பாவம் வாய் இல்லாத ஜீவனின் வாலில் வெடியைக் கோர்த்து... கடவுளே!

நல்லவேளை! அந்த தீ, பக்கவாட்டு கூரையில் பற்றியது மேற்கூரையில் பற்றி இருந்தால் அணைப்பதும் சிரமம். சேதமும் அதிகமாக இருந்து இருக்கும். அவசரமாக வாசலில் தொட்டியில் இருந்த நீரை ஊற்றி தீயை

அணைத்து அவனின் பொருளை காப்பாற்றிக் கொடுத்தால் அதற்கு நன்றி சொல்லா விட்டாலும் ஒழிகிறது என்று விடலாம். ஆனால் அடிக்க வருகிறானே?

இவன் மிலிட்டரியில் சேரப் போகிறான் என்று தெருவே பேசிக் கொள்கிறது. இப்படித்தான் மிலிட்டரியில் கண் மண் தெரியாமல் சண்டை போடுவார்களோ? ஆர்மியில் சேர்ந்து எதிரிகளிடம் போட வேண்டிய சண்டையைக் காட்ட வேண்டிய வீரத்தை என்னிடம் காட்டுகிறான்.

அம்மா அப்பா அண்ணன் தங்கை என்று குடும்பத்தில் பிறந்து வளர்ந்து இருந்தால் நல்லது கெட்டது புரிந்து இருக்கும். என்னை தட்டிக் கேட்க ஆள் இருக்கிறது. இவனை கேட்க தான் ஆள் இல்லை. அதனால் தான் இப்படித் தான் தோன்றித் தனமாக திரிகிறான். 'நன்றும் தீதும் பிறர் தர வாரா' என்ற மூதுரை பொய்யாகக் கூடுமா? இவன் மிலிட்டரியில் ஆபீசராகப் போகிறானா? இவனை விட பெரிய ஆபீசராக வேண்டும். இவன் எனக்கு சல்யூட் வைக்க வேண்டும்.

**நிர்மலா தேவியின் டயரி குறிப்பு 2**

இந்த அம்மாவும் அப்பாவும் என்னை எப்போது புரிந்து கொள்வார்கள்? பெண்ணாகப் பிறந்து விட்டால் ராணுவத்திற்குப் போகிறேன் என்று சொல்லக் கூடாதா? அதென்ன ஆணுக்கு ஒரு நீதி. பெண்ணுக்கு ஒரு நீதி? ஆணும் பெண்ணும் சமம் என்று அப்பா சொன்னது எல்லாம் ஏட்டு சுரைக்காய் தானா?

பெண் என்று பிறந்து விட்டால், அதிலும் பருவம் அடைந்து விட்டால், பெற்றோர்களின் கட்டுப்பாட்டிற்கு



ஒரு அளவே இல்லாமல் போய் விடுகிறதே? இவர்கள் எந்தக் காலத்தில் இருக்கிறார்கள்? ஆட்டோ ஓட்டுவது முதல் ஆட்சி கட்டிலில் அமர்வது வரை அனைத்து வேலைகளையும் பெண்களால் செய்ய முடியும் என்று நிரூபித்த பின்னரும் இந்த பிற்போக்கு எண்ணங்கள் ஏன்?

இப்போது எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னால் அதை ஏன் கேட்க மாட்டேன் என்கிறார்கள்? ஐந்தே ஆண்டுகள் ஆர்மி சர்வீஸ், முடித்து வந்து இருபத்தி ஆறு வயதில் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்வதை ஒத்துக் கொள்ளக் கூடாதா? எனக்கு பிறகு ஒரு தங்கை, எனக்கு முன்னால் ஒருவன் கல்யாணத்திற்குக் காத்திருக்கின்றனர் என்பது என்ன சாக்கு? அவர்களுக்கு வேண்டும் என்றால் மணமுடிக்க வேண்டியது தானே? நானா வேண்டாம் என்கிறேன்?

சர்வீஸ் முடித்து வந்த உடனே நீங்கள் சொல்லும் மாப்பிள்ளையை கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று உத்திரவாதம் கொடுத்தாகி விட்டது. வராத அழுகையை வரவைத்துப் பார்த்தாகி விட்டது இரண்டு நாட்கள் உண்ணாவிரதம் இருந்து பார்த்தாகி விட்டது. ஒருவாரம் தொடர்ந்த போராட்டத்தின் பலன், 'நீ மிலிட்டரிக்குப் போக வேண்டாம். உனக்கு மிலிட்டரி மாப்பிள்ளை பார்க்கிறேன்' என்ற அப்பாவின் ஆறுதல் மொழி. அதனால் எனக்கு என்ன பயன்? கேட்க வாய் துடித்தது. கேட்டால் மட்டும் என்ன மாற்றம் வந்து விடப் போகிறது?

**நிர்மலா தேவியின் டயரி குறிப்பு 3**

அவளுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அவள் ஒரு புழு பூச்சிக்குக் கூட துன்பம் விளைவித்ததில்லை.

செய்கை இருக்கட்டும். மனத்தால் கூட நினைத்ததில்லை.

அதனாலேயே வீட்டில் அனைவரும் அசைவம் சாப்பிடும்போது எட்டு வயதில் சைவத்திற்கு மாறி, அன்றில் இருந்து அதை கை விரலாலும் தீண்டவில்லை.

பொறியியல் படிப்பை முடித்துவிட்டு, சென்னையில் வேலை செய்யக் கூட விடாமல் அவசரமாகத் திருமணம் செய்து வைக்கவில்லை என்று அவளா கேட்டாள்? எல்லாமே அவசரம் அவசரமாக நடந்து, திருமண வாழ்க்கையையும் ஒரே ஆண்டில் முடிந்து போனது. ஓராண்டு என்பது நாள் கணக்கிற்குத்தான். அவள் அவனைப் பார்த்துப் பழகி மணவாழ்க்கை வாழ்ந்தது பதினான்கு நாட்கள் மட்டுமே!

போன ஆண்டில் விடுமுறைக்கு வந்தபோது பெண்ணைப் பார்த்து நிச்சயம் செய்து, திருமணம் முடிந்த நான்கே நாட்களில் கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. இந்த ஆண்டு விடுமுறையில் வந்த பத்தாவது நாள், வடகிழக்கு மாநிலங்களில் பெய்த தொடர் மழை காரணமாக, நிலச்சரிவு, மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணிக்காக, வழங்கப்பட்ட விடுமுறை ரத்து செய்த உத்தரவு வந்து கிளம்ப நேர்ந்தது.

மூன்றாவது நாள், காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட வேனில் இருந்த பதினைந்து பேரின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில், தேசிய பேரிடர் பாதுகாப்பு மற்றும் மீட்பு படையில் பணி புரியும் நெடுஞ்செழியன் தன்னுயிரை இழந்து விட்டான் என்ற



செய்தியும், அரசு மரியாதையுடன் உடலும் வந்து சேர்ந்தது.

மிலிட்டரியில் சேரவேண்டும் என்ற தன் கனவு நிறைவேறவில்லை. போகட்டும்! அதற்கு ஈடாக, சமாதானம் சொல்லி ராணுவத்தில் பணிபுரியும் ஒருவரை மணம் செய்து வைத்த அந்த வாழ்க்கையும் நிலைக்கவில்லை. அடுத்து, நாளை உடன் பிறந்த சகோதரிக்குத் திருமணம் அதற்குப் போகலாமா வேண்டாமா என்ற பட்டிமன்றம் நடத்தக் கூடிய ஒரு நிலையை ஆண்டவன் அவளுக்கு ஏன் அளித்தான்?

# 1



டேராடூனில் இருந்து சென்னைக்கான இரண்டாயிரத்து ஐநூறு கிலோமீட்டர் தூரம் நீண்ட ரயில் பயணத்தை சத்யமூர்த்தி மேற்கொள்ள காரணம் நாளை பிரசன்னாவின் திருமணம். தொல்லை எதுவும் இல்லாத தொலைதூரப் பயணம், சென்னை க்ரசண்ட் பொறியியல் கல்லூரியில் கழித்த காலத்தை மீண்டும் நினைவில் மலர வைத்தது.

ஆறு ஆண்டுகள் கழித்து மீண்டும் சந்திக்கப் போகிறான். தாய் தந்தை இல்லாமல் ஆசிரமத்தில் வளர்ந்து படித்த தனக்கு பொருளாதார ரீதியிலும், வேறு பல விதங்களிலும் உறுதுணையாய் நின்ற ஒருவனின் திருமணத்தை வருவதைத் தள்ள முடியாது. தன் உறவு நட்பு எல்லாமே அவன்தான்.

வேலை இருக்கிறது. விடுப்பு கிடைக்கவில்லை என்ற காரணம் சொல்லி விடக் கூடாது என்பதற்காகவே தனது வழக்கமான ஆண்டு விடுமுறை டிசம்பர் மாதத்தில் என்பதை அறிந்து இப்போது வைத்து இருக்கிறான். ஜூலை மாதம் பார்த்து முடிவு பண்ணிய பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள ஐந்து மாதங்கள் காத்திருக்கும் அவனின் அன்பிற்கு இவன் என்ன கைம்மாறு செய்யப் போகிறான்?

தனக்கும் பெற்றோர் இருந்தால் இந்நேரம் திருமணம் முடிக்க வேண்டும் என்று விரும்பி இருப்பார்களோ? ஒவ்வொரு முறை பேசும் போதும், ஆசிரமத்தில் விஜய ராகவன் சாரும், பிரசன்னா வீட்டில் ஆன்ட்டியும் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறார்கள். தனக்கு அதில் பெரிதாக ஈர்ப்பு இல்லை. ஒருவேளை அவளை சந்திக்க நேர்ந்தால் ஈர்ப்பு வருமோ!

ரயில் நிலைய பிளாட்பாரம் கண்ணில் பட, சிந்தனையை தற்காலிகமாக நிறுத்தி இறங்கியதுமே, பிரசன்னா அலைபேசியில் அழைத்தான் சத்யமூர்த்தி.

''ஹலோ... பிரசன்னா... நான் சத்யா பேசுகிறேன்...'' என்று ஆரம்பித்த வினாடியில், ''ஹலோ சத்யமூர்த்தி சார், உங்க வலது பக்கம் திரும்பி வெற்றி காபி பார் என்ற போர்ட் தெரியுதா பாருங்க...'' என்ற பிரசன்னாவின் உற்சாகக் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால், அந்த கடையின் பெயர் பலகை தெரிந்தது.

''இருக்கு. என்ன விஷயம்?'' என்று கேட்டபடி வலது கையில் இழுத்த ட்ராலி, முதுகில் மாட்டிய ஒரு பை, இடது கையில் போனை ஏந்தியபடி, அந்த இடத்தை நோக்கி நடந்தான்.



''அந்தக் கடையில், பச்சை நிறத்தில், காலர் இல்லாத டி ஷர்ட்டும், வெள்ளை நிறத்தில் ஸ்போர்ட்ஸ் பேண்ட் போட்டு, சென்னையை இப்போதான் புதுசா பார்க்கிற மாதிரி, முறைச்சுப் பார்த்தபடி யாராவது நிக்குறாங்களா?'' என்ற அவன் கேலிக் குரலில் மேலும் குழம்பினான்.

'தன்னை அழைத்துப் போக யாரையாவது அனுப்பி இருக்கிறானோ? தன்னை அடையாளம் தெரியாமல் தேடி அலைகிறாரோ' என்ற கவலையில் நூறடி தூரத்தில் இருந்த தேநீர் கடையை நெருங்க, கால்களை எட்டிப் போட்டு விரைந்தான் சத்யா.

பாதி தூரத்தை நெருங்கும்போதே, காத்திருந்தது பிரசன்னா என்பது புரிந்ததும் ஒரு வினாடி மகிழ்ச்சியில் உறைந்தான். அடுத்த வினாடி, இரட்டிப்பு வேகத்துடன் தாவிச் சென்று அவனை அணைத்துக் கொண்டான்.

''டேய்! நீயே நேரில் வருவாய் என்று நான் கொஞ்சம் கூட நினைக்கவே இல்லை. உனக்கு எவ்வளவு வேலை இருக்கும்...? என்னைக் கூப்பிட நீயே ஸ்டேஷனுக்கு...?'' என்று உற்சாகத்தில் திணற, அவன் முதுகில் தட்டினான்.

''என்னுடைய கல்யாணத்திற்காக ஐயாயிரம் கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து வரும் ஆர்மி ஆபீசர் அசிஸ்டென்ட் கமேண்டன்ட் சத்யமூர்த்தி சாரை வரவேற்க நான் ரொம்பப் பெருமைப் படுகிறேன் சார்...'' என்று விறைப்பாக நின்று அவன் ஒரு சல்யூட் வைக்க, அவனை மீண்டும் நெகிழ்ச்சியோடு அணைத்துக் கொண்டான்.

"என்னடா இதெல்லாம்...? உன்னை மாதிரி ஒரு பிரெண்ட் கிடைத்ததில் நான் தான் சந்தோஷப் படு கிறேன். வா போகலாம்..." என்று அவனுடன் பைக்கில் பின்னால் ஏறிக் கொண்டாலும் அவனுக்கு மனம் ஆறவே இல்லை.

"நான் ஆட்டோ பிடித்து வர மாட்டேனா? நீ ஏன்டா வந்தாய்? வீட்டுல அம்மா அப்பா எதுவும் சொல்ல லையா?" என்று அங்கலாய்த்தான்.

"அம்மா தான் உன்னை நேரில் போய் கூட்டி வரச் சொன்னாங்க. பதினோரு மணிக்கு வேலூர் கிளம்பணும். நீ ஆசிரமம் போய் விட்டால் லேட் ஆகிடும். கல்யாணம் முடித்து, நான் ஹனிமூன் கிளம்பிய பிறகு நீ உன்னு டைய மற்ற பிரெண்ட்ஸ் பார்க்கலாம் என்று கடத்திக் கொண்டு போகத் தான் நானே நேரில் வந்தேன். நாளை மறுநாள் இரவில் நானும் வசுவும், கோவைக்குக் கிளம்பு கிறோம். அதுவரை வீட்டில் என்னுடன் இரு..." என்று அதிகாரமாகச் சொன்னாலும், அதில், அவன் மேல் இருந்த அன்பே ஆதிக்கம் செலுத்தியது.

பதினோரு மணிக்கு வேனில், மாப்பிள்ளை வீட்டின ருடன் கிளம்பி, மூன்று மணி நேரம் பயணம் செய்து, வேலூரில் கல்யாண மண்டபத்தில் அருகே இருந்த ஹோட்டலில் அவர்களுக்கு என்று ஏற்பாடு செய்யப் பட்டு இருந்த அறையில் தங்கி ஓய்வெடுத்தனர்.

"சாயங்காலம் ஏழு மணிக்கு தான் மாப்பிள்ளை அழைப்பு. அதுக்கு இன்னும் நாலு மணி நேரம் இருக்கு. அதுவரை சும்மா உட்கார்ந்து இருந்தால் போர் அடிக்குது. நான் வசுந்தராவைப் பார்க்க ஏதாவது ஏற்பாடு பண்ணு..." என்று நச்சரித்தான் பிரசன்னா.



"போன்ல பேசிட்டு இரு. அஞ்சு மாசம் காத்திருந் தாய், இப்ப அஞ்சு மணி நேரம் கூட இல்லை. பொறுமை இல்லையா?" என்று சமாளித்ததை அவன் காதில் வாங்கவே இல்லை. விடாமல் அவன் நச்சரிக்க, 'நான் மண்டபம் போய்ப் பார்க்கிறேன். தனியா பார்த்துப் பேச முடியும் என்று தெரிந்தால், போன் பண்றேன்' என்று மண்டபத்திற்குக் கிளம்பினான் சத்யமூர்த்தி.

* * *

வேலூரில் இருந்து அரக்கோணம் செல்லும் பிரதான சாலையில் இருந்த காவேரிப்பாக்கம் என்ற கிராமமும் இல்லாத நகரமும் இல்லாத இரண்டும் கெட்டான் ஊரில் எப்போதும் வயல் வேலைக்கு மட்டும் இல்லாமல் வீட்டு வேலைக்கும் ஆட்கள் நடமாடிக் கொண்டே இருக்கும் மிகப் பெரிய வீடு அது.

காவேரிப்பாக்கம் ஏரியில் இருந்து வரும் நீரை அடிப் படையாகக் கொண்ட விவசாயம் பிரதான தொழில் என்றாலும், மூன்று தலைமுறையாக வீட்டில் பிறந்த ஒற்றை ஆண் பிள்ளைகளை இந்திய ராணுவத்திற்குத் தொடர்ந்து அனுப்பி சாதனை படைத்த மிலிட்டரிக்காரர் வீடு என்பதே பிரசித்தம்.

காலை உணவினை மேஜையில் எடுத்து வைத்து விட்டு, மூன்று முறை மருமகளை அழைத்த பின்பும் பதிலோ, ஆளோ வரவில்லை என்றதும் அவளின் அறைக்குள் எட்டிப் பார்த்தார் மங்கையர்க்கரசி.

கட்டிலில் அமர்ந்து, முட்டியில் கன்னம் சாய்த்து எங்கோ தூரத்தில் வெறித்துக் கொண்டு இருந்த நிர்மலா வின் பாவனை அவரின் அடி வயிற்றைக் கலங்க வைத்தது. நேற்று இரவு அவளுடைய அம்மாவிற்குப் பேசினாள்.

பேசியதில் இருந்து அவளின் முகமே சரி இல்லை. தங்கையின் திருமணம் நிச்சயமாகி ஆறு மாதம் கழித்து நாளை நடக்க இருக்கிறது. இவள் போக வேண்டாமா...?

தான் பெற்ற ஒற்றை மகனை, இழந்ததன் சுவடு இன்னும் முழுசாக மறையவில்லை. என்னதான் தேச சேவை என்றாலும் இழப்பினை பெருமையாக மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்றாலும், அது தரும் மன வாட்டத்தை மறுக்க முடியாதே?

தானாவது வாழ்ந்து முடித்தவர். கணவரும் ராணுவத்தில் பணி புரிந்தார் என்றாலும், ஓய்வு பெற்று, அதற்கான பலன்களை அனுபவித்து, சமீபத்தில் இயற்கை மரணம் எய்தியவர். ஆனால் இவள், ஒரே வருடத்தில்... சேர்ந்து வாழ்ந்த கணக்கு பத்து நாள் தான்... தன் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு நிற்கிறாள்.

நேற்று தான் பதினாறாம் நாள் காரியம் நடைபெற்றது. காலையில் வந்து இருந்த சம்பந்திகள் இருவருமே, தலையைக் காட்டிவிட்டு, ''தவறாக நினைக்காதீர்கள் அண்ணி, கல்யாண வேலை இருக்கு'' என்று சொல்லி அவசரமாக விடை பெற்றுப் போனார்கள்.

உடன் நிர்மலாவையும் அழைத்துச் செல்வார்கள். தான் திருமணத்திற்குப் போகாமல் இருந்து விடலாம் என்று நினைத்தார். தான் பிறகு வருவதாகச் சொல்லி வழி அனுப்பி வைத்த மருமகளைப் பார்க்கையில் அவருக்குக் குழப்பமாக இருந்தது. இவள் திருமணத்திற்குச் செல்ல வேண்டாமா?

''ஏன் உட்கார்ந்துட்டே தூங்குற நிர்மலா? முதுகு வலிக்கப் போகுது வா, ரெண்டு இட்லி சாப்பிட்டுட்டு



கொஞ்ச நேரம் தூங்கு. மதியம் கிளம்ப வசதியாக இருக்கும். வா...'' என்று மருமகளை உணவருந்த அழைத்தார் மங்கையர்க்கரசி.

''எ..ன்..ன..ம்..மா சொன்னீங்க...?''

''வசுந்தரா கல்யாணத்திற்கு போய்ட்டு வந்து உன்னை ஒரு வழி பண்றேன். முதலில் எழுந்திரி...'' என்று அதட்டியவர், கை பற்றி கட்டிலில் இருந்தும் எழுப்பியும் விட்டார்.

''நிர்மலா, உன் வாழ்க்கை முடிஞ்சு போச்சு என்று நினைக்கக் கூடாது. அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தாயா? உங்க அப்பாவிடம் பேசினாயா?'' என்று விசாரித்தார் மங்கை. அவரின் கேள்வியில் நிமிர்ந்தவள் கண்ணில் கண்ணீர் மீண்டும் புதிதாக பெருக்கெடுக்க முயன்றது.

''உன் கஷ்டம் தான் உலகத்துலேயே பெரிசு என்று நினைக்கக் கூடாது. தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு என்று கேட்டதில்லையா? செழியன் மறைவு, பதினைந்து உயிர்களைக் காப்பாற்றும் முயற்சியில் நிகழ்ந்தது என்பதால், அது பெருமைப் படக்கூடிய விஷயம். வருத்தப்பட ஒன்றும் இல்லை...''

''வருத்தம் இருக்கக் கூடாது என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் அதை மறந்து அடுத்து என்ன என்று யோசிக்கணும். முதலில் நீ இந்த வீட்டில் அறையில் முடங்கக் கூடாது மேலே என்ன செய்யப் போகிறாய் என்று யோசி...''

''யோசித்தேன்-மா. ஏதாவது வேலைக்குப் போகிறேன் என்று அப்பாவிடம் சொன்னேன்...''

"நிர்மலா, நீ வெளியே தான் வேலை செய்ய வேண்டும் என்பது அவசியம் இல்லை. நீ இங்கே இருப்பது எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆனால் எனக்காக உன் வாழ்க்கையை முடக்க விரும்பவில்லை. நீ யோசித்து எந்த முடிவையும் எடுக்கலாம். இன்றைய கதைக்கு முதலில் வா. எப்படி வசுந்தரா கல்யாணத் திற்குப் போகலாம்? கார் கொண்டு வரச் சொல்லட் டுமா? எத்தனை மணிக்குக் கிளம்பலாம்?"

"இல்லைம்மா. கல்யாண மண்டபத்திற்குப் போக வேண்டுமா என்று யோசிக்கிறேன். அப்புறமா வீட்டில் போய், ரெண்டு நாள் கழித்து பார்த்துக் கொள்ளலாமே..."

"ஏன் நிர்மலா உங்க அம்மா உன்னை வர வேண்டாம் என்று சொன்னாங்களா?"

"இல்லை, வேண்டாம்மா..." என்றவளின் குரல் தாழ்ந்து இருந்தது.

"யாராவது ஏதாவது சொல்வாங்க என்று பயப்படு கிறாயா நிர்மலா...? மாப்பிள்ளை வீடு மெட்ராஸ்காரங்க. இதெல்லாம் கண்டுக்க மாட்டாங்க..." என்றவரிடம் மறுப்பாக தலை அசைத்தாள் நிர்மலா.

"இல்லைம்மா. எனக்கே சங்கடமா இருக்கு. வருஷம் கழிந்து இருந்தாலும் பரவாயில்லை..."

"கண்டதையும் போட்டுக் குழப்பிக்கக் கூடாது நிர்மலா. அவ்வளவு பெரிய கல்யாண மண்டபத்துல நாம இருப்பது யாருக்குத் தெரியப் போகுது? முன்னாடி போய் மேடையில் நிற்கா விட்டால் போகிறது. ஓரமா நின்று கல்யாணத்தைப் பார்த்துவிடலாம். போகாமல் இருந்துட்டு, கூட பிறந்த தங்கை கல்யாணத்திற்கு நீ



வரலை என்று அவள் நாளைக்கு பீல் பண்ணக் கூடாது. கிளம்பு சொல்கிறேன்..." என்று அவளுக்கும் சேர்த்து முடிவை அறிவித்தார்.

அம்மாவும் அப்பாவும் தயங்கியது அண்ணியை எண்ணி என்ற எண்ணம், கால்களை பின்னுக்கு இழுத்தது. 'உன் கூட பிறந்து இத்தனை ஆண்டு காலம் நல்லது கெட்டதில் சேர்ந்து இருந்த, வா வா என்று கெஞ்சி அழைக்கும் என்னைவிடப் போகிற போக்கில் பேசு கின்ற, நேற்று வந்த அண்ணி சொல்வது தான் உனக்கு முக்கியமா?' என்ற வசுவின் கெஞ்சலும், ஒரு ஓரமா இருந்து விட்டு வந்து விடலாம் என்ற அன்னையைப் போல அரவணைக்கும் மாமியாரின் வார்த்தைகளும் அவளைக் கிளம்ப வைத்தது.

## 2



'மதிய உணவு முடிந்த உடனே கிளம்பலாம்' என்று சொல்லி வாடகைக் காரை மங்கையர்க்கரசி வரவழைத்து இருந்த போதும், தன் மனக் குழப்பத்தை ஒதுக்கி, நிர்மலா, ஒவ்வொரு பொருளாகப் பெட்டிக்குள் வைப்ப தும், அது பளிச் வண்ணத்தில் இருக்கிறதோ என்ற குழப் பத்தில் மாற்றுவதுமாக தயங்கிக் கொண்டே இருந்தாள்.

மங்கைக்கு மனம் கலங்கியது. மிஞ்சி மிஞ்சிப் போனால் இருபத்தி மூன்று வயது ஆகும். இந்த வயதில் திருமணம் முடிக்காத பெண்களே இருக்கக் கூடும்

இவளுக்கு மணமுடித்து, மண வாழ்க்கை முடிந்து விட்டது. இப்போது எந்த இடத்தில் என்ன உடை அணி வது என்று தடுமாறிக் கொண்டு இருக்கிறாளே! இரண்டு மணியாகி விட்டது. அவசரமாக வசுந்தராவை அழைத்துப் பேச, அடுத்த இரண்டு நிமிடத்தில் அவள் நிர்மலாவை அழைத்தாள்.

''அம்மா நிர்மலா தேவி! நாளைக்குக் காலை நடக்கப் போகும் கல்யாணம் ஒழுங்கா எந்த பிரச்னையும் இல்லாமல் நடக்கணும் என்றால் அடுத்த முக்கால் மணி நேரத்துல நான் உன்னை இங்கே மண்டபத்தில் பார்க் கணும். அதுக்குள்ளே நீ வரலை, அப்புறம் இங்கே என்ன நடக்கும் என்று எனக்கே தெரியாது...'' என்று மிரட்ட அவளுக்கு தேகம் பதறியது.

''ஏய் வசு, என்ன உளறுகிறாய்? இதுல நம் வீட்டு கௌரவம் மட்டும் இல்லாமல், மாப்பிள்ளை வீட்டுக் காரங்க கௌரவமும் சேர்ந்து இருக்கு...''

''நீ சொல்வது சரிதான். உனக்கு அது தெரியலையே? நான் என்ன செய்யட்டும்?''

''ஷ்! வசு, நான் கிளம்பிட்டே இருக்கேன். வந்து விடுகிறேன்...''

''உனக்குக் கொடுக்கப் பட்டு இருக்கும் நேரம் அறுபது நிமிடங்கள். அதற்குள் நீ வரவில்லை என்றால், கல்யாணப் பெண், கடைசி நேரத்தில் மாயம், காரணம் என்ன என்று தினத்தந்தியில் நாளை தலைப்பு செய்தி வந்து விடும். பரவாயில்லை என்றால் நீ அங்கே காவேரிப் பாக்கத்தில் ரெஸ்ட் எடு...'' என்று சொல்லி விட்டு போனை வைத்தாள் வசுந்தரா தேவி.



போனை வைத்து விட்டுத் திரும்பியவள், அதிர்ச்சி யோடு தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக் கும் நெடியவனை, ''யார் சார் நீங்க...? இப்படி தனியா ஒரு பொண்ணு போன் பேசிட்டு இருக்கும்போது இவ் வளவு கிட்டே வந்து நிக்கறீங்க? மேனர்ஸ் வேண்டாம்...'' என்று அதட்டினாள்.

''சாரி, நான் கல்யாணப் பொண்ணு, மிஸ் வசுந்தரா தேவியைப் பார்க்கணும். உங்களை கை காட்டினாங்க. நீங்க போன் பேசி முடிக்கக் காத்திருந்தேன். ஆனால் நீங்க அவங்க இல்லை போல...'' என்று சொல்லி சத்யமூர்த்தி நகர அவள் கை தட்டி நிறுத்தினாள்.

''நான் வசுந்தரா தேவி இல்லை என்ற முடிவுக்கு எப் படி வந்தீங்க? நான் தான் அது. நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேண்டும்...?'' என்று அசால்ட்டாக கேட்க அவன் விழித்தான்.

''நீங்க கொஞ்ச நேரம் முன்னாடி... போனில்...'' என்று இழுத்தவனுக்கு அவள் சொன்னதைத் திருப்பிச் சொல்ல மனம் வரவில்லை.

''என்ன ஒட்டுக் கேட்டீங்களா?''

''ஐ ஆம் சாரி, அந்தப் பழக்கம் எனக்கு இல்லை...''

''அப்ப எனக்கு இருக்கு என்று சொல்றீங்களா?''

''மை காட்! பிரசன்னாவுக்கு ஏற்ற ஜோடிதான். இப்படி ஒரு ஆள் இல்லை என்றாலும் அவனை கண்ட்ரோல் பண்ண முடியாது...'' என்று அவன் ஆயாசமாக சொல்ல அவள் முகம் மாறி புன்னகையைப் பூசிக் கொண்டது.

''நீங்க பிரசன்னா பிரெண்டா...? மிஸ்டர் சத்யமூர்த்தி. ஆர்மி ஆபீசர் டேராடூனில் இருந்து வந்து இருக்கீங்க.

சுரெக்டா?'' என்று விசாரிக்க அவன் வியப்புடன் தலை அசைத்தான்.

''என்னை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?''

''தெரியுமாவா...? ஒரு நாளைக்கு ஒரு தடவை ராத்திரி ஒன்பது மணிக்கு மேலே தான் பேசுவார். அதுல அஞ்சு நிமிஷம் பேசினால், உங்களைப் பற்றி ஒரு நிமிஷம் நிச்சயம் இருக்கும். பின்னே எப்படி தெரியாமல் போகும்? எங்க உங்க பிரெண்ட்...? அவர் போன் பண்ணி நான் எடுக்கவில்லை என்றால் அடுத்த அஞ்சாவது நிமிஷம் என்ன ஆச்சோ என்று இங்கே பறந்து வர வேண்டாமோ?'' என்று அவள் போட்ட போட்டில், அவன் வாயைப் பிளந்தான்.

''அவன் கிளம்ப ரெடியாகத் தான் இருந்தான். நான் தான் யாராவது ஏதாவது சொல்வாங்களா என்று நிறுத்தி வைத்துவிட்டு வந்தேன்...''

''நீங்க எல்லாம் எஞ்சினியரிங் காலேஜில என்னத் தைப் படிச்சுக் கிழிச்சீங்க? நீங்களும் உங்க ப்ரெண்டும் சுத்த வேஸ்ட். இன்னும் கொஞ்ச நேரம் அவர் கிட்டே இருந்து செய்தி எதுவும் வராமல் இருந்து இருந்தால், அடுத்த அரை மணி நேரத்துல நானே ஹோட்டல் ரூமுக்கு வந்து இருப்பேன்...'' என்று சொல்லும் போதே ''வசுந்தரா, இங்கே வா...'' என்ற சத்தமான குரல் கேட்டது.

''எங்க அண்ணி கெடுபிடி ஜாஸ்தியா இருக்கும். போனில் பேசுறேன் என்று சொல்லுங்க. நாளைக்கு பிறகு அந்த அம்மா அதிகாரம் செல்லுபடி ஆகாது. அப்ப பேசலாம்...'' என்று கை அசைத்து விட்டு சிட்டாகப்



பறந்து செல்ல அவனுக்கு மழை பெய்து ஓய்ந்த மாதிரி இருந்தது.

அதிக பட்சமாக ஒரு மணி நேரம் அவகாசம் கொடுத்து வரச் சொல்லி மிரட்டிய, எதிர்முனையில் இருந்த ஆளின் மேல் அனுதாபம் தோன்றியது. சிரிப்புடன் ஹோட்ட லுக்குத் திரும்பினான். கல்யாண மண்டபத்தில் நடந்த விஷயத்தை சொல்லி விட்டு, ''ஹப்பா! ஒரு நிமிஷம் நான் ஆடிப் போயிட்டேண்டா...! எதிர் முனையில் யார் இருந்தாங்களோ? அவங்க ரத்த அழுத்தம் எகிறி இருக்கும்...'' என்று பிரமிப்புடன் சொல்ல அவன் வருத்த மாகப் புன்னகைத்தான்.

''அது அவங்க அக்காவா இருக்கும். சமீபத்துல அவங்க வீட்டுக்காரர் தவறிட்டார். என்.டி.ஆர்.எப்-ல இருந் தார். கல்யாண வீட்டுக்கு வர யோசிக்கிறாங்க என்று வசு சொல்லிட்டு இருந்தாள்...''

''விதவையா இருந்தால், சொந்த தங்கை கல்யாணத் திற்கு வரக் கூடாதா? என்ன அநியாயமா இருக்கு?'' என்று ஆதங்கத்துடன் கேட்டான் சத்யா.

''நம்ம சமூகத்துல இது மாதிரி இன்னும் சில கட்டுப் பாடுகள் இருக்கத்தான் செய்யுது. வேண்டுமானால் நான் ஒன்று செய்யலாம். கல்யாணம் முடிஞ்ச பிறகு, முதல் விருந்து அவங்க வீட்டுல தான் என்று சொல்லி நாளை அங்கே போகலாம். எனக்கு இந்த மாதிரி எண்ணங்கள் இல்லை என்று நிருபிக்க எதுவா இருக்கும்...''

''கட்டாயம் போகணும் பிரசன்னா நீ நானும் கூட வருகிறேன். அவங்க வீட்டுல, அவரோட அம்மா அப் பாவைப் பார்த்துக் கட்டாயம் பேசணும்...''

''வசு நியூஸ் சொன்னதும் நானும் அம்மாவும் அங்கே போயிட்டு வந்தோம். ரொம்ப நல்ல மாதிரி. இங்கே பக்கத்துல காவேரிப்பாக்கம். சென்னையில் இருந்து வரும்போது மெயின் ரோடிலே இருந்ததே?''

''பக்கமா தூரமா என்பது விஷயமே இல்லை. இந்த மாதிரி நாட்டுக்காக உயிர் கொடுத்த ஒரு சகோதரரைப் பெற்ற தாய்க்கு என்னுடைய வணக்கத்தைச் சொல்லியே ஆகணும்...''

''அப்ப ஒன்றுக்கு மூன்றா வணக்கம் ரெடி பண்ணிக்கோ. அவர், அவங்க அப்பா, அவங்க தாத்தா மூணு பேருமே மிலிட்டரி சேவை செய்தவங்க...'' என்று பிரசன்னா சொல்ல அவன் எழுந்து தலைக்கு மேலே கை குவித்தான்.

''அவங்க கல்யாணத்திற்கு வந்தால் எனக்கு அறிமுகம் பண்ணி வை. இல்லை என்றால், நாளைக்கு திருமணம் முடிந்த பிறகு, நான் மட்டும் போயாவது, அவங்க காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணிட்டு வந்து விடுகிறேன்'' என்று உறுதி அளிக்க பிரசன்னா பெருமையுடன் புன்னகைத்தான்.

* * *

பிற்பகல் இரண்டு மணிக்கு வசுந்தரா போட்ட போட்டில், மிரண்டு கிளம்பியவள் அடுத்த முக்கால் மணி நேரத்தில் மாமியாருடன் அந்த திருமண மண்டபத்திற்கு வந்து சேர்ந்த போது, கூட்டம் குறைவாகவே இருந்தது.

''நிர்மலா வாம்மா... வாங்கண்ணி...'' என்று வரவேற்ற அம்மா ராஜேஸ்வரிக்கு கண்களில் ஈரம் கோர்த்ததை வெளியே விடாமல், அவசரமாக அடக்கிக் கொண்டார்.



''அம்மா, நான் வந்துட்டேன். ரூம் சாவி, நகைப் பெட்டி, பணப்பை, என்று ஏதாவது பத்திரமா வெச்சுக்கணும் என்றால் என்னிடம் கொடுங்க. ஒரே இடமா இருந்துக்கறேன். நீங்க மற்ற வேலைகளைப் பாருங்க'' என்று தான் மருமகளைப் பற்றி சொன்னதை மதித்து நான் வெளியே விருந்தினர்கள் முன்பு வரவில்லை என்பதை நாசுக்காக தெரிவித்து அதே சமயம் பொறுப்பான வேலை செய்யவும் ரெடி என்று வந்ததும் வராமல் சொன்ன மகளைப் பார்க்கப் பெருமையாக இருந்தது.

நல்ல பெண். எந்த வேலையையும் திட்டமிட்டு, செய்யக் கூடிய அருமையான பெண். தனக்கு மாப்பிள்ளைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. ஆனால் மங்கையர்க்கரசி மாதிரி ஒரு மனிதரை இந்த உலகத்தில் வலை வீசி தேடினாலும் கண்டு பிடிக்க முடியாது. மகனின் சடலம் வீட்டில் இருந்த நேரத்தில், அழுதபடி இருந்த மருமகளை வற்புறுத்தி காபி குடிக்க வைத்தவர், என்ற விஷயம் அவரின் அனுசரணையான போக்கை நிருபிக்கப் போதுமே!

''என்ன அப்படி பார்த்துட்டே நிற்கறீங்க? நிர்மலாவை உள்ளே அழைச்சுட்டுப் போங்க. ஏதாவது வேலை கொடுங்க. மாப்பிள்ளை வரவேற்புக்குத் தட்டு அடுக்குவது, கோலம் போடுவது மாதிரி வேலை கொடுங்க. என் மருமகள் ஒரு வேலை செய்தால், யாரா இருந்தாலும் நின்னு திரும்பிப் பார்க்கணும். அசர வச்சுடுவா'' என்று அவர்களை வரவேற்ற கையோடு, பேச்சிழந்து நின்ற ராஜேஸ்வரியின் மனநிலையை ஊகித்து, தோளில் தட்டினார் மங்கையர்க்கரசி.

''சரியா சொன்னீங்க அண்[illegible] வாங்க நீங்களும் நிர்மலா கூட உட்கார்ந்து எதை எதை எப்படி அடுக்கலாம் என்று சொல்லுங்க. யாரும் அவளை ஒரு வார்த்தை சொல்லாமல் பார்த்துக்கங்க'' என்று அவர் சொன்ன வேலையை ஒப்படைத்தார்.

இரண்டு மணி நேரத்தில், பனிரெண்டு பீங்கான் தட்டுக்களிலும், ஐநூறு ரூபாய்க்கும் குறைவாகவே செலவு பண்ணி, சர்க்கரை, வண்ண வண்ண மிட்டாய்கள், அடர்த்தியான நூல், சின்ன சின்ன மெழுகு வர்த்திகள் என்று எளிமையான பொருட்களை பயன்படுத்தி, அவர்களின் பெயர் விதம் விதமாகப் பொறித்த அலங்கார தட்டுக்களைத் தயாரித்து ஆறு மணிக்குள் அடுக்கி இருந்தாள் நிர்மலா தேவி.

ஏழு மணி அளவில் மாப்பிள்ளை அழைப்பு நடக்கும் போது, தட்டுக்களை வைத்து ஆரத்தி சுற்றி, வரவேற்ற போது, அந்த தட்டில் பணம் போடச் சொல்லி பெண்கள் வற்புறுத்த பிரசன்னா திரும்பி சத்யமூர்த்தியிடம் பர்சுக்காக கை நீட்டினான்.

''ஒவ்வொரு தட்டுக்கும் ஐநூறு ரூபாய் போட நான் ரெடி. ஆனால் உங்களுக்கு இல்லை. இந்த தட்டு யார் செஞ்சாங்களோ... அவங்களுக்கு... கொடுக்கிறேன் என்று சொல். இல்லை என்றால் சமாளிக்க முடியாது'' என்று அவன் காதுக்குள் சொல்ல, அவனும் அதை அப்படியே ஒலிபரப்பினான்.

''கடைசியில் காசு கொடுத்து வாங்கி இருந்தால் அவங்களுக்கு மீண்டும் பணம் கொடுப்பீங்களா?'' என்று அவர்கள் கேலியாகச் சிரித்தனர்.



''கடைக்காரங்களா இருந்தாலும், செய்தவங்களுக்கு தான் உரிய மரியாதை போய் சேரணும். யார் தட்டு செய்தாங்களோ அவங்களைக் கூட்டிட்டு வாங்க...'' என்று பிரசன்னாவிடம், வந்தார் மங்கையர்க்கரசி.

''எனக்கு யார் செஞ்சா என்று தெரியும் மாப்பிள்ளை. நீங்க என்ன பரிசு கொடுப்பீங்க என்று சொல்லுங்க. யார் என்று நான் சொல்றேன்...'' என்று விசாரித்தார்.

''சத்யா, இதுதான் நான் சொன்ன மங்கை ஆன்ட்டி...'' என்று அவசரமாக நண்பனுக்கு அறிமுகப்படுத்தி விட்டு, ''உங்களுக்கு இல்லாததா ஆன்ட்டி? தங்கம் போல மின்னும் தட்டு செய்த கைகளுக்கு தங்கத்திலேயே ஒரு வளையல் போட்டுட்டா போச்சு. என்ன சத்யா...?'' என்று பிரசன்னா கேட்க அவன் வேகமாக தலை அசைத்தான்.

''ஒன்று என்ன கணக்கு சத்யா? தட்டுக்கு ஒரு வளையல் கொடுத்துட்டா போச்சு...'' என்று சொன்ன சத்யமூர்த்தியை வியப்புடன் திரும்பிப் பார்த்தார் மங்கையர்க்கரசி. யார் இவன்? இந்த வார்த்தையை தெரிந்து சொல்கிறானா? பொதுவாகச் சொல்கிறானா? இவனுக்கு நிர்மலாவைத் தெரியுமா?

அடுத்த சில நிமிடங்களில் மேடையில் நின்ற சத்யமூர்த்தியை கை காட்டி அழைத்து, ''உங்க பிரெண்ட் கல்யாணத்துக்கு அழகா தட்டு செய்து வைத்ததற்கு தட்டுக்கு ஒரு வளையல் போடுகிறேன் என்று சொன்னாயே! தட்டு செய்தது இவள் தான். நீ சொன்ன வளையல் சேர வேண்டியது இவளுக்கு தான்...'' என்று சொல்லி நகர்ந்த மங்கை, சற்று தள்ளி நின்று அவர்களை கவனிக்கத் தவறவில்லை.

''வணக்கம் மேடம்...'' என்று இரண்டு கரத்தையும் குவித்து அலங்கார தட்டின் அழகைப் பாராட்ட வாய் எடுத்தவன் அங்கே நின்ற நிர்மலாவைப் பார்த்து உறைந்து நின்றான். இவளா! இங்கே எங்கே... வந்தாள்...?

# 3

மண மேடையில் இருந்த தன்னை கை காட்டி அழைத்து, 'அலங்கார தட்டு செய்த கரங்களுக்கு வளையல் இடப் போவதாகச் சொன்னாயே! செய்தது இவள் தான்...' என்று அறிமுகப்படுத்தி விட்டு வேறு ஏதோ வேலையாக நகர்ந்த மங்கையர்க்கரசி காட்டிய பெண் 'அவளாக' இருப்பாள் என்று சத்யமூர்த்தி கனவிலும் எதிர்பார்க்கவே இல்லை.

இல்லை இவள் வேறு யாராவதாகக் கூட இருக்கலாம். மங்கையர்க்கரசி அறிமுகப்படுத்தியதாலேயே, இவள் அவருடைய மருமகளாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவசரமாகக் கண்களைச் சிமிட்டி அவளை மீண்டும் பார்த்தான்.

தூய வெள்ளையில், வெளிர் நீல வண்ணத்தில், கீழே எளிமையாக ஜரிகை கரையிட்டு இருந்த காட்டன் புடவை நேர்த்தியாக அவளை தழுவி இருந்தது. கழுத்தில் ஒரு செயின் மட்டும். கண்ணுக்குக் குளிர்ச்சியான



அழகான புடவை தான். ஆனால் கல்யாண வீட்டிற்கு எளிமையானது. அப்படி என்றால்...

கசப்பான உண்மை கன்னத்தில் அறைந்தது. சில மணி நேரங்கள் முன்பு, பிரசன்னாவிடம், இளம் விதவைகள் சந்திக்கும் சமூக பிரச்சனைகள் குறித்து அலசியது வேகமாக மனக்கண்ணில் ஓடியது.

''வணக்கம்... சார்... நான் நிர்மலா... அத்தை... அதான்... மங்கை அம்மா... நீங்க ஏதோ பேச விரும்புறீங்க என்று சொன்னாங்க...'' என்ற நிர்மலாவின் குரல் அவனை நடப்புக்குக் கொண்டு வந்தது. இவளுக்கு தன்னை ஏற்கனவே பார்த்த எந்த பிரதிபலிப்புமே இல்லையே?

''நான் சத்யமூர்த்தி, பிரசன்னாவுடைய பிரண்ட். நீங்க மாப்பிள்ளை அழைப்புக்கு வைத்து இருந்த அலங்காரத் தட்டுக்கள் ரொம்ப நல்லா இருந்தது. அதை அவங்களிடம் சொன்னேன். உங்களிடம் நேரில் சொல்லச் சொன்னாங்க. அதான்... வாழ்த்துக்கள்... நான் வரேன்...'' என்று இரண்டு வாக்கியங்களைத் தொடர்ச்சியாக பேசிவிட்டு அந்த இடத்தில் இருந்து நகர்வதற்குள் அவனுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

அவன் அந்த இடத்தில் இருந்து மறையும் வரை முக பாவனையை கவனத்துடன் சாதாரணமாக வைத்து இருந்த நிர்மலாவுக்கு அவன் நகர்ந்த பின்னர் பெரியதாக மூச்சு வெளியேற, நெஞ்சம் படபடத்தது. அவனுக்கு அடையாளம் தெரிந்ததா?

இரண்டு பேரும் அந்த இடத்தில் நகரும் வரை தொலைவில் நின்று பார்த்த மங்கைக்கு வித்தியாசமாக

எதுவும் தோன்றவில்லை. அவர் கண் பார்வையில் நேரடியாக இருந்தது நிர்மலா. அவளின் முகத்தில் எந்த பாவனையுமே இல்லை. அவனும் பேச்சை வளர்க்க வில்லை. அதீதமாக கற்பனை செய்து விட்டோமோ...?

இருந்தாலும் ராணுவத்தில் பணி புரிகிறான். பிரசன்னா வின் நண்பன். அவனுக்கு பெற்றோர் இல்லை. திரு மணம் ஆகவில்லை. இதெல்லாம் சாதகமான அம்சங் களாக தோன்ற அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

இப்படி ஒரு மாற்றத்தை அவளால் இவ்வளவு சீக்கிரம் ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற எண்ணம் கவலை அளித்தது. ஆனால் முயற்சியை இப்போது செய்தால், முடிவை பிறகு எடுத்துக் கொள்ளலாமே? அவனைப் பற்றி தெரிந்து கொள்ள, தேடினார். இரவு உணவுக்குப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் அழைத்துச் செல்ல அவர்களைப் பின் தொடர்ந்தார்.

''வாங்கத்தை. ரெண்டு மணி நேரமா ஆளே கண்ணில் படலை? சாப்பிட்டீங்களா? நிம்மியைக் கூட்டிட்டு சாப்பிட வாங்க...'' என்று உபசரித்தாள் வசுந்தரா.

''நிர்மலாக்கு இப்பதான் கொடுத்தேன். நான் உன் னுடன் சாப்பிடுகிறேன்...'' என்று அருகே அமர்ந்தவர் பிரசன்னாவைப் பார்த்து புன்னகை செய்தார்.

''உங்க கூட இருந்த பிரெண்டை காணோம்? வசுந் தரா பேச்சைக் கேட்டுத் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடிட்டாரா?'' என்று கேலியாக விசாரித்தவரின் கண்கள் சத்யாவைத் தேடியது.

''நான் அவரிடம் இன்னும் பேசவே ஆரம்பிக்கலை அத்தை. அதுக்குள்ளே எப்படி பயப்பட முடியும்?



பிரசன்னா, அத்தை வாயை அடைக்க உங்க பிரெண்டை சாப்பிட உடனே வரச் சொல்லுங்க...''

''நானும் ரொம்ப நேரமா முயற்சி பண்ணுகிறேன். போனை எடுக்கலை வசு, எங்கே போனான் என்றே தெரியலை...''

''ரூமுக்குப் போய் இருக்கலாம். ஹோட்டல் லைனுக்கு முயற்சி பண்ணுங்க...''

''ரூம் சாவி ரிசப்ஷனில் இருக்கு அவன் அங்கே போகலை...''

''ஒரு வேளை டூப்ளிகேட் சாவி போட்டு...'' என்று ஆரம்பித்தவள் பிரசன்னாவின் முறைப்பில் அடங்கி னாள். ''உங்க பிரெண்ட் உங்களை மாதிரி இல்லாமல் ரொம்ப நல்லவர் போல...'' என்று சலித்தவள் தன் அண்ணாவை அழைத்துக் காதில் ஏதோ சொன்னாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம், மெல்லிசை கச்சேரி நடந்து கொண்டு இருந்த மைக்கில், 'குழந்தை ஒன்றுக்கு காயம் பட்டு விட்டதால், மண்டபத்தில் மருத்துவரோ, முதல் உதவி செய்யத் தெரிந்தவரோ, தகுந்த உபகரணங் களுடன் இருந்தால் உடனே மணமகனைத் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்...'' என்ற அறிவிப்பு ஒலிக்க பிரசன்னாவின் கண்கள் பளிச் சிட்டது.

''இந்த கல்யாண மண்டபத்தில் அவன் இருந்தால், இன்னும் ரெண்டே நிமிஷத்துல இங்கே இருப்பான்'' என்று சொல்லி விட்டு, தன் இடது கையால், அவளுக்கு ஹை-பை கொடுத்தான்.

''இந்த மாதிரி எல்லாம் யோசிக்க மேல் மாடியில் சரக்கு இருக்கணும் சாரே...'' என்று கேலியாகச்

சொன்னவள் கைகள் வாசல் புறம் நீட்ட, அங்கே கையில் ஒரு சின்ன பையுடன் வேகமாக வந்து கொண்டு இருந்தான் சத்யமூர்த்தி.

"மைக்-ல குழந்தைக்கு அடிபட்டு இருப்பதா சொன்னாங்களே! யாருக்கு என்ன ஆச்சு?" என்று பதட்டத்தோடு விசாரித்தபடி அருகில் வந்த சத்யமூர்த்தியை எழுந்து கை கூப்பினாள் வசுந்தரா.

"சாப்பிட்ட கை என்று கூடப் பார்க்காமல் வணக்கம் சொல்றேன். நன்மை பயக்க சொன்ன சின்ன பொய் அது. யாருக்கும் எதுவுமில்லை சாரி..." என்று மன்னிப்பு கோர அவன் முறைத்தான்.

"எதில விளையாடுவது என்று ஒரு வரை முறை இல்லையா?" என்று எரிச்சலோடு சொல்லி வேறு புறம் திரும்பி, "நான்சென்ஸ். உங்க அக்கா உன்னை சாத்துறதுல தப்பே இல்லை...," என்று முனகியது மங்கையின் காதுகளில் விழுந்தது.

"விடுடா. ரொம்ப நேரமா ஆள் கண்ணில் படல என்று சொன்னேன். உன்னை வரவழைக்க அவளுக்கு தெரிஞ்ச வழி. வா சாப்பிடலாம்" என்று பிரசன்ன சமாதானம் செய்ய, சங்கடமாக புன்னகை செய்தான்.

"இந்த பக்கம் வாங்க. என்ன தம்பி! நீங்க தட்டுக்கு வளையல் பரிசு கொடுக்கிறேன் என்று சொன்னதை பார்த்து ரொம்ப ஜாலி டைப் என்று நினைத்தேன். ரொம்ப சீரியஸா இருக்கீங்க வசுந்தரா விளையாட்டு பிள்ளை. உங்களை உடனே வரவழைக்க அப்படி செய்து விட்டாள். அது என்ன பெரிய தப்பா?" என்று பேச்சு கொடுத்தார் மங்கையர்க்கரசி.



"இதுல யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. பரவாயில்லை. எல்லா நேரமும் இப்படியே இருக்குமா? அடுத்தவர்களுக்கு ஏதாவது சரி செய்ய முடியாத பாதிப்பு ஏற்பட்டால் சிரமம் தானே? இவள் என்ன சின்னக் குழந்தையா?" என்று அவன் வேகமாகப் பேசியது இந்த விஷயத்தை மட்டும் தொடர்பு படுத்தி இல்லை என்று தோன்ற அவருடைய புருவம் யோசனையில் சுருங்கியது.

"வசுந்தராவுக்கும் நிர்மலாவுக்கும் ஒன்றரை வயசு தான் வித்தியாசம். ரெண்டு பேருக்கும் குணத்தில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கும். ஆனால் சில விஷயங்களில் இந்த மாதிரி எளிதா வாழ்க்கையை எடுத்துக் கொள்பவர்கள் சந்தோஷமா இருப்பாங்க. அது ஒரு விதத்துல நல்ல குணம் என்று தான் சொல்லணும்..." என்று சொல்ல அவன் புன்னகை செய்தான்.

"என்ன தம்பி சிரித்தால் என்ன அர்த்தம்?" என்று மங்கை கேட்க, "மௌனம் சம்மதம் அத்தை. வாழ்க்கையை எளிதா எடுத்துக்க என்னை மாதிரி இருந்தால் நல்லது என்று நீங்க சொன்னதை ஒத்துக் கொண்டார் என்று அர்த்தம். என்னிடம் டியூஷன் படிக்க அவர் ரெடி என்று அர்த்தம்" என்று இடையிட்டாள் வசுந்தரா.

அதற்கு பதில் சொல்லாமல் புன்னகை செய்ய, "இதற்கும் சம்மதம் என்று அர்த்தம் எடுத்துக்கலாமா சத்யா சார்...?" என்று விடாமல் துருவினாள் வசு.

"இதற்கு, கல்யாண வீட்டில், நல்ல நேரத்தில், நண்பர்களுக்கு இடையே வாக்குவாதம் தொடராமல் தடுக்

கும் நோக்கம் என்று அர்த்தம்...'' என்று அழுத்தமாகச் சொல்ல எல்லோரும் சிரித்தனர்.

''இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா? நிம்மிகிட்டே கேளுங்க. எத்தனை பல்பு, எத்தனை திட்டு? எத்தனை அடி? எதையும் தாங்கும் இதயம் இருக்கு'' என்று சமாளித்தாள்.

''வசு இருக்கும் இடத்தில சிரிப்புக்கு பஞ்சமே இருக்காது. முடிஞ்சால் சென்னைக்கு போகும்போது எங்க வீட்டில ஒரு வேளை கை நினைச்சுட்டுப் போகலாம். வந்தீங்க என்றால் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்'' என்று மங்கையர்க்கரசி அழைப்பு விடுக்க அவள் பிரசன்னாவைப் பார்த்தாள். அவன் சத்யாவைப் பார்த்தான்.

''சத்யா, நாளைக்கு மண்டபத்தில் இருந்து சென்னைக்கு கிளம்பும் போது ஆன்ட்டி வீட்டுக்குப் போகலாமா? நீ கூட நமஸ்காரம் பண்ணனும் என்று சொன்னியே'' என்று கேட்க, சத்யமூர்த்தி மட்டுமில்லாமல், வசுந்தராவும், மங்கையர்க்கரசியும் திகைத்தனர்.

**சத்யமூர்த்தியின் டைரி குறிப்பு**

இவள் நிர்மலா தேவி, மணப்பெண்ணின் சகோதரி என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு கணவனை இழந்த கல்யாணத்திற்கு வரத் தயங்கியது இவளா...?

முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்கும் கெடுதல் நடந்து விடக்கூடாது என்ற பதைப்பில், உடன் பிறந்த தங்கையை கை நீட்டத் துணிந்த நல்ல மனம் கொண்ட இந்த மாதிரி பெண்ணுக்கு இறைவன் கொடுத்த தண்டனை கொடூரம்.



இந்த இடத்தில், என்ன மாதிரி நோத்தில், எந்த மாதிரி நிலையில் சந்திக்க வைத்து இருக்கிறான்? தன் மனதில் என்னென்னவோ எண்ணி... அது தொலையட்டும். தனக்கு நல்ல விஷயங்கள் எப்போது நடந்து இருக்கிறது? இவளுக்கு ஏன் இந்த நிலைமை? கடவுளுக்கு சில நேரங்களில் கண் இல்லை என்பது உண்மை தானா?

**நிர்மலா தேவியின் டயரி குறிப்பு**

'உன்னை பார்க்க விரும்புகிறார்கள்' என்று மங்கை அம்மா, வெளியே வர சொன்னபோது, இஷ்டமே இல்லை. யாராவது உறவினர்கள் துக்கம் விசாரிக்கக் கூடும். இங்கிதம் இல்லாமல் பேசக் கூடும் என்று தவிர்க்க நினைத்தாள். ஆனால் அங்கே இருந்தது ''அவன்...!''

அவனுடைய முதல் பார்வையில் தெரிந்தது அதிர்ச்சி! அவனுக்கு தன்னை நினைவு இருக்கா? இவன் எதையுமே மறக்கவில்லையா? இவன் வசுந்தராவுக்கு பார்த்த மாப்பிள்ளையின் நண்பனாக வந்து நிற்பான் என்று எதிர்பார்க்கவில்லை. இவன் வருகை அவனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை ஐந்து மாத காலம் தள்ளி நிச்சயித்த திருமண நாளில் தெரியவில்லையா?

மறுநாளே தங்கள் வீட்டிற்கு விருந்துக்கு வருகிறேன் என்று சொன்னதை அவளால் நம்பவே முடியவில்லை. அண்ணன் தங்கள் வீட்டுக்கு மறுவீடு வர வேண்டும் என்று சொன்னதைக் கூட சின்ன புன்னகையுடன் நாசூக்காக மறுத்து விட்டான்.

நாளைய விருந்துக்கு அவனும் வருவானா? வந்தால் என்ன? ப்ச்! அவன் என்ன அவன்? பழைய கதை

எப்படியோ! இப்போது ராணுவத்தில் பணி புரியும் அலுவலர். தங்கை கணவனின் நண்பர். கொஞ்சம் மரியாதையாக நினைத்து பழகு. சத்யமூர்த்தி சார்! இன்னும் எத்தனை நாள் இங்கே இருப்பானோ...? சீக்கிரம் கிளம்பி விட்டால் தேவலை. கிளம்புவானா?

# 4



காலை ஆறில் இருந்து ஏழரைக்குள், பிரசன்னா - வசுந்தரா திருமணம் நடைபெற்றதால், ஒன்பது மணிக்கு மண்டபமே காலி ஆகி விட்டது. மங்கையர்க்கரசியிடம் வந்த நிர்மலா, ''கல்யாணம் முடிந்து விட்டதே! எப்ப கிளம்பலாம்...?'' என்று தயக்கத்துடன் மெல்லிய குரலில் விசாரித்தாள்.

''பொண்ணு மாப்பிள்ளை கோவிலுக்குப் போயிட்டு வரலை. பால் பழம் சாப்பிடலை. தாலி பிரிச்சுக் கட்டு வாங்க, அதெல்லாம் நடக்கலையே? அதுக்குள்ளே எப்படி கிளம்புவது நிர்மலா?'' என்று நிதானமாக பதிலளித்தார்.

''அதுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? நாம் வீட்டுக்குக் கிளம்பலாமே! மதியம் வசுவும், மாப்பிள்ளையும் சாப்பிட வரேன் என்று சொல்லி இருக்காங்களே, மறந்துட்டீங்களா?'' என்று மெதுவாக நினைவு படுத்தினாள்.



''இங்கே சாப்பிடாமல் கிளம்ப உங்க அம்மா அப்பா விடுவாங்களா? போகும் போது கடையில ஏதாவது ஸ்வீட் காரம் வாங்கிட்டுப் போனால் முடிஞ்சுது...'' என்று பிடி கொடுக்காமலேயே பேச, அவளுக்கு மேலே என்ன சொல்வது என்று தெரியவில்லை.

''நான் வீட்டில் சமைக்கலாம் என்று நினைத்தேன். பரவாயில்லைம்மா. நீங்க எப்போ கிளம்பணுமோ அப்ப சொல்லுங்க...'' என்று ஏமாற்றத்தை மறைத்து விலகிய மருமகளின் கையைப் பற்றி நிறுத்தினார்.

''கார் ஏற்கனவே வர சொல்லிட்டேன். உங்க அம்மா, அப்பா, வசுந்தராவிடம் சொல்லிட்டு வா, பதினஞ்சு நிமிஷத்துல கிளம்பலாம்'' என்று சொல்ல அவள் விழிகள் மலர்ந்தது.

''ஆனால்... நீங்க அப்போ ஏன்...'' என்று ஆரம்பித்தவள் அவரின் புன்னகையைப் பார்த்ததும் பேச்சை நிறுத்தினாள்.

''சாரிம்மா. நான் இன்னும் கொஞ்சம் உரிமையா கேட்டு இருக்கணும். இல்லை சொல்லி இருக்கணும்...'' என்று நிர்மலா சொல்ல, அவரின் புன்னகை இன்னும் மறையவில்லை.

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம், உன் பையை எடுத்துட்டு உங்க அம்மா அப்பாவிடம் சொல்லிட்டு வா. அது போதும்...'' என்று தோளில் தட்ட தலை அசைத்து விட்டு நகர்ந்தாள். காரில் வீட்டுக்குத் திரும்பும்போது, அருகே இருந்தவளை ஆராய்ந்தார்.

''என்னைப் பார்த்தால் பயமா இருக்கா நிர்மலா?''

''பயம் இல்லை. ஒரு மரியாதை தான். ஏன் இப்படிக் கேட்கறீங்க?''

''அம்மா அம்மா என்று சொல்கிறாயே நிஜமாகவே உணர்ந்து சொல்கிறாயா இல்லை போகிற போக்கில் சொல்கிறாயா என்று கேட்டேன். உன்னிடம் நிறைய பேசணும். அதை ஓடுகிற காரில் பேச முடியாது. நைட் வீட்டில் பேசலாம்?'' என்று அவளின் தோளைத் தட்டி னார்.

''அம்மா பேசினாங்களே? எதுவும் சொன்னாங்களா?'' என்று பதட்டம் குறையாமல் விசாரிக்க அவர் புன்னகை செய்தார்.

''அம்மா பேசியதைப் பற்றி நீ ஏன் கவலைப் படு கிறாய்? செழியன் இருந்தாலும் இல்லாமல் போனாலும், நீ எனக்கு மகளா வந்த மருமகள். உனக்கு என்ன வேண் டும் என்பதை என்னிடம் சொல்லலாம். இப்போதைக்கு வசுவுக்கு என்ன பிடிக்கும். என்ன சாப்பாடு செய்யலாம் என்பதைப் பற்றி யோசி...'' என்று அவளின் வாயை அடைத்தார்.

அடுத்த அரை மணி நேரத்தில் வீடு வந்து சேர்ந்து, உடை மாற்றி அடுக்களைக்குள் நுழைந்த இருவரும் வசுந்தரா - பிரசன்னாக்கு பிடித்த உணவினை தயார் செய்வதில் ஈடுபட்டனர்.

''வசு கூட வேறே யாரும் வராங்களாம்மா?'' என்று சமைக்கும் போது கேட்ட நிர்மலாவை ஆச்சரியமாகப் பார்த்தார் மங்கை. அவள் முகத்தில் சத்யாவின் வருகை குறித்த எதிர்பார்ப்பு எதுவும் இருக்கிறதா என்று தேடினார்.

''வசு அத்தை மாமா வர வாய்ப்பு இருக்கா என்று கேட்டேன். தெரியாதா?'' என்று மீண்டும் கேட்டதும், ''ஓ! நீ அதைக் கேட்டாயா?'' என்று இழுத்தார்.



''வேறே என்ன நினைத்தீங்க...?'' என்ற கேள்வியைக் கேட்கும் வரை சத்யமூர்த்தியைப் பற்றிய நினைவு அவளுக்கு வரவில்லை. இரவு நீண்ட நேரம் தூக்கம் வராமல் புரண்டது நிஜம். ஆனால் தூங்கி எழுந்த பிறகு, அவனும் கண்ணில் படவில்லை. அவன் நினைவும் வரவில்லை. இப்போது அவனைப் பற்றிச் சொல்கிறார் களோ என்ற சந்தேகம் ஏன் வந்தது?

''நேற்று மாப்பிள்ளை கூட ஒரு பையன் வந்து இருந்தானே? அவன் நீ செஞ்ச அலங்கார தட்டு ஒவ் வொன்றுக்கும் ஒரு ஒரு வளையல் தருவதா சொல்லி இருந்தான். அவனைப் பார்த்து பரிசை கேட்க அவன் வருவானா என்று கேட்கிறாயோ என்று நினைத்தேன்...'' என்று திருப்பிக் கேட்க அவள் விழித்தாள்.

''எ..ன்..ன..ம்..மா சொல்றீங்க? வளையல் பரிசு தருகிறேன் என்று அவர் சொன்னதே எனக்குத் தெரி யாதே? பின்னே நான் எப்படி...?''

''சரி அதை விடு, என்ன பாயாசம் வைக்கலாம் சொல்லு...''

''வெல்லம் போட்டு பாசிப் பருப்பு பாயாசம் தண் ணியா வைத்தால், தம்ளர் தம்ளரா குடிப்பாள். ரொம்பப் பிடிக்கும். அதை வைக்கலாம்மா...''

''பாசி பருப்பை லேசா வறுத்துட்டு குக்கரில் தண்ணி விட்டு வேக வை. தங்கைக்கு என்ன பிடிக்கும் என்று விலாவாரியா சொல்கிறாயே? உனக்கு என்ன பிடிக்கும் என்று இது மாதிரி சொன்னதே இல்லையே?'' என்று விசாரித்தார் மங்கையர்க்கரசி.

''ப்ச்! சாப்பாட்டில் எனக்கு பெரிசா பிடிக்கும் என்று இல்லை...''

"சாப்பாட்டில் ஆசை இல்லை. துணி மணியில் ஆசை இல்லை. நகை நட்டு ஆசை இல்லை. என்னதான் ஆசை உனக்கு இருக்கு சொல்லு...?"

"எங்க வீட்டுல, அண்ணன் ஒரே பையன் என்பதால் செல்லம், கூடுதல் கவனிப்பு, வசுவின் வாய், ப்ளஸ் கடைக்குட்டி என்பதால் செல்லம் கூடுதல் கவனிப்பு. இவங்க ரெண்டு பேருக்கு இடையில் சின்ன வயதில் இருந்து விட்டு விட்டுக் கொடுத்தே பழகி விட்டதால் இது வேண்டும், அது வேண்டும் என்று எனக்கு கேட்கத் தோன்றியதே இல்லை. நான் கேட்ட ஒரே விஷயம் ராணுவத்தில் வேலைக்குப் போகிறேன் என்று சொன்னது தான். அதுவும் நடக்கவில்லை..." என்று தன் போக்கில் பேசியவளின் முதுகை வருடினார்.

"இதுவரை நடந்த விஷயங்களை மாற்றும் சக்தி எனக்கு இல்லை நிர்மலா. ஆனால் இனிமேல் உனக்கு என்ன வேண்டும் என்பதை என்னிடம் நீ கேட்கலாம்" என்று ஆறுதல் சொல்லும் போதே வாசலில் வசுந்தராவின் உற்சாகக் குரல் கேட்டது.

"ஹேய்! நிம்மி... வா வா... என்று கூப்பிட்டீங்க... ஆரத்தி எல்லாம் கிடையாதா? இங்கே ஒரு அலங்கார செட் தட்டு செய்து வைத்து இருப்பாய் என்று நினைத்தேனே...?" என்று தங்கையின் குரல் கேட்டு வாசலுக்கு ஓடி வந்தாள்.

"வாங்க வாங்க... நான் நீங்க வர ஒரு மணிக்கு மேலே ஆகும் என்று நினைத்தேன்..." என்று முகம் எல்லாம் மலர வரவேற்றாள்.

"நல்ல வேளை நீங்க சாப்பிட்டுட்டு வந்து இருப்பீங்க என்று சொல்லாமல் இருந்தாயே..." என்று கை பற்றி



அழைத்துச் சென்றவள், "ஒரு நிமிஷம் கூட வாயை மூடிட்டு இருக்க மாட்டியா வசு?" என்ற பிரசன்னாவையும், பின்னால் தயங்கி நின்ற சத்யமூர்த்தியையும், "வாங்க..." என்று மெல்லிய குரலில் வரவேற்றாள்.

"வாங்க தம்பி எதிர்பார்த்ததை விட சீக்கிரமே மண்டபத்தில் இருந்து கிளம்பிட்டீங்க போல. கிளம்ப அவசரம் இல்லையே?" என்று மங்கை வரவேற்றார்.

"கல்யாணம் முடிஞ்ச பிறகு மண்டபத்தில் அதிகம் வேலை இல்லையே அத்தை? நாளை மாலை சென்னையில் ரிசப்ஷன் இருக்கு. அம்மா அப்பா கிளம்பிட்டாங்க. நாங்க போகும் வழியில் இங்கே ஒரு ப்ரேக் எடுத்துக்கிறோம். மூன்று மணிக்கு கிளம்பலாம் என்று பார்க்கிறேன். ஓகே தானே பிரசன்னா...?" என்று அவனுக்கும் சேர்த்து அவளே முடிவை அறிவிக்க அவன் புன்னகை செய்தான்.

"சத்யா, வசுந்தரா இருக்கும் இடத்தில் அவள் மட்டும் தான் பேச முடியும். வேறு யாரும் வாயைத் திறக்கக் கூட முடியாது. அதனால நான் அவளை கூட்டிக் கொண்டு பதினைந்து நிமிஷம் இப்படி தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நீ மங்கை ஆன்ட்டியிடம் என்ன பேசணுமோ பேசிடு. நானும் வசுவும், வந்த உடனே சாப்பிடலாம்..." என்று மனைவியுடன் வெளியேற முயன்றான் பிரசன்னா.

"மாப்பிள்ளை. ஒரு நிமிஷம் நில்லுங்க. எலுமிச்சை ஜூஸாவது குடிச்சுட்டுப் போங்க. உள்ளே வந்ததும் வராததுமா உடனே வெளியே கிளம்புறீங்க?"

"வசுந்தரா உங்களுக்கு மருமகள் என்றால் நான் எப்படி மாப்பிள்ளை ஆக முடியும்? நான் உங்க மகன்

முறை தான் வரணும். அதனால் பேர் சொல்லியே கூப்பிடுங்கம்மா. சத்யா உங்களிடம் ஏதோ பேசணும் என்று சொன்னான். பேசிட்டு இருங்க. நாங்க வந்து விடுகிறோம்...'' என்று பிரசன்னா மங்கையர்க்கரசிக்கு உறவு பற்றிய விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்க, இன்னொரு மூலையில் அக்கா தங்கைக்கு இடையே தீவிரமான பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருந்தது.

'நீ என்ன சமைத்து இருக்கிறாயோ எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு பருப்பு பாயசமும், மசால் வடையும் கட்டாயம் வேண்டும். ஏற்கனவே ரெடி பண்ணலை என்றால், மூன்று மணிக்குள் நான் கிளம்புவதற்குள் ரெடி பண்ணிடு'' என்று சொல்லிக் கொண்டு இருந்தாள் வசுந்தரா.

''ஹேய் சாப்பாட்டு ராமி! ஹோட்டல் மாதிரி ஆர்டர் பண்ணாதே. வீட்டில் இருப்பதை சாப்பிடலாம் வா'' என்று சிரிப்புடன் சொல்லியபடி மனைவியை, இழுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

''உட்காருங்க தம்பி, டேராடூனில் வேலை செய்யறதா சொன்னாங்க. எந்த டிவிஷன்?'' என்று விசாரிக்க, ''வாங்க போங்க... எல்லாம் வேண்டாம்மா. என்னையும் பேர் சொல்லிக் கூப்பிடுங்க...'' என்று மறுக்க புன்னகைத்தார்.

''இருக்கட்டும்பா. உன்னை மாதிரி சின்ன பசங்க ஆர்மியில் வேலை செய்றீங்க என்று கேட்கவே சந்தோஷமா இருக்கு. செழியன் NDRFல கௌஹாட்டி ஸ்டேஷன்ல கடைசியா இருந்தான். நீ எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்?''



''நான் டெக்னிகல் விங்-ல இருக்கேன்மா. இண்டோ திபெத்தியன் பார்டர் செக்கியூரிட்டி போர்ஸ் டேராடூனில் இருக்கிறேன். ஆர்மி பட்டாலியன் இருப்பிடம், அதோட நகர்வுகள் இதை எல்லாம் கணினி மூலம் கண்காணிக்கும் பணி தான்...''

''ஓ! அப்ப பீல்ட் வேலை இல்லையா? ரிஸ்க் கம்மி தான்...'' என்று சொன்னவருக்கு என்ன எதிர்பார்க்கிறோம் என்று புரியவில்லை.

''கம்யூனிகேஷன் எஞ்சினியரிங் படித்ததால், கணினி வேலை தான். உங்க பையன் பற்றி பிரசன்னா நேற்று விபரம் சொன்னான். சமீபத்தில் நிகழ்ந்த மரணம் என்பது ஒரு விதத்தில் கேட்க சங்கடமாக இருந்தாலும், மரணம் நிகழ்ந்த தருணம், ஒரு ராணுவத்தில் பணிபுரியும் நபர் என்ற வகையில் பெருமையா இருந்தது. அவருடைய செட்டில்மென்ட் பணம் வந்து விட்டதாம்மா? உங்க பையன் பேர். அவருடைய பணி விபரம் போன்ற தகவல்கள் சொன்னால், நானே அதை கண்காணித்து சீக்கிரம் முடிக்க உதவி செய்கிறேன்...''

''இராணுவ வீரர்கள் நல வாரியத்தில் மனு வாங்கிட்டுப் போய் இருக்காங்க. அவங்க பார்த்துப்பாங்க. உனக்கு எதுக்குப்பா வீண் சிரமம்?''

''இதுல என்னம்மா சிரமம் இருக்கு? டேராடூனில் இருந்து டெல்லி ஆறு மணி நேர பயணம். நீங்க விண்ணப்பித்த நகல் கொடுங்க. என்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறேன். அதுவும் உங்க வீட்டில், மூன்று தலைமுறையா ராணுவத்திற்கு தொடர்ந்து ஆள் அனுப்பிக் கொண்டு இருப்பது என்பது கேட்கவே சந்தோஷமா இருந்தது. அதுக்காக தான் உங்களை நேரில்

பார்த்து வாழ்த்து சொல்லணும் என்று தோன்றியது. அதுக்காக தான் நீங்க மாப்பிள்ளை பெண்ணுக்கு கொடுக்கும் விருந்துக்கு. சம்பந்தமே இல்லாமல் ஒட்டிக் கொண்டு வந்து இருக்கேன். இந்த வேலையைச் சிரமம் என்று நினைப்பேனா?'' என்று வற்புறுத்த அவர் புன்னகைத்தார்.

''இந்த மாதிரி ராணுவ பணிக்கு போகணும் என்று நினைக்கும் ஆட்களே கம்மியாகி விட்டார்கள் சத்யா. செழியனிடமும் சொல்லி இருந்தேன். அடுத்த தலைமுறையில் அனுப்ப எனக்கு ஆள் இல்லாமல் போய் விட்டதே என்ற வருத்தம் இருக்கு'' என்றவரை பெருமிதம் கலந்த வருத்தத்துடன் பார்த்தான்.

''உங்க மகனின் செயல் குறித்த பெருமை இருக்கலாம். ஆனால்...''

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது புரிகிறது சத்யா. இதில் நான் என்ன நினைக்கிறேன் என்பது மட்டும் போதாது. அதுக்கு கால நேரம் கூடி வரணும் இல்லையா? யார் யாருக்கு என்னென்ன விதிக்கப் பட்டு இருக்கிறதோ அது நடந்தே தீரும். அதை மாற்ற யாராலும் முடியாது...'' என்று பெருமூச்சுடன் மங்கையர்க்கரசி சொல்ல அவன் வருத்தத்துடன் ஆமோதித்தான்.

# 5



மங்கையர்க்கரசியும் சத்யமூர்த்தியும் ஹாலில் தீவிரமாக அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தபோது.



'செழியனிடம் ஏற்கனவே சொல்லி இருந்தேன். நான் காவது தலைமுறையாக இன்னொரு ஆளையும் ராணுவத்திற்கு அனுப்ப ஆர்வமாக இருந்தேன்'' என்று சொன்ன மங்கையர்க்கரசியின் வார்த்தைகள், அந்நிமிடம் வரை ஓரமாக நின்று அவர்கள் பேசுவதை கவனித்துக் கொண்டு இருந்த நிர்மலாவை அடுக்களைக்குத் துரத்தியது.

ஏற்கனவே இந்த விருப்பத்தை இவர் தன் மகனிடம் பகிர்ந்து கொண்டு இருக்க வேண்டும். அவனுமே தன்னிடம் சொல்லி விட்டான். அவன் சொன்ன விஷயங்கள் இரண்டுமே அவள் மனதில் பதிந்து விட்டது. செழியனுடன் தான் நடத்திய குடும்ப வாழ்க்கை குறித்த சந்தோஷ நினைவுகள் அழுத்த, அவள் அடுக்களைக்குள் சென்று சுவற்றில் சாய்ந்து அமர்ந்தாள். அவள் யாருடனும் நெருங்கிப் பேசிப் பழகுவது இல்லை என்பதால் ஆரம்பத்தில் மங்கையர்க்கரசியின் அதட்டலில் ஒளிந்து இருந்த அக்கறை பல மாதங்கள் வரை புரியவே இல்லை.

அவன் தன்னை பார்க்க வந்தபோது, உடனே என்று மாப்பிள்ளை வீட்டினரின் முன்பு வந்து நின்றாள். ஆனால் அவளின் முக பாவனை இறுக்கமாக இருப்பதை உணர்ந்ததாலேயோ என்னவோ, அவளிடம் தனியாகப் பேச தன் பெற்றோரிடம் அனுமதி கோரினான் செழியன். அப்போது அவன் பேசிய வார்த்தைகள் இன்னும் மனதில் நின்றது.

* * *

''வணக்கம் மிஸ் நிர்மலா தேவி, மூன்று நாள் முன்பு தான் ஊரில் இருந்து வந்தேன். உடனே இங்கே

வந்ததால், உங்களுக்கு ஏதாவது சிரமம் இருந்ததா? ஒரு வேளை இருந்தால் சரி...'' என்று அவன் ஆரம்பித்த விதமே 'ஒரு வித வெறுமையோடும், இயலாமை யோடும்' இருந்த அவளின் மனதை மாற்றி, 'அவன் கேட்ட மன்னிப்பை' அவசியம் இல்லை என்று பதட்டத் துடன் மறுக்க வைத்தது.

''சிரமம் ஏதும் இல்லை. நீங்க சாரி சொல்லத் தேவை இல்லை...''

''சாரி தேவை இல்லை என்று வார்த்தையால் சொல் நீங்க. ஆனால் முகத்தில் அந்த உணர்வு இருப்பது மாதிரி தெரியலை. ஏதோ ரொம்ப இறுக்கமா, அம்மா அப்பா சொல்லிட்டாங்களே என்று வந்து என் முன்னால் நிற்பது மாதிரி இருக்கு. அப்படியா?'' என்று அவன் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''அச்சோ! என்னுடைய நினைப்பு தப்பு என்று சொல் வீங்க என்று நினைத்தேனே? அப்ப இந்த வருடமும் கல்யாணம் இல்லையா...?'' என்று பெருமூச்சு விட் டான்.

''நான் இல்லாவிட்டால் வேறே பொண்ணு பார்த்து...''

''நான் வேறே பொண்ணு பார்ப்பது இருக்கட்டும். நீங்க வேறே யாரையாவது விரும்புறீங்களா?''

''ம்ஹூம்! இல்லை'' என்று அவசரமாக தலை அசைத்தாள்.

''என்னைப் பார்த்தால் உங்களுக்கு கடிச்சுக் குதறணும் என்றோ, இல்லை பயமாவோ... வெறுப்பாவோ... இருக்கா?'' என்று அவன் மீண்டும் விசாரிக்க அவசரமாக தலை அசைத்தாள்.



''இல்லை! ஏன் இப்படி எல்லாம் கேட்கறீங்க?''

''அப்புறம் என்ன நிர்மலா? நம்ம நாட்டில தொண் ணூறு சதவிகித கல்யாணம் இப்படி தான் நடக்குது. என்னை ஏன்டா கல்யாணம் பண்ணிக் கொண்டோம் என்று நீ வருத்தப்படும் அளவுக்கு நானோ எங்க அம்மாவோ நடந்து கொள்ள மாட்டோம். எங்களை நம்பி கல்யாணத்திற்கு சம்மதம் சொல்கிறாயா?'' என்று அவன் மீண்டும் கேட்க, அவள் தயக்கத்துடன் பார்த்தாள்.

''நிர்மலா தேவி என்னவோ கேட்க நினைக்கிறது தெரியுது. ஆனால் வார்த்தைகள் வெளியே வரலையே? வாயைத் திறந்து சொன்னால் தானே எனக்குப் புரியும். என்ன விஷயம்...?''

''உங்களுக்கு என்னைப் பிடிச்சு இருக்கா...?'' என்ற அந்தக் கேள்வியை கேட்பதற்குள் அதற்கு என்ன பதில் சொல்வானோ என்ற குறுகுறுப்பு, இவன் தன்னை பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டால், மீண்டும் தான் வேலைக்குப் போவது குறித்து இன்னொரு முறை அப்பாவிடம் பேசிப் பார்க்கலாமே என்ற ஆர்வம், அதிக ப்ரசங்கித் தனமாக பேசுகிறாய் என்று அண்ணனோ அப்பாவோ திட்டக் கூடுமோ என்ற கவலை, எல்லாம் சேர்ந்து, அவளுக்கு முன் நெற்றியில் வேர்வை துளிர்த்தது.

''இதுக்கு நான் என்ன பதில் சொன்னால் உங்களுக்கு சந்தோஷமா இருக்கும் என்று சொல்லுங்க. அதே பதிலையே நான் சொல்லி விடுகிறேன்...'' என்று அவன் சொல்ல அவள் விழித்தாள்.

''நான் நீங்க நினைப்பதைக் கேட்டால், நீங்க என் னையே திருப்பிக் கேட்டால் என்ன அர்த்தம் என்று

தானே யோசிக்கிறாய்? ஏன் என்றால் எனக்கு உன்னைப் பிடித்து இருக்கு. அதனால் உன் சந்தோஷம் எனக்கு முக்கியம். என்ன பதில் சொல்லணும்?''

இந்த அறைக்குள் வந்து பேச ஆரம்பிக்கும்போது சொன்ன, மிஸ் நிர்மலாதேவி, அப்புறம் சொன்ன நிர்மலாவுடன் இணைந்த மரியாதை பன்மை, இப்போது வந்த ஒருமையான உரிமை பேச்சு, இதெல்லாம் படிப் படியாக அவளை அவன் ரசிப்பதை அவளுக்கே உணர வைத்தது.

என்ன பதில் சொல்ல வேண்டும் என்று தன்னிடமே கேட்கும் அவனுடைய பெருந்தன்மையும், உன்னை எனக்குப் பிடித்து இருக்கிறது என்று சொன்ன பண்பும், தன் வீட்டில், அண்ணனுக்குத் திருமணம் முடிக்க நெருக்கும் அந்தப் பெண் வீட்டினருக்கு சாக்கு போக்கு சொல்ல முடியாது என்ற நிலையில் உள்ள குடும்ப சூழலும், அவளை அந்தத் திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தது.

''கல்யாணத்திற்கு சம்மதம் சொன்னதில் எனக்கு உண்மையிலேயே ரொம்ப சந்தோஷம் நிர்மலா. இங்கே வந்து உன்னைப் பார்ப்பதற்கு முன்பே எனக்கு உன்னைப் பிடித்தது. ஏன் என்று தெரியுமா?'' என்று கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''உன்னை பிடித்ததற்கு ஒரு காரணம் என்று முன்பு நினைத்தேன். இப்ப அதை இரண்டாக்கிக்கோ. இந்த மாதிரி நீ வாயைத் திறக்காமலே கண்ணால் மௌன மொழி பேசுவது ரொம்பப் பிடிச்சு இருக்கு...''

''தேவை ஏற்பட்டால் பேசுவேன்.''



''அதுவும் அவசியம் தானே? நான் வருஷத்துக்கு ஒரு முறை ஒரு மாசம் வருவேன். ஆறு மாசம் முன்பு வரை அப்பா இருந்ததால் அது எனக்கு பெரிசா தோன்றவில்லை. ஆனால் இப்போ எனக்கு அங்கே இருப்பே கொள்ளலை. வேலைக்கு ஆட்கள் இருந்தாலும் வீட்டு ஆள் இருப்பது மாதிரி ஆகுமா? அதனாலேயே இந்த வருட லீவு முடிவ தற்கு முன்னாடியே கல்யாணத்தை நடத்தி விட வேண் டும் என்ற முடிவோடு வந்தேன்...'' என்று நிறுத்த, ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

''சீக்கிரம் கல்யாணம் முடிக்க வேண்டும் என்பதற்காக எதோ ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிவிட முடியாதே? உனக்கு ராணுவத்தில் பணி புரிய ஆசை என்று உங்க அப்பா சொன்னார். கேட்க சந்தோஷமா இருந்தது. அந்த வார்த்தை கேட்டதுமே உன்னை பார்ப்ப தற்கு முன்பே அம்மாவிடம் நான் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லிட்டேன்...''

''எனக்கு ராணுவத்தில் பணி புரிய இருக்கும் ஆசைக் கும், நீங்க கல்யாணத்திற்கு சம்மதம் சொன்னதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று குழப்பத்தோடு கேட்க அவன் புன்னகை செய்தான்.

''என் அப்பா தாத்தா இரண்டு பேருமே ராணுவத்தில் பணி புரிந்தவர்கள். அதை நாட்டுக்கு செய்த சேவையாக நினைத்தவர்கள். அதைப் பார்த்து, எனக்கும் என் பிள் ளையை அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் தோன் றியது. உனக்கே இந்த மாதிரி ஆசை இருக்கு என்றால் என் ஆசைக்கு நீ தடை சொல்ல மாட்டாயே! அந்த சந்தோஷம்தான்...'' என்று சொன்னது, அவள் காதுகளில்

ஒலித்து அவள் கண்களில் புதிதாக நீர் உற்பத்தி செய்தது.

''அரை மணி நேரம் நடந்து போனதில் செமையா பசிக்குது. சாப்பிட நான் ரெடி அத்தை, விருந்து பரிமாற நீங்க ரெடியா...?'' என்று கேட்டபடி உள்ளே வந்த வசுந்தராவின் குரல் அவளை அவசரமாகத் தரையில் இருந்து எழ வைத்தது.

முகத்தை புடவை முந்தானையில் துடைத்தபடி, அடுப்பைப் பற்ற வைத்து அப்பளம் பொரிக்க சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி, வேலையாக இருப்பது போல பாவனை செய்ய, மங்கையர்க்கரசி வேகமாக உள்ளே வந்தார்.

''வெளியே பேசிக் கொண்டே இருந்ததில் உள்ளே நீ தனியா இருப்பதை மறந்தே போயிட்டேன்...'' என்று வந்தவர் அவளின் வாடிய முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

''நிர்மலா... என்ன ஆச்சு...?''

''வடைக்கு வெங்காயம் வெட்டி வச்சு இருந்தீங்க இல்லையா? அதை மாவில் போட்ட கையோடு, கண்ணில் வச்சுட்டேன்...'' என்று சமாளித்ததை நம்ப அவரின் அனுபவம் இடம் கொடுக்கவில்லை.

''சரி முகம் கழுவிட்டு வா, நான் அப்பளம் பொரிக்கிறேன்...'' என்று ஆசுவாசப்படுத்தி கொள்ள அவகாசம் தந்தார்.

உணவு நேரத்தில், அக்காவின் சமையல் திறமை, அவளின் படிப்பு திறமை, இவற்றோடு, தனக்கும் படிப்புக்கும் எவ்வளவு தூரம் என்பதையும் கூட கூச்சமே



இல்லாமல் தன்னைத் தானே கேலி செய்து சிரித்தபடி வாய் ஓயாமல், பேசிக் கொண்டே இருந்தாள் வசுந்தரா.

''கககடகவுகளே! கமுகற்கபகககல் கசெகய்கதாகல் கபிகற்கபகககல் கவிகளைகயுகம் கஅகனுகபகவி பிரசன்னா...'' என்று ஆயாசத்தோடு சத்யா சொன்ன வேகத்தில், அவன் என்ன சொன்னான் என்பது அங்கே இருந்த யாருக்கும் புரியாமல் விழித்தனர். பிரசன்னா மட்டும் சிரிக்க, மற்ற மூவரும் அவனை கேள்வியோடு நோக்கினர்.

''என்ன சொல்றார் உங்க பிரண்ட்? என்னை திட்டுறாரா? ஆனால் தைரியமா என் முகத்தை நேருக்கு நேர் பார்த்து எனக்குத் தெரிஞ்ச பாஷையில் திட்டட்டும். நீங்க வேறே சிரிக்கறீங்க. என்ன விஷயம் என்று சொல்லிட்டு சிரிங்க...'' என்று மிரட்டினாள் வசுந்தரா.

''அவன் உனக்கு நல்லா தெரிஞ்ச பாஷையில் தான் பேசுகிறான். உன்னை திட்டவும் இல்லை. உன்னைப் பார்த்து சிரிக்கிறான். அதனால் நீ கோபித்துக் கொள்ள தேவை இல்லை...'' என்று சிரிப்பினூடே விளக்கம் சொன்னாலும், அந்த விளக்கமும் மற்ற மூவருக்கும் புரியவில்லை.

''ஆஹா! விளக்கம் என்ற பேரில் நீ...ள...மா ரெண்டு வாக்கியம் பேசிய பிறகும், அட்சர சுத்தமா ஒண்ணுமே புரியாமல் இருக்கும் அழகை இங்கே தான் பார்க்கிறேன்...'' என்று வசுந்தரா, அபிநயம் பிடிக்க அவளின் பாவனையைப் பார்த்துச் சிரிப்பு மேலும் பரவியது.

''சொல்றேன் வசு, கிரிப்டோக்ராபி கேள்விப் பட்டு இருக்கியா?''

''மறை பொருளில் செய்தி சொல்லும் அறிவியல், ரகசிய செய்திகளைப் பரிமாறிக் கொள்ள உதவும் சைன்ஸ், ராணுவ ரகசியங்களை பரிமாறிக் கொள்வதை உதாரணமாகச் சொல்லலாம்...'' என்று நிர்மலாவிடம் இருந்து வந்த பதிலில் ஆச்சரியத்துடன் பிரசன்னா சத்யா இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

''இப்ப ரெண்டு பேரும் அவளை 'பே'ன்னு பாருங்க. இதைதான் கொஞ்ச நேரம் முன்னாடி அவள் படிப்பாளி. அவளுக்கு நிறைய விஷயம் தெரியும் என்று நான் சொன்னேன். உங்க பிரெண்ட் ஏதோ சொன்னார். அதை விளக்க வந்த நீங்க இன்னும் உங்க விளக்கத்தை முடிக்கலை. அவரும் விளக்கம் சொல்றதா தெரியலை...'' என்று சலித்துக் கொண்டாள் வசுந்தரா.

''இது கிரிப்டோக்கிராபி லெவலுக்குப் போகலை-ங்க ஒவ்வொரு எழுத்துக்கும் இடையில் ஒரு 'க' சேர்த்து பேசினேன். இது காலேஜில் படிக்கும்போது பிரசன்னா ஹாபி. அவனை பார்த்து தான் நாங்க கற்றுக் கொண்டோம்...'' என்று சத்யா விளக்கம் சொல்ல எல்லோரும் வியப்புடன் கேட்டார்கள்.

''அப்ப இவங்க காதுல ரத்தம் வர வைச்சதுக்கு எனக்கு இன்று பலன் கிடைத்து விட்டது என்று சொல்லி சிரித்தான். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். அனுபவி பிரசன்னா என்று சொன்னான்'' என்று பிரசன்னா விளக்க, வசுந்தரா உட்பட மூன்று பெண்களுமே சந்தோஷத்துடன் சிரித்தனர்.

''மிஸ்டர் செழியன் செட்டில்மெண்ட் பணம் குறித்த விபரங்களைத் தெரிவிக்க, உங்க வீட்டு போன் நம்பரில்



இருந்து என் போனுக்கு ஒரு மிஸ்ட் கால் கொடுத்துக் கொள்கிறேன்'' என்று அறிவித்துவிட்டு வீட்டு எண்ணை தன் அலைபேசியில் சேமித்தவன், தன் நம்பரை அங்கே இருந்த டயரியில் எழுதி வைத்தான்.

அதன் கீழேயே, 1915181825, 20811411119, என்ற மேலும் இரண்டு நம்பர்களை எழுதி வைத்தான். அதில் ஒளிந்து இருந்த செய்தி உரிய ஆளை எப்போது போய் சேரும்? மனதில் படபடப்புடன் காத்திருந்தான் சத்யமூர்த்தி.

# 6



திருமணம் முடிந்த அன்றே, 'மூட நம்பிக்கைகளை உடைக்க வேண்டும்' என்ற நண்பனின் கோரிக்கையை ஏற்று, மனைவியின் சகோதரி வீட்டுக்கு வந்து விருந்துண்டு, கொஞ்ச நேரம் பேசிய பின் கை கடிகாரத்தைப் பார்த்த பிரசன்னாவை கண்டதும் மங்கையர்க்கரசி எழுந்து உள் அறைக்குச் சென்றார்.

''அத்தை, எங்கே போறீங்க...? நாங்க கிளம்புகிறோம். டைம் ஆச்சு...'' என்று சத்தம் கொடுத்தாள் வசுந்தரா.

''உங்களுக்கு ட்ரெஸ் எடுத்து வச்சு இருக்காங்க வசு. இதோ வந்துடுவாங்க...'' என்று தங்கையை அடக்கியவளை முறைத்தாள்.

''ஏற்கனவே கல்யாணத்தில் வேறே நிறைய செய்து இருக்காங்க அத்தை. இப்ப தனியா செய்யா விட்டால் என்ன?''

''உன் மேலே இருக்கும் அன்பில் கொடுப்பதை வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்து விட்டாயா நீ! சும்மா வாங்கிக்கோ...''

''சும்மா இரு நிம்மி. நீ வேலைக்குப் போனாலும் பரவாயில்லை. அவங்க சம்பாத்தியத்தில் எவ்வளவு செலவு பண்ணுவாங்க பாவம்...'' என்று அடக்க, நிர்மலாவின் முகம் வாடியது.

''உங்க செட்டில்மெண்ட் பணம் உங்களுக்கு சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு பண்ணிடலாம். உங்களுக்கு ஆர்மியில் வேலை செய்ய விருப்பம் இருப்பதா மங்கை அம்மா சொன்னாங்க. அதுக்கும் முயற்சி செய்யட்டுமா...?'' என்று அவளின் முகத்தைப் பார்த்து தேற்றும் வகையில் விசாரித்தான்.

''அது அம்மாவிடம் பேசிட்டு அப்புறமா சொல்கிறேன். நீங்க எப்போ ஊருக்கு கிளம்புவீங்க...?''

''நேற்று தானே வந்து இருக்கிறேன். இன்னும் முடிவு பண்ணலை...'' என்று சொன்னவன் குரலில் வெறுமை இருந்தது. அவனுக்கு வேறு யாரும் இல்லை என்ற எண்ணம் அவளின் சொந்த வருத்தத்தை பின்னால் போக வைத்தது.

''இப்ப ரிசப்ஷன் வேலை இருக்கும். அது முடிந்த பிறகு வேண்டுமானால்...'' என்று ஆரம்பித்தவள் அதன் பிறகே தான் என்ன சொல்ல வந்தோம் என்பதை உணர்ந்து பேச்சை நிறுத்தினாள். என்ன தான் பாவமாக இருக்கிறது என்றாலும், இவனுக்கு யாரும் இல்லை என்றால் தான் ஏன் இவனை இங்கே வரவழைக்க வேண்டும்? மேலும் அவள் உளறிக் கொட்டுவதற்கு முன் மங்கையர்க்கரசி வந்து சேர்ந்தார்.



''ஷ்! என்ன வக இது? பெரியவங்க ஆசையா கொடுப்பதை ஏன் மறுக்கணும்? வேண்டுமானால் அவங்களை வீட்டுக்குக் கூப்பிடலாம். நம்ம வீட்டில் வச்சு பதில் மரியாதை செலுத்தணுமே தவிர வேண்டாம் என்று சொல்வது நல்லாவா இருக்கு?'' என்று பிரசன்னா வசந்தராவின் காதுகளில் கடிதத்தை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

''அம்மா! இங்கே செலவு பண்ணிய இந்த இரண்டு மணி நேரமும் சந்தோஷமா இருந்தது. நான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும். நீங்க ரிசப்ஷனுக்கு வந்தால் நல்லா இருக்கும்'' என்று அழைப்பு விடுத்தான் பிரசன்னா.

''இங்கே கல்யாணத்துக்கு வந்தோமேப்பா! இது மாதிரி இன்னும் எத்தனை விசேஷம் உங்க வீட்டில் நடக்கும்? அதுக்கு வந்தால் போச்சு. விசேஷம் இல்லா விட்டால் சும்மா உங்களை பார்க்க வரக்கூடாதா?'' என்று புன்னகையுடன் தாங்கள் சென்னைக்கு வர முடியாத நிலையில் இருப்பதை தெளிவு படுத்தினார் மங்கை.

''அத்தை, விருந்து சூப்பரா இருந்துச்சு. ரிசப்ஷனுக்கு வராவிட்டால் போகிறது. உங்களுக்கு எப்போ டைம் கிடைக்குதோ, நீங்க ரெண்டு பேருமே எங்க வீட்டுக்கு வரணும். எட்டிப் பார்த்துட்டு ஓடுற மாதிரி இல்லாமல் இரண்டு நாள் தங்குகிற மாதிரி வாங்க'' என்று பொறுப்பாக அழைப்பு விட்ட வசுந்தராவைப் பார்த்து நிர்மலாவுக்கு மயக்கமே வரும் போல இருந்தது.

''சத்யா, ஊருக்குத் திரும்பிப் போக நாளாகும் இல்லையா? நடுவில் ஒரு நாள் ப்ரீயா இருந்தால் வந்து

போகலாமே! நீ இன்னும் எத்தனை நாள் சென்னையில் இருப்பாய்?'' என்று விசாரித்த மங்கையர்க்கரசியை திகைப்புடன் பார்த்தாள் நிர்மலா.

''இப்ப ரிசப்ஷன் இருப்பதால் கொஞ்ச வேலை இருக்கும்மா. அதற்குப் பிறகு நடுவில் வர முயற்சி செய்கிறேன்'' என்று விடை பெற்றான்.

''உங்க தங்கைக்கு தயார் செய்த விருந்தில் எனக்கும் ஒரு பங்கு அளித்ததற்கு நன்றி'' என்று நிர்மலாவிடம், கரம் குவித்து, கூறி விட்டு தான் டயரியில் எழுதி வைத்ததைப் பற்றி எந்தக் குறிப்பும் சொல்லாமலேயே கிளம்பினான்.

* * *

வசுந்தரா, சகோதரியைக் காயப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலேயே, போகிற போக்கில், சொன்ன, 'நீ வேலை செய்தாலும் பரவாயில்லை' என்ற வார்த்தைகள் மட்டும் அல்லாமல், அது தன்னைக் காயப்படுத்தியதை சத்யமூர்த்தி கவனித்து விட்டான் என்பதும் சேர்ந்து அவளை தவிப்பிற்கு உள்ளாக்கியது.

ஏற்கனவே அடிக்கடி தனக்குள் மூழ்கி விடும் நிர்மலாவிற்கு, அதனாலேயே வாசல் வரை சென்று விருந்தினர்களை வழி அனுப்பி விட்டு வந்த மங்கையர்க்கரசி பேசிய விஷயம் எதுவும் அவள் காதுகளை தாண்டி மூளையில் பதியவே இல்லை.

''ஹப்பா! வசுந்தரா கிளம்பிய உடனே வீடே அமைதியாகி விட்டதே? அவள் பேசுவதில் பாதிகூட பேச மாட்டேன் என்கிறாயே?'' என்று சலித்துக் கொண்டவர் திரும்பிப் பார்த்தார்.



''நிர்மலா, நான் கேள்வி கேட்பது தெரியாமல் அப்படி என்ன யோசனை?'' என்று குரலை உயர்த்திக் கேட்க அவள் நடப்புக்கு வந்தாள். அவருடைய வார்த்தைகள் அவள் கண்களில் மின்னல் வேகத்தில் நீர் துளிர்க்க வைத்தது.

''இப்ப எதுக்கு அழற நிர்மலா? உனக்கு இந்த வீட்டில் இருக்கப் பிடிக்கலையா?'' என்று கேட்க அவள் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள்.

''என்னம்மா... திடீர் என்று?''

''சமையல் கட்டில் அவங்க வரும் வரை நீயும் நானும் நல்லா பேசிட்டு இருந்தோம். ஒரு தவிர்க்க முடியாத, நம்மால் சரிப்படுத்த இயலாத ஒரு விஷயம் நிகழ்ந்து விட்டால், அதில் இருந்து வெளியே வர முயற்சி செய்யணுமே தவிர, அதையே எண்ணி எண்ணி அழுவது சரி இல்லை. வெளி உலகத்திற்கு வா. எதிர்காலம் பற்றி திட்டமிடு, என்று சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீ அதை காதில் வாங்கின மாதிரி தெரியலை. என் வார்த்தைக்கு என்ன மரியாதை வைத்து இருக்கிறாய்?''

''உங்க வார்த்தை எனக்கு முக்கியம். நீங்க சொல்வதைக் கூடிய மட்டிலும் மறுத்துப் பேச மாட்டேன். என்ன விஷயம் சொல்லுங்க.''

''உங்க அம்மா நேற்று இரவு பேசினாங்க. இன்னும் ரெண்டு மூன்று நாளில் வந்து உன்னை வேலூருக்கு அழைச்சுட்டுப் போறேன் என்று சொன்னாங்க. நான் உன்னிடம் பேசிட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். உங்க அம்மாவுக்கு நான் என்ன சொல்ல?'' என்று கேட்க, சில கணங்கள் தலை குனிந்து நின்றவளுக்கு கால்கள் வலுவிழந்து தடுமாறியது.

''நான் இங்கே இருப்பதில் உங்களுக்கு பிரச்னை இருக்காம்மா?'' என்று கேட்டவளின் குரல் நடுங்குவதை அவளாலேயே உணர முடிந்தது. செழியனின் மறைவு தன்னிடம் இருந்த கொஞ்ச நஞ்ச தன்னம்பிக்கையையும் எடுத்துச் சென்று விட்டதா?

''நிர்மலா, நான் உன் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கிறேன். நீ எங்கே வசதியாக சந்தோஷமாக இருப்பாய்? எங்கே உன் எதிர்காலம் நல்லபடியா அமையும் என்ற கவலை தான் இப்ப எனக்குள் ஓடிக் கொண்டு இருக்கு. இங்கே உன் அபிப்ராயம், உன் சந்தோஷம் தான் முக்கியம். நீ இங்கே இருப்பதில் எனக்கு என்ன பிரச்னை?'' என்று சொன்ன மங்கையர்க்கரசியின் வார்த்தைகளை கேட்டதும் அவளின் முகம் இறுக்கத்தைத் தொலைத்தது.

''அப்படி என்றால் நான் இங்கேயே இருக்கிறேன்'' என்று அடுத்த கணமே நிர்மலாவின் பதில் வர சந்தோஷமாக இருந்தாலும் தன் முன்னால் பெரும் பொறுப்பு வந்து சேர்வதைக் கவலையுடன் உணர்ந்தார்.

''நீ அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். நிதானமாக யோசித்துச் சொல்லு. செழியனின் கிராஜுவிட்டி பென்ஷன் எல்லாம் உனக்கே அனுப்பச் சொல்லி இருக்கிறேன். நீ பொருளாதார ரீதியில் சிரமப்பட தேவை இருக்காது'' என்று அவர் மேலே ஏதோ சொல்ல வந்ததை நிர்மலாவின் 'அம்மா...' என்ற அதட்டல் தடுத்து நிறுத்தியது. வசுந்தரா சொன்ன வாக்கியத்தில் பட்ட காயத்தை சமாளித்து நிமிர்வதற்கு முன்பே, கிட்டத்தட்ட அதே வாக்கியத்தை இவரும் சொல்கிறாரே என்ற ஆதங்கம் பொங்கியது.



''பணத்துக்காக நான் உங்களுடன் இருப்பதாகவா நினைத்து விட்டீர்கள்? இந்த ஒரு வருஷமா என்னைப் பார்த்துப் பழகியும் நீங்க என்னைப் பற்றி புரிந்து கொண்டது இவ்வளவுதானா?''

''நிர்மலா, உனக்கு பணம் பொருள் நகை ஆடை அணிகலன் என்று இது மேல் ஆசை இல்லை என்று எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் உனக்கு உறவு நட்பு என்று இருப்பது சந்தோஷத்தைத் தரும் என்று தான், உன் தங்கையை இங்கே இன்றே வரவழைத்தேன். ஆனால் அவர்கள் இங்கே வந்து இருந்த போதும், நீ அவர்களுடன் கலகலப்பாகப் பேசி சந்தோஷமாகச் சிரிக்கவில்லை...''

''நான்... எனக்கு... சில வார்த்தைகள்... சில ஜாடைகள் எனக்கு... சில விஷயங்களை நினைவூட்டுகையில் நான் என்ன செய்யட்டும்...?'' என்று கேட்டவளை வருத்தத்துடன் பார்த்தார்.

''நடந்ததை மாற்றும் சக்தி எனக்கு இல்லை. காலையில் நீங்க தானே சொன்னீங்க. அதை நானும் ஒத்துக் கொள்கிறேன். இனிமேல் அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன். நான் இங்கேயே இருக்கிறேன். இதில் யோசிக்க எதுவும் இல்லை. அம்மாவிடம் சொல்லி விடலாம்...'' என்று தீர்மானமான குரலில் சொல்லி விட்டு அறைக்குள் சென்றவளை திகைப்புடன் பார்த்தார்.

ஒரு மணி நேரம் முன்பு, அடுக்களையில் வசுந்தராவின் வருகையால் தடை செய்யப்பட்ட நினைவுகள், இப்போது அவளின் தனி அறையில், படுக்கையில் குப்புறப் படுத்து மூடிய கண்களுக்குள் தடையின்றி மீண்டும் தொடர்ந்தது.

* * *

''அம்மாவிடம் நான் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லிட்டேன். உனக்கும் இந்த கல்யாணத்தில் விருப்பம் என்று சொல்லி விட்டாய். அப்புறம் என்ன? உடனே நான் ஊருக்குக் கிளம்பும் முன்பாக திருமணம் வைத்துக் கொள்ளலாமா?'' என்று செழியன் கேட்டதும் அவளுக்கு மூச்சடைத்தது.

''உடனேவா...?''

''ஏன் இவ்வளவு ஷாக் ரியாக்ஷன் கொடுக்கிறாய்? சுபஸ்ய சீக்கிரம். அம்மா இங்கே வீட்டில் தனியா இருக்காங்க என்பதற்காக தானே இந்த அவசரக் கல்யாணமே? எங்க அம்மா பற்றிய ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்...'' என்று இழுத்தான்.

''என்ன...?''

''நீ நல்ல பெண் என்று ஊகிக்க முடிகிறது. ஆனாலும், உனக்கும் பல ஆசைகள் இருக்கலாம். அதில் சில எங்க வீட்டில் கிடைக்கலாம். சில கிடைக்காமல் போகலாம். நான் வருஷத்துக்கு ஒரு மாசம் தான் இங்கே வருவேன். அம்மா தனியா இருக்காங்க. அம்மாவின் குரல் கொஞ்சம் அதட்டலாக இருந்தாலும், ரொம்ப பாசமானவங்க. அவங்களுக்கு துணையா நீ எப்பவும் இருக்கணும். வழக்கமா இருக்கும் மாமியார் மருமகள் சண்டை நம் வீட்டில் எட்டிப் பார்க்காமல் இருக்க நீ உதவி செய்யணும்...''

''உங்க அம்மாவை நான் ஒன்றும் சொல்லலையே?''

''நீ சொன்னாய் என்று நானும் சொல்லவில்லை. எங்க அம்மாவைப் பற்றி எனக்கு தெரியுமே. நானும் இல்லாமல் நீங்க ரெண்டு பேரும் தான் வீட்டில் இருக்க நேரிடும். நீங்க ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரணையா



கடைசி வரை இருப்போம் என்ற உறுதியை நீ கொடுக்க வேண்டும். இது இந்த திருமணத்தின் அடிப்படைத் தகுதி. இதில் எந்த சமரசமும் கிடையாது'' என்று சொல்லி தன் வலது கையை அவளின் புறம் நீட்டினான் செழியன்.

''என்னங்க நீங்க? இன்று சரி என்று சொல்லி விட்டு நாளை நான் அதை மதிக்கா விட்டால்...'' என்று அவள் உடனேயே திருப்ப அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''நீ மதிக்காமல் இருக்க மாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. அந்த நம்பிக்கை பொய்த்துப் போனால் என்ன செய்ய முடியும்? உன்னுடைய இந்தக் கேள்வியே, வாக்கு கொடுப்பதற்கு முன்பு நீ எவ்வளவு கவனமாக இருக்கிறாய் என்பதைச் சொல்கிறது.

அதனால் நீ அதை மதிக்காமல் போவதற்கு வாய்ப்பு குறைவு. இன்றைய மன நிலையை வைத்து நீ வாக்கு கொடு'' என்று அவன் வற்புறுத்த, அவனின் கரத்தில் அழுத்தி தன் சம்மதத்தைச் சொன்னாள்.

அவன் என்ன நினைத்துக் கேட்டானோ? இன்று என்ன மாதிரி சூழலில், அவரை விட்டுப் பிரிய மாட்டேன் என்று சொல்ல வைத்து இருக்கிறது விதி? கண்களில் நீர் பெருகி கன்னங்களில் வடிந்தது.

# 7



கடந்த காலத்தில் நிகழ்ந்த தன் திருமணம், செழியன் மறைவு உள்ளிட்ட நிகழ்வுகளை மறக்க முடியாது என்ற

நிலையில், அதைத் தற்காலிகமாக தள்ளி வைக்கவும், அடுத்த என்ன என்று யோசிக்க வேண்டிய அவசியத்தைச் சொன்ன மங்கையின் வாதத்தில் இருந்த உண்மை உறைக்க, நிர்மலா வெளியே வந்தாள்.

‘காலையில் ஏழு மணிக்கு கதிர் அறுக்க இருபது ஆட்களை கூட்டி வந்துடு. லேட் பண்ணின. முழு நாள் கூலி கிடைக்காது. சாப்பிடப் போனேன். லேட் ஆகிடுச்சு என்று சொல்லாதே. ஆளுக்கு நாலு இட்லி வயலில் நானே எல்லாருக்கும் வயலில் கொண்டு வந்து கொடுக்கச் சொல்றேன். ராத்திரி பத்து மணிக்கு த்ரீ பேஸ் கரண்ட் வரும்போது கரும்பு காட்டுக்குத் தண்ணி பாய்ச்ச முருகனிடம் சொல்லிடு. அவன் அவனுக்குத் தண்ணியைப் போட்டுட்டு சாஞ்சுடப் போறான். பார்த்துக்க...'' என்று வாசலில் பண்ணையாளிடம் மங்கையர்க்கரசி பேசிக் கொண்டு இருப்பது காதில் விழுந்தது.

மதியம் சாப்பிடாததால், வயிறு ஓலமிட, அடுக்களைக்குச் சென்றாள். விருந்தினர் சாப்பிட்டது போக மிச்ச சாப்பாடு அப்படியே இருந்தது. ஒரு மணி நேரம் தன் நினைவுகளில் மூழ்க, மங்கை தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருக்கிறார்.

உணவு மேஜையில் இரண்டு தட்டு தண்ணீர் எல்லாம் எடுத்து வைத்துவிட்டு வாசலுக்கு வந்த நிர்மலா, ''வாங்கம்மா சாப்பிடலாம்...'' என்று அழைக்க, அவளை வியப்பாகப் பார்த்தார் மங்கை.

''எஞ்சினியரிங் படித்து இருக்கிறாயே! சின்ன பொண்ணு, கல்யாணம் ஆன புதுசு, வயல் வேலைக்கு உன்னை அழைக்க வேண்டாமே என்று நினைத்தேன். ஆனால்



இப்ப உன்னை விரட்டி, அதைப் பாரு. இதைப் பாரு என்று பொழுது விடிந்ததில் இருந்து சாய்வது வரை வேலை கொடுத்தால், உனக்கு அழ நேரம் இருக்காது...''

''அம்மா, இது பத்தி நானே உங்களிடம் பேசணும் என்று நினைத்தேன். நீங்கள் ஆரம்பித்து விட்டீர்கள்...'' என்று சொன்ன நிர்மலாவை சந்தோஷமாகப் பார்த்தார்.

''பரவாயில்லையே! இது சம்பந்தமா என்ன பேசணும் என்று நினைத்தாய்?''

''மதியம் சத்யா சார் வந்து இருந்தார் இல்லையா? பணியில் இருக்கும்போது இறந்ததால், கருணை அடிப்படையில் எனக்கு மத்திய அரசில் வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கு. முயற்சி செய்யட்டுமா என்று கேட்டாங்க. நான் உங்களிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன்...'' என்று இழுக்க அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

''ஏன்மா நான் வேலைக்குப் போவது உங்களுக்குப் பிடிக்கலையா?''

''வேலைக்குப் போ என்று நான் தானே பேச்சை ஆரம்பித்தேன். அப்புறம் எப்படி பிடிக்காமல் இருக்கும்? ஆனால் கருணை அடிப்படையில் வேலை வழங்குவது அரசாங்கம் வறுமையில் இருப்பவர்களுக்குக் காட்டும் ஒரு சலுகை. அதை நாம் அனுபவிக்க வேண்டுமா என்று யோசித்தேன்...''

''ஓ! நீங்க சொல்வது சரி தான். நான் இதுவரை அந்த மாதிரி யோசித்ததில்லை. ஆனால்...'' என்று ஆரம்பித்து விட்டு அவளே மறுப்பாக தலை அசைத்ததுடன் லேசா இடது கையால் நெற்றியில் தட்டிக் கொண்டாள்.

''என்ன? எதுக்குத் தலையில் தட்டிக் கொள்கிறாய்?''

''அரசாங்கத்தில் கொடுக்கும் வேலை வேண்டாம் என்று சொல்கிறோமே! பணத்தை வாங்கலாமா என்ற கேள்வி எழுந்தது. சொல்வதற்கு முன்னாலேயே தப் பில்லை என்பது புரிந்து விட்டது.''

''அரசாங்கம் கொடுக்கும் பணம், மரணம் அடைந் தவரின் குடும்பத்தினருக்கு கொடுக்கப்படும் இழப்பீடு. இதைப் பெற்றுக் கொள்வதால், யாருக்கு எந்த நஷ்டமும் இல்லை. ஆனால், நாம் வேலையைப் பெற்றுக் கொண் டால், வேறு யாராவது தகுதியானவருக்கு போகாமல் தடுக்கிறோம் என்பது தானே பொருள்? இரண்டு விஷயம் இதில் பார்க்க வேண்டும். நமக்கு இந்த வேலை வந்து தான் வயிறு நிறைய வேண்டும் என்ற நிலை இல்லை. அரசு வேலை பெற்றால், மறுமணம் செய்து கொள்வதில் பிரச்னைகள் வரலாம். நம் வாழ்க்கையை நாமே ஏன் சிக்கலாக்கிக் கொள்ள வேண்டும்?'' என்று கேட்க அவரின் பேச்சில் திகைத்து அமைதியானாள் நிர்மலா. அவரின் தீர்க்கமான சிந்தனை, மறுமணம் பற்றி காட்டிய குறிப்பு, இரண்டுமே பேச்சிழக்க வைத்தது.

''உங்களிடம் இருந்து நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ளாமல் இத்தனை நாள் வீணாக்கி விட்டேன். இனி மேல் அப்படி நடக்காது. நாளைக்கே நான் வயலுக்கு உங்களுடன் வருகிறேன்...'' என்று சொல்ல அவர் மறுப் பாக தலை அசைத்தார்.

''கருணை அடிப்படையில் உனக்கு அரசாங்கம் தரும் வேலைக்கு தான் போக வேண்டாம் என்று சொன்னேனே தவிர, உன் படிப்புக்கேற்ற வேலையை நீ தேடிக்



கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. பிரசன்னா வுக்கு பயோடேட்டா அனுப்பி சென்னையில் வேலை பார்க்கச் சொல்லலாம்.''

''இல்லைம்மா. வேலைக்காகக் கூடச் சென்னைக்கு உங்களை இங்கே விட்டுட்டு தனியாகப் போக நான் பிரியப்படவில்லை. சம்பாத்தியம் முக்கியம் இல்லை என்று சொல்லிட்டீங்க. அப்படி இருக்கும்போது தொலை தூரம் சென்று வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இங்கேயே, நாலு பேருக்கு பிரயோஜனமாக என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன்...''

''இப்பதான் என் மருமகள் என்னை மாதிரி யோசிக் கிறாள். நமக்கு லாபம் முக்கியம் இல்லை. அதற்காக நஷ்டப் படணும் என்ற அர்த்தம் இல்லை. சின்ன பிள்ளைகளுக்கு அல்லது பெண்களுக்கு தேவையானது ஏதாவது செய். முதலில் அந்த பையன் சத்யாவுக்கு போன் பண்ணி, வேலை வேண்டாம் என்று சொல்லிடு...'' என்று உற்சாகமாக சொன்னார்.

''நீங்களே சொல்லிடுங்கம்மா... நான் எதுக்கு...'' என்று தயங்க அவரும் எழுந்து போனை நெருங்கினார்.

''நிர்மலா, இதுல என்ன மூன்று நம்பர் இருக்கு? எது போன் நம்பர் பாரு...'' என்று அந்த டயரியை நீட்ட அவள் வியப்புடன் பார்த்தாள்.

முதல் பார்வையிலேயே, பூஜ்யம் சேர்த்து இருந்த அந்த முதலில் எழுதப்பட்ட எண் தான் போன் நம்பர் என்று புரிய, அதை மங்கை அம்மாவிடம் கை காட்டி விட்டாலும் கண்கள் அந்த அடுத்த இரண்டு எண்களை ஆராய்ந்தது.

இரண்டும் போன் நம்பர் இல்லை. லேண்ட் லைன் இணைப்பாக இருக்க வாய்ப்பில்லை. எஸ்.டி.டி. கோ இருப்பது மாதிரி தெரியவில்லை. யோசிக்க சில நேரம் முன்பு கிரிப்டோக்ராபி பற்றி பேசிய நினை வந்தது. பிறர் அறியாமல் செய்தி சொல்லி இருக்கிறா இரண்டு எண்ணங்களும் இரண்டு வார்த்தையா இருக்க வேண்டும். தமிழா? ஆங்கிலமா? பத்து எண்க சிந்தனை ஓட, அங்கே அவர் போனில் பேசுவது காதி விழவே இல்லை.

அவன் தனக்கு பரீட்சை வைத்து இருக்கிறான் அதைக் கண்டு பிடித்து, நான் பாஸ் என்று சொல் வேண்டும். அவனிடம் தான் தோற்கக் கூடாது? ஏற்கனவே ஒரு முறை அவன் கை ஓங்கியது போதாதா என் எண்ணம் வந்ததும் சிந்தனை அங்கே நின்றது.

ஆஹா! இது அந்த நிகழ்ச்சி தொடர்பாக எழுதி இருக்க வேண்டும். நிகழ்ச்சி தொடர்பாக வேறென்ன சொல்ல போகிறான்? ஒன்று தப்பாக நினைத்து கை ஓங்கியதற் சாரி சொல்ல வேண்டும். அல்லது வீட்டை தீக்கு இரை யாகாமல் காப்பாற்றியமைக்கு நன்றி சொல்லி இருக்க வேண்டும்.

''இதில் என்ன சொல்லி இருக்கிறான்'' என்ற ஆராய்ச்சி யுடன் மீண்டும் எண்களை ஆராய விழிகள் பளிச் சிட்டது.

ஏ பீ சி டீ யின் எண்களை பயன்படுத்தி இருக்கிறான். சாரி, தேங்க்ஸ் என்ற இரண்டு வார்த்தைகளுக்கான ஆங்கில எழுத்தின் எண்கள் அவை.

19-S, 15-O, 18-R, 18-R, 25-Y,



20-T, 8-H, 1-A-, 14-N, 11-K, 19-S,

'சபாஷ்! நிர்மலா...' என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டவளின் தன்னம்பிக்கை அடுத்த நிலைக்கு ஏற்றம் கண்டது.

* * *

நிர்மலா தேவியை பார்த்து நாற்பது எட்டு மணி நேரம் ஆகப் போகிறது. நேற்று முன் தினம், இரவு எட்டு மணி அளவில் பிரசன்னாவை வரவேற்க பெண் வீட்டின் சார்பில் வைத்த அலங்காரத் தட்டுக்களின் வேலைப் பாட்டை பாராட்ட அவன் முயன்றபோது நிகழ்ந்த எதிர் பாராத சந்திப்பு ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து இன்னும் சத்யமூர்த்தியால் வெளிவர முடியவில்லை. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அவளை முதலில் பார்த்த தற்கும், இப்போதைய தோற்றத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை.

லேசாக பூசினாற் போல இருந்தாள் என்பதை தவிர வேறு மாற்றம் இல்லை என்பதால் முதல் பார்வையி லேயே அவளை அவனால் அடையாளம் காண முடிந்தது. அவள் இருந்த சூழ்நிலையை இரண்டு நாட்கள் முழுசாக முடிந்த பின்னும் ஜீரணிக்க இயலவில்லை.

நின்றால்... நடந்தால்... படுத்தால்... யாரிடமாவது பேசினால்... சும்மா உட்கார்ந்தால்... என்று எங்கே என்ன செய்த போதும், அவளின் நினைவுகள் தோன்றுவதை அவனால் தடுக்கவே முடியவில்லை. இப்போது மாப் பிள்ளை வீட்டினரின் சார்பில் ஹோட்டலில் நடக்கும் வரவேற்பு நிகழ்ச்சியில் கூட அவளை நினைவுபடுத்திய சம்பவங்கள் எத்தனை எத்தனை?

வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்து விஸ்தாரமான புல்
தரையில் ஓடி ஆடி விளையாடிக் கொண்டு இருந்த
குழந்தைகளில் ஒன்று, தன் மழலையில், தனக்குப்
பிடிக்காத செயலை செய்த மற்றொரு குழந்தையை,
'அச்சுடுவேன்...' என்று மழலையில் மிரட்டியது அவளை
நினைவுபடுத்தியது. செய்தது தவறு என்பதை உணர்ந்
ததும், தங்கை என்றும் பாராமல் கை நீட்டி கண்டிக்கத்
துணிந்தாளே! அந்த நேர்மை எத்தனை பேருக்கு
வரும்?

இளவயதில் இன்னும் மணமாகாமல் இருக்கக் கூடிய
பெண்கள் அலங்காரமாகப் பட்டுப் புடவை, பொருத்த
மான அணிகலன்கள் அணிந்து, முதல் முறை புடவை
கட்டியதால், அங்கங்கே நின்று திரும்பி, புடவை மடிப்பு
கலையாமல் இருக்கிறதா என்று மேலும் கீழும் சரி
பார்த்துக் கொண்டே, 'பர்ஃபி படத்துல ரன்பீர் கபூர்
ஸ்வீட்' என்றோ, 'விராத் கோலி பெப்சி அட்வர்டைஸ்
மென்ட்ல சூப்பர்' என்றோ சிரித்துப் பேசியது அவளை
நினைவு படுத்தியது.

அவளின் வயதில் பெண்கள் திருமணமாகாமல்,
சினிமா நட்சத்திரங்களையும் விளையாட்டு வீரர்களை
யும் கவலை இன்றி ரசித்து சிரித்துக் கொண்டு இருக்க,
இவளுக்கு திருமணமாகி, ஒரே ஆண்டில் கணவன்
இறந்து எதிர்காலம் சூன்யமாக காட்சி அளிக்கிறதே!
எதற்காக இவளுக்கு இந்த நிலை?

இளவயது பெண்கள் மட்டும் இல்லை. மத்திய வயது
ஆண்கள் பொருளாதார மந்தநிலை பற்றி பேசி,
'சிட்டிக்குள்ளே இடம் வாங்குவது குதிரைக் கொம்பாகி
விட்டது. நூறு கிலோ மீட்டர் தள்ளி பார்ம் ஹவுஸ்



மாதிரி வாங்கிப் போட்டால், குழந்தைகள் வளர்ந்து
நிற்கையில், திருமணத்திற்கோ, மேல் படிப்புக்கோ
பயன்படும்' என்று எதிர்காலத் திட்டம் இடுகையில்,
அவளுக்கு காவேரிப்பாக்கம் கிராமத்தில் இருந்த பசுமை
வயல்களும், வயலுக்கு நடுவே இருந்த அந்த பெரிய
வீடு கண்ணில் வந்தது.

வயதான பெண்மணி ஒருவர், தள்ளாத வயதினால்,
துணைக்கு ஒரு பெண்ணை கை பற்றி உணவறைக்கு
அழைத்துச் சென்றதைப் பார்த்தால், மங்கையர்க்கரசி
அம்மா ஒரு தட்டில் உணவெடுத்து இலை போட்டு மூடி,
மருமகளுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பு எடுத்துச்
சென்றது நினைவில் ஆடியது.

''வயசாகிடுச்சே! ஹோட்டல் சாப்பாடு எப்படி இருக்
கமோ என்று பயந்து கொண்டே வந்தேன். வீட்டுல
செஞ்ச மாதிரி சாப்பாடு பண்ணி இருந்தீங்க. அதிலும்
பெரியவங்களுக்கு தனியா எண்ணெய், உப்பு, சர்க்கரை
எல்லாம் கம்மியா சேர்த்த ஸ்பெஷல் மெனு போட்டு
அசத்திட்டீங்க...'' என்று யாரோ ஒரு பெரியவர், விருந்து
ஏற்பாடுகளை கவனித்த ஹோட்டல் நிர்வாகியைப்
பாராட்டினால், முதல் நாள் மதியம் தங்கைக்கு என்று
தானே பிரத்யேகமாக சமைத்து நிர்மலா தேவி பரிமாறிய
விருந்து கண் முன்னால் வந்தது.

ஆறில் இருந்து அறுபது வயது வரை வித்தியாச
மின்றி, ஆண் பெண் பேதம் இன்றி, அவர்கள் பேசும்
பொருள் குறித்த எந்த பாகுபாடும் இல்லாமல், எதை
நோக்கினாலும், அந்த பொருளை நிர்மலாவோடு
சம்பந்தப்படுத்தி பார்க்கும், அவள் நிலை குறித்து சதா
சர்வ காலமும் வருந்தும், நிலைக்கு வந்து விட்டதை

கடந்த இரண்டு நாட்களில் ஐயம் திரிபற உணர்ந்து விட்டான் சத்யமூர்த்தி.

**சத்யமூர்த்தியின் டயரி குறிப்பு**

வயது வித்தியாசமில்லை,

ஆண் பெண் பேதமில்லை.

பேசப்படும் பொருள் முக்கியமில்லை.

யார் என்ன சொன்னாலும்...

அத்தனை வார்த்தைகளும்...

உன்னை... உன் செய்கைகளை... உன் நினைவுகளை

தூண்டுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை.

'நீ எனக்கு வேண்டும்' என்பதை உன்னிடம் எப்படி சொல்ல முடியும்? அதுவும் இந்த நேரத்தில்...? ஆனால் இப்போது இல்லா விட்டாலும், கூடிய விரைவில், 'உன் மேல் வந்த பரிதாபத்தினால் உனக்கு வாழ்வு கொடுக்கிறேன்' என்ற நிலையில் இறக்கி வைக்காமல், பொருளாதார சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையையும் உனக்கு ஊட்டி, உன்னை சம நிலையில் நிறுத்தி, ஒரு சாதகமான சூழலில், என் அன்பை வெளிப்படுத்த ஆசைப்படுகிறேன்.

# 8



சென்னையில் பிரசன்னா - வசுந்தரா திருமண வரவேற்பு நிகழ்ச்சி முடிந்த அடுத்த நாளே புதுமண



தம்பதிகள் தேனிலவிற்கு கிளம்பிச் சென்றுவிட, இரண்டு நாட்கள் தன்னை வளர்த்த ஆசிரமத்தில் செலவு செய்தான்.

ஆசிரமத்திற்குத் தேவையான சில சின்ன பராமரிப்பு பணிகளுக்கான செலவினைக் கையில் இருந்து கொடுத்தான். ஒரு நாள் ஆசிரமத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தன் செலவில் விருந்துக்கு ஏற்பாடு செய்தான். எங்கெங்கு சென்று என்ன காரியங்கள் செய்த போதும், நிர்மலாவின் நினைவு கூடவே வர, மற்ற வேலைகளை தள்ளி வைத்துவிட்டு, டெல்லிக்குக் கிளம்பினான்.

சாதாரண சமயத்தில் மூன்று மாதங்கள் ஆகக் கூடிய வேலையை, தொடர்ந்து ஒவ்வொரு மேஜையில் இருந்தவர்களிடமும், சொல்லி நகர்த்தி, பத்தே நாட்களில் மத்திய அரசின், உத்தரவினை பெற்ற பின்பு, நிர்மலாவின் வீட்டிற்கு அழைத்தவன் உள்ளம் உற்சாகத்தில் துள்ளிக் குதித்ததை அவனால் உணர முடிந்தது.

இது வெறும் தகவல் பரிமாற்றம் மட்டுமே. அவளிடம் தன் காதலைச் சொல்லப் போவதில்லை. நேரில் அவளைப் பார்க்கப் போவதில்லை. தன்னுடைய தனிமையோ, வெறுமையோ உடனே மாறப் போவதில்லை. ஆனாலும் இந்த உள்ளம் ஏன் இப்படித் துள்ளிக் குதிக்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை.

கடந்த இரண்டு வாரங்களில் அவளாக தன்னிடம் பேசவில்லை. ஒரு தொலைபேசி பேச்சு. அதுவும் மங்கையர்க்கரசி, நிர்மலாவுக்கு கருணை அடிப்படையிலான வேலை தேவை இல்லை என்ற தகவலைத்

தந்தார். அதற்கு அவர் சொன்ன காரணம் அவனை பிரமிக்க வைத்தது.

இப்போது அவள் பேசுவாளா? பேசினால் எப்படிப் பேசுவாள்? என்ன சொல்வாள்? தன் செய்தியை அவள் பார்த்தாளா, என்று எப்படி கண்டு பிடிக்க முடியும்? அது குறித்த குறிப்பு ஏதேனும் கிடைத்தால், அங்கே நேரில் போகலாம். பயண காலம் போக, இன்னும் விடுமுறை முடிய பத்து தினங்கள் இருக்கிறது. அதில் பாதியை... அங்கே செலவழித்தால்... என்று தன் போக்கில் சிந்தித் தவன் காதுகளில், 'ஹலோ...' என்ற நிர்மலாவின் குரல் காதில் விழுந்தது.

மனம் கவர்ந்த பெண் எத்தனையோ ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்து சொல்லக் கூடிய அந்த ஒற்றை வார்த்தை, ஒரு மனிதனுக்குள் இத்தனை இதத்தை, உண்டாக்க முடியும் என்பதை அவனே அனுபவித்து இராவிட்டால், நம்பி இருக்க மாட்டான் சத்யா.

சற்றே குரல் உயர்த்தி, நிர்மலா இரண்டாவது முறை யாக, 'ஹலோ...' என்று சொன்ன பிறகே அவசரமாக மீண்டவன், 'ஹலோ... நான்தான்...' என்று மொட்டை யாக பேசி விட்டு நாக்கைக் கடித்தான்.

'ச..த்..யா..' என்று தனக்குள்ளே முனகியவள், வெளியில் 'சத்யமூர்த்தி சார்...!' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

''ஆமா! பரவாயில்லை, பேர் சொல்லாமலேயே கண்டு பிடித்து விட்டீர்களே...'' என்ற அவனின் சந்தோஷக் குரலைக் கண்டு கொள்ளுவதாக கட்டிக் கொள்ள வில்லை.



''அம்மா உரம் வாங்கப் போய் இருக்காங்க. வர இரண்டு மணி ஆகும் என்று நினைக்கிறேன். அப்புறமா பேசுறீங்களா?'' என்று பேச்சை முடிக்க முயன்றதாகக் காட்டிக் கொண்ட நிர்மலா போனை வைக்க அவசரப்பட வில்லை.

அவள் கண்டு பிடித்த விஷயத்தைச் சொல்ல வேண் டாமா? சொன்னால் அவனை தனக்கு நினைவிருப் பதைக் காட்ட வேண்டும். திருமண மண்டபத்தில் ஏன் தன்னைத் தெரியவில்லை என்ற கேள்வி எழும். அதற்கு என்ன பதில் சொல்வது? ஆனால் சொல்ல வாய் துறு துறுவென்றது.

''ஓ! அம்மாவிடம் மொபைல் இருக்கா?''

''இல்லையே! அப்புறமா பேச முடியாது என்றால், தகவல் சொன்னால், நானே அம்மாவிடம் சொல்லி விடுகிறேன்...''

''அப்புறம் பேச முடியாது என்று சொல்லலை. ஆனால்... சாப்பிட்டீங்களா?'' என்று பேச்சைத் தொடர தெரியாமல் வாய்க்கு வந்ததைக் கேட்டான்.

''ம்ம்... இன்னும் இல்லை. மணி ஆகலையே...?'' என்று அவள் கேட்ட பிறகே மணியைப் பார்த்தவன் முகத்தில் அசடு வழிந்தது.

'பகல் பனிரெண்டு மணி கூட ஆகாத நிலையில் மதிய உணவு முடிந்து இருக்காது. காலை உணவு பற்றி விசாரிக்கும் நேரம் இது இல்லை. ஏதாவது நல்லதா பேசுடா...! நல்ல வேளை நிர்மலாவால் தன்னைப் பார்க்க முடியாது' என்று எண்ணியவன் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

அவன் வார்த்தைகளுக்கு அழாவிக் கொண்டு இருக்கையில், "நீங்க சென்னையில் இருக்கீங்களா?" என்று நிர்மலாவே கேட்டாள்.

பேச்சைத் தொடர ஒரு வழி கிடைத்து விட்டது என்ற நிம்மதியில், 'இல்லையே! என்ன விஷயம் சென்னையில் ஏதாவது வேண்டுமா' என்று விசாரித்தான்.

"ஒன்றும் வேண்டாம். அங்கே சோழன் நகர் வீடு எப்படி இருக்கிறது... என்று கேட்க... நினைத்தேன்..." என்று தயக்கத்துடன் அவள் முடிக்கையில் இங்கே இவன் இதயம் துள்ளி வாய் வழியே வந்து விடும் போன்ற உற்சாகத்தில் வேகமாகத் துடித்தது.

"சோழன் நகர் வீடு இப்போ என்னிடம் இல்லையே? ஏன் கேட்கறீங்க?" என்றவன் குரலில் சந்தோஷம் இருந்ததை உணர முடிந்தது.

"ஓ! வேறு யாருக்கும் விற்று விட்டீர்களா?"

"இல்லை நிர்மலா. அது எனக்கு உரிமையான சொத்து என்று நான் நினைத்ததில்லை. படிக்கிற காலத்தில் தேவைக்கு அந்த சொத்தினைப் பயன்படுத்த வேண்டி இருந்தது. அந்தத் தேவை நான் வேலைக்கு வந்த உடனே முடிந்து விட்டதனால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே, 'நந்தனார் ஆசிரமத்திற்கு' எழுதிக் கொடுத்து விட்டேன். நீங்க அங்கே போவதில்லையா?"

அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், "ஓகே, இப்ப நீங்க அங்கே இல்லையா" என்று பேச்சை மாற்ற அவன் ஒரு கணம் விழித்தாலும் 'இந்த நிமிஷம் டில்லியில், இருக்கேன்..." என்று சொல்ல இப்போது அவள் இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.



விடுப்பு முடிந்து பணிக்குத் திரும்பும் வரை கூடக் காத்திருக்காமல் டில்லிக்குச் சென்று விட்டானா? தன் வேலையாகவா கிளம்பினான்? இங்கிருந்து டெல்லி செல்வதென்றால் போக்குவரத்து தவிர மற்ற செலவுகள் வேறு இருக்குமே!

"வேலையில் சேர்ந்து விட்டீர்களா?" என்று கேட்டவளுக்கு அவன் சொல்லப் போகும் பதில் தெரிந்தே இருந்தது.

"இல்லை. ஒரு பெர்சனல் வேலையா வந்தேன். வேலை முடிஞ்சுடுச்சு. சாதாரணமா மூன்று மாதங்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு உத்தரவினை பத்து நாட்களில் வாங்கியாச்சு. அந்தத் தகவலை சொல்லத் தான் போன் பண்ணினேன்" என்று நிறுத்தியவன் சொல்லாத விஷயங்களும் சேர்ந்தே நிர்மலாவுக்குப் புரிந்தது.

"இன்னும் விடுமுறை நாட்கள் இருக்குமே! இங்கே வரும் ஐடியா இருக்கா? இல்லை... அப்படியே..." என்று கேள்வியாக நிறுத்தினாள். எங்க வீட்டுக்கு வா என்று சொல்ல வாய் வரவில்லை.

"இல்லை இன்னும் பதினஞ்சு நாள் விடுப்பு இருக்கு. நாளை சென்னைக்கு வருவேன். சென்னையில ரெண்டு நாள் வேலை இருக்கு. பிரசன்னா ஆபீஸ் பக்கத்துல ஒரு வீடு பார்த்து இருக்கான். அதுல சில சாமான்கள் வாங்கி ரெடி பண்ணச் சொல்லி இருந்தான். அதற்குள் வேலூருக்கு உங்க ஆர்டர் காப்பி வந்து விடும். ரெண்டு மூன்று நாளில் வந்து அம்மாவைப் பார்க்கிறேன் என்று சொல்லுங்க" என்று அவள் கோடி காட்டிய கேள்விக்கு விவரமாகவே பதில் சொன்னான் சத்யா.

''தேங்க்ஸ், முதல் முறை பார்க்கும் ஒருவரோ, சொந்த வேலைக்காக...''

''வேண்டாம் நிர்மலா. நன்றி சொல்லி என்னைத் தள்ளி வைக்காதீங்க. நான்...'' என்று ஆரம்பித்த உடனே நிர்மலாவின் முகம் மாறியது. இவ்வளவு நேரம் பொதுப் படையாக பெயர் சொல்லி அழைக்காமல் மரியாதைப் பன்மையிலேயே பேசி வந்ததால் வெளிப்படையாக அவன் நெருக்கம் தன் கண்ணில் படவில்லை. ஆனால் பெயர் சொல்லி அழைத்ததும் 'சுருக்' என்றது. இவன் என்ன சொல்ல வருகிறான்?

தன்னிடம் தனியாக அவன் இவ்வளவு நேரம் பேச அனுமதித்து இருக்கக் கூடாது. அவன் கௌரவக் குறை வாக எதுவும் பேசவில்லை. ஆனாலும், அவன் நண்பன் மனைவியின் சகோதரி என்ற நிலையைத் தாண்டி அதிக உரிமை எடுத்துக் கொள்கிறானோ?

''தேங்க்ஸ் வேண்டாம் என்று சொல்வது உங்களின் பெருந்தன்மையைக் காட்டுது மிஸ்டர் சத்யமூர்த்தி. அதற்காக நன்றியைச் சொல்லாமல் இருக்க முடியுமா? எங்களுக்குச் சேர வேண்டிய பணம் விரைந்து வா. டில்லி சென்று நீங்கள் செய்த உதவிக்கு நன்றி. அதோடு, இந்த டில்லி பயணத்திற்கு என்ன செலவாகி யதோ அதை எங்களிடம் பெற்றுக் கொள்வது நன்றாக இருக்கும். அத்தையிடம் சொல்கிறேன். மீண்டும் ஒரு முறை நன்றி...'' என்று சொல்லிவிட்டு அவனின் பதிலை எதிர்பார்க்காமல் போனை வைத்து விட்டாள் நிர்மலா தேவி.



**நிர்மலா தேவியின் டயரி குறிப்பு**

முன்பு உண்மை தெரியாமல் அவன் அவசரப்பட்டு செய்த தவற்றை இன்று நான் செய்து விட்டேனா...? என் உள்ளமே என்னை கேள்வி கேட்கிறது. ஆனால் அவன் நல்லவன் என்பதால், அவன் எனக்கு சில உதவிகள் செய்வதால், அதை நான் ஏற்றுக் கொள்வதால், அவன் மனதில் ஏதாவது வித்தியாசமான எண்ணம் தோன்ற இடம் கொடுக்கலாமா?

என் இருப்பிடம் இதுதான். என் வாழ்க்கை முடியும் வரை, நான் இங்கே தான் இருக்க வேண்டும். இது செழியனுக்கு கொடுத்த வாக்கிற்காக மட்டுமில்லை. மங்கையர்க்கரசி தன் மேல் காட்டும் எதையும் எதிர் பார்க்காத அன்பினுக்கு ஈடாக வேறென்ன செய்ய முடியும்?

**சத்யமூர்த்தியின் டயரி குறிப்பு**

அவள் போனை வைத்த பிறகு, பல வினாடிகளுக்கு பிறகும், என் காதில் விழுந்த வார்த்தைகளை என்னால் நம்பவே முடியவில்லை. என்ன வார்த்தை சொல்லி விட்டாள்? டெல்லி சென்ற பயண செலவுக்கு பணம் தருகிறாளா? என்னை பணத்திற்காக வேலைகளை முடித்து தரும் ப்ரோக்கர்கள் வரிசையில் வைத்து விட் டாளா?

என்னைப் பார்த்தால் அவ்வளவு சீப்பாகவா தோன்று கிறது? இவ்வளவு நேரம் நன்றாகத் தானே பேசிக் கொண்டு இருந்தாள்? என்ன ஆயிற்று? ஒருவேளை மங்கையர்க்கரசி வந்து விட்டாரா? அவர் வந்தாலுமே என்ன? அவரிடம் போனை கொடுத்து இருந்தாலும் கூட

பேசத் தயங்கி இருக்க மாட்டேன் தானே! ரோட்டி அலையும் ரோட் சைடு ரோமியோ என்று நினைத் விட்டாளா!

ஐந்து நிமிடங்களில் உலகின் உச்சியில் எவரெஸ் சிகரத்தைத் தொட்ட மகிழ்ச்சியைத் தந்தவள் இரண் நிமிடங்கள் நீடித்து இருக்கக் கூடிய ஒரு தொலைபே உரையாடலின் முடிவில் அதல பாதாளத்தில் தள்ளி வி டாளே!

ஒரே பெண்ணின் வார்த்தைகள் என்னை உற்சாகத் தின் எல்லையில் நிறுத்தவும், அதே பெண்ணின் வார்த் தைகள் என் நெஞ்சை குத்தீட்டியாகக் கிழிக்கவும் முடியும் என்பதை இன்று உணர்ந்தேன்.

# 9



கரும்பு அறுவடைக்குத் தயாராகி விட்டதால், ராணிப் பேட்டையில் கரும்பு அலுவலகம் சென்று வெட்டுவதற்கான உத்தரவினை பெற்று வருவதோடு, நெல் வயலுக்கு வேண்டிய உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் வாங்கிக் கொண்டு மங்கையர்க்கரசி வீடு வந்து சேர்ந்தபோது, மணி இரண்டை நெருங்கிக் கொண்டு இருந்தது.

''நிர்மலா, கொஞ்சம் தண்ணி எடுத்துட்டு வாயேன்...'' என்று சொல்லி வாய் மூடும் முன்பே தண்ணீருடன் வந்து நின்ற மருமகளை நன்றியுடன் பார்த்தார்.



''மணி ரெண்டாச்சே! சாப்பிட்டாயா இல்லையா?'' என்று புன்னகையோடு அவர் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

''நான் வர முன்னே பின்னே ஆகலாம். இன்னிக்கு ஒரு நாள் சாப்பிடு என்று சொல்லிட்டு தானே போனேன். வா சாப்பிடலாம்...''

''உரம் வாங்கியாச்சா?'' என்று கேட்ட மருமகளின் குரலில் ஏதோ சரி இல்லை என்று ஒரு பட்சி கூவியது. தனியாக இருந்ததில் கண்டதை யோசித்துக் குழம்பி இருப்பாள்.

''உரம் என்ன விலை விக்குது? உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்பது சரியாப் போகும் போல இருக்கு...'' என்று சொல்லியபடி உணவை ஒரு வாய் விழுங்கியவர் முகம் மாறியது. சாம்பாரில் உப்பில்லை. முட்டைகோஸ் பொரியல் தீய்ந்த வாசனை வந்தது. இவளின் சமையல் பிரமாதமாக இருக்கும். கடந்த ஒரு மாதமாக அவளை தான் அடுக்களைக்குள் விடவில்லை. அவர் யோசனையில் இருந்த போதே, அவள் பதறினாள்.

''சாரிம்மா, சாம்பாரில் உப்பில்லை. சால்ட் சேர்த்துக் கறீங்களா?''

''பரவாயில்லை சால்ட் போட்டுட்டால் போச்சு. யாராவது வீட்டுக்கு வந்தாங்களா?'' ''இல்லைம்மா.. யாரும் வரலையே...?''

''உங்க அண்ணி ஏதாவது போன் பண்ணினாளா?''

''இல்லையேம்மா. ஏன் கேட்கறீங்க?''

''முகம் கொஞ்சம் வாடினால் போல இருக்கு. இ றைய சமையலும் உனக்கு மனசு சரி இல்லை என் சொல்லுது. என்ன விஷயம் நிர்மலா...?''

''டில்லியில் இருந்து சத்யமூர்த்தி சார் பேசின செட்டில்மெண்ட் ஆர்டர் வாங்கிட்டேன் என்று சொ னார்...''

''ஆறு மாசம் ஆகும் என்று சொன்னாங்களே. பத்து நாளில் வாங்கியாச்சா? இந்த செய்தி கேட்டுக் அழுதாயாக்கும். பைத்தியம் இனிமேல் உன்னை தனிய வீட்டில் விட்டுட்டுப் போகக் கூடாது. இந்த பண இன்னும் ஒரு வாரம் பத்து நாளைக்குள் வந்து விடும் அதுக்குள்ளே வீட்டுல சும்மா இருக்காமல் என்ன செய்யப் போகிறாய் என்று உடனே முடிவெடு. அந் தம்பி எப்போ சென்னைக்கு வருது என்று கேட்டாயா?''

''ரெண்டு நாளில் வந்து உங்களைப் பார்க்கிறேன் என்று சொன்னார்'' என்றவளின் குரல் உள்ளே போய் இருந்தது. அவன் வரவேண்டும் என்று ஒரு பாதி இதய மும், வரக் கூடாது என்று மறு பாதி இதயமும் வேண்ட அவளுக்குக் கவலை தோன்றியது.

* * *

தேனிலவின் தனிமையை இரண்டு வாரங்களாக, வேறு எந்த நினைவும் இன்றி, திகட்டத் திகட்ட அனுபவித்த பிரசன்னா, வசந்தா தம்பதியினர் காலை பதினொரு மணிக்கு சாவகாசமாக கண் விழித்துச் சாப்பிடக் கிளம்பினார்கள்.

''வசு, சீக்கிரம் வா...'' என்று குளியல் அறையில் இருந்த மனைவியை அவசரப் படுத்தி விட்டு, தன் நண்பனை போனில் அழைத்தான் பிரசன்னா.



மூன்று நாளில் வேலைக்குச் சேர வேண்டும். அம்மா வீட்டில் இருந்து போகலாம் என்றாலும், வீட்டுக்கும் அலுவலகத்திற்கும் தூரம் ஜாஸ்தி. திருமணம் நிச்சயம் ஆன உடனே அம்மா செய்த முதல் வேலை, அலுவலகத்திற்கு அருகில் பிளாட் வாங்கியது தான். அந்த வீட்டில் சாமான்கள் வாங்கிப் போடச் சொல்லி சத்யாவிடம் பணம் கொடுத்து விட்டு வந்தான். வீடு தயாராகி விட்டதா என்று தெரியலை.

மூன்று முறை முழுதாக மணி அடித்து முடிக்கும் வரை போன் எடுக்கப்படவில்லை என்பது முதல் ஆச்சரியம் என்றால், 'நீங்கள் அழைக்கும் நபர் தற்போது எந்த அழைப்பையும் எடுக்கவில்லை' என்று இந்தியில் தகவல் வந்தது இரண்டாவது ஆச்சரியம். அப்படி என்றால் போன் வட இந்தியாவில் ரோமிங்கில் இருக்கிறது.

மீண்டும் ஒரு முறை முயற்சி செய்ய இந்த முறை போன் எடுக்கப்பட்டது. மிக சுருக்கமான பேச்சு. 'இன்று இரவு சென்னைக்குத் திரும்பி விடுவேன். நாளை எல்லாம் வேலையும் முடிந்து விடும். அப்புறமா கூப்பிடுகிறேன்.' என்ற தகவலைச் சொல்லி விட்டு போனை வைத்து விட்டான்.

''பிரசன்னா சாப்பிட போகலாமா? நான் ரெடி ஹலோ... பிரசன்னா எங்கே இருக்கீங்க? நான் பேசுறது கூட கேட்காமல் என்ன பண்ணிட்டு இருக்கீங்க? என்ன ஆச்சு?'' என்று கட்டிலில் அமர்ந்தபடி ஏதோ யோசனையுடன் போனை பார்த்துக் கொண்டு இருந்த கணவனை வியப்புடன் உலுக்கினாள் வசந்தா.

''போகலாமே. மணி என்ன ஆச்சு?''

''என்ன போனையே உலகத்தின் எட்டாவது அதிசய மாதிரி பார்த்துக் கொண்டு இருக்கீங்க என்று கேட்டே அதற்கு பதில் சொல்லாமல் நீங்க இன்னொரு கேள் கேட்டால் என்ன அர்த்தம்? யாருடன் பேசினீங்க?''

''சத்யாவுடன் பேசினேன்.''

''சத்யாவா? சரி. அதுக்கு ஏன் இப்படி பிரமை பிடி மாதிரி இருக்கீங்க? அவருக்கு ஏதாவது பிரச்னையா உடம்பு சரி இல்லையா?''

''அப்படி இல்லை. முதல் மூன்று முறை மணி அடித் ஓயும் வரை எடுக்கவே இல்லை. நான்காவது முறை எடுத்த போதும் அவனோட பேச்சு வித்தியாசமா இருந்தது ரொம்ப அப்செட்டா இருக்கான். என்ன விஷயம் என்று தெரியலை.''

''உங்க ப்ரண்ட் என்னவோ கலகலப்பா பேசுறவ மாதிரி பீல் பண்றீங்க? அவர் என்னிக்கு வாயை திறந்து பேசி இருக்கிறார்? வார்த்தைகளை எண்ணி எண்ணி விடுறவர்தானே?''

''அது மற்றவர்களிடம் வசு. என்னிடம் நல்லா பேச வான். அவன் சென்னையிலும் இல்லை. அதான் யோச னையா இருக்கு...''

''அவர் என்னிக்காவது உங்களிடம் அவரோட பிரச்னை என்ன என்று சொல்லி இருக்கிறாரா? இன் னிக்கு சொல்லலை என்று பீல் பண்றீங்க? ஹோட்ட லுக்கு போய் சாப்பிட்டுட்டே பேசலாம். ஸ்க்ரீன், சோபா செட், கிச்சன் வேர் எல்லாம் வாங்கி வைக்க பணம் கொடுத்துட்டு வந்தோமே. வீடு ரெடியாகிடுச்சா என்று



சத்யாவிடம் கேட்டீங்களா?'' என்று கேட்டவளுக்கு மறுப்பாக தலை அசைத்தான்.

''இன்னிக்கு முடித்து விடுகிறேன் என்று சொன் னான்...''

''நீங்க ஹனிமூன் போயிட்டு வருவதற்குள் நான் ரெடி வைத்து விடுகிறேன் என்று சொன்னாரே? அதெல்லாம் சும்மா ரீல் தானா?''

''நான் அவனைப் பற்றி யோசிச்சுட்டு இருக்கேன். நீ உன் வேலையைப் பற்றி கவலைப் படுகிறாயே? அவன் மொபைலில் ஹிந்தியில் வாய்ஸ் வந்தது...'' என்று யோசனையுடன் சொல்லும்போது அவள் வேகமாக இடையிட்டாள்.

''நிம்மியோட செட்டில்மெண்ட் பணத்தை சீக்கிரம் வாங்கிக் கொடுக்க ஹெல்ப் பண்றேன் என்று அத்தை யிடம் வாக்குறுதி கொடுத்தாரே! மறந்துட்டீங்களா? அதுக்கு டெல்லி போய்ட்டாரோ என்னவோ...?'' என்று சொல்ல அவன் முகம் மலர்ந்தாலும், உடனே வாடியது.

''டெல்லிக்கு போனதற்கு உன் விளக்கம் சரி. ஆனால் அவனோட குரல் சரியில்லையே?''

''எதுக்கு இப்படி இருக்கீங்க? உங்க போனை கொடுங்க...'' என்று அவன் மொபைலை எடுத்தவள் சத்யமூர்த்தியை அழைத்து, ''ஹலோ சத்யா சார், எப்படி இருக்கீங்க...?'' என்று உற்சாகமாக பேச்சை ஆரம் பித்தாள்.

''ஹலோ... நீங்களா...? நான் பிரசன்னா என்று நினைத் தேன். நல்லா இருக்கேன். தேங்க்ஸ். நீங்க எப்படி இருக் கீங்க?'' என்று பதிலுக்கு சம்பிரதாயமாக விசாரித்தான்.

"ப்ச்! ரொம்ப டல்லா இருக்கேன் சத்யா சார். எல்லாம் உங்களால..." என்று அவள் சோக கீதம் வாசிக்க சத்யா பதறினான்.

"ஏன்! என்ன ஆச்சு?"

"நீங்க உங்க ப்ரெண்ட் கிட்டே சரியா பேசலை என்று அவர் மூட் அவுட் உங்களை மூட் அவுட் ஆக்கின ஆள் யாரா இருந்தாலும் சரி, யார் சம்பந்தப்பட்ட ஆளோ அவங்களை நேருக்கு நேர் பார்த்து "இதோ இந்த விஷயத்தை நீ இப்படிச் செய்ததால் நான் இப்படி இருக்கிறேன்..." என்று சண்டை போடுங்க. அப்புறம் ஸ்ட்ரெஸ் போய் பிரெஷ்ஷா ஆகிடுவீங்க. நேரில் போக பயமா இருந்தது என்றால் போனில் பேசுங்க. நீங்க யார் என்றே அவருக்குத் தெரியக் கூடாது என்றால் பப்ளிக் பூத்தில் இருந்து அனானிமஸ் கால் பேசுங்க..." என்று மடமடவென்று பேச சத்யா திகைத்தான்.

போனில் தன் குரலிலேயே தன் மன வாட்டத்தை உணர்ந்த நண்பன் என்ற பெருமிதம், சின்ன பெண்ணாக இருந்தாலும், மன அழுத்தத்தைக் குறைக்க வழி சொல்லும் வசுந்தரா, இருவருமே அந்த வினாடியில் அவன் மனதில் நிறைந்தனர்.

"தேங்க்ஸ் டாக்டர். உங்க அட்வைஸ் படி நடந்து கொள்கிறேன். போனை பிரசன்னாவிடம் ஒரு நிமிஷம் கொடுங்க..." என்று சொன்ன சத்யாவின் குரலில் சின்ன சிரிப்பு வந்து இருந்தது.

"என்னடா ஹனிமூனில் என்னைப் பற்றி அவங்களிடம் ப்ளேடு போட்டாயா? உன் வாழ்க்கையை சந்தோஷமா வச்சுக்கப் பாரு. வீட்டைப் பற்றி கவலைப்



படாதே. இன்னும் மூன்று நாட்கள் இருக்கிறதே? நான் பார்த்துக்கறேன். புரிஞ்சுதா?" என்று அதட்டலை கலந்து வாக்குறுதி அளித்து விட்டு போனை சத்யாவின் மனம் தெளிந்தது.

தானுமே ஒரு வகையில் நிர்மலாவை மாதிரி தொட்டால் சுருங்கி தானே? கேள்வி கேட்க பிரசன்னா போன்ற சில நண்பர்கள் தவிர வேறு ஆள் இல்லாத அநாதை என்றாலும், கூட இன்றைய நிலையில், அவளை விட தான் பரவாயில்லாமல் இருப்பதாகத் தோன்றியது.

மீண்டும் ஒரு முறை முயற்சி செய்து பார்க்கலாம் வீட்டில் மங்கையர்க்கரசி அம்மா இருப்பதை உறுதி செய்து கொண்டே போகலாம். வரவேற்பு சரி இல்லை என்று தோன்றினால்... என்று நினைக்கையிலேயே ஒரு கணம் மூச்சு நின்றது. வரவேற்பு சரி இல்லை என்று தோன்றினால் இந்த வருட விடுமுறையை விட்டு விட்டு, அடுத்த விடுமுறையில் முயற்சி செய்ய வேண்டியது தான்!

இரண்டு தினங்கள் சென்னையில் தங்கி, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி, தனிக் குடித்தனம் நடத்தத் தேவையான அளவில் தயார் செய்து விட்ட பிரசன்னாவுக்குத் தகவல் தெரிவித்தபோது, அவன் பயணம் செய்து கொண்டு இருந்தான்.

"நாளைக்குக் காலையில் ஸ்டேஷனுக்கு வந்துடு. ஆசிரமத்தில் இருந்தது போதும். எங்களோடு புது வீட்டிற்கு வந்துடு. இனிமேல் சென்னைக்கு வந்தால் எங்க வீட்டில் தான் தங்க வேண்டும். இது என் சம்பாத்தியத்தில் வாங்கியது உனக்கு எல்லா உரிமையும்

இருக்கு. காலையில் நீயும் வந்துடு...'' என்று அழைப்பு விடுத்தான்.

''இனிமேல் வருவதற்கு யோசிக்கிறேன். ஆனால் நாளைக்கு என்னால் வர முடியாதுடா...'' என்று சின்ன குரலில் மறுத்தான் சத்யா.

''ஏன்டா! என்ன விஷயம்?''

''நாளைக்கு ஒரு முக்கியமான வேலையா வெளியூர் போகிறேன்'' என்று அவன் சொன்னதும் பிரசன்னாவின் வியப்பு மேலும் கூடியது.

''வேலூரில் எனக்கு தெரியாமல் யாருக்கு என்ன வேலைடா...?'' என்று கேட்டவனுக்கு, சில நாட்களுக்கு முன்பு வசுந்தரா சொன்னது என்றால் கூட வேலூரில் என்ன வேலை? காவேரிப்பாக்கம் தான் போகிறேன் என்று சொல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

''வேலூர் இல்லைடா... வெளியூர்...'' என்று சத்ய மூர்த்தி திருத்திய பிறகே அவன் எங்கே போகிறேன் என்பதை சொல்லவில்லை என்று புரிய, அவன் வியப் பின் எல்லையை தொட்டான்.

# 10



சென்னையில் இருந்து கிளம்பி காலை எட்டரை மணி அளவில் காவேரிப்பாக்கம் இறங்கிய உடனே, அறி விப்பின்றி அங்கே போய் நிற்கக் கூடாது என்ற நாகரீகம் உரைக்க, போனை எடுத்தான் சத்யமூர்த்தி.



தொலைபேசி எண்ணை அழுத்தும் போதே, ஒரு வேளை போனை நிர்மலா எடுத்தால் பேசக்கூடாது என்ற முடிவையும் எடுத்துக் கொண்டான். அவள் என்ன மாதிரி மனநிலையில் இருக்கிறாளோ? ஒரு வேளை அவளுக்கு தன் வருகை பிடிக்கவில்லை என்றால் அதை மீறி அங்கே செல்வது நன்றாக இருக்காது.

காலை எட்டரை மணி அளவில், தனக்கு காலை உணவும், மங்கை அம்மாவுக்கு தேநீரும் நிர்மலா தயார் செய்து கொண்டு இருந்தபோது, ஹாலில் தொலைபேசி மணி அடிப்பது கேட்டது. அந்த ஓசை கேட்ட வினாடி யில், அது சத்யாவிடம் இருந்து என்ற எண்ணம் தோன் றியது.

மூன்று நாளில் வந்து பார்க்கிறேன் என்று சொன் னான். இன்று மூன்றாவது நாள்! எடுக்கலாமா? வேண் டாமா? அம்மா அங்கே தானே இருப்பாங்க. ஏன் போனை எடுக்கவில்லை? இதயம் படபடக்க எட்டிப் பார்த்தாள். மங்கையர்க்கரசி ஹாலில் இல்லை. தயக்கத்துடன் வந்து ரிசீவரை எடுத்து எதிர் முனையில் பேச காத்திருந்தாள். சத்தமே காணோமே? இருவருமே அடுத்த முனையில் ஏதாவது ஒரு சத்தம் வரக் காத்திருக்க, போன் பல வினாடிகளுக்கு அமைதி காத்தது.

முதல் சில வினாடிகளிலேயே உள்ளுணர்வு அடுத்த முனையில் இருப்பது யார் என்பதை இருவருக்குமே சொல்லி விட்டது. வேறு யாராக இருந்தாலும், 'ஹலோ... ஹலோ...' என்று கூவி இருப்பார்கள். எதிர் முனையில் சத்தம் இல்லை என்று தொலைபேசி இணைப்பைத் துண்டித்து இருக்க வேண்டும். அது இரண்டுமே இல் லாததால், மௌனம் நீண்டது.

அவள் 'ஹலோ...' சொல்ல வாய் எடுக்கும் முன்பே, அவன் குரல் கேட்டது.

''அங்கே மங்கை அம்மா இருக்காங்களா? நான் சத்யமூர்த்தி பேசுகிறேன்...'' என்ற அவன் குரல் எந்த உணர்ச்சியும் இன்றி ஒலித்தது. கூடவே மனசாட்சி சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்று இடிக்கவும் செய்தது.

ஏன் அவன் குரல் உணர்ச்சியே இல்லாமல் இருக்கிறது? கோபமாக இருக்கிறானோ? இருக்கட்டும் என்று விடலாமா? மன்னிப்பு கேட்க வேண்டுமோ? தனக்குள்ளே போராடி அவள் வார்த்தைகளுக்கு திணறிக் கொண்டு இருக்கையில், ''யார் நிர்மலா போனில்...?'' என்று மங்கையர்க்கரசியே வந்து விட்டார்.

''உங்களுக்கு தான்மா...'' என்று முணுமுணுத்தவள் ரிசீவரை அவரிடம் கொடுத்து விட்டு அடுக்களைக்குள் கிட்டத்தட்ட ஓடிச் சென்றாள்.

''ஹலோ...'' என்ற மங்கையின் குரல் மட்டுமே சத்யாவிற்கு கேட்டதால், அவனுக்கு போனை எடுத்தது அவரா, நிர்மலாவா என்ற குழப்பமே வந்தது.

''வணக்கம்மா! நான் சத்யா...''

''ஹேய் சத்யா, ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் உனக்கு பேச முயற்சி பண்ணினேனே! போன் சுவிட்ச் ஆப் ஆகி இருந்தது...''

''டெல்லியில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் வந்தபோது போன் ஆப் ஆகி இருக்கலாம் அம்மா. என்ன விஷயமா பேச முயற்சி செஞ்சீங்க?''



''உனக்கு நன்றி சொல்ல அழைத்தேன். டெல்லி வரை நேரே போய் பெரிய பெரிய வேலை எல்லாம் செய்து முடித்து இருக்கிறாய். ரொம்ப சந்தோஷம் சத்யா. இங்கே வா என்று சொன்னேனே, மறந்து விட்டதா? இப்ப நீ எங்கே இருக்கிறாய்? எப்ப வருகிறாய்?'' என்று மங்கை பேசப் பேச அவன் மனதில் இருந்த குழப்பம் விடைபெற்றுச் சென்றது.

''என்னையும் வீட்டுக்கு வா என்று கூப்பிட ஆள் இருக்கு என்று நினைத்தாலே சந்தோஷமா இருக்கு...'' என்றவன் குரல் நெகிழ்ந்தது.

''அதென்ன அப்படிச் சொல்லிட்ட சத்யா? நீ தாராளமா எங்க வீட்டுக்கு வரலாம். எப்போ வருகிறாய்?''

''நீங்க ப்ரீயா இருந்து ஓகே என்று சொன்னால், இன்னும் பத்து நிமிடத்தில் வருகிறேன்'' என்றவன் குரலில் உற்சாகம் இருந்தது.

''வா. வா. விவசாயம் பார்ப்பவங்களுக்கு எந்த நாளும் வேலை தான். வீடு தெரியுமா? யாரையாவது பஸ் ஸ்டாண்டுக்கு அனுப்பட்டுமா?'' என்று கேட்க அவன் சிரித்தான்.

''இல்லைம்மா. தெரியும். நானே வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவன் போனை வைக்க அவர் மருமகளை அழைத்தார்.

''போனில் சத்யா. இப்ப இங்கே வருகிறேன் என்று சொன்னான். உன்னிடம் சொல்லலையா? நீ யாரோ மாதிரி சொன்னாயே...?''

''சரியா கேட்கலைம்மா...'' என்று சொன்னவளின் இதயம் வேகமாகத் துடித்தது. இவர் இவ்வளவு

உற்சாகமாக வரவேற்கையில் தான் முகம் காட்ட முடியுமா? முகம் காட்ட வேண்டும் என்றாலும், அதற்கு ஒரு காரணம் சொல்ல வேண்டாமா? அவனைப் பற்றி தவறாக சொல்ல மனம் வரவில்லை.

''என்ன நிர்மலா, என்ன யோசனை? இப்ப நம்ம வீட்டுக்கு விருந்தினர்கள் வந்து போவது வேண்டாம் என்று நினைக்கிறாயா?'' என்று அவராகவே கேட்க அவள் ஆம் என்று இல்லாமல் இல்லை என்றும் சொல்லாமல், மையமாக தலை அசைத்தாள்.

''நீ சொல்றது மற்ற உறவுக்காரங்களுக்கு பொருந்தலாம் நிர்மலா. ஆனால் சத்யாவுக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. வசுவோட மாப்பிள்ளை ப்ரெண்ட். பற்றாக்குறைக்கு, நமக்கு சேர வேண்டிய செட்டில்மெண்ட் பணத்திற்காக ரொம்ப முயற்சி பண்ணி இருக்கிறார். இது எல்லாத்துக்கும் மேலே அவனே நம் வீட்டுக்கு அடிக்கடி வந்து போகணும் என்று நினைத்தால் கூட அவனால் வர முடியாது. அதனால் தான் வரச் சொன்னேன். பரவாயில்லை தானே...'' என்று நீளமாக விளக்கம் கொடுத்தவருக்கு என்ன பதில் சொல்வது?

''இது உங்க வீடும்மா நீங்க என்ன...''

''உதைப்பேன்! இது நம்ம வீடு. உனக்கு சம்மதம் இல்லாத எதுவும் இங்கே நடக்கக் கூடாது. சரி, அந்த பையன் வரும் நேரமாச்சு. சாப்பிடச் சொல்லலாமா? ஸ்நாக்ஸ் கொடுத்து அனுப்பி விடலாமா?'' என்று விசாரித்தார்.

மூளை வேண்டாம் என்று சொல்லத் தூண்ட, மனசு சாப்பிடச் சொல்ல வக்காலத்து வாங்க, உள்ளம் இரண்டு



பக்கமும் ஊஞ்சலாட, முடிவில் மனசே வென்றது. 'வருஷம் முழுவதும் கேண்டீன் சாப்பாடு தானே? ஒரு நாள் வீட்டுச் சாப்பாடு சாப்பிடட்டும்மா!' என்ற வார்த்தைகள் வெளி வந்தது.

''சரி சொல்லலாம். ஆனால் முந்தா நாள் எனக்கு சமைச்ச மாதிரி சமைக்கக் கூடாது. முழு கவனமும் சமையலில் வச்சு, உன்னோட பெஸ்ட் சமையல் இது என்று சொல்கிற மாதிரி இருக்கணும்'' என்று சொல்லி விட்டு வாசலில் அரவம் உணர்ந்து வேகமாகத் திரும்பினார்.

''சத்யா வந்தாச்சு என்று நினைக்கிறேன்...'' என்று அவர் வாசலுக்குப் போக அவளுக்கு ஒரு கணம் இதயம் நின்று துடித்தது.

''வா சத்யா, நீ மட்டும் தான் வந்தியா? உன் ப்ரெண்ட் ஊரில் இருந்து சென்னைக்கு திரும்பி வந்தாச்சா? வசந்தாவும் அவரும் நல்லா இருக்காங்களா?'' என்று விசாரித்தபடி வரவேற்றார் மங்கை.

''அவங்க ரெண்டு பேரும் நல்லா இருக்காங்கம்மா. இன்னிக்கு காலையில் சென்னைக்கு வந்து இருப்பாங்க. நான் பார்க்கலை. போனில் பேசினேன்...'' என்று அவரின் விசாரணைக்கு பதில் சொல்லிவிட்டு, குனிந்து அவர் பாதம் தொட்டு நெற்றியில் ஒற்றிக் கொண்டான்.

''நல்லா இருப்பா. நீ ஆசைப்படும் எல்லா செல்வங்களையும் கடவுள் கொடுக்கட்டும். நல்ல ஆயுசோடு சந்தோஷமா இரு'' என்று வாழ்த்திய போது மகனின் நினைவில் ஒரு கணம் கலங்கி குரல் தடுமாறியது.

''இப்படி ஆசீர்வாதம் பண்ண ஒருத்தர் இருக்காங்க என்று நினைக்க ரொம்ப சந்தோஷமா இருக்கு...'' என்று சொன்னவனை வியப்போடு பார்த்தார்.

''இருக்கட்டும்பா. நல்லா இரு என்று மனசார வாய் வார்த்தையாக வாழ்த்துவதில் என்ன குறைந்து விடப் போகிறோம்? என்ன சட்டுன்னு காலில் விழுந்து விட்டாய்? நான் இதை எதிர்பார்க்கலை...''

''ஆறு வருஷமா வட இந்தியாவில் வேலையாக இருந்ததால் வந்த பழக்கம். பெரியவங்களைக் கண்டால் காலைத் தொட்டு வணங்குவது அவங்க பழக்கம். இங்கேயும் இருந்து, காலப் போக்கில் மாறி விட்டது. முடிந்த அளவுக்கு பின் பற்றலாம் என்று ஆசை. உங்க வரவேற்புக்கும் வாழ்த்துக்கும் நன்றிம்மா...'' என்று கரம் குவித்த வேளையில் நிர்மலாவின் நிலா முகம் எட்டிப் பார்த்தது.

''ஹலோ, வணக்கம்'' என்று குவித்த கையை விலக்காமல் அவளையும் வணங்க அவள் தடுமாறிப் போனாள். அவள் இதை எதிர்பார்க்கவே இல்லை. அவன் முகம் திருப்பக் கூடும். கோபமாக முறைக்கக் கூடும். தான் இருப்பதையே கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடும். என்று ஏதாவது ஒன்றை எதிர்பார்த்து வெளியே வந்தவளுக்கு, இந்த வணக்கம் திகைப்பை அளித்தது.

''வணக்கம். வாங்க. நல்லா இருக்கீங்களா?'' என்ற உபசார வார்த்தைகளை உதடுகள் தன்னை அறியாமலேயே உச்சரித்தது.

''நல்லா இருக்கேன் மேடம். தேங்க்ஸ்...'' என்று புன்னகையோடு பேசியவன் மங்கையர்க்கரசியிடம்



திரும்பினான். டெல்லியில் பெற்ற செட்டில்மெண்ட் உத்தரவுகளைக் கொடுத்து மேற்கொண்டு பணம் வாங்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தான்.

''எங்களுக்காக நீ ரொம்ப சிரமப்பட்டு இருக்கிறாய். இதற்கு நன்றி என்று வாய் வார்த்தையால் சொன்னால் போதாது. இருந்தாலும் சொல்லாமல் இருக்கவும் முடியலை. தேங்க்ஸ் சத்யா. வா சாப்பிடலாம்...''

''பேருந்தில் வரும் போதே இடையில் நிறுத்தினாங்க. சாப்பிட்டு விட்டேன். உங்களுக்கு எதுக்கும்மா வீண் சிரமம்?'' என்று மறுத்தான்.

''அது சரி, வீட்டுக்கு வந்தவங்களுக்கு ஒரு வேளை சாப்பாடு போடுவது பெரிய சிரமமா? டவுனில் எப்படியோ எனக்குத் தெரியாது. இது விவசாய குடும்பம்பா. எங்க வீட்டுக்கு எந்த நேரம் வந்தாலும், யாரையும் சாப்பிடாமல் அனுப்ப மாட்டோம். இப்ப வேண்டாம் என்றால் மதியம் சாப்பிடலாம். உனக்கு என்ன பிடிக்கும் என்று சொல்லு. செய்யச் சொல்கிறேன்...'' என்று வற்புறுத்த அவன் சிரித்தான்.

''எனக்கு என்ன பிடிக்கும் என்று சொல்லத் தெரியலைம்மா...'' என்றவன் இதழ்களில் புன்னகை இருந்தாலும் கண்ணில் ஈரம் இருந்தது.

''என் சத்யா, சாப்பாட்டில் இது பிடிக்காது. அது பிடிக்காது என்று சொல்வது நல்ல பழக்கம் இல்லை தான். ஆனால் எதையாவது விரும்பிச் சாப்பிடும்போது பிடிக்கும் என்று சொல்லலாம் தானே?'' என்று அவனின் கலங்கிய குரலை உணர்ந்து வியப்புடன் கேட்க, நிர்மலாவும் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''பிரசன்னா அம்மா, அவங்க வீட்டில் சமைத்த உண வினை நிறைய தடவை எனக்கு கொடுத்து அனுப்பி இருக்காங்க. ஆனால் என்ன சமைக்கட்டும் என்று, எனக்கு விபரம் தெரிந்து என்னுடைய இத்தனை வருட வாழ்க்கையில் யாருமே என்னிடம் கேட்டதில்லை...'' என்று புன்னகை செய்ய மங்கையர்க்கரசியும் நிர்ம லாவும் பதில் பேசத் திராணி இன்றி திகைத்துப் போனார்கள்.

காலுக்கு செருப்பு இல்லை என்று அழுபவன் காலே இல்லாத ஒருவனைப் பார்த்த அதிர்ச்சியில் இருந்தார்கள். இந்த உலகத்தில் தன் துயரம் மட்டுமே பெரியது என்று எண்ணாதே! உனக்கும் கீழ் இருப்பவர் கோடி என்று ஆண்டவன் சுட்டிக் காட்டியது போல இருந்தது. சத் யாவே தொடர்ந்தான்.

''முதல் முறையாக இந்தக் கேள்வியை கேட்பதால் என்ன பதில் சொல்வது என்றே தெரியலை. உங்களுக்கு என்ன பிடிக்குமோ அதைச் செய்ங்க. அதையே எனக்குப் பிடித்த உணவா இனிமேல் கேட்கும் போது சொல் கிறேன்...''

''இத்தனை நாள் உன் லீவை நீ எப்படி செலவு செய் தாயோ எனக்குத் தெரியாது சத்யா. ஆனால் இனிமேல் ஒவ்வொரு வருஷமும் உன் விடுமுறைக்கு நீ இங்கே வரலாம். நாலு நாள் தங்கிட்டு போப்பா...'' என்று சொன்னவரின் குரல் கலங்கி இருந்தது.

''வேலையில் சேர்ந்து ஐந்து ஆண்டுகள் கழித்து, இப்போது தான் பிரசன்னா கல்யாணத்திற்காக ஒரு மாதம் விடுமுறையில் வந்து இருக்கிறேன். அடுத்த



விடுமுறை வரும்போது பார்த்துக் கொள்ளலாம். உங் களுக்கு ஏதாவது வேலை இருந்ததா? நான் வந்ததால் தள்ளி வச்சுட்டீங்களா?'' என்று சாதாரணமாகப் பேசி அவரை இயல்பு நிலைக்கு வர வைத்தான்.

''தென்னந்தோப்பில் உரம் வைக்கணும். நேற்றே வாங்கி வந்தாச்சு. அதைக் கொண்டு போக ட்ராக்டரை எடுத்துட்டு ஆளை வரச் சொல்லி இருந்தேன். இன்னும் காணோம். அவன் வந்தால் தான் வேலை...''

''ட்ராக்டர் ஓட்டுவது பிரச்னை என்றால் உங்களுக்கு உதவ முடியும். நானும் கூட வருகிறேன். குழி வெட்டு வது, உரம் கலக்குவது இதெல்லாம் முடியாது. முடியாது என்பதைவிட எனக்குத் தெரியாது...''

''ஹய்யோ! என்ன சத்யா! நீ வீட்டுக்கு வந்த விருந் தாளி. உன்னைப் போய் அந்த வேலை எல்லாம் செய்யச் சொல்வேனா?''

''என்னை அடுத்த லீவுக்கு இங்கே வா என்று சொன்னீங்க. நானும் உண்மை என்று நினைத்தேன். இப்ப விருந்தாளி என்று சொல்றீங்க? விருந்தாளி என்று தள்ளி வைத்தால் அடுத்த முறை நான் எப்படி உரிமை யாக வர முடியும்?'' என்று கேட்க அவர் சிரித்தார்.

''சத்யா, முதல் முறை பார்த்தபோது கலகலப்பு என்று நினைத்தேன். அப்புறம் வசுந்தராவிடம் கோபத்தைக் காட்டிய போது சீரியஸ் டைப் என்று நினைத்தேன். இப்ப மறுபடி என்னைக் குழம்ப வைக்கிறாய். உண்மையில் உன் குணம் எது?''

''மனிதர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தானேம்மா உணர்ச்சி களைக் காட்ட முடியும்? என் பேச்சு கம்மியாகத் தான்

இருக்கும். குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் கூட கொஞ்சம் பேசுவேன். அந்த சிலரில் நீங்களும் இருக்கீங்க...'' என்று சொன்னவன் மங்கையர்க்கரசியுடன் வேலைகளை கவனித்து விட்டு ஒன்றரை மணி அளவில் திரும்பி வந்தான்.

இடைப்பட்ட நேரத்தில், இங்கே நிர்மலா, மங்கையர்க்கரசி மெனு பற்றி சொல்லவில்லை என்றாலும், முருங்கைக்காய் சாம்பார், கோஸ் பொரியல், உருளைக் கிழங்கு காரக்கறி, அவியல், வெள்ளரிக்காய் தயிர் பச்சடி, ரசம், அப்பளம், சேமியா பாயாசம், வடை என்று விருந்தினை, சமைத்து எடுத்து மேஜையில் அடுக்கி வைத்து இருந்தாள்.

இருவருமே பசியுடன் சாப்பிடும் ஆவலுடன் தான் வந்தார்கள் என்றாலும், மேஜையில் பரப்பி வைத்து இருந்த அந்த பிரம்மாண்டமான விருந்தை எதிர்பார்க்கவில்லை. திகைப்புடன் நிர்மலாவை நோக்கினார்கள்.

# 11

சத்யாவின் வருகைக்கு முன்பாகவே, 'கவனத்துடன் சமைக்க வேண்டும்' என்று நிர்மலாவிடம் சொல்லி இருந்த மங்கையர்க்கரசியும் சரி, தன்னைப் பார்த்த முதல் வினாடியில் 'வாங்க' என்று ஒரு வார்த்தை சொன்னதைத் தவிர வேறு எதுவுமே நிர்மலா பேசாத நிலையில் சத்யமூர்த்தியும் சரி, 'இப்படி ஒரு பிரமாதமான



விருந்து தயாராக இருக்கும்' என்று எதிர்பார்க்கவே இல்லை.

''என்னால் உங்களுக்கு ரொம்ப சிரமம்'' என்று சம்பிரதாயமாக சத்யா சொல்ல அதற்கு நிர்மலாவிடம் பதில் இல்லை.

'பரவாயில்லை. அப்படி எதுவும் இல்லை' என்று ஏதாவது ஒரு வார்த்தை பதில் சொல்லி இருக்கலாம் என்று மங்கைக்கே தோன்றிய போதும், அதை ஒதுக்கி, ''தனியாவா இத்தனையும் செய்தாய்? நீயும் உட்கார் நிர்மலா. சேர்ந்தே சாப்பிடலாம்'' என்று அழைத்தார்.

''லஷ்மிம்மா கூட இருந்தாங்க. நீங்க சாப்பிடுங்க. நான் அப்புறம்...'' என்று மறுக்க முயன்றவளை, தோளைப் பற்றி அழுத்தி உட்கார வைத்தார்.

''நீ என்ன பிடிக்கும் என்று சொல்லாததால் பொரியல், அவியல், பச்சடி என்று ஒன்றுக்கு நாலா பண்ணி வச்சு இருக்கிறாள் நிர்மலா உட்கார்...'' என்று சத்யாவை உபசரித்தவர், மூவருக்குமே வேண்டியவற்றை பரிமாறினார்.

மருமகளின் முகத்தை ஆராய்ந்தபடி சாப்பிட்ட மங்கைக்கு அவளின் முகத்தில் இருந்து எதையுமே ஊகிக்க முடியவில்லை. இருவருமே எதிரெதிரே இருந்தாலும், நேருக்கு நேர் பார்க்கவில்லை. இப்படி ஒரு விருந்து சமைத்து வைப்பாள் என்று எதிர்பார்க்கவும் இல்லை. இது அவனுக்காக பிரத்யேகமாக சமைக்கப் பட்டதா? இவர்கள் ஏற்கனவே அறிமுகம் ஆனவர்களா? மனதிற்குள் கேள்விகள் ஓடிக் கொண்டே இருந்த போதும் விருந்தோம்பலில் குறை வைக்கவில்லை.

''பொரியல் போட்டுக்கோ, குழம்பு காரமா இருக்கா? நெய் விடட்டுமா?'' என்று சத்யாவின் முகம் பார்த்து பரிமாறிய மங்கையர்க்கரசியின் அன்பு பார்த்து, சத்யா - நிர்மலா இருவருக்குமே மனம் நெகிழ்ந்தது.

இது வரைக்கும் யாரும் தன்னிடம் உணவு குறித்துப் பேசியதில்லை என்று சொல்கிறாரே? குடும்ப சூழ் நிலையால் வந்த கட்டாயம் இருந்தாலும், தன்னைப் பற்றி கவலைப்பட ஆள் இருக்கிறது.

'என்ன செய்ய நிம்மி, உங்க அண்ணன் செலவு பண்ண கணக்கு பார்க்கிறான்' என்று புலம்ப ஒரு அம்மாவும், 'நீ இங்கே இருப்பதில் எனக்கு என்ன சிரமம்?' என்று சொல்ல ஒரு மாமியாரும் இருக்காங்க. அவனுக்கு யாருமே இல்லை! நிர்மலாவின் சிந்தனை சத்யமூர்த்தியைச் சுற்றி ஓட அவனுக்குப் புரைக் கேறியது.

''யாரோ உன்னை நினைக்கறாங்க போல...'' என்று எதார்த்தமாக மங்கையர்க்கரசி சொல்ல, நிர்மலாவுக்கு உணவு தொண்டைக்குள் சிக்கியது.

''இதென்ன உனக்குமா...? உன்னையும் யாரோ நினைக்கறாங்களா?'' என்று சொல்ல அவளின் பார்வை அனிச்சையாக சத்யமூர்த்தியின் பக்கம் திரும்ப அவன் அவளை தான் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''இரண்டு பேரையும் நினைக்கணும் என்றால் பிரசன்னா - வசுந்தரவா இருக்கணும். இன்று அவங்க புது வீட்டுல பால் காய்ச்சி இருப்பாங்க. என்னை இன்று அங்கே இருக்கச் சொன்னாங்க...'' என்று சத்யா இழுக்க, வீட்டு தொலைபேசி மணி அடித்தது. நிர்மலா எழுந்து



சென்ற போதே, 'அது பிரசன்னாவாக இருக்கும்' என்று சத்யாவிற்குள் சிவப்பு விளக்கெரிந்தது.

அவனிடம் நேற்று இரவில் பேசிய போது தான் இங்கே வருவதைச் சொல்லவில்லை. இப்போது அவளைச் சொல்லாதே என்றும் சொல்ல முடியாது. அவசரமாக யோசித்தான். செட்டில்மெண்ட் ஆர்டர் கொடுக்க வந்தேன் என்று சொல்ல வேண்டும்.

'ஹேய்! வசு, எப்படி இருக்கிறாய்? சென்னைக்கு வந்தாச்சா? வீட்டுல அத்தை மாமா எல்லாரும் நல்லா இருக்காங்களா? அம்மாவிடம் பேசினாயா?'' என்ற நிர்மலாவின் சந்தோஷ குரல் அவனின் எதிர்பார்ப்பை உறுதி செய்தது.

''இருக்காங்க...'' என்று தயக்கத்துடன் சொன்ன நிர்மலா வின் குரல் எதிர்முனை கேள்வியை ஊகிக்க வைத்தது. அவனின் ஊகம் சரியே என்பது போல அவள் மெல்ல திரும்பி, 'வசு உங்களிடம் பேச வேண்டுமாம்' என்று தயக்கத்தோடு அழைத்தாள். அவன் எழுந்து வந்து, ''ஹலோ...'' என்று சொன்னதும் துள்ளிக் குதித்தாள்.

''தாங்க் யூ சத்யா சார். எதுக்கு தேங்க்ஸ் சொல்றேன் பார்க்கறீங்களா? பிரசன்னா பந்தயத்துல தோத்துட்டார். எனக்கு ஒரு ரிங் கிடைக்கப் போகுதே. அதுக்கு தான் தேங்க்ஸ். உங்க ப்ரண்ட் கிட்டே பேசுங்க...'' என்று சொல்லிவிட்டு, அவனின் பதிலை எதிர்பாராமல் பிரசன்னாவிடம் கொடுத்தாள்.

''பத்து வருஷமா கூட பார்த்துப் பழகின எனக்கே உன்னைப் பத்தி சரியாத் தெரியலை. ஆனால் ரெண்டு வாரம் முன்னாடி பார்த்த வசு, 'நீ இங்கே தான் போய்

இருக்கணும்' என்று அடிச்சு சொல்றா. என்னடா இதெல்லாம்? ஏன் என்னிடம் முன்னாடி சொல்லலை?'' என்ற பிரசன்னாவின் குரலில் ஆச்சரியமே இருந்தது.

''இங்கே வரணும் என்று முடிவு பண்ணலை பிரசன்னா. சோளிங்கர் யோக நரசிம்மர் கோவில் போக கிளம்பினேன். வழியில் செழியன் சார் செட்டில்மெண்ட் ஆர்டர் கொடுத்துட்டுப் போகலாம் என்று இறங்கினேன். உன்னிடம் சொல்லக் கூடாது என்று எதுவும் இல்லை. சாரிடா...''

''சாரி தேவை இல்லை. எல்லோருக்கும் நல்ல வழி பிறந்தால் எனக்கு சந்தோஷம் தான். மங்கை அம்மாவைக் கேட்டதா சொல்லு...'' என்று பொதுவாக முடித்த பிரசன்னா மேலே துருவாமல் தொலைபேசியை வைத்து விட்டாலும் அவனுக்கு ஓடிய சிந்தனை நிற்கவில்லை.

''பிரசன்னாவும் வசுந்தராவும் உங்களை விசாரித்தாங்கம்மா...'' என்று வந்து மீண்டும் உணவைத் தொடர்ந்தவனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

''நீ இப்ப சோளிங்கர் போகணுமா சத்யா?'' என்று வியப்பாகக் கேட்டதும் அவன் விழித்தான். இறங்கும் போது கண்ணில் பட்ட பேருந்தில் சோளிங்கர் என்று இருந்தது. அதில் கோவிலுக்கு போகிற ஒரு கூட்டமும் இருக்க பிரசன்னாவைச் சமாளிக்க சோளிங்கர் போவதாக, சொல்லி வைத்தான். இவருக்கு ஏன் இவ்வளவு ஆச்ரியம்?

''ஆமா...ம்மா...! ஏன்..?''

''கோவில் மலை மேலே இருக்கு. ஏற ஒரு மணி நேரம் ஆகும். எல்லோரும் காலையில் போவாங்க.



அஞ்சு மணிக்கு நடை சாத்திட்டு ஐயர் கீழே இறங்கிடுவார். அதற்காக கேட்டேன்...''

''பரவாயில்லைம்மா, ஆர்மியில் இருந்ததில், பிசிகல் பிட்நெஸ் இருக்கு. மலை ஏறுவதில் சிரமம் இருக்காது...'' என்று சமாளித்தான்.

''செழியன் கூட வரும்போது போவான். ஆயிரத்தி முந்நூறு படி பெரிய மலையிலும், தொள்ளாயிரம் படி சின்ன மலையிலும் இருக்கு. ஹிரண்யனை நரசிம்ம அவதாரம் எடுத்து அழித்த பின்பு, ஒரு கடிகை நேரம் (இருபத்தி நாலு நிமிடம்) கோபம் தணிந்து சாந்த சொரூபியாக, யோக நரசிம்மராக பிரகலாதனுக்கு காட்சி அளித்தார். இங்கே ஒரு கடிகை, இருந்தால் அவர்களுக்கு மோட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. நமக்கு மோட்சம் கிடைக்குதோ இல்லையோ, உடல் ஆரோக்கியத்தோடு, சந்தோஷமா இருந்தால் சரி. கட்டாயம் போக வேண்டிய ஸ்தலம். உனக்கு வேண்டியதை கட்டாயம் கொடுப்பார்...''

''நரசிம்மர் பற்றி மட்டும் சொல்லி நிறுத்தினால் எப்படி? சின்ன மலையில் ஆஞ்சநேயரும் இருப்பார். தரிசனம் பண்ணினால் மன வலிமை கிடைக்கும். எனக்கு கஷ்டமே வேண்டாம் என்று வேண்டுவதை விட, எந்தக் கஷ்டம் வந்தாலும் அதை சமாளிக்கும் திடத்தைக் கொடு என்று வேண்டுவது தானே நல்லது? அதனால் அவரையும் தரிசனம் செய்வேன்...'' என்று சத்யா சொல்ல அவர் புன்னகை செய்தார்.

''வீட்டுக்கு வந்தவங்களை கிளம்பு என்று சொல்லக் கூடாது. ஆனால் இதுக்கு மேலே லேட் ஆனால் சுவாமி

தரிசனம் செய்ய முடியாது. கிளம்பு'' என்று அவசரப் படுத்தினார்.

சாப்பிட்டு முடித்து கை கழுவி வந்த சத்யா, ''சாப்பாடு ரொம்ப நல்லா இருந்தது மேடம்...'' என்று நிறுத்த அவள் அவசரமாக நிமிர்ந்தாள்.

''தேங்க்ஸ்...'' என்ற ஒற்றை வார்த்தையுடன் அடுக் களைக்குள் ஓட முயன்றவளை, ''ஏன்மா, இந்த உலகத் தில் எல்லா செய்கைகளையும் பணம் என்ற அளவுகோலால் அளந்து விட முடியாது தானே?'' என்ற சத்யாவின் குரல் ப்ரேக் போட்டு நிறுத்தியது.

''இன்று நான் சாப்பிட்ட இந்த சாப்பாட்டை தயாரிக்க, அரிசி, பருப்பு, காய்கறிகள், மசாலா பொருட்கள், எரி பொருள், சமைத்ததற்கான கூலி என்று எல்லாம் சேர்த் தால், இருநூறு ரூபாய் ஆகி இருக்குமா?'' என்று கேட்க அவள் திகைப்புடன் விழித்தாள்.

''இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி சத்யா? சாப்பாடு செய்ய பயன்படுத்திய பொருளுக்கு விலை போடலாம். அதைச் சாப்பிடு என்று சொல்லி உபசரிச்ச மனசுக்கும் அதோட அன்புக்கும் என்ன விலை போடுவாய்? எதுக்கு இதை கேட்கிறாய்?'' என்ற மங்கை யர்க்கரசியின் குரலில் அதட்டல் இருந்தது.

''அதான் நானும் சொல்ல வந்தேன். எல்லா விஷயத் தையும் பணம் என்ற அளவு கோலால் அளக்க முடியாது. விலைமதிப்பில்லாத சில பொருட்களும் இந்த உலகில் இருக்கு. இருநூறு ரூபாய் இல்லை. இருபதாயிரம் ரூபாய் கொடுத்தாலும் இந்த மாதிரி ஒரு விருந்து சாப்பாட்டை எங்கேயுமே சாப்பிட முடியாது. உங்க சமையலையும்



விருந்தோம்பலையும் பாராட்ட வார்த்தைகளே இல்லை'' என்று சத்யா முடிக்க, அதுவரை இழுத்துப் பிடித்த மூச்சினை பெரிதாக வெளியேற்றி, அடுக்களைக்குள் மறைந்தாள் நிர்மலா.

அடுக்களையில் தரையில் சரிந்து அமர்ந்தவளுக்கு கண்களை கரித்தது. இவன் இங்கே எதற்கு வந்தான்? தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறான்? ஏன் இப்படி தனக்கு வேண்டியதைப் பார்த்துப் பார்த்துச் செய்கிறான். இங்கிருந்து டெல்லி போய் பத்து நாட்கள் அங்கே தங்கி ஒரு அரசாங்க வேலையை முடிப்பது என்றால் இருப தாயிரம் ரூபாய் செலவாகி இருக்காதா? அவன் நஷ்டப் பட வேண்டாம் என்று தான் பணம் கொடுப்பதாக இருந் தாலும், தான் சொன்ன விதமும் சரி இல்லை. அவ னிடம் ஒரு முறை மன்னிப்பு கேட்க வேண்டும். மங்கை முன்னிலையில் கேட்பது சரிப்படாது. எங்கே எப்படிக் கேட்பது? வெளியே தொழில் தொடங்கப் போவது தொடர்பான பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருந்தது.

''வேலை தொழில் என்று தனி நபர் முன்னேற்றமா பார்ப்பதைவிட, நாலு பேருக்கு நல்லது செய்ய நினைக்கும் ஒரு வழிகாட்டியா அவங்க இருந்தால் நல்லா இருக்கும் என்று நான் நினைக்கிறேன்...''

''நானும் அதையே நினைத்தேன் சத்யா. படிச்சு எவ்வளவோ விபரம் தேர்ந்த போதும், சேர வேண்டிய செட்டில்மெண்ட் பணத்தை வாங்க உன்னை மாதிரி ஒரு ஆள் அங்கே தொடர்ந்து விசாரிக்க வேண்டி இருக் கிறது. அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் பாலமா செயல்பட ஒரு சமூக அமைப்பை உருவாக்கலாம். ஒரே

நாளில் உருவாக முடியாது. அத்துடன் சுய சம்பாத்தியமும் இருக்க வேண்டும்...''

''மகளிருக்கான தையல் பயிற்சி, க்ளாஸ் பெயிண்டிங், மாதிரி ஏதாவது செய்யலாம். நீங்க பேசி முடிவெடுங்க. ஏதாவது தகவல் தேவை என்றால் எனக்கு போன் பண்ணுங்க. பத்து நாள் சென்னையில் இருப்பேன். இப்ப கிளம்புகிறேன்'' என்று விடை பெற முயன்றான் சத்யா.

''இரு இரு, எங்கே அவசரமா கிளம்புகிறாய்? சோளிங்கர் மலை ஏறி இறங்கினால் நல்ல பசி எடுக்கும். ஏதாவது டிபன் கட்டி தரேன். எடுத்துட்டுப் போ. அங்கே ஹோட்டல் சுமாரா தான் இருக்கும்...''

''வேண்டாம்மா... ஏற்கனவே உங்களுக்கு என்னாலே ரொம்ப சிரமம்...''

''ஒரு சிரமமும் இல்லை. தினம் தினமா வரப் போகிறாய்?'' என்று சொல்லி விட்டு மருமகளை அழைத்தார்.

''சத்யா சோளிங்கர் மலைக்குப் போகிறானாம். நரசிம்மர், ஆஞ்சநேயர் ரெண்டு சந்நிதி ஏறி இறங்கினால் களைப்பா இருக்கும். சாப்பிட ஏதாவது ஒரு கவரில் போட்டு, ஒரு பாட்டில் தண்ணீர் கொடு'' என்று உத்தர விட, தலை அசைத்துச் சென்றவள் வரும்போது ஒரு வெள்ளை பேப்பரில் கட்டிய பார்சலுடன் வந்தாள். மங்கை மூலமாக கொடுத்தாள். ''வருகிறேன்'' என்று கரம் குவித்தபோது தலை அசைத்தாள்.

அவள் தன்னைக் கண்டு கொள்ளவில்லை. டெல்லியில் சென்று வேலை முடித்ததற்கு நன்றி சொல்லவில்லை. விருந்து பிரமாதமாகத் தயாரித்து இருந்தாலும்



சாப்பிடுங்க என்று ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. தான் எதிர்பார்த்து வந்த ஜாடை கிடைக்கலையே! வருத்தத்துடன் சோளிங்கர் சென்று யோகநரசிம்மரை தரிசித்தான். 'இந்த வருடம் இல்லாவிட்டாலும் அடுத்த வருடமாவது நல்லது நடக்கட்டும்' என்று பிரார்த்தனை செய்து கொண்டு வந்து படிக்கட்டில் அமர்ந்தான்.

ஆயிரத்தி முந்நூறு படிகள் ஏறியது. களைப்பாக இருந்தது. 'மங்கைம்மா சரியா தான் சொல்லி இருக்காங்க' என்று நினைத்தபடி தண்ணீர் பாட்டிலை எடுத்துப் பருகினான். கூடவே பார்சலில் என்ன இருக்கிறது என்று எடுத்துப் பிரித்தான்.

திறந்து இருந்த தண்ணீர் பாட்டில், சரிந்து பார்சலில் நீர் சிதற, 'அச்சோ...' என்று பதறியபடி பாட்டிலை நிமிர்த்தி மூடினான். நியூஸ் பேப்பரில் பார்சல் கட்டு வாங்க என்று கேள்விப்பட்டு இருக்கிறோம். இதென்ன வெள்ளை பேப்பரில் பார்சல் என்று நினைத்தபடி அந்தப் பொட்டலத்தைப் பிரித்தான்.

அதுவரை வெள்ளையாக இருந்த பேப்பரில், பாட்டிலில் இருந்து சிந்திய நீர் பட்டு ஊறிய உடன் ஆங்கில எழுத்துக்கள் தெரிய ஆரம்பித்தன.

எஸ், ஓ, ஆர், ஆர், ஒய். சாரி...

இது... இது... அவள் சொன்ன செய்தி. வெள்ளை பேப்பரில் சோப்பில் எழுதி இருக்கிறாள். சாதாரணமாகப் பார்க்கும்போது தெரியாது. தண்ணீர் பட்ட உடனே தெரிந்து விட்டது. இதில் இருப்பதைச் சாப்பிட்டு விட்டுத் தூக்கிப் போடாமல் இருந்தானே!

**சத்யமூர்த்தியின் டயரி குறிப்பு:**

அவள் காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை

திருமணத்திற்கு சம்மதம் என்று சொல்லவில்லை.

ஏற்கனவே அவள் அறியாமல் பேசிய வார்த்தைகளுக்கு

மன்னிப்பு தான் கோரி இருக்கிறாள்.

ஆனாலும் உள்ளம் துள்ளுவதைத் தடுக்க முடியவில்லை.

## 12



சோளிங்கர் கோவிலில் சுவாமி தரிசனம் முடித்த கையோடு நிர்லமா கேட்ட அந்த மறைமுக மன்னிப்பைப் பார்த்ததுமே தன் மனக்கவலை விலகி உற்சாகமாகி விட்டான் சத்யா. அங்கிருந்தே நண்பனை அழைத்தவன், 'உனக்கு நாளை விடுமுறை கிடைக்குமா?' என்று விசாரித்தான்.

'சத்யா ஏதோ முக்கியமான விஷயம் பேசப் போகிறான்' என்பது உறுதியாகி விட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒரு நாள் கூட விடுப்பு எடுக்காமல் பணியில் இருந்தவன் 'விடுப்பு எடுக்க முடியுமா?' என்று விசாரித்ததால் விஷயம் மிக முக்கியம்.

''அவசரம் என்றால் எடுக்கலாம். என்ன விஷயம் சத்யா? எங்கே இருக்கிறாய்?''



''சோளிங்கரில் இருக்கிறேன். ஆசிரமம் போய் தங்கி விட்டு காலை ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்துடறேன்'' என்று போனை வைத்தவன் மனம் சிறகில்லாமலேயே பறந்து கொண்டு இருந்தது.

''உங்க ப்ரெண்ட் என்ன சொல்கிறார்?'' என்று கேட்டபடி இருவருக்குமான தேநீருடன் வந்து அமர்ந்த வசுந்தராவை ஆர்வத்துடன் பார்த்தான் பிரசன்னா.

''மத்தியானமே அவன் காவேரிப்பாக்கத்தில் இருப்பதை உறுதி செய்த உடனே சாருக்கு என்னவோ ஆகி விட்டது என்ற சந்தேகம் வந்தது. இப்ப அது உறுதியாகி விட்டது. அய்யா நாளைக்கு நம்ம வீட்டுக்கு வராராம். ஏதோ முக்கியமான விஷயம் பேசணுமாம்...''

''இதுக்கே சந்தோஷமா? நான் கூட அவர் எங்க அக்காவைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுகிறேன் என்று சொல்லிட்டார் என்று நினைத்தேன்...'' என்று உடைக்க பிரசன்னாவிற்கு சிரிப்பு வந்தது.

''எனக்கும் அந்த சந்தேகம் இருந்தது. ஆனால் சத்யாவின் இயல்பு தெரிந்து இருந்ததால் அதை நம்ப முடியவில்லை. அவன் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுக்கும் ஆள் இல்லை. முதல் முறை பார்த்த உடனே காதலில் விழுந்தான் என்று சொல்ல எமோஷனலான ஆளும் இல்லை. விதவை என்ற பரிதாபம் இருந்தாலும், இரண்டே வாரத்தில் திருமணம் வரை செல்வானா என்ற சந்தேகம் இருந்தது...''

''அந்த தைரியத்தில் தானே நான் அவர் காவேரிப்பாக்கம் போய் இருப்பார் என்று சொன்னபோது, மறுத்து பந்தயம் கட்டினீங்க?'' என்று வசுந்தரா சிரிக்க அவனும்

''உண்மைதான் வசு. ஆனால் தோற்றதில் எனக்கு வருத்தம் இல்லை. என் பெண்டாட்டிக்கு நகை வாங்கி தரப் போகிறேன். குடும்ப சூழலுக்குத் தவிக்கும் சத்யா விற்கு ஒரு சந்தோஷமான வாழ்க்கை. உங்க அக்காவிற்கு ஒரு பிரகாசமான எதிர்காலம். இப்படி மூன்று நல்ல விஷயங்கள் நடக்கும் என்றால் தினம் உன்னிடம் ஒரு பந்தயத்தில் தோற்கத் தயார்'' என்று உற்சாகமாக சொன்னான் பிரசன்னா.

''நிர்மலாவும் சட்டுன்னு முடிவெடுக்கும் ஆள் இல்லை. இவங்க ஏற்கனவே எங்கேயாவது பார்த்து பேசி இருப்பாங்களோ?''

''அவங்க இதுக்கு முன்னாடி பார்த்துப் பழகி இருக்க சான்ஸ் இல்லை என்று தான் நினைக்கிறேன் வசு. அப்படிப் பழகி இருந்தால் உங்க அக்கா எப்படி திரு மணத்திற்கு சம்மதித்து இருப்பாங்க?'' என்ற பிரசன்னா விற்கு மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''அவ கல்யாணத்திற்கு ஈசியா ஒன்றும் சம்மதம் சொல்லவில்லை. மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்து பார்த்தாள். கட்டாயத்திற்காக ஒத்துக் கொண்டு இருக்க லாம்...''

''இருக்கலாம். ஆனால் இருவருமே, சும்மா மனசுக் குள்ளேயே கூட ஆசையை பகிர்ந்து கொள்ளாமல் பூட்டி வைத்து இருக்கலாம். இப்போ கல்யாண வீட்டில் பார்த்ததும் அந்த அன்பு பொங்கி இருக்கலாம். தற் செயலா பார்த்ததும், உங்க அக்காவின் தற்போதைய நிலை சத்யாவை உலுக்கி இருக்கலாம்...''

''இது எல்லாமே நம் ஊகம் தான். எதுவா இருந்தாலும் அவரே வந்து நேரில் வாயை திறந்து சொல்லாமல், நாம்



கற்பனை பண்ணி ஒரு பிரயோஜனமும் இல்லை'' என்று அந்த பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைக்க முயன் றாள்.

''இப்ப நிம்மிக்கு இன்னொரு கல்யாணம் பண்ண அவன் ஒரு வேளை கேட்டால் உங்க வீட்டில் ஒத்துக் கொள்வார்களா?''

''ஒத்துக் கொள்ளாமல் என்ன சொல்வார்கள்? ஏதாவது மூளையே இல்லாமல் சொன்னால் இந்த காதில் வாங்கி இன்னொரு காதில் விட்டுட்டுப் போக வேண்டியது தான். பேசறவங்களா வந்து அவளுக்கு ஒரு காய்ச்சல் தலைவலி என்றால் வைத்தியம் பார்க்கப் போறாங்க...? இதுக்கு அப்ஜெக்ஷன் சொல்லணும் என்றால் மங்கை அத்தை தான் சொல்ல முடியும்...''

''ச்சே ச்சே! என்ன வசு இப்படி சொல்லிட்ட? அவங்க அப்படி எல்லாம்...'' என்று பதறிய பிரசன்னாவின் தலை யில் குட்டினாள்.

''நான் இன்னமும் முடிக்கவே இல்லை. அவங்களுக்கு தான் உரிமை இருக்கு. ஏன் என்றால் செழியன் அத் தானின் கிராஜுவிட்டி, பென்ஷன் பணம் எல்லாம் அக்கா பேரில் எழுதி வைச்சு இருக்காங்க. ஆனால் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று முடிவு எடுத்து விட்டால், அந்தப் பணத்தை அவங்களுக்கே கொடுத்து விட்டால் போகிறது. என்ன நான் சொல்றது?'' என்று கேட்க அவன் தலை அசைத்தான்.

பிரசன்னாவும் வசுந்தராவும் இவர்களின் எதிர்கால வாழ்க்கை குறித்து யோசித்து, திட்டமிட்டு, எதிர்ப்புகளை யார் மூலம் சமாளிக்கலாம் என்பது வரை திட்டமிட்டு

இருக்க, அவன் அது தொடர்பாக எதுவுமே பேச வில்லை.

''பிரசன்னா, எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். உங்க கல்யாணத்தில் செய்து வைத்த அலங்கார தட்டுக்களுக்கு வளையல் தருகிறேன் என்று சொன்னேன் இல்லையா? அதுக்கு ஒரு பனிரெண்டு வளையல் வாங்கணும். அதுக்கு ஹெல்ப் பண்ணு'' என்று நகை கடைக்கு அழைத்தான்.

''டேய்! அது என் கல்யாணம் தானே? நான் தானே செலவு பண்ணனும். யாரும் உன்னை அது பற்றி கேட்க மாட்டாங்க. இதுக்கா ராத்திரி போன் பண்ணி லீவு போடச் சொன்னாய்?'' என்று விசாரித்தாலும் அவன் விடவில்லை.

''நீ செய்தால் என்ன? உனக்காக நான் செய்தால் என்ன? சொன்னால் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டாமா? வா, அந்த வளையலை அவர்களிடம் கொடுத்து விடலாம்'' என்று பிடிவாதம் பிடித்தான்.

''வேறே ஏதாவது விஷயம் என்றால் அதைச் சொன்னால் தானே சத்யா மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்?'' என்று எல்லா விதங்களிலும் பேசிப் பார்த்த போதிலும் அவனின் பதில், 'அதெல்லாம் இல்லைடா. சொன்ன வார்த்தையைக் காப்பாற்றணும். அவ்வளவு தான்' என்ற வாக்கியமே விதம் விதமாக திரும்பி வர, அவனின் விருப்பம் போல வளையல்களை வாங்கக் கிளம்பினான்.

* * *

சத்யா விடை பெற்றுக் கிளம்பிய பிறகு, ''சாப்பாடு ரொம்ப நல்லா இருந்தது நிர்மலா. நானே எதிர் பார்க்கலை. சூப்பரா சமைச்சு அசத்தி விட்டாய். ரொம்ப நாளைக்குப் பிறகு என் மருமகளின் கைப்பக்குவம் திரும்பி வந்து விட்டது என்று நினைத்தேன்...'' என்று பாராட்டினார் மங்கையர்க்கரசி.



''எந்த வேலையாக இருந்தாலும் முழு மனசையும் அதில் பதித்துச் செய்தால் சரியா வரும். வேறே ஏதாவது சிந்தனையில் மூழ்கியபடி சமையல் செய்தால் சரியா வராது. சாரிம்மா, முந்தா நாள்...'' என்று தயக்கத்துடன் விளக்கம் சொல்ல அவர் அவசரமாக இடையிட்டார்.

''நான் அதைச் சுட்டிக் காட்டச் சொல்லலை. நிஜமாவே இரண்டு மணி நேரத்தில் தனியா இத்தனை ஐட்டம் சமைப்பது பெரிய விஷயம் தான். நான் பாராட்டா தான் சொன்னேன். நிர்மலா கொஞ்சம் பேச லாமா?'' என்று விசாரித்தார் மங்கையர்க்கரசி.

''எ..ன்..ன..ம்மா..? சொல்லுங்க...'' என்று கேட்கும் போதே உள்ளுக்குள் உதறியது. சத்யாவைப் பற்றி ஏதாவது கேட்பாரோ?''

''உனக்கு சத்யாவை ஏற்கனவே தெரியுமா நிர்மலா?'' என்று பட்டென்று வளவளவென்று இழுக்காமல், கேட்டவரை ஒரு வினாடி நேராகப் பார்த்தவள், பின் தெரியும்...'' என்று சுருக்கமாகச் சொன்னாள்.

''தெரியும் என்றால்...''

''ஏற்கனவே பார்த்து இருக்கிறேன். நேருக்கு நேர் பேசி பழக்கம் இல்லை'' என்று நேரான பார்வையுடன் சொன்னதைப் பார்த்து புன்னகை செய்தார்.

''உன்னை சந்தேகப்படுகிறேன் என்று நினைக்காதே நிர்மலா. நான்...''

''நீங்க விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லைம்மா. சந்தேகப்படுபவர்களின் நடவடிக்கைகளும் கேள்விகளும் எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும்...''

''நல்லது, இதே நம்பிக்கையோடு நான் சொல்லப் போகும் மிச்ச விஷயத்தையும் யோசித்துப் பார். நீ அதிகம் யாருடனும் கலகலப்பாகப் பேசிச் சிரித்து உரையாடி நான் பார்த்ததில்லை. சத்யா இந்த வீட்டுக்கு வந்து, என்னுடன் உரிமையாகப் பழகியது பிடிக்காமல் நீ ஒதுங்கி நிற்கிறாயோ என்ற சந்தேகம் எனக்குள் வந்தது. உன் மனசில் ஏதாவது இருந்தால் என்னிடம் நீ வெளிப்படையா பேசலாம் நிர்மலா. உன்னுடைய எதிர்காலம் நல்லா இருக்கணும் என்று நான் மனசார நினைக்கிறேன். அதனால் தான் கேட்கிறேன்...''

''நீங்க எப்படி நான் நல்லா இருக்கணும் என்று நினைக்கறீங்களோ, அதே மாதிரி உங்களை சந்தோஷமா வச்சுக்கணும் என்பதைத் தவிர வேறே எந்த நினைவும் எனக்கு இல்லை...''

''உனக்கு சின்ன வயசு நிர்மலா. இதே மாதிரி இன்னும் எத்தனை நாள் இருக்க முடியும்? செழியன் கதை முடிந்த ஒன்று. அவனை நினைத்துக் கொண்டு நீ தனியே என் நிழலில், இருப்பது சரி வராது நிர்மலா. நீ மறுமணம் செய்து கொள்வது நல்லது. சத்யாவிற்கு உன் மேல் ஒரு அனுதாபம் இருப்பதை என்னால் உணர முடிகிறது. அவனுக்கும் யாரும் இல்லை. நீ விரும்பினால்...''

''இல்லைம்மா, நீங்க ரொம்ப அதீதமான கற்பனை பண்றீங்க. அந்த மாதிரி எண்ணம் எதுவும் எனக்கு இல்லை.



''இப்ப அந்த மாதிரி எண்ணம் இல்லை என்றாலும் எதிர்காலத்தில்...''

''அம்மா, நீங்க எனக்கு நல்லது செய்வதாக நினைத்து பேசுவது எனக்கு தர்ம சங்கடத்தைக் கொடுக்குது. எனக்கு உங்களை மறுத்துப் பேச முடியலைம்மா. அதனால் நீங்க.. இந்த மாதிரி பேசாமல் இருந்தால்... ப்ளீஸ்...'' என்று கண்ணில் கெஞ்சலோடு அவள் பேச அவர் வருத்தமாகப் புன்னகை செய்தார்.

''நீ எமோஷனலா பேசுகிறாய் நிர்மலா. பிராக்டிகலா உலகத்தைப் பாரு நிர்மலா. உனக்கு துணையா ஒரு ஆள் வேண்டும் என்று நான் நினைக்கிறேன்...''

''என்னுடைய துணைக்கு உங்களை விட ஒரு ஆள் கிடைக்குமாம்மா?''

''எனக்கு ஐம்பத்தி எட்டு வயசாகுது. இன்னும் எத்தனை காலம் நான் உனக்கு துணையா இருப்பேன் சொல்லு. அஞ்சு வருஷம்! பத்து வருஷம்! அதுக்கு அப்புறம்...?''

''வயசுக்கும் நம்ம ஆயுசுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமாம்மா? நாளைக்கே உங்களுக்கு முன்னாலே எனக்கு ஏதாவது ஆகி விட்டால்...'' என்று பேசியவளை, 'நிர்மலா...' என்ற மங்கையின் அதட்டல் தடுத்து நிறுத்தியது.

''இதென்ன உளறல் நிர்மலா?''

''உளறல் இல்லம்மா. நடப்பு உண்மையை தானே சொன்னேன். உங்க பையனுக்கு சாகும் வயசா என்ன?''

''ஜனனமும் மரணமும் நம் கையில் இல்லை. அதுக்காக ஒவ்வொரு நாளும் சாவை எதிர்பார்த்து நாளை

கடத்த முடியாது. இன்று சத்யா வந்து போனதால் பேச்சை ஆரம்பித்தேன். நீ கல்யாண வாழ்க்கையை அனுபவிச்சது எத்தனை நாள் என்று எனக்குத் தெரியாதா நிர்மலா? நீங்க வாழ்ந்த கல்யாண வாழ்க்கையின் அடையாளமாக உன் வயிற்றில் ஒரு புழு, பூச்சி வந்து இருந்தால், அதை வைத்து வாழலாம் என்று இருப்பேன். ஆனால் அதுக்கும் வழி இல்லை என்பதால் தான்...'' என்று மங்கை பேச, அவரின் வாக்கியத்தில் உறைந்தாள் நிர்மலா.

இன்று தேதி என்ன? டிசம்பர் இருபத்தி ஏழு. இதற்கு முன்பு அவளுக்கு மாதவிலக்கு வந்து ஒன்றரை மாதங்களுக்கு மேலாகி விட்டது. அப்படி என்றால், செழியனின் பேர் சொல்லும் பிள்ளை தன் மணி வயிற்றில் வளர்கிறதா?!

# 13



'ஒரு குழந்தை இருந்தாலாவது உன்னை மறு கல்யாணத்திற்கு வற்புறுத்த மாட்டேன்' என்று தான் சொன்ன கடைசி வாதத்திற்கு, அவளிடம் இருந்து பதில் வரவில்லை என்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தார் மங்கையர்க்கரசி.

''நிர்மலா... என்ன ஆச்சு?'' என்று விசாரித்தபடி சில அடிகள் தொலைவில் இருந்தவர் அருகில் வந்து சோபாவில் அமர்ந்து அவளின் நெற்றியைத் தொட்டுப்



பார்த்தார். அவரின் அருகாமையும் தொடுகையும் அவளை நெகிழ்த்த, அப்படியே அவரின் தோளில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் நிர்மலா.

''நிர்மலா, தலை வலிக்குதா? காபி போட்டு தரட்டுமா...?'' என்று அவளை லேசாக அணைத்து, நெற்றியை வருடியபடி விசாரித்தார்.

''இல்லை காபி வேண்டாம்மா...'' என்றவளுக்கும் இந்த விஷயத்தை எப்படிச் சொல்வது என்று சட்டென்று புரியவில்லை.

''என்ன நிர்மலா? என்ன குழப்பம் சொல்லு. உன்னைக் கட்டாயப்படுத்தி எதுவும் செய்வது என் நோக்கம் இல்லை...''

''அம்மா! நான்... உடனே... டாக்டரைப் பார்க்க வேண்டும்...'' என்று தன் தேவையை மெல்லிய குரலில் வெளிப்படுத்த அவர் முகத்தில் வினாடி குழப்பம் தோன்றி, அடுத்த வினாடி அதிர்ச்சியாக மாறியது.

''நிர்மலா... நீ... என்ன சொல்ற?'' என்று தடுமாறியவருக்கு அவள் என்ன சொல்ல வந்தாள் என்பது புரிந்தது. கேள்விக்கு பதில் சொல்லாமலேயே, அவரின் தோளில் சாய்ந்து மௌனமாக தலை அசைத்தவளின் உச்சியை வருடிய மங்கையர்க்கரசியின் கண்களில் நீர் மளமளவென்று பெருகியது.

சாதாரணமாக ஒரு வீட்டில் மருமகள் இந்த மாதிரி ஒரு ஊகத்தை வெளிப்படுத்தும் வேளையில் அந்த வீடு எப்படி உற்சாகத்திலும் சந்தோஷத்திலும் மிதக்கும்? 'ராஜாத்தி... என் சமத்து சர்க்கரை கட்டி... வீட்டுக்கு

வாரிக் கொண்டு வந்தாயா?'' என்று மருமகளை கட்டி அணைத்து உச்சி மோந்து இருக்க வேண்டும்.

'வயசாகிடுச்சு என்று சொல்லாமல் சுட்டிக் காட்ட எனக்கு பேரக் குழந்தையைக் கொடுத்து என்னை பாட்டியாக்கி விட்டாயடா...' என்று மகனிடம் அருகில் இருந்தால் நேரிலோ, பணி நிமித்தம் தொலைவில் இருந்தால் தொலைபேசியிலோ வம்பு வளர்த்து இருக்க வேண்டும்.

'வரட்டும் வரட்டும்... வயசான காலத்துல என்னைக் கைப் பிடிச்சு நடத்திக் கூட்டிப் போக ஆணோ பெண்ணோ... ஒரு சிங்கார செல்லக் குட்டி சீக்கிரம் வரட்டும்... இந்த வீடு மழலை மழையில் நனையட்டும்' என்று வராத வாரிசுக்கு இரத்தின கம்பளம் விரித்து இருக்க வேண்டும்.

'எல்லோருக்கும் இன்னிசை ஒரு நாள் கூலி கூடுதலாகக் கொடு. சர்க்கரை டப்பாவை எடு. என் மருமகள் இனிய செய்தி சொல்லி இருக்கிறாள்...' என்று இனிப்பு கொடுத்து கொண்டாடி இருக்க வேண்டும். ஆனால்... நிர்மலா சொல்லும் இந்த செய்தி சந்தோஷத்திற்கு உரியதுதானா?

''நிர்மலா, டாக்டரிடம் போகலாம். இது குழந்தை தான்... என்று உறுதியாகி விட்டால்...'' என்று நிறுத்தியவருக்கு மேலே தொடர முடியவில்லை. மறைந்து விட்ட மகனின் உதிரத்தில் உதித்த நேரடி வாரிசு என்ற எண்ணம் மனதில் பதிந்து இருக்க, அந்த ரத்த பாசத்தை அவ்வளவு சுலபமாக தூக்கி எறிய முடியவில்லை. அதே சமயம் இருபத்தி மூன்று வயதில் எதிர்காலத்தைத்



தொலைத்து நிற்கும் இந்தப் பெண்ணுக்கு வேறு ஒரு நல்ல வாழ்க்கை அமைய இந்தக் குழந்தை தடையாக நிற்கும் என்ற அனுபவ அறிவு குழந்தை வேண்டாம் என்று எண்ண வைத்தது.

''அம்மா நீங்க தெரிந்து சொன்னீகளோ? தெரியாமல் சொன்னீகளோ? அது ஏற்கனவே பலித்து இருக்கிறது. இது இறைவன் எனக்களித்த வாழ்க்கை. அந்த வாழ்க்கையை சந்தோஷமாக கழிக்க இப்போது இன்னொரு துணையையும் கொடுத்து விட்டான். இனிமேல் வேறு யாருக்கும் என் வாழ்வில் இடமில்லை...'' என்று தீர்மானமாக விட்டு எழுந்து சென்றவளை குழப்பத்துடன் பார்த்தபடி சிலையாக அமர்ந்து இருந்தார் மங்கையர்க்கரசி.

* * *

''டேய்! சின்ன பிள்ளை மாதிரி சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டு இருந்தால் என்னடா அர்த்தம்? இன்னிக்கு தங்கம் விற்கிற விலையில் மூன்று லட்சம் மதிப்புள்ள பதினைந்து பவுனை நிர்மலாவிடம் நீட்டினால் அவங்க வாங்கிப்பாங்களா என்று யோசிக்க மாட்டாயா?'' என்று நகை கடையில் ஆயிரத்தி எட்டாவது முறையாக நண்பனுக்கு புத்தி சொல்ல பிரசன்னாவைப் பார்த்துப் புன்னகை செய்தான் சத்யமூர்த்தி.

''நான் ஏன் நிர்மலாவிடம் கொடுக்கப் போகிறேன்?'' என்று அவன் திருப்பிக் கேட்ட கேள்வியில் பிரசன்னா தலையில் அடித்துக் கொண்டான்.

''நிர்மலா தானே தட்டு செய்தவங்க. அவங்களுக்கு தானே வளையல் தருவதாக நீ பொல்லாத வா..க்..

கு..று..தி அளித்தாய்? அவர்களிடம் இல்லை என்றால் வேறே யாரிடம் கொடுக்கப் போகிறாய்? நீ என்ன சொல்ல வருகிறாய்?'' என்று எரிச்சலோடு கேட்ட பிரசன்னா வாக்குறுதி என்ற வார்த்தைக்கு அளித்த அழுத்தம் சத்யாவின் புன்னகையை விரிவாக்கியது.

''தட்டுக்கு ஒரு தங்க வளையல் தருவதாக நான் மங்கை அம்மாவிடம் தானே வாக்களித்தேன். அவர்களிடம் கொடுப்பேன். அதை நிர்மலாவுக்குக் கொடுப்பதும், அவங்களே வைத்துக் கொள்வதும் அவங்க இஷ்டம். அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை...''

''அவங்க வாங்கிக் கொள்வார்களா?'' என்று கேட்ட பிரசன்னாவின் குரலில் ஐயம் சிறிது இருந்தாலும் முந்தைய நிகழ்வை விட இது நடப்பதற்கான சாத்தியக் கூறு அதிகம் என்பதும் புரிந்தே இருந்தது.

''அவங்க வாங்கிக் கொள்கிற மாதிரி பார்த்துப் பேசிக் கொடுப்பேன். அதைப் பற்றி கவலைப் படாதே. நீ நல்ல டிசைனா பார்த்து வாங்கு...''

''இந்த அவங்க என்பது...'' என்று ஆரம்பித்து விட்டு பேச்சை நிறுத்தி முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான் பிரசன்னா.

''என்னடா... என்னமோ கேட்க வந்தாய்?'' என்று அவனைத் தூண்டிய சத்யமூர்த்தியைப் பார்த்து இரண்டு கைகளையும் சேர்த்து, தலைக்கு மேலே தூக்கி வணங்கினான்.

''வேண்டாம்பா! உன்னிடம் கேள்வி கேட்பதும் நல்ல குட்டிச் சுவரா பார்த்து முட்டிக் கொள்வதும்... இல்லை...



குட்டிச் சுவரில் மோதினால் வலி கம்மியாகத் தான் இருக்கும். அதனால் நல்ல பெரிய கல் தூணாகப் பார்த்து முட்டிக் கொள்வதும் ஒன்று. எனக்கு எதுவுமே தெரிய வேண்டாம். நீ லீவு போடச் சொன்னாய், போட்டேன். காவேரிப்பாக்கம் போகலாமா என்று கேட்டால் போகலாம். நான் எல்லாத்துக்கும் ரெடி...'' என்று சரணடைய, சத்யா நீண்ட நாட்களுக்குப் பிறகு, வாய் விட்டுச் சிரித்தான்.

''பிரசன்னா, என்ன வேலையை ராஜினாமா செய்து விட்டு அரசியலில் சேரும் எண்ணம் எதுவும் இருக்கா? இப்படி தலைக்கு மேலே கும்பிடு போட்டு ப்ராக்டீஸ் பண்றீங்க?'' என்று சிரிப்புடன் கேட்டபடி கையில் நான்கு டிசைனில் வளையல்களுடன் வந்தாள் வசுந்தரா.

''அரசியலில் சேர எனக்கு இருப்பதைவிட சத்யாவிற்கு தான் அதிக தகுதி இருக்கு.'' என்று கேலியாகச் சொன்ன பிரசன்னா அவன் புறம் திரும்ப, நண்பனின் முகத்தில் மேலும் மலர்ச்சி கூடி இருந்தது.

''சத்யா சார், நான் கூட உங்களைக் கல்யாண வீட்டில் பார்த்தபோது நீங்க பிரசன்னாவுக்கு க்ளாஸ்மேட் என்பதை என்னால் நம்பவே முடியலை. ஒருவேளை நீங்களும் நம்மளை மாதிரி ஒரு ஒரு வகுப்பிலும் ரெண்டு வருஷம் உட்கார்ந்து பாடத்தை ந..ல்..லா.. படிப்பவரோ என்று நினைத்தேன். ஆனால் இப்போ பார்த்தால், நீங்க பிரசன்னாவுக்கு ஜூனியர் மாதிரி இருக்கீங்க. காரணம் என்ன தெரியுமா?'' என்று கேலியாகக் கேட்டாள்.

''கல்யாணம் ஆகி ரெண்டே வாரத்துல பிரசன்னாவுக்கு இரண்டு வயசு கூடி விட்டதோ?'' என்று கேலியைத் திருப்ப அவள் செல்லமாக முறைத்தாள்.

''இதுதான் நல்லதுக்கே காலம் இல்லை என்று சொல்வது? ஒன்றுக்கு ரெண்டா நான் உங்களுக்கு உதவி செய்ய வந்தால், நீங்க என்னை மட்டம் தட்டு றீங்க. போற்றுவார் போற்றட்டும் தூற்றுவோர் தூற்றட் டும். எல்லா புகழும் போகட்டும் பிரசன்னாவுக்கே!'' என்று அவன் தோளில் தட்டிச் சிரித்தாள்.

''ஒன்றுக்கு ரெண்டா...? ஒண்ணு வளையல் வாங்க... இன்னொண்ணு... என்ன உதவி வசு?''

''அதான் பிரசன்னா இன்னொண்ணு...'' என்று சத்யா மேலும் அதையே பிடித்து காமெடி பண்ண மூவருமே சிரித்தனர்.

''இந்தாங்க சத்யா சார், இந்த நாளில் ஏதாவது ஒன்றை செலக்ட் பண்ணிக்கோங்க. இது பொடி அதிகம். அதிகம் சேர்க்காத டிசைன். இது சிம்பிளா இருக்கு. இதில மெஷின் கட் நிறைய இருக்கு. பார்க்க அழகா இருந் தாலும், தொடர்ச்சியா கைகளில் போட்டு இருக்கும் போது அழுக்கு சேர வாய்ப்பு இருக்கும்...'' என்று ஒவ் வொரு வளையலையும் காட்டி விளக்கம் சொல்ல நண்பர்கள் இருவருமே விழி விரித்தனர்.

''வளையல் வாங்குவதில் இத்தனை விஷயம் இருக்கா?'' என்று பிரசன்னா பிரமிப்பாகவும், ''பார்க்க விளையாட்டுத் தனமா கேலி கிண்டலாக கமெண்ட் அடிச்சு சிரிச்சுப் பேசிட்டு இருந்தாலும், வசுந்தராவிடம் சரக்கு இருக்கு பிரசன்னா...'' என்று பாராட்டுதலாக சத்யாவும் சொல்ல அவள் தலை வணங்கி ஏற்றுக் கொண்டாள்.

''தா..ங்..க்..யூ.. தா..ங்..க்..யூ, தா..ங்..க்..யூ..'' என்று ரஜினி ஸ்டைலில் சொல்லி பாராட்டுதலை ஏற்றவள் காரியத்தில் கண்ணாக இருந்தாள்.



''நிர்மலாவிற்குக் கொடுக்க வேண்டிய பரிசு என்ப தால் இந்த வளையலையே எடுக்கலாம். சிம்பிள் டிசைன். சேதாரம் கம்மியா இருக்கும். காப்பர் சேர்க்கை குறைவாக இருக்கும். தொடர்ச்சியா கையில் போட்டுக் கொள்ள லாம்'' என்று அவள் காட்டிய வளையல்களையே ஒரு மனதாகத் தேர்வு செய்தனர்.

''அடுத்து எங்கே போகணும் சத்யா?'' என்று கேட்ட பிரசன்னாவிற்கு சத்யமூர்த்தி பதில் சொல்லும் முன் பாகவே ''சரவண பவன்...'' என்று வசுந்தரா முற்றுப் புள்ளி வைக்க இருவரும் கைகடிகாரத்தை பார்த்தனர்.

மதிய உணவை முடித்துவிட்டு, ''முதல் முறை போன போது ஒன்றுமே வாங்கிட்டு போகலை இப்பவாவது ஸ்வீட் பழங்கள் என்று ஏதாவது வாங்கிட்டுப் போகலாம்'' என்று பிரசன்னா கோடி காட்ட, கண்ணில் எல்லாம் வாங்கித் தள்ளினாள் வசுந்தரா.

''வசு இதெல்லாம் நிஜமாவே உங்க அக்காவிற்கு கொடுக்கப் போகிறாயா? அங்கே இதை எல்லாம் யார் சாப்பிடுவாங்க?'' என்று கேட்டான் பிரசன்னா.

''இதென்ன கேள்வி பிரசன்னா? யாராவது சாப்பிடு வாங்க. அங்கே சாப்பிட ஆள் இல்லை என்றால் அங் கிருந்து கிளம்பும்போது அவளே கொடுத்து விடுவாள். அவள் மறந்தாலும், அத்தை மறக்காமல் கையில் போட்டுத் தந்துடுவாங்க...'' என்று சிரிப்புடன் சொல்ல, நண்பர்கள் இருவருக்கும் சிரிப்பை அடக்க முடிய வில்லை.

அப்போது ஆரம்பித்த அந்த சிரிப்பு, காவேரிப்பாக்கம் வீட்டை அடையும் வரை சுமார் இரண்டு மணி

நேரத்திற்கு விடாமல் தொடர்ந்து கொண்டே இருந்தது. அவர்கள் வாடகைக் காரில் நிர்மலாவின் வீட்டை அடைந்தபோது, வாசலில் இருந்த அந்த காரைக் கண்டதும் அவர்களின் புன்னகை மறைந்து யோசனை தோன்றியது. அதன் கண்ணாடியில் ஒட்டப்பட்டு இருந்த 'சிவப்பு கூட்டல் குறி', போட்ட ஸ்டிக்கர் அவர்களின் இரத்த அழுத்தத்தை ஏற்றியது.

''யாருக்கு என்ன ஆயிற்றோ தெரியலையே? நிர்மலா நன்றாகத் தானே இருந்தாள்? மங்கை அம்மாவிற்கு ஏதாவதா?'' என்ற பதட்டத்துடன் மூவருமே ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குள் வேகமாக நுழைய அங்கே எதிரே, வெள்ளை கோட் அணிந்த மருத்துவருடன் பேசியபடி நடந்து வந்து கொண்டு இருந்த மங்கையர்க் கரசியை பார்த்ததும் அவர்களின் திகைப்பு மேலும் கூடியது.

இவர் நன்றாக இருக்கிறார் என்றால் நிர்மலாவுக்கு என்ன? பாய்ந்து கொண்டு உள்ளே ஓடிய வசுந்தரா சோபாவில் அமர்ந்து இருந்த நிர்மலாவை ஓடி வந்து அணைத்து கொண்டவள், 'நிம்மி... என்ன உடம்புக்கு?' என்று பதட்டத்துடன் விசாரித்தவளின் கண்கள் தமக்கையை மேலும் கீழும் பலமுறை ஆராய்ந்தும் குறை கண்டு பிடிக்க முடியாமல் திணறி அவளின் பதிலுக் காகக் காத்திருந்தது.

''பயப்பட ஒன்றும் இல்லை வசு. நல்ல சமாச்சாரம் தான். நீ சித்தியாகப் போகிறாய்...'' என்று கண்களில் மலர்ச்சியுடன் திடமான குரலில் சொன்னதைக் கேட்ட வசுந்தரா மட்டும் இல்லாமல் அவள் பின்னே வந்த பிரசன்னாவும் திகைத்தான்.



'இதென்ன புது பிரச்னை? இன்று இல்லாவிட்டாலும் நாளை... நண்பன் தன் மனதைத் திறப்பான் என்று எண்ணினோமே...' என்று சில வினாடிகள் குழம்பிய பிரசன்னா, அவசரமாக சத்யமூர்த்தியின் உணர்வுகளை கணிக்க பின்னால் திரும்ப, அவன் அங்கே இல்லை.



## 14

வீட்டுக்குள் இருந்து நண்பனை தேடி அவசரமாக வெளியே வந்த பிரசன்னா, மங்கையர்க்கரசியின் வர வேற்பைக் கேட்டதும், புன்னகையை பதிலாக கொடுத் தான்.

''நானே உங்களுக்கு போன் பண்ணி தகவல் சொல்லி இருப்பேன். ஆனால் டாக்டர் வந்து உறுதி படுத்திய பிறகு சொல்லலாமே என்று நினைத்தேன். அதுக்கு முன் னாடி நீங்க வந்து நிற்கறீங்க? வாசலில் நின்றே பேசறீங் களே? வீட்டு மாப்பிள்ளை இல்லையா? உள்ளே வாங்க...'' என்று வரவேற்றார்.

''நான் மாப்பிள்ளை இல்லைம்மா. நாங்க எல்லாருமே இந்த வீட்டுக்கு பிள்ளைங்க மாதிரி. உரிமையா வந்து போகணும் என்று நினைக்கிறோம். நீங்க இந்த மாதிரி வார்த்தைகள் சொல்லி தள்ளி வைக்கக் கூடாது'' என்று நண்பனுக்கும் சேர்த்தே சொன்னவன் கண்கள் வெளியே பாய்ந்தது.

''இன்னும் யாராவது வந்து இருக்காங்களா பிரசன்னா...? வெளியே பார்க்கிறாயே?'' என்று சரளமாக உரையாட அவன் பார்வை அவர் முகத்தில் பதியவில்லை.

''சத்யா எங்க கூட வந்தான். உள்ளே வரலை. நீங்க உள்ளே வரலை. நீங்க உள்ளே போங்க. நான் இதோ வந்து விடுகிறேன்...''

''சத்யா டாக்டரோடு பேசிட்டு இருக்கிறான். அவரை வழி அனுப்பி விட்டு வருவான்...'' என்ற மங்கை அம்மாவின் குரல் அவனை தடுத்து நிறுத்த அவன் ஆச்சரியத்தோடு திரும்பினான். வெளியே முன்பு நின்று இருந்த கார் இல்லை. சத்யா தாங்கள் வந்த காரில் இருந்து வசு நிர்மலாவுக்குக் கொடுக்க என்று வாங்கிக் குவித்த தின்பண்டங்கள் அடங்கிய பைகளை எடுக்க, அருகே பணியாள் போல இருந்த ஒரு வயசான அம்மா வாங்கியபடி ஏதோ பேசிக் கொண்டு இருந்தார்.

அவனை வியப்புடன் பார்த்தபடி அருகே நெருங்க அரவம் கேட்டுத் திரும்பியவன், ''நீங்க கேட்ட மாப்பிள்ளை சார் தான். நான் இந்த வீட்டுக்கு பிள்ளை மாதிரி...'' என்று அறிமுகம் செய்தான்.

''அய்யா நேற்றும் வந்து அம்மாவை வெளியே கூட்டிட்டுப் போனாங்க. இப்ப டாக்டரிடமும் பேசினாங்களா? சின்னம்மா தங்கச்சியை கட்டிக்கிட்டவுகளா என்று கேட்டேன்...'' என்று கேட்ட முதியவரை பார்த்து புன்னகை செய்தான்.

''நான் தான் பாட்டி. என்ன விஷயம் சொல்லுங்க...''

''என்ன சொல்றது? ரெண்டு பேரும் தனியா இருக்காங்க. அப்பப்போ யாராவது வந்து போங்க. கலகலன்னு



ஆளும் பேரும் வரப் போக இருக்கும் இந்த வீடு இப்ப சத்தமே இல்லாமல் கிடக்குதே!'' என்று ஆதங்கத்தோடு சொல்ல இருவருமே வேகமாக தலை அசைத்தனர்.

''வரோம் பாட்டி நான் அப்பப்போ வரலாம். சார் மிலிட்டரியில இருக்கார்...'' என்று பிரசன்னா சொன்ன உடனே அவரின் கண்களில் மரியாதை தோன்றியது.

''நீயும் மிலிட்டரியில் இருக்கியா ராசா? செழியன் தம்பியைத் தெரியுமா உனக்கு...'' என்று ஆர்வத்துடன் கேட்டவரைப் பார்த்து புன்னகையுடன், 'அவரைத் தெரியாமல் இருக்குமா பாட்டி? தெரியும்...'' என்று சொல்லி முடிக்கும் முன்பே அவனின் கன்னத்தை வழித்துத் திருஷ்டி கழித்தார்.

''நல்ல மகராசனா இருக்கணும்'' என்று ஆர்வத்தோடு நடுங்கும் கரங்களால் கன்னம் தொட்டு வாழ்த்த அவன் புன்னகை செய்தான்.

''நான் உள்ளே போயிட்டு வரேன்...'' என்று அவரின் கன்னத்தில் தட்டி விட்டு கையில் பையோடு நகர்ந்தான் சத்யா.

''இதென்ன கதை சத்யா? உனக்கு செழியனை எப்படித் தெரியும்?''

''அதா முக்கியம்? மிலிட்டரியில் இருக்கான் என்று சொன்ன உடனே அவங்க கண்ணில் தோன்றிய மரியாதையையும் ஆர்வத்தையும் பார்த்தாயா? அவங்க எதிர்பார்ப்பை ஏன் பொய்யாக்க வேண்டும்? செழியன் யார் என்று தெரியும் தானே? இப்ப தெரியாது என்று சொல்வதால் என்ன சாதிக்கப் போகிறோம்?'' என்று நடந்தவனை புன்னகையோடு தொடர்ந்தான்.

''என்னடா! நாங்க எல்லோரும் உன்னைக் காணோமே என்று உள்ளே தேடிட்டு இருந்தோம். நீ எங்கே வந்தாய்?''

''மங்கை அம்மா டாக்டரோடு பேசிட்டு வந்தாங்க இல்லையா? அதான் நிர்மலாவுக்கு என்ன பிரச்னை என்று தெரிந்து கொள்ள அவங்க பின்னாலேயே போய் விட்டேன். ஏன் என்ன ஆச்சு?''

''டாக்டர் என்ன சொன்னாங்க?''

''அவங்க கன்சீவ் ஆகி இருக்காங்க என்று சொன்னாங்க. பயப்படுகிற மாதிரி ஒன்றும் சொல்லலையே? நீ ஏன் இப்படி எதையோ பறி கொடுத்தவன் மாதிரி இருக்கிறாய்?'' என்றவன் கையில் இருந்த பையில் இருந்த இனிப்பு டப்பாவை எடுத்தான்.

''முதலில் நிர்மலாவுக்கு. அப்புறம் தான் மற்றவர்களுக்கு...'' என்று சொன்னபடி சோபாவில் அமர்ந்து இருந்தவளை நெருங்கினான்.

''வசு, சும்மா வாய்க்கு வந்தபடி பேசாதே! சின்ன பெண்ணா லட்சணமா பேசு. எல்லாம் உனக்கு தெரியும் என்ற அதி மேதாவி மாதிரி பேசக்கூடாது'' என்று நிர்மலா தங்கையைக் கடிந்து கொண்டு இருக்க, ''நான் மேதாவி இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீ படித்த முட்டாளா இருக்காதே!'' என்று அவள் முறைத்த வேளையில், அவர்களை நெருங்கிய சத்யா இனிப்பினை நிர்மலாவிடம் நீட்டினான்.

''வாழ்த்துக்கள் நிர்மலா. நல்ல சந்தோஷமான செய்தியை வீட்டுக்குள் நுழையும் போதே சொல்லி இருக்கீங்க. இந்த டப்பாவில் பத்துக்கும் மேலே ரகங்கள் இருக்கு. உங்களுக்கு எது பிடிக்குமோ அதை எடுத்துக் கொண்டு, நீங்களே உங்க கையால் எல்லோருக்கும் கொடுங்க...'' என்று டப்பாவை நீட்ட அவள் திகைப்புடன் நிமிர்ந்தாள்.



சத்யா வந்ததே தெரியாது. வந்து இருந்தாலும் நேருக்கு நேர் தன்னிடம் பேசுவான் என்று எதிர்பார்க்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலே மங்கை அம்மாவிடம் நேற்று செய்தி சொன்னதில் இருந்து, அவர் மட்டும் இல்லாமல், தன் தாய், தந்தை, ஏன் சற்று முன்பு வசுந்தரா, வீடு தேடி வந்து பரிசோதனை செய்ய வந்த மருத்துவர் கூட, 'நல்லா யோசிச்சு சொல்லும்மா...' என்ற பல்லவியை பாடி இருக்க இவனின் இந்த உற்சாகமும், இனிப்பு வழங்கியதும் மனதிற்கு இதம் அளித்தது.

''நீங்க ஒருத்தராவது இனிப்பு கொடுத்துக் கொண்டாட வேண்டும் என்று சொன்னீகளே...'' என்று முணுமுணுப்பாக் நிர்மலா சொல்ல வசுந்தரா நிர்மலாவையும், சத்யாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

இவனுக்காக தானே இவ்வளவு நேரம் இவளைப் போட்டு தாளித்து எடுத்தாள்? இங்கே இவன் என்னவென்றால் குஷாலாக அவளுக்கே தான் வாங்கிய இனிப்பைக் கொடுத்து நல்லவன் என்று பேர் எடுத்துக் கொண்டு இருக்கிறானே! நிர்மலாவின் தெளிந்த முகம் பார்த்து சந்தோஷ பூ பூத்தது.

''ஹலோ... சத்யா சார்.. இது தான் கடை தேங்காயை எடுத்து வழி பிள்ளையாருக்கு உடைப்பதா? இது நா..ன் எங்க அ..க்..கா..வு..க்..கு வாங்கிட்டு வந்தேன்...'' என்று அதே சந்தோஷத்துடன் அவனிடம் மல்லுக்கு நிற்க,

அவன் புன்னகையோடு, 'இவங்க உ..ங்..க அ..க்..கா என்று நினைத்து தான், இவர்களிடம் இனிப்பைக் கொடுத்தேன். இவங்க உங்க அக்கா இல்லையா?'' என்று அவளிடமே அந்த கேலியைத் திருப்ப நிர்மலா சிரித்தாள்.

''பரவாயில்லையே! வசுவின் வாயை அடைக்கவும் ஒரு ஆள் வந்தாச்சே?'' என்று தன் சந்தோஷம் வெளிப் படையாகத் தெரிய, சத்யாவைப் பார்த்து புன்முறுவல் செய்ய பிரசன்னாவுக்கும் வசுந்தராவுக்கும் புரிந்தது.

இவன் அவள் போக்கில் சென்று வளைக்கப் போகிறான். இவனுக்கு இந்தக் குழந்தை கிடைத்ததில் கூடுதல் சந்தோஷமே! தாய், மனைவி, குழந்தை என்று ரெடிமேட் குடும்பம் கிடைப்பதை அவன் மிகவும் ரசிக்கிறான், என்பது புரிய, இருவரும் பார்வையிலேயே அந்த செய்தியை பகிர்ந்து கொண்டனர்.

'எங்கே அத்தையைக் காணோம்? அத்தை டிபன் செய்ய வேண்டாம்...'' என்று சொல்லியபடி அடுக்களைக் குள் சென்ற வசுந்தராவை ''வசு... என் காதில் விழுந்தது நிஜம்தானா?'' என்று கேலி செய்தபடி அவளைப் பின் தொடர்ந்தான் பிரசன்னா.

''வா வா வசுந்தரா. நீங்க வருவதா முன்னமே சொல்லலை. இல்லை என்றால் நான் ஏற்கனவே ஸ்வீட் காரம் எல்லாம் முன்பே செய்து வைத்து இருப்பேன். இப்ப என்ன? சூடா ரவா கேசரி பண்ணி, வாழைக்காய், பஜ்ஜி, இருபது நிமிஷத்துல பண்ணிடுவேன். ஏன் டிபன் வேண்டாம் என்கிறாய்?'' என்று விசாரித்தார் மங்கை.

''இவங்க இருட்டுன பிறகு ஹைவேயில் பயணம் செய்வது ரிஸ்க் எற்று கதை சொல்லி, ஆறு ஆறரைக்கு



எல்லாம் கிளப்பிடுவாங்க. நாலு மணிக்கு டிபன் சாப்பிட் டால், ஆறு மணிக்கு டின்னர் எப்படி சாப்பிடுவது? டின்னரை முடிச்சுட்டு ஏழு மணிக்குக் கிளம்பினால், அங்கே வீட்டில் வெறும் பால் பழம் என்று அட்ஜஸ்ட் பண்ணிடலாம் என்று நினைத்தேன்...'' என்று விளக்கம் சொன்ன வசுந்தராவைப் பார்த்துச் சிரித்தார் மங்கை.

''தேங்க்ஸ் சத்யா சார். இந்த தகவல் தெரிந்த பிறகு கடந்த இருபத்தி நாலு மணி நேரத்தில், 'குழந்தையா...?' என்ற அதிர்ச்சி பார்வை இல்லாமல் வெறும் சந்தோஷம் மட்டுமே நிறைந்த, வாழ்த்து சொல்லும், இனிப்பு கொடுத்துக் கொண்டாடும் முதல் மனிதன் நீங்க தான் சார்...'' என்று உணர்வுப் பூர்வமாக சொன்ன நிர்மலாவின் குரலில் ஒரு வினாடி உறைந்தான்.

''ஏன்... மங்கை அம்மா...?'' என்று கேள்வியாக நிறுத்தியவனுக்கு மங்கை மேல் வைத்து இருந்த மதிப்பு மேலும் ஏறியது.

''இல்லை... அம்மாக்கு... இரண்டு மனசு... அவங்க எனக்காக... ப்ச்! எனக்கு ஆறுதலா யாருமே பேசலை தெரியுமா? நீங்க தான் முதலில்... உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியலை. ரொம்ப தேங்க்ஸ்...'' என்று கண்ணில் ஈரம் கசிய நெகிழ்ந்து சொன்னவளை வருத்தத்துடன் பார்த்தான்.

''ஹலோ, உங்களை ஸ்வீட் எடுத்துக்கச் சொன்னால் நீங்க நன்றி சொல்லிட்டு இருக்கீங்க? போன தடவை நான் சாரியும் நன்றியும் சொன்னேன். நேற்று நீங்க சாரி மட்டும் சொல்லிட்டீங்க. மிச்சம் நன்றி பாக்கி இருக்கு என்று இன்னிக்கு சொல்லிட்டீங்க போல. கணக்கு

சரியாகி விட்டது. இனிமேல் நம் பேச்சில் இந்த இரண்டு வார்த்தைகளும் வரவே கூடாது ஓகே?'' என்று சொல்லிய பிறகே சுற்றுப் புறம் உணர்ந்து திரும்பிப் பார்த்த சத்யா திகைத்தான்.

''மாறி மாறி நாம் ரெண்டு பேரும் சாரியும் நன்றியும் சொல்லிக் கொண்டே இருந்தால் நமக்குப் பேச வேறே வார்த்தைகளே தெரியாது என்று இவங்க நினைத்துக் கொள்ளப் போறாங்க. இனிப்பு எடுத்துக்கோங்க. அவங்களுக்கும் கொடுக்கலாம்'' என்று அழுத்திச் சொன்னான் சத்யா.

''சென்னை வந்தால் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மைசூர் பாக் வாங்காமல் வரமாட்டோம். வசுவிற்குப் பிடிக்கும்...'' என்று பாராட்டுடன் அவன் நீட்டிய இனிப்புப் பெட்டியில் இருந்து மைசூர் பாக்கில் சிறு துண்டினை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள் நிர்மலா.

அவளை சில கணங்கள் பெருமையோடு பார்த்தவன், ''வாங்க எல்லோருக்கும் நீங்களே ஸ்வீட் கொடுங்க...'' என்று சொன்னதும் அடுக்களைக்குள் சென்று மங்கையிடம் நீட்டினாள்.

''ஸ்வீட் வேண்டாம் என்று யாரும் சொல்லக் கூடாது. எல்லோரும் எடுத்துக்கோங்க...'' என்ற நிர்மலாவையும், பின்னால் சிரிப்புடன் நின்று இருந்த சத்யாவையும் பார்த்த மங்கையர்க்கரசியின் மனம் நிறைந்தது. செழியன் இறந்து ஒரே மாதத்திற்குள் இன்னொரு கல்யாணம் என்பது சாத்தியம் இல்லை. தொடர்ந்து கண்காணிக்க முடிவு செய்தவரின் எண்ணங்களுக்கு சாதகமாக மாலையில் காரியங்கள் நடந்தது.



வீட்டில் உள்ளவர்களுக்கு மட்டும் இல்லாமல், பண்ணையில் வேலை செய்து விட்டு கூலிக்காக வந்தவர்களுக்கும் இனிப்பு வழங்கச் செய்தது, 'வெறும் ஸ்வீட் தானா?' என்று கேலி பேசியவர்களிடம், ஆளுக்கு ஐம்பது ரூபாய் பணமாகக் கொடுத்தது, நேற்று மாலை தான் நினைத்ததை இவன் செய்கிறான் என்று மனம் குளிர வைத்தது.

இரவு உணவு வேளையில், 'சத்யா சார், சாம்பார் போட்டுக்கோங்க. இன்னும் ஒரு தோசை வைத்துக் கொள்ளலாமே...? கொழுக்கட்டை வேண்டாமா?' என்று முந்தைய தினம் போல ஒதுங்கி இல்லாமல் நிர்மலா உபசரித்தது, அவர் கண்ணில் பட்டு கருத்தில் பதிந்தது.

''இந்த சாரை கட் பண்ணினால் நல்லா இருக்குமே... அப்புறம் நான் மேடம் போடல என்ற எண்ணம் இருக்கும்'' என்று கை கழுவும் வேளையில், சத்யா கேட்டது சபாஷ் போட வைத்தது.

'இவன் வளையலைக் கொடுக்க போவதில்லையா? நிர்மலாவின் கர்ப்பம் தெரிந்ததும் மனம் மாறி விட்டானா?' என்று மாறி மாறி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வசுந்தராவும் பிரசன்னாவும் கண்களால் கேள்வி கேட்டுக் கொண்டு இருந்தனர்.

விடைபெறும் வேளையில், ''அம்மா, இன்னும் ஒரு வாரத்தில் கிளம்பி விடுவேன். இந்த விடுமுறையில் எனக்கு சொந்தங்கள் எல்லாம் திருப்பிக் கிடைத்த சந்தோஷம் இருக்கிறது. ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்று மங்கையர்க்கரசியின் கால்களில் விழுந்தான் சத்யா.

''சந்தோஷமா நீண்ட ஆயுளோடு இரு...'' என்று வாழ்த்தி, அவனுக்கு திருநீறு அணிவிக்க, அந்த வளையல் டப்பாவை எடுத்து நீட்டினான்.

''கடன் அன்பை முறிக்கும் என்று கேட்டு இருக்கீங்களா? எனக்கு அன்பு கிடைப்பது பிரசன்னாவை வைத்து இந்த ஒரே ஒரு இடத்தில் இருந்து தான். அதை நான் எந்தக் காரணம் கொண்டு இழக்க விரும்பவில்லை. நான் பிரசன்னா கல்யாண வீட்டில் வாக்களித்த, தட்டுக்கு ஒரு தங்க வளையலை வாங்கி வந்துட்டேன். நீங்க வைத்துக் கொண்டாலும் சரி. தட்டு செஞ்சவங் களுக்குக் கொடுத்தாலும் சரி, எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்று அவர் கையில் திணிக்க அவர் பதறி விலகினார்.

''ஹய்யோ! என்ன சத்யா இது? இதெல்லாம் கல்யாண வீட்டில் சும்மா பேசுவது தானே? அதை எல்லாம் பெரிசா எடுத்துக்கக் கூடாது...'' என்று மறுக்க, அவன் வலுவில் திணித்தான்.

''வெள்ளிக் கிழமையும் அதுவுமா விளக்கு வைத்த நேரத்தில் வீடு தேடி வரும் லஷ்மியை வேண்டாம் என்று சொல்லாதீங்க அத்தை. சும்மா வாங்கி வைங்க. அவருக்கு காசு நிறைய இருக்கு செய்றார்...'' என்று கேலியாக வசுந்தராவும்,

'என் கல்யாணத்தில் நீங்க சந்தோஷமா பங்கு கொண் டதற்கு அன்பு பரிசு என்று நினைத்துக் கொள்ளுங் கம்மா'' என்று பிரசன்னாவும்,

''அம்மாக்கு பிள்ளை கொடுக்கும் பரிசு என்று நினைத் தால் இதை உங்களுக்கு மறுக்கத் தோன்றாது. நீங்க மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்'' என்று சென்டி மென்ட்டாக சத்யாவும் சொல்ல அவர் மருமகளைப் பார்த்தார்.



சத்யா சொன்ன வாக்கியத்தில் மெய்மறந்து இருந்த நிர்மலா அவரின் பார்வை தன் புறம் திரும்பவும், தன் அனிச்சையாக, தலை அசைக்க, அதைச் சம்மதமாக ஏற்று அந்த வளையல்களைப் பெற்றுக் கொண்டார் மங்கை யர்க்கரசி.

# 15

காவேரிப்பாக்கத்தில் இருந்து சென்னைக்குத் திரும்பி வரும் கார் பயணம் முழுவதும் பிரசன்னாவும் வசுந்தராவும் என்னென்னவோ கேள்விகள் கேட்டுத் துளைத்த போதும் அவனிடம் இருந்து பதில் எதுவும் வரவே இல்லை.

பூந்தமல்லியை நெருங்கும் போது, 'நான் கிண்டியில் இறங்கி கொள்கிறேன்' என்று சத்யா சொல்ல, 'எத்தனை கேள்வி கேட்டேன் ஒண்ணுக்காவது பதில் சொன்னாரா உங்க ப்ரெண்ட்?'' என்று சொன்ன வசுந்தராவைப் பார்த்து புன்னகை செய்தான் சத்யா.

''அவன் பதில் சொல்லவில்லை என்று கேள்வி கேட்பதை நீ நிறுத்தி விட்டாயாக்கும்?'' என்று மடக்கிய பிரசன்னாவிடம் ''எப்படிங்க இவரோட பிரெண்டா இருக்கீங்க? இப்படி அழுத்தமா வாயைத் திறக்காமல் இருந்தால் உங்களுக்கு BP ஏறாதா?'' என்று கேட்க பிரசன்னாவின் புன்னகை பெரிதானது.

''என்னதான் சீண்டிக் கொண்டு இருந்தாலும், ஒரு விஷயத்தில் உங்க கலகலப்பான சுபாவத்திற்கு நான்

நன்றி சொல்லியே ஆக வேண்டும்...'' என்று நெகிழ்வான குரலில் சொல்ல வியப்பாகத் திரும்பினாள்.

''எனக்கு உறவு நட்பு என்று சொல்லிக் கொள்ள இருப்பது பிரசன்னா மட்டும் தான். அலுவலக தொடர்பு களை வளர்த்துக் கொள்ளவில்லை. திருமணம் ஆன உடனே பிரசன்னாவிடம் பழையபடி நட்பு தொடருமா என்று சந்தேகம் எனக்கு முன்பு வந்து இருக்கிறது...''

''என்னைப் பார்த்தால் சகுனி கூனி மாதிரி தெரியுதா? நாங்க எல்லாம் அனுமன் மாதிரி சேர்த்து வைக்கப் பிறந்தவங்க...'' என்று பெருமையாக வசுந்தரா சொல்ல இருவரும் வாய்க்குள்ளே சிரித்தார்கள்.

''என்ன சிரிப்பு...?'' என்று கேட்டவளுக்கும் விஷயம் புரிய... ''ஹூம்! நானே எனக்கு ஸெல்ப் ஆப்பு வைத்துக் கொண்டேன் போல...'' என்று அதையும் சிரிப்புடனே ஏற்றுக் கொண்டாள்.

''அதெல்லாம் இறந்த காலம் வசுந்தரா. எனக்காக கல்யாணத்தை தள்ளி வைக்க வேண்டும் என்று பிரசன்னா சொன்னதை நீங்க ஒத்துக் கொண்டது நம்பிக்கை அளித்தது. அதைவிட கல்யாண மண்டபத்தில் உங்களைப் பார்த்ததுமே அந்த நம்பிக்கை உறுதியாகி விட்டது...'' என்று நிர்மலாவை வர வைக்க அவள் பண்ணிய தந்திரத்தின் நினைவில் புன்னகை பூக்க சந்தோஷமாகச் சொன்னான் சத்யா.

''அது ஆளுக்கேற்ற மாதிரி வைத்தியம். ஆடி கறக்கிற மாட்டை ஆடி கறக்கணும். பாடி கறக்கிற மாட்டை பாடி கறக்கணும். உங்களிடம் விஷயம் எப்படி வாங்குவது என்று தான் இன்னும் எனக்குப் புரியலை...'' என்று



சலிப்போடு சொன்னவளைப் பார்த்து புன்னகை செய்தான் சத்யா.

''என் மனசில் இருப்பதைச் சொல்லணும் என்று முடிவு பண்ணி விட்டால் அதை முதலில் உங்க ரெண்டு பேரிடம் தான் சொல்வேன். வேறு யாரிடமாவது மாற்றி சொல்லணும் என்று நினைத்தால் கூட எனக்கு வேறு ஆள் இல்லை வசுந்தரா...'' என்று சொல்ல அவளுக்கே ஒரு மாதிரி ஆகி விட்டது.

''உங்களை ஹர்ட் பண்ணணும் என்று நினைத்து அப்படிச் சொல்லலை...'' என்று வசுந்தரா வருத்தமான குரலில் சொல்ல பிரசன்னா குனிந்து சீட்டுக்கு அடியிலும் முன்னால் எட்டிப் பார்த்தும் எதையோ தேடினான்.

''என்னடா தேடுற...?'' என்று சத்யாவும் ''போன் விழுந்து விட்டதா?'' என்று வசுந்தராவும் கேட்க, அவன் நிதானமாக நிமிர்ந்து ''இல்லை என் பொண்டாட்டி ரெண்டு நிமிஷம் முன்னாடி வரைக்கும் இங்கே இருந்தா அவளைக் காணோம். நீ பார்த்தாயா சத்யா?'' என்று கேட்டான்.

வசுந்தரா கையில் கிடைத்த பொருளால் அவன் முதுகில் மண்டகப்படி நடத்த, அதைக் கண்ட சத்யா வாய் விட்டுச் சிரிக்க, ''டேய் நான் அடி வாங்குவதைப் பார்த்தால் உனக்கு சிரிப்பு வருதா'' என்று பிரசன்னா புலம்ப, என்று அந்தக் காரில் நிலவிய அழுத்தமான சூழல் வினாடியில் கலகலப்பாக மாறியது.

**சத்யமூர்த்தியின் டயரி குறிப்பு**

இதுவரை எனக்கு என்று கவலைப்பட, நான் விரும்பியதைச் செய்து சந்தோஷப்பட என்று பிரசன்னாவைத்

தவிர வேறு யாரும் இல்லை. அவனுக்கு ஏதாவது கொடுத்தாலும் வாங்க மாட்டான் வசதி என்ற நிலையில் அவனுக்கு எதுவும் தேவைப்படுவதும் இல்லை.

என்னால் பரிசு கொடுக்க முடியும் என்று நிரூபிக்க பட்டு விட்டது. என் உணர்வுகளும் வார்த்தைகளும் ஒருவரை சந்தோஷப்படுத்துமா? இன்று புதிதாய் பிறந்தேன்.

முதலாம் சந்திப்பில் கோபம்

இரண்டாம் சந்திப்பில் சோகம்

மூன்றாம் சந்திப்பில் மௌனம்

நான்காம் சந்திப்பில் அறிமுகம்

ஐந்தாம் சந்திப்பில் அன்னியோன்யமா!!!??

அறிமுகம் அன்னியோன்யம் ஆகுமா?

அது என்றென்றும் தொடருமா?

காலம் பதில் சொல்லும்

* * *

பிற்பகல் நான்கு மணியில் இருந்த, பேச்சும் சிரிப்புமாக, கலகலவென்று இருந்த வீட்டின் ஆரவாரம் விருந்தினர்கள் வெளியே சென்றதும் அடங்கினாலும், நிர்மலாவின் முகத்தில் சந்தோஷம் மறையவில்லை. உணவு மேஜையை ஒழித்து பாத்திரங்களை கழுவ போட்டு கொண்டு இருந்தவள் அருகே வந்து நின்ற மங்கை அம்மாவை பார்த்ததும் புன்னகைத்தாள்.

''நான் பார்த்து கொள்கிறேன். உங்களுக்கு இன்று நிறைய அலைச்சல். போய் ரெஸ்ட் எடுத்துக்கோங்க...'' என்று அனுப்ப முயன்றாள்.



''ரொம்ப நாளைக்கு பிறகு உன் முகத்தில் இன்று தான் கொஞ்சம் மலர்ச்சியை பார்க்கிறேன். இந்த குழந்தை உருவான செய்தியில் என்னை விட உனக்கு தான் ரொம்ப சந்தோஷம் போல?'' என்று ஆர்வத்துடன் விசாரித்தார்.

கையில் இருந்த பாத்திரத்தை வைத்து விட்டு அவரின் அருகே வந்து அவரை நாற்காலியில் அமர வைத்தவள், குனிந்து அவரின் தோளை சுற்றி அணைத்து, ''ஏன்மா அப்படி சொல்றீங்க? உங்களுக்கு இந்த குழந்தையின் வரவில் சந்தோஷம் இல்லையா? பொய் சொல்லக் கூடாது...'' என்று விசாரித்தவளின் குரலில் சந்தோஷமே இருந்தது. வருத்தமோ குழப்பமோ இல்லை.

''சந்தோஷம் இல்லாமல் இருக்குமா நிர்மலா? இருந்தது. ஆனால்...'' என்று ஆரம்பித்தவரின் வாயை தன் கரத்தால் மூடினாள்.

சந்தோஷத்தோடு நிறுத்திக்கோங்க. இனிமேல் நடக்க போவதை பற்றி மட்டும் அதுவும் சந்தோஷமான விஷயங்களாக பேசலாம். பதினஞ்சு நிமிஷத்தில் வரேன்...'' என்று சென்றவளை திருப்தியுடன் பார்த்தார்.

இந்தளவு மாற்றம் இவளிடம் இத்தனை சுருக்கமான காலத்தில் வந்ததே பெரிய விஷயம். மேலும் நெருக்கடி அளிக்க வேண்டியதில்லை. தானாக கனிய வேண்டும். வேலையாளை அழைத்து தன் அறையிலேயே நிர்மலாவின் படுக்கையையும் மாற்ற சொன்னார்.

''இனிமேல் நீ தனியா படுக்க வேண்டாம் நிர்மலா. ஒரு அவசரம் என்றால் நீ சட்டுன்னு யாரையும்

கூப்பிடவும் மாட்டாய். என் கண் பார்வையிலேயே இரு. அது உனக்கும் உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் நல்லது'' என்று சொன்ன போது கண்களில் நீர் கரை கட்டி நின்றது.

''யாரோ பதினஞ்சு நிமிஷம் முன்னாடி, இனிமேல் நடக்கப் போகிற நல்ல சந்தோஷமான விஷயங்கள் மட்டும் தான் பேசணும் என்று என்னிடம் சொன்னாங்க. அது யாருன்னு தெரியலையே?'' என்று கட்டிலில் அமர்ந்து கால்களை நீட்டி கொண்டார். அவளுக்கென்று போட்டு இருந்த கட்டிலுக்கு செல்லாமல் அவர் அருகில் அமர்ந்தாள்.

''அது நான் தான். சந்தோஷமா தான் இருக்கேன் ஆனால் பேச முடியவில்லை...'' என்று நெகிழ்ச்சியுடன் சொல்லி விட்டு அவரின் மடியில் படுத்து கொண்டாள்.

''உங்க அம்மாவுக்கு போன் பண்ணினேன் நிர்மலா. நாளைக்கு பார்க்க வருகிறேன் என்று சொன்னாங்க. வேறு யாரும் வரலை என்றாலும் அதை பற்றி கவலை படக்கூடாது. உனக்கு நான் இருக்கேன். என்ன...?'' என்று தகவலும் ஆறுதலும் சொன்னபடி அவரின் தலையை வருடியவருக்கு தன் மகனின் நினைவு வந்தது.

அவனும் இரவு உணவு முடிந்ததும் வெளி வெராண் டாவில் படுத்து கதை பேசுவான். இந்த மாதிரி தனக்கே அவனின் நினைவு எட்டி பார்க்கும்போது இவளை நினைக்காதே என்று சொல்வது எப்படி சரியாக இருக் கும்?

''நிர்மலா, கிளாஸ் பெயிண்டிங் பயிற்சி வகுப்புகள் நடத்தலாம் என்று சத்யா சொன்னானே? இப்ப உன்னால்



அந்த மாதிரி வேலைகள் செய்ய முடியுமா? கொஞ்ச நாள் அதை தள்ளி போடலாமா'' என்று நடப்புக்கு வந்து விசாரித்தார் மங்கை.

''இல்லைம்மா தள்ளி போட வேண்டாம். பதினெட் டில் இருந்து இருபத்தி ஐந்து வயது வரை இருக்கும் பெண்களுக்கு பயிற்சி கொடுக்க அரசாங்கமே ஏற்பாடு பண்ணுவது. அந்த மாதிரி வகுப்பில் தான் நானே கற்று கொண்டேன். வேலூரில் இருக்கு, இந்த மாதிரியான நடுத்தரமான நகரங்களில் இருக்கும் பெண்களுக்கு நாம் அதை கொடுக்கலாமே?''

''செய்யலாம் நிர்மலா. நீயும் மனசு ஓய்ஞ்சு போகா மல் சுறுசுறுப்பா இருக்க ஒரு வழி கிடைக்கும். நாலு பேருக்கு நல்ல வழி காட்டின சந்தோஷமும் இருக்குமே! உனக்கு உடல்நிலை ஒத்து வருமா என்பது தான் என் கேள்வி?''

''என்னம்மா நீங்க? கருவேலம் காட்டில் முள்ளு செடி நிழலில் பிரசவம் நடந்து, சில மணி நேர இடைவெளி யில் பெண்கள் வேலை செய்வதெல்லாம் கிராம புறத் தில் நடக்குது. எனக்கு அந்த மாதிரி நிலை இல்லையா?'' என்று சொன்ன நிர்மலாவை வியப்புடன் பார்த்தார் மங்கை.

''வேண்டுமானால் பயிற்சி கொடுக்க, ஆள் வைத்து விடுவோம். பயிற்சிக்கு வரும், மற்றும் பயிற்சி முடித்த பெண்களை வைத்து, நாமே மூலதன பொருட்களை கொடுத்து கிளாஸ் பெயிண்டிங் மட்டும் இல்லாமல், பிளவர் வேஸ், வாழை நாரிலான கூடைகள், தட்டுக்கள் முதலியவை செய்ய வைத்தது, அதை விற்பதற்கு

ஏற்பாடு செய்யலாம். ஓரிரண்டு நாள் உடல் நிலை சரி இல்லாமல் போனாலும் எந்த வேலையும் தயங்கி நிற்காது...''

''இதற்கு என்ன செலவாகும்? பயிற்சிக்கு பசங்க பணம் கட்டி படிக்க வருவாங்களா? நம்ம ஊரில் எல்லாம் விவசாய கூலிகள் தானேம்மா?''

''நாம் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பித்து அதை அரசில் பதிவு பண்ணி விட்டோம் என்றால், பெண் களுக்கு இலவசமா பயிற்சி அளிக்க அரசாங்கம் மானியம் கொடுக்கும். மகளிர் மேம்பாட்டு குழுவின் மூலம் எனக்கு உதவி தொகை கிடைத்ததும்மா. ஆரம்பத்தில் ஒரு கட்டிடம் தளவாட பொருட்கள், ஆசிரியருக்கு சம் பளம் என்று சில லட்சங்கள் செலவு பண்ண வேண்டி இருக்கலாம். தொடர் செலவினங்களுக்கு செலவு அரசாங்கம் தரும்...''

''நமக்கு இடம் பிரச்னை இல்லை. வீட்டிலேயே கூட ஆரம்பிக்கலாம். கட்டிட செலவை கட் பண்ணிடலாம். எப்ப மிச்ச வேலை ஆரம்பிக்க போகிறாய்?''

''என்னென்ன செய்யணும் என்று முதலில் லிஸ்ட் போடறேன். அப்புறம் நாளைக்கு சத்யா சாரிடம் பேசி எதுவும் மிஸ் ஆகி இருக்கா என்று செக் பண்ணிக்கலாம். வேலூருக்கு போகும் போது மகளிர் மேம்பாட்டு கழகத் தையும் பார்த்து விட்டு வருகிறேன். எல்லா வேலையை யும் முடித்து பயிற்சி வகுப்புகள் பிப்ரவரி - மார்ச்சில் ஆரம்பித்து விடுகிறேன்...'', என்று சொல்லி விட்டு எழுந்தவளை பிரமிப்புடன் பார்த்தார் மங்கையர்கரசி.

ஒரு மணி நேரம் செலவு பண்ணி, அடுத்து செய்ய வேண்டிய பணிகளை பட்டியல் இட்டவளின் கண்கள்



மாமியாரை திரும்பி பார்க்க, அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது தெரிந்தது. அடுத்த அறைக்கு சென்று தன் டயரியை எடுத்து வந்தவள், அதில் எழுத ஆரம்பித்தாள்.

**நிர்மலாவின் டயரி குறிப்பு**

இந்த நாள் இனிய நாள்.

இந்நாளின் இனிமை என்றென்றும் தொடரட்டும்.

குழந்தை குறித்த என் உணர்வுகளை புரிந்து கொண்ட...

அதை மதித்த மனிதனின் முதல் வாழ்த்து...

எனக்குள் எத்தனையோ மாற்றம் கொண்டு வந்தது.

ஊரார் என்ன சொல்வார்களோ என்று தயங்கி மயங்கி குழம்பி நின்ற காலம் மாறி, எனக்கும் துணையாக ஒரு வாரிசு வந்த சந்தோஷத்தில், எதிர்காலம் குறித்த கனவுகளை அந்த வாழ்த்து கொண்டு வந்தது. நான் நினைப்பதை செய்யலாம் என்ற எண்ணமே வந்ததே! அந்த நம்பிக்கை ஊட்டியது நீயல்லவா?

விதவையா? வாழாவெட்டியா? தனியாக இருக்கும் பெண்ணா? என்று யாரை பார்த்தாலும் கழுத்துக்கு கீழே கண்களை மேயவிடும் இந்த உலகில், நான் தனி என்று காட்டும், பரிசு எனக்காக கொடுக்கப் படுகிறது என்று தெரிந்த நிலையிலும், அதை இருவர் முன்னிலையில் மங்கை அம்மாவிடம் கொடுத்த உன் கண்ணியத்துக்கு ஒரு நன்றி.

எதிர்காலத்திற்கு திட்டமிட வேண்டும் என்று எண்ணத்தை எனக்குள் விதைத்த உன் பொறுப்புக்கு ஒரு நன்றி.

மகனை இழந்து தவிக்கும் நிலையிலும், என் நலன் குறித்து கவலை படும் மங்கை அம்மாவின் ஆதங்கத்தை உணர்ந்து, 'நான் இருக்கிறேன் மகனாக...' என்று அளித்த வாக்குறுதிக்கு ஒரு நன்றி. நன்றி சொல்லி தள்ளி வைக்க வேண்டாம் என்று சொன்னதற்கும் ஒரு நன்றி சத்யா சார்.

# 16

வசுந்தரா, பிரசன்னா, சத்யா மூவரும் வெள்ளியன்று வீட்டுக்கு வந்து சென்ற பின் இரண்டு தினங்கள் கழிந்து இருந்தது. திங்கள் காலை, செழியனின் மறைவினை ஒட்டி வழங்கப் படும் உதவி தொகையை பெற வேலூருக்கு செல்ல நிர்மலா கிளம்பிக் கொண்டு இருந்தாள். ஏற்கனவே பல ஆண்டுகளாக பழகிய பழக்கத்தில் கைகள் இயல்பாக வேலை செய்து கொண்டு இருந்தாலும், மனதில் யோசனை ஓடிக் கொண்டு இருந்தது. இன்று முதன் முதலாக செழியனின் மறைவிற்கு பிறகு தனியாக வெளியே செல்கிறோம் என்ற எண்ணம் சின்ன தயக்கத்தை ஏற்படுத்த மனம் மீண்டும் குழம்பியது.

''நிர்மலா மணி ஒன்பதாச்சு! இன்னும் என்ன செய்ற?'' என்ற மங்கையின் குரல் கேட்டு தயக்கம் இன்னும் முழுமையாக விலகாமலே வெளியில் வந்தாள்.

''என்ன நிர்மலா? முகம் ஒரு மாதிரி இருக்கு?'' என்று அருகில் வந்து முகத்தை நிமிர்த்த, 'ஒன்றும் இல்லைம்மா' என்று முணுமுணுத்தாள்.



''வாந்தி எடுத்தாயா? அதான் முகம் சோர்வா இருக்கா? ஒரு குரல் கொடுத்து இருக்கலாமே? நான் கூட வந்து தலையை பிடித்து இருப்பேனே! எல்லாவற்றையும் உனக்குள் வைத்து புதைக்காதே. வாயை திறந்து பேசு என்று எத்தனை தடவை சொல்லட்டும்?'' என்று அதட்ட அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''அதெல்லாம் இல்லைம்மா...''

''அப்புறம் என்ன? முதலில் சாப்பிடு'' என்று தட்டில் தோசை வைத்து சாம்பார் ஊற்றினார்.

ஒரு வாய் தோசையை வாயில் எடுத்து சாப்பிடலாமா வேண்டாமா என்று யோசனை செய்தபடி, ''அம்மா... நீ... ங்... க... ளு... ம் எ... ன்... னோ... டு வ... ரீ... ங்... க... ளா?'' என்று முடிக்கும் முன்பே முறைத்தார் மங்கை.

''நேற்று வரை இல்லாத தயக்கம் இப்ப திடீர் என்று ஏன் வந்தது? தனியா நீயே நாலு இடத்துக்கு போய் வந்து பழகணும் என்று சொன்னேனே? மறந்து விட்டதா? முதலில் ஒரு முக்கியமான வேலையா வெளியே கிளம்புகிறாய். சந்தோஷமா கிளம்ப வேண்டாமா? நர்சரி படிக்கும் பிள்ளை ஸ்கூல் போக கண் கலங்குற மாதிரி யோசிச்சுட்டு இருக்க...?'' என்று அதட்டினார்.

''இல்லைம்மா... வேலூர்ல... கலெக்டர் ஆபீஸ் போனால்... இன்னிக்கு திங்கள் கிழமை வேறே. யாராவது ஊர்க்காரங்க அங்கே வருவாங்க. பார்த்தால்...'' என்று சொல்லும் போதே அவளின் யோசனை என்ன என்று புரிந்தது.

''நிர்மலா, ஊர் வாயை மூட உலை மூடியே கிடையாது. மிஞ்சி மிஞ்சிப் போனால் என்ன பேசுவாங்க?

புருஷன் செத்து முப்பது நாள் ஆகலை. இவள் மினுக்கிட்டு வெளியே வந்து விட்டாள் என்று சொல்வாங்க. எதுக்கு ஆண்டவன் இரண்டு காது கொடுத்து இருக்கான் தெரியுமா? தேவை இல்லாத வம்பு பேச்சுக்களை ஒரு காதில் வாங்கி இன்னொரு காதில் விடத்தான்...'' என்று சொல்லும் போதே குக்கர் சத்தம் கொடுக்க, உள்ளே சென்றார் மங்கை.

''எழுந்திரிச்சுடாத. முன்ன மாதிரி சாப்பிட்டேன் என்று பேர் பண்ணக் கூடாது. இரண்டு ஆளுக்கு சாப்பிடணும். இன்னொரு தோசை எடுத்துட்டு வரேன்...'' என்று உள்ளே இருந்து அக்கறையுடன் குரல் கொடுத்த வேளையில் தொலைபேசி மணி அடித்தது. 'அது சத்யாவாக இருக்க வேண்டும்', என்று உள்ளுணர்வு சொல்ல, அவசரமாக வந்து எடுத்தாள் நிர்மலா.

''ஹலோ...'' என்ற குரல் தயக்கத்துடன் வந்தது.

''குட்மார்னிங் நிர்மலா, வேலூருக்கு கிளம்பிட்டீங்களா?'' என்ற குரல் அவன் அறிமுகப்படுத்தி கொள்ளாத போதும், மந்திரம் போட்ட மாதிரி ஒரு புன்னகை முகத்தில் ஓடி வந்து ஒட்டிக் கொண்டது.

''கிளம்பிட்டே இருக்கேன் சத்யா சார். போயிட்டு வந்து சாயங்காலம் பேசலாம் என்று நினைத்தேன். நீங்க காலையிலேயே கூப்பிட்டுட்டீங்க'' என்றவளின் குரலில் சற்று முன்பு இருந்த சோர்வு காணாமல் போய் இருந்தது.

''பரவாயில்லைங்க, யார் பேசினால் என்ன? நீங்க எப்ப திரும்பி வருவீங்க?''



''வேலூரில் முன்னாள் ராணுவ வீரர்களுக்கான நலத்துறை அலுவலகம் தவிர, மகளிர் மேம்பாட்டு கழக அலுவலகம் போயிட்டு வரலாம் என்று நினைத்தேன். சாயங்காலம் ஆகிடும். ஏன் சார்?''

''நேற்று அம்மா ஒரு சிவில் காண்ட்ராக்டர் அனுப்ப சொன்னாங்க. அதான் இன்னிக்கு அனுப்பலாமா என்று கேட்க போன் பண்ணினேன். அம்மா பக்கத்துல இருக்காங்களா?''

''கிச்சனில் இருக்காங்க. கூப்பிடுகிறேன்'' என்று அவனுக்கு சொன்னவள், ரிசீவரை மூடாமலே, ''அம்மா, சத்யா சார் உங்களுடன் பேசணுமாம். வந்து பேசுங்க. நான் வந்து அடுப்பை பார்த்து கொள்கிறேன்...'' என்று சத்தமாக சொன்னது அவன் காதிலும் விழுந்து புன்னகை வர வைத்தது.

மூன்று நாட்கள் முன்பு ரிசீவரை காதில் வைத்து இருவருக்கும் இடையில் மௌன போராட்டம் நடந்தது...? மூன்று நாட்கள் தான் ஆகிறதா? ஏதோ முன் ஜென்மம் மாதிரி தோன்றுகிறதே என்று நீண்ட சத்யாவின் சிந்தனையை, ''சென்னையில் இருந்து வரணும் என்றால் அவருக்கு வசதிப் பட வேண்டுமே?'' என்ற நிர்மலாவின் குரல் இடையிட்டு கலைத்தது.

''அங்கே வேலூரில் இருப்பவர்தான். சென்னைக்கு வேறு வேலையாக பிரசன்னா அலுவலகத்திற்கு வந்து இருந்தார். அதனால் அவருக்கு இன்னிக்கோ நாளைக்கோ வருவதில் பிரச்சனை இல்லை...'' என்று சொல்லும் போதே மங்கையர்க்கரசி வர அவரிடம் ரிசீவரை நீட்டினாள்.

''அம்மா, அவரை நாளைக்கு வரச் சொல்லட்டுமா? நீங்களும் இருந்தால் பயிற்சி நிலையம் வைக்க என்ன மாதிரி மாற்றங்கள் தேவைப் படும் என்று நீங்களே நேரில் அவரிடம் சொல்லலாமே?''

''சரி சத்யா. அவளும் கூட இருக்கட்டும். நாளைக்கே சிவில் காண்ட்ராக்டர் மட்டும் இல்லாமல் பர்னிச்சர் செய்வதற்கும் சொல்லிடலாம் சத்யா. சென்னையில் என்ன விலை விபரம் என்ற தகவல் விசாரித்து சொல்கிறாயா? அதற்கேற்ப விலை அடிச்சு பேசலாம் பாரு. உனக்கு சிரமம் இல்லையே?''

''இதுல என்னம்மா சிரமம் இருக்கு. இன்னிக்கே நாலஞ்சு கடை பார்த்துட்டு நைட் போன் பண்ணுகிறேன்''

''போன் பண்ணனுமா? ஏன் சத்யா? உனக்கு சென்னையில் வேறே முக்கியமான வேலை இல்லை என்றால் நீ நேரில் வாயேன். இன்னும் ஒரு வாரத்தில் எப்படியும் கிளம்பி விடுவாய் தானே?''

''உங்க அன்பு எனக்கு புரியுது. ஆனால் எல்லோருக்கும் புரியும் என்று சொல்ல முடியாது. கடந்த இரண்டு வாரத்தில் மூன்று முறை வந்து விட்டேன் இல்லையா? உங்களுக்கு என்ன உதவி தேவைப்படுமோ சொல்லுங்க. ஆனால் நேரில் அங்கே வேண்டாம்மா'' என்றவன் குரலில் உறுதி இருந்தது.

''ஏன் சத்யா? என்ன ஆச்சு? யார் என்ன சொன்னா?'' என்றவரின் குரலில் வியப்பும் லேசான கோபமும் இருந்தது.

''சொல்லி விடக் கூடாது என்று முன்னெச்சரிக்கையா சொல்கிறேன்...''



''யாரும் சொல்வதற்கு அவர்கள் வீட்டு சொத்தையா உனக்கு எழுதி கொடுக்க போகிறார்கள்? நீ வரப் போறது என் வீட்டுக்கு. கூப்பிடுவது நான். யாரும் எதுவும் சொல்ல நான் விட மாட்டேன்...''

''ஏன் என்னென்னவோ பேசறீங்க? அதுக்கு அவசியமே இல்லை...'' என்று இடையிட்ட சத்யாவின் குரல் அவரை சென்று சேரவே இல்லை.

''நீ என் பையன் என்று தானே ரெண்டு நாளைக்கு முன்பு வளையலை பரிசாக கொடுக்கும் போது சொன்னாய்? கொடுக்கல் வாங்கல் ஒரு வழி பாதையாக இருக்க முடியாது சத்யா, நீ என் மகன் என்று உண்மையாக உணர்ந்து சொன்னாய் என்றால், நீ ஊருக்கு போவதற்கு முன்பு ஒரு முறையாவது வந்துட்டு போ அவ்வளோ தான்...'' என்று அதட்டலாக் சொன்ன சில நிமிடங்கள் அமைதி காத்தான் சத்யா.

''போவதற்கு முன்பு ஒரு முறை வருகிறேன். ஆனால் அதுக்கு முன்னாடி நீங்க சென்னைக்கு ஒரு நாள் வர முடியுமா? நாளைக்கு சிவில் வொர்க் பார்க்க காண்ட்ராக்டர் வருவார். புதனில் இருந்து வெள்ளிக்குள் ஒரு நாள் நீங்க சென்னைக்கு வர முடியுமா?''

''வரலாம். ஆனால் என்ன விஷயம்?''

''என்ன விஷயம் என்று சொன்னால் மட்டும் தான் வருவீங்களா? பையன் ஊருக்கு போறதுக்கு முன்னாடி அவன் வளர்ந்த இடத்தை நீங்க பார்க்கலாம். எப்போதும் காவேரிப்பாக்கத்தையே சுத்தி சுத்தி வருவதற்கு பதிலாக ஒரு மாற்றத்திற்கு சென்னையை சுத்தி பார்க்கலாம். இப்படி எத்தனையோ லாம்கள் இருக்கு. என்ன சொல்றீங்க?''

''சரிப்பா. நாளைக்கு சாயங்காலம் போன் பண்ணி எப்போ வருகிறேன் என்று சொல்கிறேன். இப்ப நிர்மலா கிளம்பி ரெடியா இருக்கா. நான் அப்புறமா பேசட்டுமா?'' என்று இரண்டு மனதாக சொல்ல அவன், ''சரிம்மா. தைரியமா இருக்கணும், பயப்படாமல் பேசணும் என்று சொல்லி அனுப்புங்க. பை'' என்று முடித்தான் சத்யா.

''நீயே சொல்லிடு...'' என்ற மங்கையின் குரல் காதில் விழுவதற்கு முன்பே போனை வைத்தவன் இருக்கையில் சரிந்து அமர்ந்தான்.

''என்னம்மா கோபமா பேசினீங்க? சத்யா சார் என்ன சொன்னாங்க?''

''கொஞ்ச முன்னாடி ஊர் வாய்க்கு பயந்து வெளியே கிளம்ப யோசித்தாய் அல்லவா? அதையே அவனும் வேறே பாஷையில் இங்கே வருவது கஷ்டம் என்ற அர்த்தத்தில் ஏதோ சொன்னான். அதை விடு...''

''அதில்லைம்மா. நீயே சொல்லு என்று கடைசியில் சொன்னீங்களே! அது...'' என்று அவள் தயக்கத்துடன் நினைவு படுத்த, ''அதுவா...? என்னை தைரியமா பேச சொன்னான். நம்ம ரெண்டு பேரையும் சென்னைக்கு நாளைக்கு வேலையை முடிச்சுட்டு வர சொன்னான். புதன் வியாழனில் ஒரு நாள் போக முடியுதா என்று பார்ப்போம்...'' என்று சொல்ல அவரை ஆச்சரியமாக பார்த்தாள் நிர்மலா. சத்யாவின் வார்த்தைக்கு இவரிடம் எவ்வளவு மரியாதை?

''சரி கிளம்பிட்டாயா? பாட்டிலில் மோர் ஊத்தி வச்சு இருந்தேனே? எடுத்து கொண்டாயா? சாப்பிடற நேரத்தில் வெளியே எப்படி போவது என்று யோசிச்சிட்டு



வயிற்றை காயப் போடாதே'' என்று சொல்ல, 'சரிம்மா...' என்று ஒப்புதல் அளித்தாள்.

அடுத்த நாள் முழுவதும் மாமியார் மருமகள் இருவரும் சேர்ந்து நின்று, சிவில் வேலைகள் செய்ய வந்த காண்ட்ராக்டரை, இந்த பக்கம் தடுப்பு சுவர், மூன்றடி உயரத்தில் இருந்தால் போதும். இந்த பக்கம் மாற தடுப்பு வைங்க, இந்த பக்கம் முழுவதும், சிமெண்ட் ஸ்லாப் மூடி இல்லாமல் வைத்து விடலாம். இந்த பக்கம், அலமாரி மாதிரி மர கதவுகளுடன் வைங்க. இங்கே ஜன்னல். தரை இப்படி இருக்க வேண்டும். இங்கே மின்விளக்கு மின் விசிறி வசதிகள் செய்யணும்...'' என்று பயிற்சி நடத்தபடும் கூடம் எப்படி இருக்க வேண்டும் என்று விதம் விதமான யோசனைகளை சொல்லி திணறடித்தார்கள்.

பிற்பகலில் நாற்காலிகள் மற்றும் மேஜைகள் செய்ய வந்தவரையும், அளவு, கோணம், மேற்பரப்பு, வழவழப்பாக இருக்க வேண்டும், என்று விதம் விதமாக தகுதிகள் விளக்கியும், விலையில் தள்ளுபடி கோரியும் பேசி காரியம் சாதித்தார்கள்.

தொடர்ச்சியாக, பொருட்கள் வாங்கவும், வங்கியில் இருந்து பணம் எடுத்து கொடுக்கவும் ஒரு நாளை செலவு செய்தவர்கள், அடுத்த நாள், சத்யாவிடம் சொன்ன மாதிரி சென்னைக்கு புறப்பட்டு சென்றார்கள்.

* * *

மங்கை அம்மாவின் வார்த்தைகள் சத்யாவின் மனதில் ரீங்காரமிட்டது. 'நீ வர போறது என் வீட்டிற்கு. உன்னை வர சொல்வது நான். பேசறவங்க யாரும் அவங்க சொத்தை உனக்கு எழுதி தர போவதில்லை. செலவு

செய்து என் சொந்த சம்பாத்தியத்தில்' என்ற வார்த்தைகள் அவனை விடாமல் தொந்தரவு செய்ய அவன் வக்கீலை தேடி போனான். வக்கீலுடன பேசியதில் அவனுக்கு சாதகமாக எதுவும் கிடைக்கவில்லை.

''பொதுவாக குழந்தைகளை தத்தெடுப்பது தான் நடக்கும். அதிலும் விபரம் அறியாத போது செய்தால் குழந்தை புது இடத்தில் நன்றாக பொருந்தி வாழும் என்று சொல்வாங்க. நீங்க புதுசா அம்மாவை தத்தெடுக்கிறேன் என்று சொல்றீங்க?'' என்ற கேள்வி எழுந்தது.

''உங்க கருத்தை சொல்லாதீங்க சட்டம் என்ன சொல்லுது என்று சொல்லுங்க'' என்ற சத்யாவின் கேள்வியும், அந்த கடினமாக குரலுமே அவரின் கேலியை கை விட்டு சீரியஸாக தேட வைத்தது.

''சட்டத்தை பொறுத்த வரையில், பெரியவர்கள் தான் வயதில் சிறியவர்களை தத்தெடுத்து கொள்ள முடியும். அதனால் நீங்க அவங்களை தத்தெடுக்கும் பேச்சுக்கு வழி இல்லை. வேண்டும் என்றால், அவர் சம்மதித்தால் அவர் உங்களை தத்தெடுத்து கொள்ளலாம். அதற்கு சில வழிமுறைகள் இருக்கிறது. அதற்கு மணமானவர்களாக இருந்தால் கணவன் அல்லது மனைவியின் சம்மதம் தேவை. உங்களுக்கு மணமாகவில்லை என்பதால் அந்த பிரச்னை இல்லை. அவர்கள் கணவன் உயிரோடு இல்லை. நீங்க அவரிடம் பேசி விட்டு சொல்லுங்க...'' என்று முடிக்க அவன் யோசனையோடு அமர்ந்திருந்தான்.

''இன்னும் ஏதாவது கேள்விகள் இருக்கா மிஸ்டர் சத்யா?''



''அவருக்கு சில பல சொத்துக்கள் இருக்கிறது அதை நான் அபகரிக்க தான் இந்த மாதிரி செய்கிறேன் என்று பிறர் குற்றம் சாட்ட வாய்ப்பு இருக்கிறது. உண்மையில் எனக்கு அது தேவை இல்லை. அதை எப்படி தவிர்ப்பது?'' என்று விசாரிக்க, அவர் புன்னகை செய்தார்.

''அவருக்கு விருப்பமும் சம்மதமும் இருந்தால், அந்த சொத்துக்களை அவருக்கு பிடித்த வேறு யாருக்காவது முன்னதாகவே எழுதி வைக்க சொல்லலாம்'' என்று சொல்ல அவன் தலை அசைத்து விட்டு எழுந்தான்.

# 17

சத்யாவின் அழைப்பினை ஏற்று, வியாழன் அன்று சென்னைக்கு போகலாம் என்று முடிவு செய்த பிறகு, ''நீயும் வா நிர்மலா' என்று மங்கையர்க்கரசி அழைக்க அவள் தயங்கினாள்.

''நீங்க போயிட்டு வாங்கம்மா. நீங்க அங்கே சுத்தி பார்க்க போறீங்க. அங்கே எனக்கு வேலை எதுவும் இல்லையே?''

''இப்ப எனக்கு ஊர் சுத்தி பார்க்கும் வயசா? வசுந்தரா சென்னைக்கு வா என்று இருவரையும் தானே கூப்பிட்டாள். இந்த ஒரு வருஷத்தில் நீ வெளியே கிளம்பிய நாட்களை விரல் விட்டு எண்ணி விடலாம். நீ சென்னையில் வேறு எங்கும் வரவில்லை என்றாலும் பரவாயில்லை, வசு வீட்டுக்கு போயிட்டு வரலாம்'' என்று

செய்து என் சொந்த சம்பாத்தியத்தில்' என்ற வார்த்தைகள் அவனை விடாமல் தொந்தரவு செய்ய அவன் வக்கீலை தேடி போனான். வக்கீலுடன பேசியதில் அவனுக்கு சாதகமாக எதுவும் கிடைக்கவில்லை.

''பொதுவாக குழந்தைகளை தத்தெடுப்பது தான் நடக்கும். அதிலும் விபரம் அறியாத போது செய்தால் குழந்தை புது இடத்தில் நன்றாக பொருந்தி வாழும் என்று சொல்வாங்க. நீங்க புதுசா அம்மாவை தத்தெடுக்கிறேன் என்று சொல்றீங்க?'' என்ற கேள்வி எழுந்தது.

''உங்க கருத்தை சொல்லாதீங்க சட்டம் என்ன சொல்லுது என்று சொல்லுங்க'' என்ற சத்யாவின் கேள்வியும், அந்த கடினமாக குரலுமே அவரின் கேலியை கை விட்டு சீரியசாக தேட வைத்தது.

''சட்டத்தை பொறுத்த வரையில், பெரியவர்கள் தான் வயதில் சிறியவர்களை தத்தெடுத்து கொள்ள முடியும். அதனால் நீங்க அவங்களை தத்தெடுக்கும் பேச்சுக்கு வழி இல்லை. வேண்டும் என்றால், அவர் சம்மதித்தால் அவர் உங்களை தத்தெடுத்து கொள்ளலாம். அதற்கு சில வழிமுறைகள் இருக்கிறது. அதற்கு மணமானவர்களாக இருந்தால் கணவன் அல்லது மனைவியின் சம்மதம் தேவை. உங்களுக்கு மணமாகவில்லை என்பதால் அந்த பிரச்னை இல்லை. அவர்கள் கணவன் உயிரோடு இல்லை. நீங்க அவரிடம் பேசி விட்டு சொல்லுங்க...'' என்று முடிக்க அவன் யோசனையோடு அமர்ந்திருந்தான்.

''இன்னும் ஏதாவது கேள்விகள் இருக்கா மிஸ்டர் சத்யா?''



''அவருக்கு சில பல சொத்துக்கள் இருக்கிறது அதை நான் அபகரிக்க தான் இந்த மாதிரி செய்கிறேன் என்று பிறர் குற்றம் சாட்ட வாய்ப்பு இருக்கிறது. உண்மையில் எனக்கு அது தேவை இல்லை. அதை எப்படி தவிர்ப்பது?'' என்று விசாரிக்க, அவர் புன்னகை செய்தார்.

''அவருக்கு விருப்பமும் சம்மதமும் இருந்தால், அந்த சொத்துக்களை அவருக்கு பிடித்த வேறு யாருக்காவது முன்னதாகவே எழுதி வைக்க சொல்லலாம்'' என்று சொல்ல அவன் தலை அசைத்து விட்டு எழுந்தான்.

# 17

சத்யாவின் அழைப்பினை ஏற்று, வியாழன் அன்று சென்னைக்கு போகலாம் என்று முடிவு செய்த பிறகு, "நீயும் வா நிர்மலா" என்று மங்கையர்க்கரசி அழைக்க அவள் தயங்கினாள்.

''நீங்க போயிட்டு வாங்கம்மா. நீங்க அங்கே சுத்தி பார்க்க போறீங்க. அங்கே எனக்கு வேலை எதுவும் இல்லையே?''

''இப்ப எனக்கு ஊர் சுத்தி பார்க்கும் வயசா? வசுந்தரா சென்னைக்கு வா என்று இருவரையும் தானே கூப்பிட்டாள். இந்த ஒரு வருஷத்தில் நீ வெளியே கிளம்பிய நாட்களை விரல் விட்டு எண்ணி விடலாம். நீ சென்னையில் வேறு எங்கும் வரவில்லை என்றாலும் பரவாயில்லை, வசு வீட்டுக்கு போயிட்டு வரலாம்'' என்று

முடித்த கையோடு, வசுந்தராவுக்கும் போன் பண்ணி தகவல் சொல்லி விட்டார்.

''வசு, இன்று காலை உணவுக்கு பிறகு நானும் நிர்ம லாவும் சென்னை வருகிறோம். பதினோரு மணி அளவில் வந்த சேருவோம் என்று நினைக்கிறேன். கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து உங்க வீட்டுக்கு எப்படி வரணும் என்று சொல்லி அட்ரசையும் தந்து விடு...'' என்று சொன்ன மங்கையர்க்கரசியை அவசரமாக இடை யிட்டாள் வசு.

''நிர்மலா எங்க வீட்டுக்கு கிளம்பிய பிறகு அட்ரஸ் தருவதா? நானே நேரில் வந்து கூட்டிட்டு போகிறேன்'' என்று சொன்னவள், சொன்ன நேரத்திற்கு ஒரு கால் டாக்சியோடு, சத்யாவுடன் பேருந்து நிலையத்தில் நின்று இருந்தாள்.

''ஹேய் சத்யா நீயும் வந்து விட்டாயா? நீ எங்கேயோ போகணும் என்று சொன்னாயே...?'' என்று ஆச்சரியமாக கேட்டார் மங்கை.

''முதலில் நான் மட்டும் முன்னால் அங்கே போகலாம் என்று நினைத்தேன். அப்புறம், உங்களையும் அழைத்து கொண்டே போகலாம் என்று முடிவு பண்ணி பிரசன் னாவை அனுப்பி விட்டேன். எனக்காக என்னுடன் இரண்டு மணி நேரம் செலவு பண்ண மாட்டீங்களா என்ன?'' என்று சத்யா கேட்க மங்கை அவசரமாக தலை அசைத் தார்.

''கட்டாயம், நீ சொல்லி தானே சென்னைக்கே வந்து இருக்கோம்...'' என்று மங்கை சொல்ல வசுந்தரா அக் காவை முறைத்தாள்.



''நான் கூட என்னை பார்க்கணும் என்று தேடி வந்து விட்டாயாக்கும் என்று நினைத்து விட்டேன். என் புத்தியை...'' என்று கோபத்துடன் புலம்ப, நிர்மலா கைப்பையில் இருந்து, வீட்டில் செய்து எடுத்து வந்த தேங்காய் பர்பியை நீட்ட அவளின் கோபம் காணாமல் போனது.

''எங்கே போகிறோம் சத்யா சார்? நான் நிர்மலா வோடு போனில் பேசி கொண்டு இருக்கும்போது பிர சன்னா ஏதோ சொன்னார். அதை நான் சரியா கவனிக் கலை'' என்று விசாரித்தாள் வசு.

''இன்னிக்கு எனக்கு பிறந்த நாள்...'' என்று சத்யா ஆரம்பித்த உடனேயே, 'இதுக்கு தான் நேற்று காலை யில் உங்களுக்கும் அவருக்கும் ஒரே மாதிரி ஒரு டீஷர்ட் எடுத்துட்டு வந்து கொடுத்தாரா? காரணத்தை சொல்லி இருந்தால் நான் ஸ்வீட் பண்ணி இருப்பேன் இல்ல. வரட்டும் பிரசன்னா...' என்று வசுந்தரா பல்லை கடித் தாள்.

''அவர் சொல்லல என்று எப்படி சொல்கிறாய் வசு. அவர் சொல்லி நீ கவனிக்காமல் கூட இருந்து இருக் கலாம்...'' என்று நிர்மலா சொல்ல, ''பிறந்த நாள் அன் னிக்காவது நல்ல சாப்பாடு சாப்பிடட்டும் என்று தான் சொல்லாமல் விட்டு இருப்பார் வசு'' என்று அவளுக்கு பதில் சொன்ன மங்கை, சத்யாவிடம், 'முன்னாடியே சொல்லி இருந்தால் உன்னை வீட்டுக்கு வரச் சொல்லி ஒரு விருந்து பண்ண சொல்லி இருப்பேனே?'' என்று சொன்னார்.

சத்யாவிடம் இருந்து பதில் இல்லை. நிர்மலா சத் யாவை பார்த்தாள். அவன் முகத்தில் வருத்தம் இருந்தது.

''என்ன சத்யா சார், பிறந்த நாள் வாழ்த்துக்கள் சொல்ல மூன்று பேர் வந்து இருக்கோம்! சந்தோஷத்தையே காணோமே?'' என்று விசாரித்தாள்.

''என் பிறந்த நாள் யாருக்கும் தெரியாது. ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்த நாள் தான் ஆசிரம பதிவேடுகளில் என் பிறந்த நாளாக இருக்கிறது. பிறந்த நாள் இது இல்லை என்பது தெரியும். இன்றோடு நான் ஆசிரமத்தில் சேர்ந்து இருபத்தி ஏழு ஆண்டுகள் ஆகி விட்டது...''

''ப்ச்! என்ன சார் நீங்க பழைய ப்ளாஷ் பேக் சொல்லி செண்டிமெண்டலா ஆக்காதீங்க. உங்க பிறந்த நாளைக்கு என்ன ஸ்பெஷல் ட்ரீட் சொல்லுங்க...'' என்று வசுந்தரா அழுத்தமான சூழ்நிலையை மாற்ற கேட்டாள்.

''தாம்பரம் போகும் வரை அரை மணி நேரம் பொறுக்க வேண்டும்'' என்று சத்யா வேண்டுகோள் வைக்க ''சோழன் நகரா போகிறோம்?'' என்று தன்னை அறியாமல் வேகமாக நிர்மலா கேட்க மங்கையர்க்கரசி, வசுந்தரா இருவருமே வியப்புடன் அவளை திரும்பிப் பார்த்தனர்.

''எங்கே போகிறோம் என்று உனக்கு எப்படி தெரியும் நிம்மி?'' என்று வசுந்தரா கேட்க அவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''சென்னையில் நான் போய் இருக்கும் ஒரே இடம், அது தான். தாம்பரம் என்று சொன்ன உடன் அதான் ஞாபகம் வந்தது...''

''உங்களுக்கு சோழன் நகர் பழக்கமா சார்?'' என்று கேட்க நிர்மலாவும் சத்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்து சின்ன புன்முறுவலை பரிமாறி கொண்டனர்.

''அங்கே அஞ்சு வருஷம் நான் இருந்தேன் வசுந்தரா...''

''அஞ்சு வருஷமா? சேலையூரில் ஆசிரமத்தில் தானே இருந்ததா பிரசன்னா சொன்னார். அப்புறம் காலேஜில் படிக்கும் போது தனியா ஒரு வீட்டில் இருந்தீங்க என்று சொன்னார்...''



''தனியா இருந்தேன் என்று பிரசன்னா சொன்ன வீடு சோழன் நகரில் இருந்தது'' என்று ஒரு பெருமூச்சை வெளியேற்றி சொன்னான் சத்யா.

''அடேங்கப்பா பெருமூச்சு பலமா வருவதை பார்த்தால் அங்கே மலரும் நினைவுகள் நிறைய இருக்கு என்று சொல்லுங்க...'' என்று சொல்ல, நிர்மலா அதட்டினாள்.

''சும்மா எல்லாவற்றையும் கேலி செய்து சிரிக்கக் கூடாது வசு. சும்மா இரு...'' என்ற நிர்மலாவின் அதட்டலை வசுந்தரா பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

''எப்ப பார்த்தாலும் இதை சொன்னால் தப்பாகிடுமோ, அதை தொட்டால் வீணாகிடுமோ, என்று பயந்து நீ பொழுதை கழித்தது போதும். நடப்பது நடந்தே தீரும். அதை நீ புரிஞ்சுக்கோ. வாழ்க்கையை அதன் போக்கில் இலகுவா எடுக்க நீ முதலில் கற்று கொள்...'' என்று அவளுக்கே அட்வைஸ் செய்ய சத்யா புன்னகை செய்தான்.

சோழன் நகரில் வாடகை கார் நுழைந்த போது கலவையான உணர்வுகளுடன் சத்யாவும் நிர்மலாவும் இருந்தனர்.

''ஆறு வருஷத்தில் இங்கே எத்தனை மாற்றங்கள் பார்த்தாயா நிம்மி? நீங்க எப்ப கடைசியா இங்கே வந்தீங்க சத்யா சார்? அப்போ தனி வீடுகள் தான் இருந்தது. இப்போ முக்கால் வாசி அடுக்கு மாடி குடியிருப்புகளாகி விட்டது அத்தை...'' என்று மாறி மாறி பேசி கொண்டு வந்த வசுந்தராவின் குரல் மட்டுமே காரில் ஒலித்து கொண்டு இருந்ததை, அவள் உணரவே இல்லை.

''ஹேய் நிம்மி! உனக்கு இந்த இடம் ஞாபகம் இருக்கா? செல்வராஜ் மாமா வீடு இங்கே தான் இருந்தது.

அங்கே தீபாவளிக்கு ஒரு தடவை வந்து மாமா பசங்க ளோடு சேர்ந்து செம கலாட்டா செய்தோமே. நினை விருக்கா?'' என்று கேலியாக கேட்டவள், அவளின் பதிலை எதிர்பாராமலேயே, மங்கையிடம் விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்.

''அத்தை உங்க மருமகள் ரொம்ப சாஃப்ட் என்று பீற்றி கொள்வீங்களே! நிஜத்தில் அப்படி எல்லாம் கிடையாது. இந்த தெருவில் குச்சி எடுத்துட்டு என்னை அடிப்பதற்கு ஓட ஓட விரட்டி இருக்கா தெரியுமா?'' என்று அவர் களின் மாமா வீடு இருந்த தெரு முனையை கடக்கும் போது வசுந்தரா உற்சாகமாக விவரிக்க, சத்யா நிர்மலா இருவரும் மோன நிலைக்கு போக, அவர்கள் இருவரை யும் மாறி மாறி பார்த்தார் மங்கையர்க்கரசி. சத்யா வசுந் தரா திருமணத்தில் சொன்ன, 'உங்க அக்கா உன்னை சாத்தியதில் தப்பே இல்லை' என்ற வாசகம் நினைவுக்கு வந்தது.

''அவள் குச்சி எடுத்துட்டு விரட்டுற அளவுக்கு நீ என்ன குறும்புத்தனம் செய்தாய்? அதை சொல்லு...'' என்று மங்கை மடக்க அவள் சிரித்தாள்.

''அதெல்லாம் கேட்க கூடாது அத்தை. அது டாப் சீக்ரெட்...'' என்று சிரித்தபடி சொல்ல, ''அது என்னவா இருக்கும் என்று நான் சொல்லட்டுமா வசுந்தரா...?'' என்று சத்யா விசாரித்தான்.

''அது எப்படி உங்களுக்கு தெரியும்...?''

''உன்னை மாதிரி பசங்க தீபாவளி அன்று என்ன செய்வாங்க என்று கண்டு பிடிப்பது ரொம்ப ரகசியமா என்ன? எனக்கு தெரியும்...'' என்று நம்பிக்கையோடு



சொன்ன சத்யாவை நிர்மலா புன்னகையோடு பார்க்க, மங்கை வியப்புடன் திரும்பினார். சத்யா அவளுக்கு பதில் சொல்வதற்கு முன்பாகவே பிரசன்னாவும் ஆசிரம நிர்வாகியும் அவர்களை வரவேற்க உள்ளே இருந்து வந்தனர்.

''வாங்க வாங்க பசங்களுக்கு சாப்பாட்டு நேரம் தாண்டுதே! இரண்டு மணிக்கு திரும்ப பள்ளிக்கு போக வேண்டுமே என்று நினைத்தேன். கரெக்டான நேரத் திற்கு வந்துட்டீங்க'' என்று வரவேற்ற நிர்வாகியின் கால்களில் பணிந்து எழுந்தான் சத்யா. 'இது என் பழக்கம்' என்று அவன் சொன்னது பொய் அல்ல என்பது தெரிந்து இருந்தாலும், அவன் மேல் மங்கைக்கும் நிர்மலாவுக்கும் அன்பு கூடியது.

''ஆயுசோடு ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்க ஆண்டவன் அருள் புரியட்டும்'' என்று வாழ்ந்த பிரசன்னாவிடம் வசுந்தரா, தன்னிடம் சத்யாவின் பிறந்த நாள் என்று ஏன் சொல்லவில்லை என்று சண்டை போட்டு கொண்டு இருந்தாள்.

'குழந்தைகள் மீண்டும் பள்ளிக்கு செல்ல வேண் டும்', என்ற ஆசிரம நிர்வாகியின் ஒற்றை வாக்கியத்தில், ஐவரும் மற்ற எல்லா விஷயங்களையும் ஒதுக்கி வைத்து விட்டு, ''இதோ சாப்பாடு பரிமாற வந்துட்டோம்...'' என்று ஒரே குரலில் சொல்லி உள்ளே சென்றனர்.

''நிர்மலா, நீ குனிந்து நிமிர்ந்து இப்போ வேலை செய்ய வேண்டாம். ஒரே இடமா இருந்து எல்லா ஐட்ட மும் எடுத்து கொடு. எல்லோருமே பரிமாறும் அளவுக்கு இடமும் இல்லை. தேவையும் இல்லை என்று மங்கை யர்க்கரசி நிறுத்தினார்.

அவள் ஒரு ஓரமாக இருந்து உணவு பொருட்களை பெரியதில் இருந்து சின்ன பாத்திரங்களில் எடுத்து கொண்டு இருந்ததாலேயே 'அய்யா, நீங்களும் குழந்தைகளோடு உட்காருங்க. நீங்க இப்போ என்ன சாப்பிடுறீங்க என்று யாருக்குமே தெரியலை...' என்று நிர்வாகியை உணவுக்கு அமர வைத்தது.

'டேய் பசங்களா, அடுத்த வருஷம், லீவுக்கு நான் சென்னை வரும் போது, பத்தாவது பொது தேர்வில, நானூறுக்கு மேல் மதிப்பெண் எடுக்குற எல்லோருக்கும், வாட்ச் வாங்கி தருவேன்' என்று குழந்தைகளை படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவித்தது.

'காய்கறிகளை வீணாக்கக் கூடாது கண்ணு. அது உடம்புக்கு ரொம்ப நல்லது, அண்ணா மாதிரி பெரிசா ஸ்ட்ராங்கா வர வேண்டாமா?'' என்று சின்ன குழந்தைகளை கொஞ்சியது, என்று பல விஷயங்கள் கண்ணிலும் கருத்திலும் பதிந்தது.

குழந்தைகள் சென்ற பிறகு அவர்களும் உணவுக்கு அமர, ''ஏன் சத்யா, எங்களை சென்னைக்கு வா என்று போகிற போக்கில் சொன்னாயே? உனக்கு பிறந்த நாள் என்று ஒரு வார்த்தை சொன்னால் என்ன குறைந்தா போவாய்? இந்த மூன்று நாளில் ஒரு நாள் வா என்று தானே சொன்னாயே? நாங்க இன்று வந்தது தற்செயலாக தானே? வரா விட்டால் என்ன செய்து இருப்பாய்?'' என்று கேட்டார் மங்கை.

''மூன்று நாளில் நீங்க என்று வருவீங்களோ அன்று விருந்து கொடுத்து இருப்பேன். மூன்று நாளுமே வரவில்லை என்றால் நாளை கொடுத்து இருப்பேன். எது பிறந்த நாள் என்று எனக்கே தெரியாத போது ஒரு நாள் முன்னே பின்னே அதை கொண்டாடுவதில் என்ன வந்து விட போகிறது?''



''இங்கே பாரு, இனிமேல் இந்த மாதிரி எதிலும் படாமல், விரக்தியா பேசறதை நிறுத்திக்கொள். உனக்காக, நாங்க இத்தனை பேர் இருக்கோம். அதை நீ உணர்ந்த மாதிரி தெரியலையே?'' என்று பிரசன்னா அதட்டினான்.

''நல்லா ஞாபகம் இருக்கு பிரசன்னா. இந்த குழந்தைகளுக்கு ஒரு நாள் என் செலவில் உணவளிப்பது தான் விஷயம். அதை நேற்று இன்று நாளை என்று செய்தாலும் பரவாயில்லை. அதனால் பிறந்த நாள் என்று சொல்லலை என்பதை தான் சொல்ல வந்தேன். இந்த இருபத்தி ஏழு வருஷத்தில, நான் ரொம்ப சந்தோஷமா கொண்டாடின பிறந்த நாள் இதுதான்...'' என்று சொல்ல ஒரு சில கணங்கள் அங்கே அமைதி நிலவியது.

''நிர்மலா, நீ வசுந்தராவோடு போய் அவங்க வீட்டில் இரு. நான் இங்கே சேலத்தில் இருப்பது மாதிரி கந்தாஸ்ரமம் இங்கே தாம்பரத்தில் இருக்கு. அங்கே சத்யாவோடு போயிட்டு அங்கே நைட் வந்து உன்னை கூட்டிட்டு காவேரிப்பாக்கம் கிளம்புகிறேன்'' என்று மங்கை சொல்ல சத்யாவை தவிர மற்ற மூவருமே வியப்புடன் பார்த்தார்கள்.

''ஏன் அவளையும் கூட்டிட்டே போகலாமே?'' என்ற கேள்வி அவர்கள் மனதில் எழுந்தாலும், 'தன்னுடன் தனியாக பேச விரும்புகிறார்'. அவனும் அவரிடம் பேச தனிமை தேடிக் கொண்டு இருந்ததால், சத்யாவிற்கு திருப்தியாக இருந்தது.

''பிரசன்னா, நீங்க மூன்று பேரும் காரில் போய்டுங்க. நான் அம்மாவை பைக்கில் கூட்டிட்டு கோவில் போய்

விட்டு வீட்டுக்கு அழைத்து வருகிறேன்'' என்று முடிக்க அவர்களுக்கு வியப்பு கூடியது.

இது சித்தி விநாயகர் சந்நிதி, இது பஞ்சமுக ஆஞ்சநேயர், இது புவனேஸ்வரி அம்மன், இது தாத்ரேயர் சந்நிதி, இது சரபேஸ்வரர், இது சனீஸ்வரர், என்று ஒவ்வொரு சன்னிதியையும் காட்டி, அறிமுகம் செய்து, அது குறித்த சின்ன சின்ன விளக்கங்களை மங்கை சொல்ல கவனமாக கேட்டு கொண்டான்.

தரிசனம் முடித்து, வெளி பிரகாரத்தில் வந்து அமர்ந்த உடனே, ''தனியா ஏதோ பேசணும் என்று தானே அழைத்து வந்தீர்கள்? என்ன விஷயம் சொல்லுங்கம்மா'' என்று விசாரித்தான் சத்யா.

''நான் சொல்றது இருக்கட்டும். நீ சொல்லு, உனக்கு பிரசன்னா கல்யாணத்தில் பார்ப்பதற்கு முன்பே நிர்மலாவை தெரியுமா?'' என்று கேட்க அவன் 'தெரியும்...' என்று ஒற்றை வார்த்தையில் முடித்தான்.

## 18



நிர்மலாவை உனக்கு பிரசன்னா திருமணத்தில் சந்திப்பதற்கு முன்பே தெரியுமா என்ற தன் நேரடி கேள்விக்கு, தயங்காமல், ஒற்றை வார்த்தையில், தன் கண்களை பார்த்து வாக்குமூலம் அளித்த சத்யாவை பார்க்க, மங்கைக்கு சந்தோஷமாக இருந்தது.



''ஓ! அப்படி என்றால் நீ அலங்கார தட்டுக்கு பரிசளிப்பதாக சொன்னது அது நிர்மலா செய்தது என்பதாலா?'' என்று அடுத்த கேள்வியை கேட்க இம்முறை, கணம் கூட தயங்காமல், 'இல்லைம்மா...' என்று ஒற்றை வார்த்தையில் மீண்டும் பதில் சொல்ல அவருக்கு புன்னகை விரிந்தது.

''கேட்கும் கேள்விக்கு எல்லாம் ஒற்றை வார்த்தையில் பதில் சொல்ல போகிறேன் என்று எதுவும் வேண்டுதல் வைத்து இருக்கிறாயா?''

''ஒற்றை வார்த்தையில் நான் சொல்ல நினைப்பதை சொல்ல முடியாது. இங்கே கோவிலுக்கு நீங்க அழைக்கா விட்டால், நானே உங்களிடம் தனியே பேச வேண்டும் என்று நீங்க ஊருக்கு கிளம்புவதற்கு முன்பு அழைத்து இருப்பேன்...'' என்று சத்யா சொல்ல, அவர் புன்னகைத்தார்.

''நீ சென்னைக்கு வா என்று சொல்லும் போதே இதை எதிர்பார்த்தேன். நீ என்னிடம் என்ன பேச வேண்டும் என்று நினைத்தாய்?''

''கூப்பிட்டது நீங்க. முதலில் நீங்க முடிச்சுடுங்க. அப்புறம் நான் பேசுகிறேன்...'' என்று சத்யா வேகமாக மறுக்க, ''நீ சொல்லப் போகும் விஷயத்திலேயே என் சந்தேகங்கள் தீர்ந்து விடலாம் சத்யா..'' என்று அவர் மீண்டும் அவனாக வாயை திறக்க ஊக்கினார்.

''இல்லைம்மா. நான் பேச நினைக்கும் விஷயங்கள் நீங்க எதிர்பார்த்து இருக்க வாய்ப்பே இல்லை. நான் பேச நினைப்பதை பேசாமல் இருக்கப் போவதும் இல்லை. நீங்க கேட்க வேண்டியதை கேட்டுடுங்க...''

''நீயா நானா என்று எல்லா விஷயங்களிலும் போட்டி போட அவசியமில்லை. நானே கேட்கிறேன். நீ எப்போ இங்கிருந்து கிளம்பினாய்? நிர்மலாவை தெரியும் என்றால், இங்கிருந்து கிளம்புவதற்கு முன்பு அவளை ஏன் சந்திக்க முயற்சி செய்யவில்லை? ஒருவேளை சந்தித்து பிரயோஜனம் இல்லையா?'' என்று கேள்விகளை அடுக்க அவன் புன்னகை சிரிப்பாக மாறியது.

''நீங்க கற்பனை பண்ணுகிற அளவுக்கு ஒன்றுமே நடக்கலை. நாங்க பேசி பழகியதே இல்லை. ஒரு தடவை சில நிமிடங்கள் பார்த்து இருக்கிறோம். வசுந்தரா காரில் வரும் போது சொன்ன விஷயம் தான். தீபாவளி பண்டிகை அல்லவா! வசுந்தரா போன்ற வாலு பசங்க நாய் வாலில் பட்டாசு சரத்தை கட்டி கொளுத்தியதில், அது மிரண்டு தாவி குதித்து ஓடி, என் வீட்டு முன்பு போடப்பட்டு இருந்த கூரை வேயப்பட்டு இருந்த பகுதியில் தீ பிடித்து விட்டது. நானும் அப்போது வீட்டில் இல்லை...'' என்று சத்யா சொல்ல கடைசி வாக்கியம் வரை சிரிப்புடன் கேட்டு இருந்தவர், பதறினார்.

''அச்சோ... என்ன ஆச்சு?''

''பயப்படுற மாதிரி ஒன்றும் ஆகலை. அதற்கு காரணம் நிர்மலா தான். அதை நிர்மலாதான் தண்ணீர் ஊற்றி அணைத்து இருக்கிறாள். அது எனக்கு தெரியாமல், நிர்மலா வசுந்தராவை அடிக்கையில் பார்த்து நான் அவளை 'இப்படித்தான் வயது வந்த பெண்ணை நடு ரோட்டில் அடிப்பதா?' என்று மிரட்டி விரட்டினேன்...''

''அட பாவமே! இதை தான் பாவம் ஒரு இடம் பழி ஓரிடம் என்று சொல்வார்கள் போல. ஆனால்



நிர்மலாவிடம் கேட்ட போதும் உன்னை தெரியும் என்று சொன்னாள். சற்று முன்பு நீயும் அவளை தெரியும் என்று யோசிக்காமல் சொன்னாய். ஏன் உனக்கு வசுந்தராவையோ, அவளுக்கு உன்னையோ தெரியலை? வசுவுக்கும் நிர்மலாவுக்கும் அப்படி ஒன்றும் பெரிய வயசு வித்தியாசம் இல்லையே?''

''இதுக்கு என்ன பதில் சொல்வது? உண்மையை சொன்னால் எனக்குமே வசுந்தராவை நினைவில்லை. நிர்மலாவை பார்த்த பின்பு தான் விஷயமே தெரிந்ததே. நான் அவளுடன் பேச ஆரம்பித்த உடனே அவள் அக்காவின் அடியில் இருந்து தப்பித்தேன் பிழைத்தேன் என்று தாவி ஓடி விட்டதால் அவளுக்கு என்னை ஞாபகம் இல்லை...''

''ஆனால் நிர்மலாவின் முகம் பதிந்தது...''

''உண்மை அறியாமல் அவளை கடிந்து கொண்டோமே என்ற குற்ற உணர்வு, அன்றைய பொருளாதார சூழ்நிலையில், வீட்டை காப்பாற்றி தந்து இருக்கிறாளே என்று நன்றி உணர்வு இது இரண்டும் சேர்ந்து நிர்மலாவின் முகத்தை அழுத்தமாக பதிய வைத்து இருக்கலாம்...''

''அதற்கு பிறகு நீ அவளை பார்க்கவே இல்லையா?'' என்று மங்கையர்க்கரசி கேட்க, அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''நான் கூட நிர்மலா என்று தெரிந்ததால் நீ தட்டுக்கு தங்க வளையல் தருவதாக சொன்னாயோ என்று நினைத்து விட்டேன்.''

''இல்லைம்மா. நிர்மலா அந்த தட்டுக்களை செய்தது என்று எனக்கு தெரியாது. அந்த கல்யாணத்திற்கு

வருவதற்கு முன்பே பிரசன்னா, செழியனை பற்றியும், உங்களை பற்றியும் சொல்லி இருந்தான். ரொம்பப் பெருமையாக உணர்ந்தேன். உங்களை பார்ப்பதற்காகவே உங்க வீட்டுக்கு போகணும் என்று சொன்னேன். உங்களை அங்கே கல்யாண வீட்டில் பார்த்த சந்தோஷத்தில், உங்களுக்கு நிறைய செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அதை சொன்னேன். ஆனால் நிர்மலாவை பார்த்த பின்பு அந்த எண்ணம் மாறவில்லை. மேலும் கூடிப் போனது...''

''சத்யா, ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் நல்லதும் கெட்டதுமாக விஷயங்கள் நடந்து கொண்டே இருக்கும். அதை அப்படியே ஏற்று அடுத்து என்ன என்று சிந்திப்பது தான் புத்திசாலித்தனம். வாழ்க்கை என்றால் இரவு பகல், இன்பம் துன்பம், மாறி மாறி வரும் . சொல்லு நீ எப்போ ஊருக்கு கிளம்பணும்? அங்கே உனக்கு...'' என்று ஆரம்பித்து விட்டு தயங்கினார்.

''இன்னும் ஒருவாரம் இருப்பேன். அடுத்த வியாழன் இரவு பத்தரை மணிக்கு தமிழ்நாடு எக்ஸ்ப்ரெசில் கிளம்புகிறேன். அப்பத்தான் சனி இரவு டேராடூன் போய் சேர முடியும். ஞாயிறு ஒரு நாள் ஓய்வு எடுத்தால் திங்கள் பணிக்கு சேரலாம். என்ன விஷயம்மா?''

''கடந்த காலத்தில், உனக்கு யாரும் இல்லை என்று நீ வருத்தப்பட்டு இருக்கலாம். ஆனால், அந்த வருத்தம் இனிமேல் உனக்கு தேவை இல்லை. உனக்கு திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இருந்தால்... நானே உனக்கு'' என்று இன்றும் நேரடியாக எப்படி கேட்பது என்று யோசிக்கும் போது சத்யா இடையிட்டான்.



''கடந்த மூன்று வாரங்களில் சந்தோஷம், சோகம், வெறுமை, நன்றி, பூரிப்பு, என்று பல விதமான உணர்வுகளை அனுபவித்து விட்டேன். எனக்கும் ஒரு குடும்பம் இருக்கு என்ற உணர்வினை ஏற்படுத்தியதில் உங்களுக்கு பெரிய பங்கு இருக்கும்மா. இது கடைசி வரைக்கும் தொடர வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அதனால், எனக்கு திருமணம் வேண்டும் என்று நினைப்பதற்கு முன்பே, அந்த திருமணம் நீங்க பார்த்து நடத்தி வைக்க வேண்டும் என்பதால், உங்களை... என் அம்மாவாக... தத்தெடுக்க ஆசைப் பட்டு வக்கீலை பார்த்தேன்...'' என்று நிறுத்த, மங்கையின் முகத்தில் வியப்பு படர்ந்தது.

''அதுக்கு வக்கீல் எதுக்கு சத்யா? அவர் வந்து பத்திரம் எழுதி கொடுத்தால் தான், அம்மா பிள்ளை என்ற உணர்வு வருமா? சட்டம் ஒருவர் மற்றொருவரிடம் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டாயப் படுத்த முடியுமா? என்ன உளறல் இது?''

''உளறல் இல்லைம்மா. நீங்க எனக்கு அம்மா என்று என்னுடைய அலுவலக பதிவேடுகளில் பதிவு செய்ய அரசாங்கத்துக்கு ஒரு ஆவணம் தேவை. அப்போது தான், என்னுடைய டெத் கம் ரிடயர்மென்ட் கிராஜுட்டி...'' என்று சொல்லும் முன்பே, ''சத்யா...'' என்ற மங்கையின் அதட்டல் அவன் பேச்சை நிறுத்தியது.

''என்ன பேசறடா நீ? ஏற்கனவே இப்ப தான் ஒருத்தனை ஒரு மாசத்துக்கு முன்னாடி முழுசா பறிகொடுத்துட்டு நிற்கிறேன். அது தெரிந்தும் இப்படி பேசுறியே! உன் வாயில இருந்து வரும் வார்த்தைகளுக்கு தேவதைகள் நின்று ததாஸ்து சொல்லுவாங்க. முட்டாளா நீ?

நம் சிந்தனை மட்டும் இல்லாமல், பேசும் வார்த்தை களும் நல்லதாகவே இருக்கணும் என்று ஏன் சொல் கிறோம் என்று கூட புரியாதா?'' என்று கோபத்துடன் பொரிந்து தள்ளினார்.

'டா' 'அறிவிருக்கா?' 'முட்டாளா நீ?' என்ற கடுமை யான வார்த்தைகளை அவற்றை அவன் மீது பிரயோகிக் கிறோம் என்று உணராமல் பொரிந்து தள்ளிய மங்கையர்க் கரசியை பிரமிப்புடன் பார்த்தான் சத்யா.

''சாரிம்மா. அரசாங்கத்தில் புழக்கத்தில் இருக்கும் 'DCRG' உங்களுக்கு வந்து சேர என்ற வார்த்தையை சொல்ல நினைத்தேன். ஆனால் அதற்கு உங்களிடம் இவ்வளவு பெரிய பாதிப்பு இருக்கும் என்று தெரிய வில்லை. உங்க மனசை காயப்படுத்தும் நோக்கத்துடன் சொல்லவில்லை. எனக்கு பிறகு என்று அரசாங்க பதிவேடுகளில யாருமே இல்லை. அதில் உங்களின் பெயரை சேர்க்க நினைத்தேன். அரசாங்கம் வாய் வார்த் தையை நம்புவதில்லை. அதற்காக வக்கீலை பார்க்க...''

''நல்ல கூத்துடா இது? உனக்கு பிறகு வரும் பணத்தை வாங்க என்னை வாரிசுதாரராக நியமனம் செய்யப் போகிறாயா? ஏண்டா உனக்கு பைத்தியமா? இப்பதானே சொன்னேன்...''

''அம்மா ப்ளீஸ்! என்னை முழுசா பேச விடுங்க. அதில் மரணம் மட்டுமில்லை. ஓய்வு பெறுவதும் சேர்ந்து இருக்கு. எனக்கு பிறகு என்று அர்த்தம் எடுக்க தேவை இல்லை. வாரிசுதாரராக நியமனம் செய்ய அரசுக்கு ஒரு பேப்பர் வேண்டும். அவர் வயதில் பெரியவர்கள் தான் சிறியவர்களை தத்தெடுக்க முடியும் என்று சொல்லி



விட்டார். அதனால் நீங்க என்னை தத்தெடுத்து கொள் வீர்களா என்று கேட்க நினைத்தேன்...'' என்று பேச அவர் சிரித்தார்.

''என்ன சத்யா இதெல்லாம்...? இந்த மாதிரி கோர்ட்டில் செய்ய வேண்டிய சத்திய பிரமாணம் எதுவும் தேவை இல்லாமலே நீ என்னுடைய பிள்ளை என்று உனக்கு நம்பிக்கை வரலையா?''

''நான் முடித்து விடுகிறேன்மா. எனக்கு உங்க பேரிலோ, உங்க முன்னோர்கள் பேரிலோ இருக்கும் எந்த சொத்திலும் பங்கு தேவை இல்லை. இன்னும் சொல்லப் போனால் என் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை எங்க அம்மாவுக்கு நான் தருவேன். அவர்களை என் சம்பாத் தியத்தில் நன்றாக கவனித்து கொள்ள என்னால் முடியும். அதனால் நீங்க உங்க சொத்தை, உங்களுக்கு பிடித்த யாருக்காவது எழுதி வைத்த பிறகு என்னை தத்தெடுத் தால் கூட போதும்...''

''சத்யா நீ என்னதான் படித்து வேலை செய்தாலும் உனக்கு உலக அனுபவம் போதவில்லை. நீ ஏன் இப்படி உங்க சொத்து வேண்டாம் என்று சொல்கிறாய் என்று எனக்கு புரியாமல் இல்லை. ஆனால்...''

''இல்லைம்மா... உங்க சொத்தை நீங்க நிர்மலா பேரிலோ, அல்லது அவங்களுக்கு பிறக்கப் போகும் பேர குழந்தையின் பேரிலோ எழுதி வைத்து விட்டால்...''

''மாற்றி எழுதி வைத்து விட்டால் எல்லா பிரச்னையும் தீர்ந்து விடுமா? நான் நிர்மலாவுக்கு ஒரு நல்ல எதிர் காலத்தை அமைத்து தர வேண்டும் என்ற யோசனை யில் இருக்கிறேன். நாளைக்கு அவளை மணம் செய்ய

விரும்புகிறவன், அந்த சொத்திற்காக வரவிலலை என்று எப்படி நம்புவது...?'' என்று கேட்டபடி அவனை ஆராய்ந்தார்.

''அந்த சொத்து தான் எனக்கு வேண்டாம் என்று இப்பதானேம்மா சொன்னேன்...'' என்று மறுக்க அவர் அவனை பார்த்தார்.

''நீ ஊருக்கு போ. பார்த்து செய்யலாம். என்னை பொறுத்த வரை, நான் உன்னை தத்தெடுப்பதை விட, நீ உனக்கு ஏற்ற ஒரு பெண்ணாக பார்த்து திருமணம் செய்து கொண்டு, அவளை உன்னுடைய வாரிசாக நியமிப்பது தான் சரியாக இருக்கும். நான் யோசிச்சுட்டு திங்கள் அன்று போன் பண்ணுகிறேன்'' என்று முடித்த மங்கையர்க்கரசியின் யோசனை நீண்டது.

## 19



சத்யாவுடன் பேசி விட்டு மருமகளை தேடி வசுந்தரா வீட்டுக்கு வந்த போது மணி ஏழை நெருங்கிக் கொண்டு இருந்தது. 'இன்று இரவு மட்டும் இங்கே தங்கி செல்லலாம் என்று வசுந்தராவும் பிரசன்னாவும் சொன்னதை அவர் ஏற்று கொள்ளவில்லை.

''இல்லைப்பா, வீட்டுல வேலை இருக்கு. விவசாய வேலை போதாது என்று இப்போது கட்டிட வேலையும், தச்சு வேலையும், வேறு சேர்ந்து கொண்டது. இரவு நாங்க காவேரிப்பாக்கம் சேர்ந்து விட வேண்டும்'' என்று



மங்கையர்க்கரசி சொல்ல வேறு வழி இன்றி அவர்களும் ஏற்று கொண்டனர்.

''பிரசன்னா, நான் அவர்களை ஏற்றி விட்டு ஆசிரமம் போய் கொள்கிறேன்'' என்று சத்யா சொல்ல புன்னகையுடன் விட்டு கொடுத்தான்.

''ராத்திரி எந்நேரம் ஆனாலும் போனில் பத்திரமா வந்து சேர்ந்து விட்டோம் என்று தகவல் சொல்லிடுங்க. திங்கள் அன்று உங்க போன் அழைப்பிற்காக நான் காத்திருப்பேன்...'' என்று வழி அனுப்பி வைத்தவனை பார்த்து புன்னகை செய்தார்.

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கம்பியில் சாய்ந்து கண்களை மூடி யோசனையில் இருந்த மங்கையர்க்கரசியை பார்த்து, ''தூக்கம் வருதாம்மா...?'' என்று விசாரித்த நிர்மலாவின் வார்த்தைகளில் நான் உங்களிடம் பேச வேண்டும் என்ற செய்தி தொக்கி இருந்தது.

''என்ன விஷயம் நிர்மலா? சொல்லு...''

''சத்யா சார் திங்கள் அன்று பேச சொன்னாங்களே? நம்ம பயிற்சி பள்ளி விஷயமா? இல்ல வேறே ஏதாவது விஷயமா?'' என்ற நிர்மலாவின் குரலில் ஆர்வம் இருந்ததை மங்கையால் உணர முடிந்தது.

''பயிற்சி பள்ளி விஷயம் இல்ல நிர்மலா. அவனுக்கு என்று ஒரு குடும்பம் வேண்டுமாம்..'' என்று முடிக்க அவளின் குறுகுறுப்பு கூடியது.

''குடும்பமா...? அப்படி என்றால் கல்யாணமா...? இவரிடம் ஏன் கேட்க வேண்டும்? மூச்சடைத்தது. அதற்குள் வெளிப்படையாக கேட்டு விட்டானா? இவர்

என்ன சொல்லி இருப்பார்? அவளிடம் இருந்து பேச்சை காணவில்லை என்றதும் திரும்பி பார்த்தார்.

''அவனை நான் தத்தெடுத்து கொள்ள வேண்டுமாம். அவனுடைய அலுவலக பணி பதிவேடுகளில் என்னை அம்மா என்று சொல்ல அவனுக்கு சட்ட ரீதியான பேப்பர் ஒன்று வேண்டுமாம்...'' என்று அவர் சொல்ல புன்னகை மலர்ந்தது.

''ரொம்ப வித்தியாசமா இருக்கு. நீங்க அதுக்கு என்ன சொன்னீங்க?''

''பேப்பர் தான் உறவுகளை தீர்மானம் செய்கிறதா என்று சத்தம் போட்டேன். ஏதோ சமாதானம் சொன்னான். அதை விடு, சத்யாவை பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்க, மூச்சு முட்டினாலும் சமாளித்து சாதாரணமாகவே தொடர்ந்தாள்.

''நான் அவரை பற்றி நினைக்க தனியா என்னம்மா இருக்கிறது? நல்லவர், இளகிய மனம் படைத்தவர், பிறருக்கு உதவி செய்ய காத்திருக்கிறார். வேறென்ன சொல்ல...?'' என்று சொல்லி விட்டு ஒரு ஆழ்ந்த மூச்சை இழுத்தாள். அவள் பேச பேச மங்கையின் மனம் சந்தோஷப்பட்டது. அவனை இவள் கவனிக்கிறாள். காதல் என்று பெயர் சூட்ட முடியாது என்றாலும், ஒரு இணக்கமாக உணர்வு இருப்பதும் அவசியம்.

''நான் என் மனசில் படுவதை சொன்னால் தப்பாக எடுத்து கொள்ள மாட்டீர்களே...?'' என்று கேள்வி தயக்கத்துடன் வந்தது.

''நீ உன் அபிப்ராயம் சொல்லணும் என்பதற்காக தானே கேட்கிறேன். இதுல தப்பா நினைக்க என்ன



இருக்கு. சொல்லு...'' என்று ஊக்க, அவள் அவரை தயக்கத்துடன் பார்த்து, ''இப்ப வேண்டாம். கொஞ்ச நாள் போகட்டும். அப்புறம் சொல்கிறேன் என்று சொல்லிடுங்கம்மா...'' என்று முடித்தாள்.

''ஏன் நிர்மலா...? சொத்தை குறி வைத்து அவன் நம்மை ஏமாற்ற பார்க்கிறான் என்று ஊர் பேசக்கூடும் என்று அவனே சொல்லி, உங்க சொத்தில் எனக்கு பங்கு வேண்டாம். என் சம்பாத்தியத்தில் பங்கு தருகிறேன் என்று தான் சொன்னான். அவன் சொல்வதை மற்றவர்கள் நம்புவதும் நம்பாததும் வேறு விஷயம். உனக்கும் அவன் ஏதோ திட்டத்துடன் வீட்டுக்குள் நுழைகிறான் என்று தோன்றி விட்டதா?''

''இல்லைம்மா ஆனால், யார் என்ன சொன்னால் என்ன? நான் என் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நேர்மையாக செயல்படுகிறேன், என்று ஊரில் உள்ளவர்கள், பேசும் வித்தியாசமான வார்த்தைகளை முழுசா தாங்கி கொள்ளும் பக்குவம் எனக்கு முழுசா வரலைம்மா. அதனால்... கொஞ்ச நாளைக்கு... அவர் சம்பந்தப் பட்ட விஷயங்களை பேசுவதை தள்ளி வைக்கலாமே?'' என்று சொன்னவளின் குரல் தழுதழுத்தது.

''ஹேய் லூசு! வேண்டாம் என்று வார்த்தையா சொன்னால் போதாதா? இதுக்கு ஏன் இப்படி கண் கலங்குற. விடு. உனக்கு எத்தனை தடவை சொல்றது? உனக்கு பிடிக்காத, உனக்கு சம்மதம் இல்லாத எதுவும் நம் வீட்டில் நடக்காது...'' என்று உறுதி அளித்தவர் அதன் பிறகு அதை பற்றிய பேச்சை அவளிடம் எடுக்கவில்லை.

* * *

எட்டு மணிக்கு இருவரையும் பேருந்தில் ஏற்றி விட்ட சத்யா, பதினோரு மணிக்குள் வீட்டுக்கு போய் சேர்ந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்து அழைப்பிற்காக காத்திருந்தான். பதினொன்றரை தாண்டிய பிறகு ஒவ்வொரு நிமிடமும் கடப்பது பெரும் பாடாக இருந்தது. கடிகாரம் ஓடுகிறதா என்று காதில் வைத்து கேட்டான். வினாடி முள் நகர்கிறதா என்று ஆராய்ந்தான். கைகடிகாரத்திலும், மொபைல் போனில் நேரத்தை ஒப்பிட்டு பார்த்தான்.

நேரத்தை நெட்டி பிடித்து தள்ளி, மேலும் பதினைந்து நிமிடங்கள் கடந்த பின்பு வீட்டுக்கு அழைக்கலாம் என்று போனை எடுத்தான். ஒரே ரிங்கில் போன் எடுக்கப்பட, ''அம்மா...'' என்ற அவனின் ஆர்வமும் ஆதங்கமும் கலந்த அந்த குரலில் கரைந்தாள் நிர்மலா.

''நான் நிர்மலா அம்மா வாசலில் ஆட்டோக்கு பணம் கொடுக்கிறாங்க...''

''ஓ! ஏன் இவ்வளவு நேரம்? நான் உங்க அழைப்பை எதிர்பார்த்து காத்திருந்தேன். எதுவும் பிரச்னை இல்லையே?''

''அதெல்லாம் இல்லை சார். வழியில் சாப்பாட்டுக்கு நிறுத்தி விட்டார்கள்'' என்ற போது உள்ளே வந்த மங்கையர்க்கரசி அவள் யாரிடம் பேசக் கூடும் என்று ஊகித்து புன்னகை செய்தார்.

''மணி பனிரெண்டாக போகிறதே? இன்னும் போனை காணோமே என்று பயந்து விட்டேன்...'' என்ற சத்யாவின் குரல் கேட்டு சிரித்தார்.

''இவ்வளவு நேரம் தூங்காமல் காத்திருந்தாயாக்கும்? நாங்க என்ன சின்ன குழந்தைகளா? பத்திரமா



வந்துட்டோம். தூங்கு. காலையில் கூப்பிடுகிறேன்'' என்று போனை வைக்க பெருமூச்சு ஒன்றினை வெளியேற்றினான்.

நாளைக்கே ஒரு மொபைல் போன் வாங்கி அதை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அந்த வினாடியில் முடிவு செய்தான். நினைத்த உடனே போனை வாங்கி மறுநாளே அதனை கூரியரில் அனுப்பி விட்டாலும், அதை தவறாக எடுத்து கொள்வார்களோ என்ற எண்ணம் குடைந்தது.

மூன்றாவது நாள். மங்கையர்க்கரசி அழைக்கிறேன் என்று சொல்லி இருந்த திங்கள் அன்று காலை, பதினோரு மணி அளவில் புதிய மொபைலில் இருந்து அழைப்பு வர அவன் துள்ளி குதித்தான்.

''ஹலோ...'' என்ற சத்யாவின் குரலில் உற்சாகம் கரை புரண்டது.

''சத்யா... எதுக்கு இதெல்லாம் இப்படி அனுப்பி வைக்கிறாய்? நாங்க எங்கே வெளியே போகப் போகிறோம். எங்களுக்கு தேவை இல்லை என்பதால் தானே இத்தனை நாள் வாங்கிக் கொள்ளவில்லை? எதுக்குப்பா வீண் செலவு?'' என்று கடிந்து கொண்டார் மங்கை.

''வியாழன் அன்று இரவு, உங்களின் அழைப்பு வர தாமதமானதில் எனக்கு BP ஏறி விட்டது. அதனால் தான் இதை அனுப்பினேன். அது வீண் செலவு இல்லைம்மா. இத்தனை நாள் வெளியூருக்கு போக உங்களுக்கு தேவை வரவில்லை. அதனால் போனின் தேவை எழவில்லை. இனிமேலும் அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியுமா? நிர்மலாவுக்கு... வெளியே போக

வேண்டிய தேவை வந்தாலும் எடுத்து போகலாமே?'' என்று சமாதானம் சொன்னான்.

''கரெக்ட். அதை தான் நானும் நினைத்தேன். நிர்மலாவுக்கு பயன்படும் என்று தான் வைத்து கொண்டேன். என்ன விலை சத்யா?''

''பயன்படுத்த எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மிக எளிமையான மாடல் வாங்கினேன். விலை குறைவு தான்...'' என்று பொதுவாக சொன்னவன், மங்கை மூன்று முறை விசாரித்த பின்பும் விலையை பற்றி மூச்சே விடவில்லை.

''இந்த அலைபேசி எண்ணை வங்கியில் கொடுத்து விட்டால், உங்கள் கணக்கிற்கு வந்து சேரும், எடுக்கப்படும் தொகை குறித்த விபரங்கள், உங்களுக்கு மொபைலிலேயே வந்து சேர ஏற்பாடு செய்து கொள்ளலாம்...'' என்று ஒரு முறையும், ''கட்டிட வேலையும் தச்சு வேலையும் முடிந்து விட்டால், இன்னும் ஒரு மாதத்தில் பயிற்சி மையத்தை பதிவு பண்ணி விடலாம்'' என்று ஒரு முறையும், ''திங்கள் அன்று பேசுகிறேன் என்று சொன்ன விஷயம் குறித்து ஒன்றும் சொல்லவில்லையே'' என்று ஒரு முறையும் பேச்சை மாற்றினான்.

''விலையை சொல்ல முடியாது என்று நேரில் சொல்ல வேண்டியது தானே? எதற்கு இப்படி சுற்றி வளைக்கிறாய்? நீ விலையை சொல்லும் வரை நானும் உன் கேள்விக்கு பதில் சொல்வதை தள்ளி வைக்கிறேன்...'' என்று அவர் முடித்த அடுத்த விநாடி, ''மூவாயிரத்துக்கு கொஞ்சம் கூடுதல் அம்மா'' என்று விலையை சொல்ல அவர் சிரித்தார்.



''செழியன் வாங்கி தந்து இருந்தால் நீங்க இந்த கேள்வி கேட்டு இருப்பீங்களா...? அதுக்காக தானே என்னை பையனா ஏற்று கொள்ளுங்க என்று கேட்கிறேன்...''

''யார் வாங்கி வந்து இருந்தாலும் கட்டாயம் கேட்டு இருப்பேன். செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவிற்கும் உரிய பயன் கிடைக்கணும் என்று நினைக்கும் அந்த காலத்து ஆளுப்பா நான். அடுத்த மாடல் மொபைல் வந்து விட்டது என்பதற்காக, கையில் இருப்பதை தூக்கிப் போட மனசு வராது. இந்த போனை வச்சுக்கணும். அவ்வளவு தானே? வச்சுக்கறேன். இந்த மாசம், எனக்கு அது வாங்கி தா, அடுத்த மாசம் இது வாங்கி தா என்று இந்த போனில் இருந்தே, மாசா மாசம் உனக்கு பட்டியல் அனுப்புகிறேன் போதுமா?'' என்று சொன்னதை அருகில் இருந்து கேட்ட நிர்மலாவின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

# 20

திங்கள் அன்று மங்கையர்க்கரசி சத்யாவிடம் பேசும் போது அருகில் இருந்த நிர்மலாவின் மனம் இருதலைக் கொல்லி எறும்பாக தவித்தது.

நள்ளிரவில், தங்களின் பாதுகாப்பான வருகைக்காக விழித்து இருந்தது குழப்பியது. கல்யாண வீட்டில், கேலிக்கு பேசிய பேச்சை கூட காப்பாற்ற வேண்டும்

என்று அவ்வளவு பெரிய பரிசு கொடுத்த நேர்மை. யாரும் சொல்லாமலேயே, சொந்த காசை செலவு பண்ணி, டில்லி வரை சென்று சேர வேண்டிய பணத்தை பெற்று தந்த இளகிய மனம் எடுத்த எடுப்பில் மங்கை அம்மாவுக்கு ட்ராக்டர் ஓட்டி வருகிறேன் என்று உதவ முன் வந்த எளிமை. குழந்தை பற்றிய தகவல் தெரிந்ததும், பண்ணையாட்களுக்கு இனிப்பும் பணமும் கொடுத்து கொண்டாடிய இனிய குணம்.

வசதியான நிலைக்கு வந்த பிறகும் வளர்ந்த இடத்தை மறந்து விடாமல், அங்கே வளரும் குழந்தைகளுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும் நன்றி உணர்வு. தனக்கு என்று இறைவன் எத்தனையோ கொடுத்து இருந்தாலும், இல்லாத ஒன்றை நினைத்து ஏங்கி 'எனக்கு ஏன் இந்த நிலைமை?' என்று ஆண்டவனை குறை சொல்லும் மனிதர்கள் மத்தியில், இருப்பதை கொண்டு நிறைவாக வாழ வேண்டும் என்ற நம்பிக்கை.

அவனின் நல்ல குணங்கள் எல்லாம் கண் முன்னே அணிவகுத்து நிற்க, ஏற்கனவே அவளை வாட்டிய குற்ற உணர்வு, அடுத்த இரண்டு தினங்கள் கழித்து அவன் ஊருக்கு கிளம்ப வேண்டிய நாளான வியாழன் அன்று விடை பெற நேரில் வந்து நின்ற போது அவளை மொத்தமாக கொன்று தின்றது.

சத்யா வீட்டுக்கு வந்த போது, வங்கிக்கு பணம் எடுக்க மங்கை சென்று இருந்தார். முன்புற ஹாலை பயிற்சி கூடமாக மாற்றும் வேலைகள் நடந்து கொண்டு இருக்க அதை மேற்பார்வை இட்டபடி, நின்ற நிர்மலா, வாசலில் வந்து நின்ற சத்யாவை பார்த்து திகைத்தாள்.



''வாங்க... வாங்க... நீங்க வருவதா போனில் கூட சொல்லலையே?'' என்று வரவேற்ற நிர்மலாவின் குரலில், சத்யாவின் முகத்தில் ஆனந்தம் பரவியது.

''உள்ளே வாங்க...'' என்று வரவேற்றபடி உள்ளே சென்றவளை, ''வேலை வேகமா நடக்கிறது போல...'' என்று பின் தொடர்ந்தான்.

''நீங்க கொடுத்த ஊக்கம் தான். சாப்பிட்டீங்களா?''

''சாப்பிட்டு விட்டேன் நிர்மலா. அம்மா இல்லையா?'' என்று அவளை தடுத்து நிறுத்தியபடி விசாரித்தான்.

''அம்மா பேங்குக்கு போய் இருக்காங்க. வரும் நேரம் தான். காபி குடிக்கலாமே?'' என்று அவள் இயல்பாக சொன்னபடி உள்ளே போக, ''பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் இருக்கும் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் தானே?'' என்று அவன் அவசரமாக எழுந்தான். தனியாக இங்கே இருக்க விரும்பவில்லை என்பது புரிந்ததாலேயே மதிப்பு கூடியது.

வாசலில் வந்து நின்ற ஆட்டோவில் இருந்து இறங்கி, "வா சத்யா. பேங்க்கில் இருந்து வெளியே வரும்போது, நீ பழங்கள் வாங்குவதை பார்த்தேன். சாலையை கடந்து வருவதற்குள், நீ கவனிக்காமல் ஆட்டோ பிடித்து வந்து விட்டாய். உள்ளே வா...'' என்று சென்றவரை பின் தொடர்ந்தான்.

''நிர்மலா பொன்னாங்கண்ணி கீரை வாங்கினேன். பாசிப் பருப்பு போட்டு கூட்டு வைச்சு, அவரைக்காய் பொரியல் பண்ணிடு. சத்யாக்கு ஏதாவது குடிக்க எடுத்துட்டு வா...'' என்று அவளை அனுப்பியவர், ''ராத்திரி தானே ரயில்? மதியம் சாப்பிட்டுட்டு போகலாம் தானே

சத்யா...'' என்று விசாரித்தபடி சோபாவில் உட்கார சொல்லி அருகே அமர்ந்தார்.

''இதென்னம்மா கேள்வி? அம்மா கையால் கிடைக்கும் அன்பான வீட்டு சாப்பாட்டை யாராவது வேண்டாம் என்று சொல்வாங்களா?''

''அம்மா கையால் அன்பான சாப்பாடு. வசுவிடம் இருந்து நீயும் நல்லா பேச கற்று கொண்டாய் போல. நான் சொன்னதை மதித்து ஊருக்கு கிளம்புவதற்கு முன்னால் நேரில் பார்த்து சொல்லிட்டு போகணும் என்று வந்து விட்டாயா?'' என்று சிரிப்புடன் விசாரித்தார்.

''பேப்பரா அன்பை தீர்மானம் செய்யப் போகிறது என்று கேட்டீங்க? பேப்பர் அரசாங்கத்துக்கு தான் தேவை. எனக்கு இல்லை. அதனால் அந்த பேப்பர் இல்லாமலேயே என்னுடைய அ... ம்... மா... வை... பார்த்துட்டு போகலாம் என்று வந்தேன்...'' என்று சொல்ல புன்னகை செய்தார்.

''நான் நிர்மலாவுடன் பேசினேன். 'பனை மரத்தடியில் நின்று பாலை குடித்தாலும் பார்ப்பவர்கள் தப்பா தானே பேசுவாங்க?'' என்று அவளுக்கு பயம். ஊரார் வார்த்தைகளுக்கு அஞ்சுகிறாள். கொஞ்ச நாள் போகட்டும்...''

''புரியுதும்மா...'' என்று பொதுவில் சொன்னவன் மங்கையின் அருகே உட்கார்ந்து பேசியபடி இரண்டு மணி நேரம் பொழுதை கழித்தான்.

பூசணிக்காய்க்கும், பரங்கி காய்க்கும் உள்ள வித்தியாசத்தை கற்று கொண்டான். போனில், தன்னுடைய அலுவலக தொலைபேசி எண், அலைபேசி எண், தங்கும் விடுதி எண், பிரசன்னா வசுந்தரா இவர்களின்



எண்கள், என எல்லாவற்றையும் பதிந்து, அவற்றை எப்படி இயக்குவது என்று மங்கையர்க்கரசிக்கு கற்று கொடுத்தான்.

''சிம்பிளான சமையல் குறிப்புகள் சாம்பார், ரசம், இந்த மாதிரி வைக்க என்ன செய்யணும் என்று ஒரு நோட்டில் எழுதி கொடுங்க'' என்று நிர்மலாவிடம் வேண்டுகோள் விடுத்தான். இடையில் நடந்த வேலையை பார்த்து தன் அபிப்ராயம் சொன்னான். பயிற்சி நிலையத்தை பதிவு செய்தல் குறித்து இன்டர்நெட் மையம் சென்று பார்வையிட்டு விபரங்கள் சேகரித்து வந்தான்.

''இங்கே இருந்து நேரே ஸ்டேஷன் போக வேண்டும் அம்மா. அதனால் முகம் கழுவி, ட்ரெஸ் மாற்றி கொள்கிறேன்'' என்று பிற்பகல் மூன்றரை மணி அளவில் சத்யா சொல்ல அவனுக்கு முன்பு நிர்மலா இருந்த அறையினை காட்டினார் மங்கை.

சில நிமிடங்களில் தயாராகி, சீருடை அணிந்து அந்த அறையில் இருந்து வெளியே வந்த சத்யாவை, அடுக்களையில் இருந்து காபியுடன் வெளியே வந்த நிர்மலா பார்த்த முதல் வினாடி உறைந்து நின்றாள். அது அவர்களின் அறை. சத்யாவை மிலிட்டரி சீருடையில் இப்போது தான் முதல் முறையாக பார்க்கிறாள். பார்த்த முதல் வினாடி, செழியனின் நினைவு வந்தது.

இரண்டு மாதமா? இல்லை இன்னும் ஆகவில்லை. அந்த தினம் நினைவு வந்தது. அவளின் வாயில் சனி குடி இருந்தாரோ...? என்ன வார்த்தை சொல்லி விட்டாள்! அவளின் வார்த்தை தான் பலித்து விட்டதோ...? நடக்கக் கூடாத அந்த சம்பவம் நிகழ தன்

கோபம் தான் காரணமோ...? கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

சமாளித்து கையில் இருந்த ட்ரேயை சமையல் அறை மேடை மேல் வைத்தவள் அதை ஒட்டி இருந்த பூஜை அறைக்குள் நுழைந்தாள். பெரிய கிருஷ்ணன் பொம் மையை பார்த்தபடி அமர்ந்து இருக்க கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென்று பெருகி வடிந்தது.

* * *

இதே வாசலில், இதே மாதிரி மாலை நேரத்தில், இதே மாதிரி சீருடை அணிந்து ''எதிர்பாராமல் விடுப்பு ரத்தாகி விட்டது நிம்மி'' என்று சொன்னவனிடம் தான் முகம் காட்டியது நினைவில் வந்தது.

''ப்ளீஸ்... நிம்மி... புரிஞ்சுக்கோ. உங்க அப்பா எனக் காக தான் இந்த மூகூர்த்தம் செலெக்ட் பண்ணினாங்க என்று எனக்கும் தெரியும்...''

''தெரிஞ்சுட்டே இப்படி பண்ணினால் நான் என்ன செய்வது? கல்யாண வீட்டில யாராவது உங்களை ஏதா வது குறையா சொன்னால் எனக்கு கஷ்டமா இருக்காதா.''

''யாரும் சொல்வதற்காக நாம வாழ முடியாது நிர் மலா. குறை சொல்றவங்களுக்காக இல்லை. உனக்காக, உன் தங்கைக்காக, கல்யாணத்திற்கு வர முயற்சி செய்கிறேன். நான் ராணுவ வீரன் இல்லையா? கடமை அழைக்கும் போது போகாமல் இருக்க முடியாதே! நாங்க சத்திய பிரமாணம் எடுத்து இருக்கோம் நிர்மலா! நீயே இந்த சர்வீஸ் சேர ஆசைப் பட்டேன் என்று சொல்லி விட்டு இப்படி முகத்தை தூக்கி வைத்து கொண்டால் எப்படி...?'' என்று சமாதானப்படுத்தினான்.



''நீங்க கட்டாயம் வரணும். வரலை என்றால் நானும் போக மாட்டேன். உங்களை குறைவா பேசும் பேச்சை என்னால் கேட்க முடியாது...''

''முயற்சி செய்கிறேன். ஒரு வேளை வர முடியலை என்றால், இந்த செயினை நம்ம பரிசா உன் தங்கைக்கு தந்து விடு. அடுத்த லீவு வரை காத்திருக்காமல், நடுவில் நான் வருகிறேன். நாம் இருவரும் அவர்களை சென்னை யில் போய் பார்க்கலாம். ஓகே?'' என்று ஒரு நகை பெட்டியை திணித்தான்.

''கல்யாணத்திற்கு வரவில்லை என்றால் அப்புறம் நீங்க வரவே வேண்டாம்...'' என்று சொன்ன தன் நாவில் அன்று சனிபகவான் குடி இருந்தாரோ?

* * *

வாசலில் கார் வந்து விட, ''காபி போட சொல்லி பதினஞ்சு நிமிஷம் ஆச்சே? எங்கே நிர்மலாவை காணோம்?'' என்று தேடினார் மங்கை.

''பரவாயில்லைம்மா காபி வேண்டாம். மதிய சாப் பாடே இன்னும் தொண்டையை விட்டு இறங்க வில்லை...'' என்று மறுத்தான் சத்யா.

''அப்ப இஞ்சி சுக்கு தட்டி போட்டு டீ தருகிறேன். நீ வண்டியில் சாமானை ஏற்றி விட்டு வா...'' என்று சொல்லி விட்டு அடுக்களைக்கு சென்றார். அவனின் உடைமைகளை காரில் ஏற்றும் பொழுது, பண்ணையில் வேலை செய்யும் அந்த மூதாட்டி வந்தார்.

''வாசலில் கார் நிக்குதே? என்ன விஷயம் என்று பார்க்க வந்தேன். மிலிட்டரி தம்பியா? எங்க சின்னய் யாவை பார்த்த மாதிரியே இருக்கு ராசா...! பெரியம்மா

கிட்டே சொல்லிட்டு போக வந்தீகளா...?'' என்று கண்கலங்க விசாரித்தவரை வாஞ்சையோடு பார்த்தான்.

''ஆமா பாட்டி, நீங்க எப்படி இருக்கீங்க? எங்க பேரன் பனிரெண்டாவது தானே படிக்கிறான்! நல்லா படிக்க சொல்லுங்க. எஞ்சினியரிங் காலேஜ் சேர்க்க பணம் தேவைப் பட்டால் அம்மாவிடம் சொல்லுங்க. ஏற்பாடு செய்கிறேன்...'' என்று சில நிமிடங்கள் அவரிடம் பேசி விட்டு, உள்ளே வந்தவன் ஹாலில் கண்ட காட்சியை கண்டு உறைந்தான்.

சோபாவில் அமர்ந்து மடியில் படுத்து இருந்த நிர்மலா வின் முதுகை வருடிக் கொண்டு இருந்த மங்கையின் கண்களில் கண்ணீர் இருந்தது.

''அம்மா... என்ன ஆச்சு?'' என்று அதிர்ச்சியான சத்யாவின் குரல் கேட்டதும் எழுந்த நிர்மலா கண்களை துடைத்து கொண்டாள்.

''முகம் கழுவி, சாமி ரூமில் விளக்கேற்று நிர்மலா. நான் டீ போட்டு எடுத்து வருகிறேன்...'' என்று சமாளித்த மங்கை, 'ஒன்றும் இல்லை' என்று ஜாடையில் சத்யா விடம் சொன்னார்.

அவர் ஒன்றும் இல்லை என்றாலும் இவ்வளவு நேரம் நன்றாகவே பேசிக் கொண்டு இருந்த நிர்மலாவிடம் கண்ணீர் வர வேண்டும் என்றால் எதுவோ அவளை பலமாக உலுக்கி இருக்க வேண்டும் என்பது புரிந்தது. என்ன அது என்று யோசித்தபடி தலையை தடவியவ னுக்கு தலையில் இருந்த தொப்பி தட்டுப்பட, விஷயம் விளங்கியது.

அடுத்த சில நிமிடங்கள் அவர்கள் மூவரிடமும் எந்த பேச்சு வார்த்தையும் நிகழவே இல்லை. மௌனமாகவே



சாமி அறையில் வணங்கி, மங்கையின் கால்களில் விழுந்து ஆசீர்வாதமும் பெற்றான்.

''பத்திரமா போயிட்டு வா சத்யா...'' என்று சொல்லி கையில் நூறு ரூபாய் கொடுத்தார். மறுக்காமல் அதை வாங்கி பையில் பத்திரப்படுத்தியவன், ''அம்மா, கொஞ்சம் தண்ணீர் எடுத்துட்டு வரீங்களா?'' என்று கேட்டான்.

மங்கை உள்ளே சென்றதும், ''நிர்மலா...'' என்று அழைத்தவன் குரலும் கம்மியே இருந்ததால் தெளிவாக வரவில்லை. அழைப்பில் பாதி காணாமல் போய், 'நிலா...' என்பது மட்டுமே காதில் விழ அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள்.

'நிலா என்றா சொன்னான்...? இருக்காது ஒரு தரம் செய்த தப்பை மறுபடியும் செய்ய கூடாது நிர்மலா. இந்த முறை வழி அனுப்புவதில் சொதப்பி விடாதே'' என்று தனக்கு தானே அறிவுறுத்தி கொண்டாள்.

''நிர்மலா, இந்த உலகத்தில் நிகழும் பல சம்பவங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகத் தான் இருக்கும். சில விஷயங்களை சீக்கிரம மறக்க முடியாது. ஆனால் அவை நம்முடைய இயல்பு வாழ்க்கையை பாதிக்காத வகையில் பார்த்து கொள்ளலாமே! உங்களை மாதிரியே அவங்களுக்கும் வருத்தம் இருக்கும். நீங்க உற்சாகமா இருந்தால் தான், அம்மாவும் சந்தோஷமா இருப்பாங்க. எதிர்காலத்தை நினைத்து கடந்த காலத்தை தள்ளி வைக்க முயற்சி செய்கிறேன் என்று எனக்கு வாக்கு கொடுப்பீர்களா?'' என்று கேட்டபடி தன் வலது கரத்தை நீட்டினான் சத்யா.

அந்த வார்த்தைகள் மீண்டும் செழியனை நினைவு படுத்த, கண்களில் ஈரம் தோன்றினாலும், ''நிச்சயமா!

நீங்க சொன்னதை நினைவில் வைத்து கொள்கிறேன். பத்திரமா போயிட்டு வாங்க...'' என்று நீட்டிய அவன் கரத்தில் தன் வலது கையை வைத்து அழுத்தியவள் கண்களில் லேசான ஈரம் இருந்தாலும் தெளிவு இருந்தது.

## 21



பிரசன்னாவின் திருமணத்திற்காக டேராடூனில் இருந்து சென்னைக்கு வரும்போது தான் இருந்த மன நிலைக்கும், இப்போது வேலைக்கு திரும்பும் போது இருக்கும் மன நிலைக்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணி பார்த்த சத்யமூர்த்திக்கு சிரிப்பு வந்தது. திருமணம் என்ற ஒன்று தனக்கு நடக்குமா? என்ற கேள்வியுடன் துவங்கிய பயணம், வாழ்க்கை துணையாக வரப் போகும் பெண் யார் என்பதை முடிவு செய்த நிலையில் முடிவுக்கு வந்துள்ளது.

அடுத்த விடுமுறைக்குள், அவளின் மனம் முழுமையாக தேறி விடும் என்று நம்பிக்கை ஒளிக்கீற்று தோன்றியது. சனியன்று இரவு பத்தரை மணி அளவில் வீட்டுக்கு வந்து சேர்ந்ததால், அந்த நேரத்தில் அவர்களை அழைக்கலாமா வேண்டாமா என்று தயங்கி, நம்மை மாதிரியே அவர்களும் காத்திருந்தால் பாவம் இல்லையா? என்ற எண்ணம் தோன்ற, குறுஞ்செய்தியை அனுப்பிய, மூன்றாவது வினாடியில் போன் வந்தது.



''உங்களுக்கு நூறு வயசு சத்யா. உங்க போன் வரும் வரும் என்று அம்மா இவ்வளவு நேரம் இருந்தாங்க. இப்பதான் கிளம்பினாங்க...''

''உங்களை மாதிரி என் நலம் நாடும் ஆட்கள் இருக்கும் போது நூறு வயசு வாழலாம். அம்மா பத்தரை மணிக்கு எங்கே போனாங்க...?'' என்று அவள் தன்னிடம் உற்சாகமாக பேசியதால் வந்த சந்தோஷம், இரவு நேரத்தில் தனியாக அவர் எங்கே சென்று இருக்கக் கூடும் என்ற அக்கறை இரண்டுமே குரலில் ஒலிக்க விசாரித்தான் சத்யா.

''ஆருத்ரா தரிசனம் என்று கோவிலுக்கு கிளம்பினாங்க. நான் கூட போனை எடுத்துட்டு போங்க என்று சொன்னேன். கோவிலுக்கு அங்கே சாமி கும்பிடப் போறேனா போன் பேசப் போறேனா? போன் வந்தால் விஷயம் கேட்டு வை என்று கிளம்பிட்டாங்க. வீட்டுக்கு போயாச்சா?''

''ம்ம்ம்... வந்துட்டேன்...''

''என்ன சத்தம் உள்ளே போகுது...? உடம்பு எதுவும் சரி இல்லையா?'' என்ற நிர்மலாவின் விசாரணை அவனை மேலும் கரைய வைத்தது.

''அதெல்லாம் இல்லை நிர்மலா நல்லா இருக்கிறேன். ஆனால் வீடு என்றால் வெறும் கட்டிடமா? அங்கே அன்பு செலுத்தும் ஆட்கள் அல்லவோ இருக்க வேண்டும்? அதை நினைத்தேன் குரல் தானாக உள்ளே போய் விட்டது...''

''இப்பதானே ஊருக்கு போய் இருக்கீங்க. ரெண்டு மூணு நாள் இந்த மாதிரி இருக்கும். வேலையில் மூழ்கி

விட்டால் வீடே மறந்து விடும்...'' என்று தன் போக்கில் சொல்ல, அவள் செழியனின் நினைவில் சொல்கிறாள். அதை உணரக் கூட இல்லை என்பது உறைக்க, உறைந்து நின்றான் சத்யா.

* * *

ஊருக்கு வந்து சேர்ந்த பிறகு 'அம்மா எப்படி இருக் கிறாங்க?' உங்களுக்கு உடல் நிலை எப்படி இருக்கு என்று நலம் விசாரித்ததோடு, பயிற்சி நிலைய பணி முன்னேற்றம் குறித்து விசாரித்தான். தினம் பேசி தொந் தரவு செய்கிறான் என்ற எண்ணம் தோன்றாத வகையில், தொலைபேசியில் பேசினான்.

அடுத்த ஞாயிறன்று, காலை ஒன்பதரை மணி அள வில் காலை உணவை முடித்து, ''உங்க கையால் சாப் பிட்டு விட்டு இப்ப வெளியே சாப்பிடவே பிடிக்கலை...'' என்ற முனகலுடன ஆரம்பித்தது பேச்சு.

''வெளியே சாப்பிட கஷ்டமா இருந்தால் நீங்களே சமைத்து கொள்ளலாமே?''

''இன்னிக்கு ஒரு நாள் சமைக்கிறன். ஏதாவது சந்தேகம் வந்தால் உங்களை நான் கேட்பேன்...'' என்று வாக்குறுதி பெற்று சமைக்க ஆரம்பித்தவனுக்கு ஆயிரம் சந்தேகங்கள் வந்தது.

அரிசிக்கு எந்த அளவு தண்ணீர் ஊற்ற வேண்டும்? சாம்பாருக்கு எந்த பருப்பு வேக வைக்க வேண்டும்? அந்த பருப்பை எப்படி அடையாளம் காண்பது? குக்கரில் எத்தனை சத்தம் வர வேண்டும்? புளி எவ்வளவு ஊற வைக்க வேண்டும்? காயை வெட்டும் அளவுக்கும் தண்ணீர் வைக்கும் அளவுக்கும் சம்பந்தம் இருக்கா?



உப்பு கூடினால் என்ன செய்ய வேண்டும்? கடுகு கருப்பாகி விட்டால் டேஸ்ட் மாறுமா? என்று சந்தேகங் களின் பட்டியல் முடிவே இல்லாமல் அனுமார் வால் போல நீண்டது. அவ்வப்போது வேலைகள் குறுக்கிடும் போது போனை தற்காலிகமாக வைத்தாலும், சமையல் பாடம் மதியம் பனிரெண்டு மணி வரை நீண்டது.

இரண்டு மணி நேரம் நீண்ட சமையல் பாடத்துடன் தயாரான அந்த எளிமையான சாதம், சாம்பார், பீன்ஸ், பொரியல், அப்பளம் என்று மதிய உணவு. இத்தனை நாட்கள் ஹோட்டலில் சாப்பிட்ட புல் மீல்ஸை விட, நிர்மலா சொல்லி தந்து தானே சமைத்தது என்ற பெருமிதம், அந்த உணவை அமிர்தமாக்கியது. ''ரொம்ப நல்லா இருக்கு நிர்மலா...'' என்று பாராட்ட வைத்து. அவர்களுக்கு இடையே இருந்த மரியாதை பன்மையை காணாமல் போக வைத்தது.

டேராடூன் வந்து சேர்ந்து ஒரு மாதம் முடிந்த நிலை யில், முதல் தேதி அன்று சம்பளம் தன் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட செய்தி கிடைத்ததும், தன் சம்பாத்தியத்தில் நான்கில் ஒரு பங்கினை, கணக்கிட்டு பத்தாயிரம் ரூபாயை மின்னணு கணக்கு மூலம் மங்கையர்க்கரசியின் கணக்கிற்கு மாற்றினான்.

* * *

சத்யமூர்த்தியின் அறிவுரையின் பேரில், தன் வங்கி கணக்கில் நடக்கும் பண பரிவர்த்தனைகளை உடனுக் குடன் எஸ்.எம்.எஸ் மூலம் அலைபேசிக்கு தகவல் கொடுக்க சொல்லி பதிவு பண்ணி வைத்து இருந்தார் மங்கையர்க்கரசி.

அன்று காலை மகளிர் மேம்பாட்டு கழகத்திற்கு சென்று வருகிறேன் என்று கிளம்பிய நிர்மலாவை, ''போனை எடுத்துட்டு போ. ஒரு அவசரம் என்றால் பயன்படுத்த வசதியாக இருக்கும்'' என்று சொல்ல, கையில் போனை எடுத்த வினாடியில் மங்கையின் கணக்கில் பென்ஷன் வரவானது குறித்த செய்தி வந்து சேர, அவளுக்கு வருத்தமும் சந்தோஷமும் ஒரு நேரத்தில் வந்தது.

''என்ன போனை ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்க? இட்லி சூடா இருக்கும் போதே சாப்பிடு. பத்தரை மணி பஸ் பிடிக்க வேண்டாமா?'' என்று கேட்டார்.

அவளிடம் பதிலோ, அசைவோ கூட இல்லை. தோளில் கை வைத்து உலுக்கி, 'நிர்மலா என்ன ஆச்சு?' என்று விசாரித்தார்.

''ஒன்றும் இல்லைம்மா. அக்கவுண்ட்ல முதல் மாச பென்ஷன் க்ரெடிட் ஆனதா செய்தி வந்து இருக்கு'' என்று தலையை உலுக்கி நிகழ்காலத்திற்கு வந்தாள்.

''முன்னாடி சம்பள பணம் வந்தது. இப்ப பென்ஷனா?'' என்று வருத்தத்துடன் முணுமுணுத்தவர், அவளிடம் இருந்து போனை வாங்கி, ஆங்கிலம் படிக்க தெரியாது என்ற போதிலும், செய்தியில் மகன் முகம் தெரிகிற மாதிரி ஆவலுடன் பார்த்து கொண்டு இருக்கும் போதே அடுத்த செய்தி வந்ததாக அலைபேசி சொல்ல, 'திரும்பி ஏதோ வந்து இருக்கு' என்று நீட்டினார்.

''சர்வீஸ் மெசேஜ் நிறைய வருதும்மா' என்று வாங்கி பார்த்தவள் குழம்பினாள்.

இப்பதானே பென்ஷன் வரவு வைத்ததாக தகவல் வந்தது. மீண்டும் பத்தாயிரம் ரூபாய் க்ரெடிட் ஆகி இருக்கே?



''அம்மா... இன்னொரு பத்தாயிரம் ரூபாய்... உங்க கணக்கில் வரவாகி இருப்பதா தகவல் வந்து இருக்கு'' என்று தயக்கத்துடன் சொல்லும் போதே அது எங்கே இருந்து வந்து இருக்கும் என்ற யூகமும் தோன்றியது. அனுப்பியது சத்யாவாக இருக்கக்கூடும்!

''சத்யாவுக்கு போன் போடு, அவன் அனுப்பினானா என்று கேட்போம்...''

''எங்கே இருந்து வந்தது என்று பேங்கில் செக் பண்ணிட்டு பேசலாமேம்மா...? ஒரு வேளை அவர் அனுப்பவில்லை என்றால், நாம் கேட்ட பிறகு... அவர்...'' என்று தயங்கியவளை ஊக்கப் படுத்தினார்.

''செக் பண்ண வேண்டிய அவசியமே இல்லை நிர்மலா. அவன் அன்று 'என்னை தத்தெடுத்துக்கோங்க' என்று கோவிலில் சொன்னது வெறும் வாய் வார்த்தையாக இல்லை. ஆனால்...'' என்று நிறுத்தினார். நீ தயங்கியதால் தான் நான் அவனை ஏற்று கொள்ளவில்லை என்பது ஒரு பக்கம் புரிய, மறுபக்கம், அவன் இவரை முழுமையாக தாய் என்று வரித்து, தன் சம்பளத்தின் ஒரு பகுதியை அனுப்பி இருக்கிறான் என்பதும் அதிர வைத்தது. அவனுடைய மொபைலுக்கு அழைத்த போது அது அணைத்து வைக்கப் பட்டு இருந்தது.

''போன் ஸ்விட்ச் ஆஃப்-ம்மா. ராத்திரி தான் பேச முடியும். அலுவலகத்தில் அனுமதி கிடையாதே...'' என்று அவள் சொல்ல, எந்த அவசர தகவலாக இருந்தாலும், அது உரிய வழி முறை மூலமாக, தனி நபர்களை சென்று சேரும் என்ற ராணுவ நடைமுறை அதன் பிறகே அவருக்கு நினைவில் வந்தது.

''சரிம்மா வேலூர் போய் வருகிறேன்...'' என்று கிளம்பியவள் தான் ஆரம்பிக்கப் போகும் பயிற்சி பள்ளியை பதிவு செய்வது குறித்து வேலைகளை கவனமாக நடத்தினாலும், மறு பாதி மனம், சத்யாவையே சுத்தி சுத்தி வந்தது.

இந்த பணத்தை வேண்டாம் என்று சொன்னாலும் அனுப்பத்தான் போகிறான். வாழ்ந்தாலும் பேசும், தாழ்ந்தாலும் பேசும் என்று வாழ்க்கையை அதன் போக்கில் வசுந்தரா மாதிரி எளிமையாக எடுத்து கொண்டால் என்ன என்ற எண்ணம் தோன்றி வலுவடைய ஆரம்பித்தது. சிந்தனை அந்த நாள் முழுவதும் ஓடிக் கொண்டே இருக்க, அன்றைய இரவு உணவு முடிந்துபடுக்கைக்கு வந்த போது, நிர்மலா ஒரு முடிவிற்கு வந்து இருந்தாள்.

''அம்மா, போன மாசம் தாம்பரத்தில் இருந்த நந்தனார் ஆசிரமத்தில் குழந்தைகளை பார்த்தோமே! அந்த மாதிரி குழந்தைகளுக்காக நம்மால் முடிஞ்சா ஏதாவது உதவி செய்யணும் என்று எனக்கு அப்போது தோன்றியது. என்ன செய்யலாம்மா?''

''ஆதரவற்ற குழந்தைகளை தங்க வைத்த பராமரிப்பது என்பது சிரமமான காரியம். நம்மளை மாதிரி குடும்ப வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களால் சமாளிக்க முடியாத விஷயம்...''

''அவங்களை மாதிரி குழந்தைகளை பராமரிக்க முடியலை என்றாலும் ஏற்கனவே இருக்கும் ஆசிரமங்களுக்கு அதில் இருக்கும் குழந்தைகளுக்கு ஏதாவது உதவி பண்ணலாமே?''

''செய்யலாம். நம் சம்பாத்தியத்தில். ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை இந்த ஆசிரமத்திற்கு ஆண்டுக்கு ஒரு முறை நன்கொடையாக கொடுத்து விடலாம்...''



''நான் இந்த ஆசிரமம் என்று குறிப்பாக சொல்லவில்லை. நன்கொடையாக கொடுப்பதையும் சொல்லவில்லை. இலவசமா கொடுப்பதை விட கை தூக்கி விடுவது மாதிரி இருக்கணும்...''

''கேட்க நல்லா இருக்கு நிர்மலா. எத்தனை ஆசிரமங்கள்? அதில் எத்தனை குழந்தைகள்? அவர்களுக்கு எத்தனை தேவைகள்? இது எல்லாத்தையும் எப்படி நம்மால் நிவர்த்தி செய்ய முடியும் என்று யோசித்தாயா? இதெல்லாம் நிஜத்துல சாத்தியம் ஆகணுமே...?''

''நினைத்தால் முடியும்மா. மனசு தான் வேண்டும். நம் சொத்து, நாம் பெற்ற அல்லது ரத்த சம்பந்தம் உள்ள குழந்தைகளுக்கு மட்டும் என்ற சித்தாந்தத்தை உடைத்து விட்டால் போதும்...'' என்று வேகமாக பேச மங்கையின் முகத்தில் புன்னகை வந்தது.

சத்யாவும் இதே சொத்தினை வேண்டாம் என்று தூக்கி எறிந்தான். இப்போது அதே பாதையில் மருமகளும் சென்று விட்டாளா? காலையில் சத்யா அனுப்பிய பணத்தை பார்த்ததும் அவனை வேண்டாம் என்று சொல்லியது உறுத்தி இருக்க வேண்டும்.

''... எல்லா ஆசிரமங்கள், எல்லா குழந்தைகள் என்று போக வேண்டாம். நம் தேவைக்கு மிஞ்சி இருப்பதை நம்மால் முடிந்த குழந்தைகளுக்கு கொடுக்கலாம்'' என்று சொல்லும் போது அலை பேசி அழைக்க, அது சத்யா என்று தோன்றியது.

காலையில் இவள் மெசேஜ் அனுப்பி இருந்தாள். வேலை முடித்து வந்து அதை பார்த்த உடனே அழைத்து விட்டான். ''சத்யாம்மா...'' என்று போனை நீட்டியவள்

சாரை மறந்து இருந்தாள் என்பதை அப்போது தான் கவனித்த மங்கையின் முகத்தில் புன்னகை வந்தது.

''என்னம்மா இதெல்லாம், உங்க பையன் சம்பளம் வாங்கிய உடனே உங்களுக்கு பணம் அனுப்பினால் இப்படி தான் தேங்க்ஸ் என்று மூன்றாம் மனிதருக்கு சொல்வது மாதிரி மெசேஜ் அனுப்புவீங்களா? நான் இதை கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. ரொம்ப கஷ்டமா இருந்தது...'' என்று சொல்லி விட்டு போனை வைத்து விட மங்கையின் முகத்தில் புன்னகை விரிந்தது.

## 22



சத்யா டோராடூனில் இருந்து அழைத்து இருக்கிறான் என்று சொல்லிப் போனை கொடுத்த பிறகு, ஹலோ மட்டுமே சொன்னவர், தன்னிடம் திருப்பிக் கொடுத்ததும் குழம்பினாள். ''என்னம்மா...? பேசலையா? லைன் கட் ஆகிடுச்சா? திரும்பிப் போட்டுத் தரவா?'' என்று விசாரித்தவளைப் பார்த்து புன்னகை செய்தார்.

''தானா கட் ஆகலை. அவன் தான் கோபமா கட் பண்ணிட்டான்...''

''கோபமா? யார் மேலே? எதுக்கு?'' என்று அவசரமாக நிர்மலா விசாரிக்க, ''உன் மேலே தான் கோபமா இருக்கான். ஏன் என்று நீயே கேளு...'' என்று சிரிப்புடனே பதில் கொடுத்தார்.



''நான் என்ன தப்பு பண்ணினேன்...?'' என்று தனக்குள் யோசித்தபடியே, மீண்டும் அவனை அழைத்தாள். போன் உடனே எடுக்கப்பட்டாலும் எதிர்முனையில் இருந்து சத்தம் இல்லை. அமைதியாகவே இருந்தது.

''ச... த்... யா... இருக்கீங்களா?'' என்று நிர்மலா கேட்டதும், அவள் தன்னை முதல் முறையாக பெயர் மட்டும் சொல்லி அழைக்கிறாள் என்பது புரிய உடனே உற்சாகம் பெருகியதில், சில வினாடிகள் முன்பு பொங்கிய கோபம் உடனே காணாமல் போனது.

''ம்ம்ம்... இருக்கேன்...''

''என்ன கோபம்? அம்மாகிட்டே என்ன சொன்னீங்க?''

''நான் அவங்க என் அம்மா என்ற முறையில் என் கடமையை செய்வதற்கு நன்றி சொல்வாங்களா? ஏன் சொன்னீங்க என்று கேட்டேன். தப்பா?''

''தப்புதான். எஸ்.எம்.எஸ் அனுப்பியது நான். அதனால் திட்டுவது என்றால் நீங்க என்னை தான் திட்டணும்...''

''சரி, அந்த திட்டு உனக்கு தான். போனை அம்மாவிடம் கொடு. சாரி சொல்லி விடுகிறேன்...'' என்று சத்யா சொல்ல அவள் சிரித்தாள்.

''திட்டு வாங்கிட்டு சந்தோஷமா சிரிக்கிற ஆளை இங்கே தான் பார்க்கிறேன். இப்ப எதுக்கு சிரிக்கிறாய்?''

''இல்லை, அம்மா பையனுக்கு தேங்க்ஸ் எப்படி சொல்லலாம்? அது பெரிய தப்பு என்று நீங்க கோபித்து கொண்டீங்க. இப்ப நீங்க சாரி சொல்லிட்டு, அதுக்கு அம்மா கோபித்து கொண்டால், யார் சமாதானப் படுத்துவது என்று நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது...''

''பேசுறதெல்லாம் நல்லாதான் இருக்கு. இந்த சாரி தாங்க்ஸ் எல்லாம் வேண்டாம் என்று சொல்லிட்டு தானே வந்தேன்? எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது...''

''இருந்தது என்றால் அது கடந்த காலம். இப்ப இல்லை தானே...?''

''ப்ச்! பேச்சை மாத்த வேண்டாம். ஏன் தேங்க்ஸ் சொன்னாய்...? அதுக்கு முதலில் பதில் சொல்லு...''

''காலையில் பேங்க்-ல இருந்து பணம் கிரெடிட் ஆன தகவல் வந்ததும், அம்மா உங்களிடம் பேசணும் என்று சொன்னாங்க. அப்ப போன் ஸ்விட்ச் ஆப் ஆகி இருந்தது. போன் ஆனில் இருந்தாலாவது மிஸ்ட் கால் லிஸ்டில் பதிவாகும். நாங்க உங்களிடம் பேச நினைத்தோம் என்ற தகவல் உங்களுக்கு எப்படி வந்து சேரும்? அதுக்காக தான் பணம் வந்து விட்டது என்ற தகவலை சொல்லி நன்றி என்று ஒரு மெசேஜ் அனுப்பினேன். இனிமேல் சொல்லலை. போதுமா...?''

''என்னிடம் பேச நினைக்கிறேன் என்று சொல்ல தேங்க்ஸ் எதற்கு? வேறே ஏதாவது மெசேஜ் கொடுத்து இருக்கலாமே?''

''சரி, இனிமேல் நல்லா இருக்கீங்களா என்று கேட் கிறேன்...''

''அப்படி கேட்க கூடாது. நீ இங்கே சுகமே! நான் அங்கு சுகமா? என்று கேட்டால்...'' என்று வார்த்தைக்கு வார்த்தை பதிலாக சொல்கிறேன் என்று உற்சாகமாக சொன்ன பிறகே அதன் தீவிரம் உணர்ந்து நாக்கை கடித்து பேச்சை நிறுத்த, அவன் பேச்சில் உறைந்து, போனை



மங்கையிடம் நீட்டி விட்டு அவசரமாக குளியல் அறைக்குள் புகுந்து கொண்டாள் நிர்மலா.

''கோபம் போயிடுச்சா சத்யா?'' என்ற மங்கையின் குரலில் சுதாரித்தான். போகிற போக்கில் சொன்னது அவளை காயப்படுத்தி விட்டதோ என்ற வருத்தம் தோன்றியது.

''நமக்குள்ளே என்னம்மா கோபம்? ஒரு நேரம் அடிச்சுக்க வேண்டியது தான். அடுத்த நேரம் சிரிச்சு பேசி சமாதானம் ஆகிக்க வேண்டியது தான். நல்லா இருக்கீங் களாம்மா? நெல் அறுவடை எப்போ?'' என்று சாதாரண மாக பேச்சை தொடர்ந்தான்.

அவன் கேட்ட கேள்விகளுக்கு உரிய பதிலை சொல்லி விட்டு, ''நான் இன்னிக்கு சந்தோஷமா இருக் கேன் சத்யா...'' என்று சொன்னார்.

''என்ன விஷயம்மா...? சொன்னால் நானும் சந்தோஷப் படுவேனே...''

''உனக்கு ஒரு பொண்ணு பார்க்க சொன்னாயே? ஒரு பொண்ணு பார்த்து விட்டேன். எனக்கு பிடிச்சு இருக்கு...'' என்று சொல்ல அவன் ஒரு நொடி உறைந்தான்.

''பொண்ணா...? உங்களுக்கு சொந்தமா...?''

''என் பையனை கல்யாணம் கட்டிக்கப் போகும் பொண்ணு எனக்கு சொந்தமில்லாமல் எப்படி சத்யா? இதென்ன கேள்வி?''

இவர் சொல்வது நிர்மலாவையா? வேறு யாராவதா? பூடகமாக பேசியதில் குழப்பம் வந்தது. ''அம்மா, கல்யாணத்துக்கு இப்ப ஒன்றும் அவசரம் இல்லை. நான் அடுத்த வருஷம் லீவுக்கு வரும் போது பார்த்து கொள்ள

லாம். நீங்க அவசரப் பட்டு வேறே யாருக்கும் வாக்கு கொடுத்து விட வேண்டாம்...'' என்று சொல்ல அவர் சிரித்தார்.

''இன்னொரு சந்தோஷமான விஷயம் சொல்லவா? நிர்மலா இன்னிக்கு செம மூட்ல இருந்தாள். நிறைய சமூக அக்கறை, பொறுப்பு, எல்லாம் எனக்கு பணம் அனுப்பிய உன்னுடைய ஒரு செயலில் பொங்கி பிரவாக மாக வெளி வந்தது. ஒரு சம்பவத்தை பார்த்து, உணர்ச்சி வசப்பட்டு முடிவெடுக்க முடியுமா?'' யோசிச்சு தான் செய்யணும்...'' என்று மங்கை சொல்ல அவன் இடை யிட்டான்.

''ஏன்மா தனிப்பட்ட சில சம்பவங்கள் தான் பெரிய பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். மரண ஊர்வலம் ஒன்று சித்தார்த்தனை கௌதம புத்தராக மாற்றவில் லையா? கலிங்கத்து போர், அசோகரை பௌத்த மதத்தை தழுவ வைக்கலையா? அரிச்சந்திரன் நாடகம் பார்த்து காந்தி சத்தியத்தை கடைப் பிடிக்கலையா?''

''நீ எஞ்சினியரிங் படித்தான் என்று நினைத்தேன்! இல்லையா? ஹிஸ்டரியா படித்தாய்?'' என்று கேட்ட மங்கையின் குரலில் புன்னகை செய்தான்.

''நிர்மலா சொல்றதும் எனக்கு புரியுது. நீ பேசறதும் எனக்கு புரியாமல் இல்லை. ஆனால் நாளைக்கே ஒரு கஷ்டமான சூழ்நிலையில், உன் பிள்ளையே உன்னை நீ எனக்கு என்ன சேர்த்து வைத்தாய்?'' என்று கேள்வி கேட்க கூடிய ஒரு நிலை வரலாம். பணம் இல்லாமல் இந்த உலகத்தில் எந்த காரியமும் நடக்காது. பிராக்டிகலாகவும் யோசிக்கணும் சத்யா...'' என்ற விளக்கம் அவனை மலர வைத்தது.



அவர் பேச்சில் இருந்த 'உன் பிள்ளை' என்ற வாசகம், நிர்மலா பாதி பேச்சில் சென்று விட்டாள் என்ற எண் ணம் வண்டாக குடைந்து கொண்டு இருந்த நிலையை மாற்றி, அவன் காதில் தேனாக பாய்ந்து, அவன் மன நிலையை உற்சாகமாக்கியது.

''என் பிள்ளையாக பிறந்து, உங்க பேரனாக வளரும் ஒரு குழந்தைக்கு, அந்த மாதிரி கேட்கிற எண்ணம் வராது என்று நினைக்கிறேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் ஒரு மனிதன் உயிர் வாழ தேவைப் படும் உணவு உடை, இருப்பிடம், கல்வி ஆகியவற் றிற்கு எவ்வளவு தேவையோ அதை வைத்து கொள்ள லாம். அதற்கு மேலே வருவதை கொடுக்கலாம் என்ற நிர்மலாவின் முடிவினை நானும் முழு மனசா ஆதரிக் கிறேன்...''

''ரெண்டு பேரும் பேசி ஏதோ முடிவு எடுத்துட்டீங்க போல. சரி என்ன முடிவு சொல்லு...'' என்று சிரிப்புடன் விசாரித்தார் மங்கை.

''ஹய்யோ! இல்லைம்மா... நான் ஒன்றும் நிர்மலா விடம் பேசவும் இல்லை... முடிவெடுக்கவும் இல்லை...''

அதுவரை மடக்கி பேசியவனுக்கு இப்போது வார்த்தை திக்கியது. இது இவருடைய மூதாதையர் சம்பாதித்த சொத்து. அதை இப்படி செய், அப்படி செய் என்று சொல்ல தனக்கு உரிமை இருக்கிறதா?

''என்ன அமைதியாகி விட்டாய்? என் பேரில் எல்லா சொத்தையும் எழுதி வை என்று நீ சொன்னால் கூட உன்னை தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன். உன் உரிமையை கேட்கிறாய் என்று சந்தோஷப் படுவேன். என்ன சொல்ல வந்தாயோ சொல்.''

''அம்மா, இது நீங்களும் நானும் பல நேரங்களில் பகிர்ந்து கொண்ட விஷயங்களின் அடிப்படையில் நான் சொல்லும் பரிந்துரை இதில் ஏதேனும் மாற்றங்கள் தேவை என்றாலும் செய்யலாம். இதை நிர்மலாவுடன் மீண்டும் பேசுங்க. இறுதி முடிவெடுப்பதற்கு முன்னால் வக்கீலை கலந்தாலோசிக்கலாம்'' என்று பீடிகை போட, ''விஷயத்தை சொல்லு சத்யா...'' என்றார்.

''நெல், கரும்பு என்று ஆண்டு தோறும் பயிர் செய்யும் ஆறு ஏக்கர் நிலத்தையும் வீட்டையும் மட்டும் உங்களுக்கு பிறகு உங்க காலத்திற்கு பிறகு, உங்களின் மகன் வழி பேர குழந்தைகளுக்கு என்ற வகையில் எழுதி விட்டு, அதிக பராமரிப்பு வேலைகள் தேவைப் படாத, தென்னந்தோப்பு, மாந்தோப்பாக இருக்கும், இருபது ஏக்கர் நிலத்தை, மூலதனாக வைத்து ஒரு அறக்கட்டளையை பதிவு பண்ணலாம்...''

''செய்யலாம் சத்யா. ஆனால் ஒரு காரியம் ஆரம்பிக்கும் முன்னால் எவ்வளவு வேண்டுமானாலும் யோசிக்கலாம் சத்யா. ஆரம்பிச்ச பிறகு பின் வாங்கக் கூடாது என்று நினைக்கிறேன். குழந்தைகள் படிப்புக்கு இந்த நிலத்தில் இருந்து வரும் வருமானம் எந்த மூலைக்கு போதும்?''

''அது மட்டும் போதாதும்மா. அதற்காக தானே அறக்கட்டளையாக பதிவு செய்வது? பண வசதி படைத்தவர்களிடம் டொனேஷன் வாங்கலாம். அவர்களுக்கு வருமான வரி விலக்கு கிடைக்க வாய்ப்பு இருந்தால் தான் அதுவும் கிடைக்கும். அது போக, முன்னால் இந்நாள் படைவீரர்களை உறுப்பினர்களை சேர்த்து நன்கொடையும் வசூலிக்கலாம். கிடைக்கும் வட்டியை, குழந்தைகளின் மேல் படிப்புக்காக செலவு பண்ணலாம்...''

''நம் பணம் என்றால் பரவாயில்லை. ஆனால் பிறரிடம் கை நீட்டி காசு வாங்கி விட்டால், நம்மள ஒருத்தர் ஒரு வார்த்தை கை நீட்டி குற்றம் சொல்ல வாய்ப்பு இல்லாமல் கணக்குகளை சுத்தமா பராமரிக்கணுமே!''

''அதில் என்ன சந்தேகம்? கணக்குகளை நிர்வாகம் செய்ய, நீங்க நிர்மலா, ஒரு வக்கீல், ஒரு ஆடிட்டர், இன்னும் ஊரில் இருக்கும் இரண்டு பெரிய மனிதர்கள், முன்னாள் படைவீரர்களாக இருப்பவர்களை கொண்டு ஒரு குழு அமைக்கலாம். அப்ப தனிப்பட்ட நபர்களை குறை சொல்ல வாய்ப்பு இருக்காதே...''

''அதில்லை சத்யா...''

''அம்மா! கேள்விகள் கேட்டு கொண்டே இருக்கலாம். முடிவே இருக்காது. காய்க்கிற மரம் கல்லடி படத்தான் செய்யும். சில விஷயங்கள் துணிச்சலா இறங்கிடணும். எல்லாம் நல்லா நடக்கும். குட்நைட்'' என்று முடித்து போனை வைத்து விட்டான்.

அடுத்த ஒரு மாதம் ஆடிட்டரை பார்க்க, வக்கீலை பார்க்க, ரோட்டரி கிளப்பில் இருப்பவர்களுடன் கலந்து பேச, மகளிர் பயிற்சி மையம் ஆரம்பிக்க தேவையான வேலைகளை கவனிக்க என்று பறந்தது.

ஒரு நல்ல நாளை பார்த்து, அறக்கட்டளையை பதிவு பண்ணவும், பயிற்சி நிலையத்தை திறக்கவும், ஏற்பாடு செய்து எளிமையாக அழைப்பிதழும் அடித்து வந்ததை பார்த்த மங்கைக்கு சத்யாவின் நினைவும் கூடவே நிர்மலாவின் நினைவும் வந்தது.

இந்த ஒரு மாதத்தில் அன்றைய இரவுக்கு பிறகு அவள் அவனிடம் பேசி அவர் பார்க்கவே இல்லை. அழைப்பு வந்தாலும், கையிலேயே போன் இருந்தாலும், தன்னை தேடி வந்து கொடுத்து விட்டு சென்றாளே ஒழிய பேசவில்லை.

அவனின் அழைப்பு அனேகமாக காலை ஆறில் இருந்து எட்டு மணிக்குள், அல்லது இரவு எட்டில் இருந்து பத்துக்குள் வரும் கடந்த ஒரு மாதத்தில், அவன் பத்து முறை பேசி இருக்கலாம். இந்த பத்தில் ஒரு முறை கூட அவள் பேசவே இல்லை என்பது வித்தியாசமாக தோன்றியது.

எப்பொழுதும் வாந்தி எடுப்பதை ஒரு பெரிய விஷய மாக காட்டாதவள், அவனிடம் இருந்து அழைப்புகள் வரும் நேரத்தில் மட்டும் குளியல் அறையில் சென்று ஒளிகிறாளோ என்ற சந்தேகம் இப்போது வந்தது.

அவன் வீட்டு லைனில் பேசும் போது, இவள் மொபைல் போனில், வசுந்தராவின் வராத வறட்டு இருமலுக்கு கை வைத்தியமாக கஷாயம் வைக்க சொல்லி கொடுத் தாள்.

அவன் மொபைல் போனில் பேசினால், இவள் வீட்டு லைனில், ஆடிட்டரிடம் செப்டம்பர் மாதம் முப்பதாம் தேதி சமர்ப்பிக்க வேண்டிய கணக்கில், மார்ச் மாத மத்தியில் சந்தேகம் கேட்டு கொண்டு இருந்தாள். என்ன ஆச்சு?

''சத்யாவுக்கு ரெண்டு இன்விடேஷனும் அனுப்பிடு நிர்மலா...'' என்று சொல்ல, ''சரிம்மா'' என்ற வார்த் தைக்கு மேலே ஒன்றும் பேசவில்லை.



''நிர்மலா இந்த அழைப்பை அவனுக்கு அனுப்ப உனக்கு இஷ்டம் இல்லையா?'' என்று அவளையே கூர்ந்து கவனித்தபடி விசாரித்தார்.

''ஏன்மா அப்படி கேட்கறீங்க...?'' என்றவள் தன்னை பார்த்து புன்னகை செய்தாலும் அதில் ஏதோ ஒன்று ஒளிந்து இருந்ததை அவரால் உணர முடிந்தது.

''சரி, அப்போ போனில் இந்த பயிற்சி நிலைய துவக்க விழாவுக்கு வாங்க என்று நீயே நேரில் ஒரு தரம் கூப் பிட்டு விடு...''

''இப்ப அவரால் லீவு எடுக்க முடியாதும்மா. அப்புறம் எதுக்கு...'' என்று மறுப்பு சொல்ல ஆரம்பித்தவளை முறைத்தார்.

''பத்திரிகை அனுப்பும் எல்லோரும் வருவார்கள் என்று உன்னால் உத்திரவாதம் கொடுக்க முடியுமா நிர் மலா? வருவானா இல்லையா என்று பார்த்தா பத்திரிகை கொடுக்க முடியும்?''

''சரிம்மா...'' என்று மேற்கொண்டு வாதாடாமல் முணுமுணுத்தாள்.

ஒன்று இவர்கள் பேசி தங்களுக்குள் பிரச்னையை தீர்த்து கொள்ள வேண்டும். அல்லது, தீர்க்கமாக முடி யாத பிரச்னை என்றால் அது வெளியே வர வேண்டும். தானாக சரியாகி விடும் என்று காத்திருந்து, கடைசியில், இலவு காத்த கிளி கதையாகி விடக் கூடாதே! மங்கை விடுவதாக இல்லை. ''சத்யாவிடம் பேசி விட்டாயா நிர்மலா'' என்று இரவு எட்டு மணிக்கு நினைவு படுத்தி னார்.

''ம்ம்ம்... சாப்பிட்டு விட்டு பேசுகிறேன்...'' என்று மேலும் அரை மணி நேரம் இழுத்து விட்டு, அவர்

தன்னை விடுவதாக இல்லை என்பது உறுதியான பின்பு, அவனை அழைத்தாள். சாதாரணமாக நாலு வாக்கியம் பேசி, அழைப்பு அனுப்பி இருக்கிறேன் என்று முடித்து விட வேண்டும் என்று உரு போட்டபடி அவனை அழைத்தவளுக்கு தொண்டை ஒத்துழைக்க மறுத்தது.

''நான் நிர்மலா...'' என்று ஆரம்பித்ததில், அவளுடைய தொண்டைக்குள் சிக்கியது போக வெளியே வந்த சத்தத்தில் 'நிலா' மட்டுமே சத்யாவின் காதுகளில் கேட்டது.

''வாவ்! நிலா... பேசுகிறதா? தேய்பிறை முடிந்து மீண்டும் நிலவு வளரும் காலமா இது?'' என்று சத்யாவின் சந்தோஷ குரலில் உறைந்து நின்றாள் நிர்மலா.

## 23

வசுந்தராவின் கல்யாண வீட்டில் சத்யாவை நீண்ட நாட்களுக்கு பிறகு சந்தித்ததில் சின்ன அதிர்வலைகள் அவளுக்குள் ஏற்பட்டு இருந்தாலும், மறுநாள் அவன் தங்களின் வீட்டிற்கே வந்த போதும் கூட, யாரேனும் போகிற போக்கில் தன்னை ஒரு வார்த்தை சொல்லி விடக் கூடாது என்பதற்காகவே கவனமாக பேச்சு வார்த்தைகள் இன்றி அவனை தவிர்த்தாள்.

அவன் தனக்காக கைக்காசை செலவு பண்ணி என்னென்னவோ உதவிகள் செய்தான் என்பதில் கூட இளகாத அவள் மனம், ஒரு உணர்வு பூர்வமான



தருணத்தில், தன் குழந்தையை கொண்டாடியவன் என்ற இளக்கத்தில், அந்த தயக்கத்தை மீறி அவனிடம் பேசி பழக ஆரம்பித்தாள் நிர்மலா. இதுவரை குடும்பம் என்ற அமைப்பை அறிந்து இராதவன் என்ற எண்ணம், சாதகமாக நிற்க, தொலைபேசியில் சகஜமாக உரையாடலை தொடரவும் செய்தாள்.

ஆனால், 'நீ இங்கு சுகமே... நான் அங்கு சுகமா...!' என்ற வார்த்தைகளை அவனிடம் இருந்து எதிர்பாராமல் கேட்டதுமே அவனுக்கு 'கூடுதலாக இடம் தந்து விட்டோமோ?' என்ற பதட்டம், வர அதிர்ந்து விட்டாள். அதன் பிறகு கடந்த ஒரு மாதமாக அவன் பல முறை அழைத்த போதும் அவனிடம் நேரடியாக பேச்சு வார்த்தை எதுவும் வைத்து கொள்ளாமல் கூடிய வரை தவிர்த்தாள். இன்று மங்கை அம்மாவிடம் சாக்கு போக்கு சொல்ல வழி இன்றி பேச வேண்டியதாகி விட்டது. இப்படி உற்சாகத்துடன் நிலா என்று செல்லப் பெயர் வைத்து கூப்பிடுவான் என்பதை, எதிர்பார்க்கவில்லை என்பதால் மீண்டும் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

போன தடவை போனை மங்கை அம்மாவிடம் கொடுத்து விட்டு நழுவியது இந்த முறை நடக்காது என்பதோடு, இவனுடைய பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும் என்ற எண்ணமும் உந்த, அவசரமாக ஒரு ஆழ்ந்த மூச்சை எடுத்தாள் நிர்மலா.

''சார், நான் காவேரிப்பாக்கத்தில் இருந்து நிர்மலா பேசுகிறேன். கேட்கிறதா?'' என்று வார்த்தைகளில் கொஞ்சம் அழுத்தம் கூட்டி கேட்டாள்.

''நீ சற்று முன்பு இழுத்து விட்ட மூச்சை கூட என்னால் உணர முடிகிறது நிர்மலா. உனக்கு ஏன்

சந்தேகம்?'' என்றவன் குரலில் கேலி இருந்ததை அத்தனை பதட்டத்திலும் அவளால் உணர முடிந்தது.

''என்னுடைய கணவர் செழியன் பேரில் ராணுவ வீரர்களின் குழந்தைகளின் நலனுக்காக அறக்கட்டளை ஆரம்பிக்கும் விழா, எங்க மாமியாரின் பேர்ல மகளிர் தொழில் பயிற்சி மையம் துவக்க விழா, இரண்டுக்கு மான அழைப்பிதழை உங்க அலுவலக முகவரிக்கு அனுப்புகிறேன். அம்மா உங்களை நேரில் அழைக்க சொன்னாங்க சார். அதனால் தான் இந்த இரவு நேரத்தில் உங்களை தொந்தரவு செய்ற மாதிரி ஆகி விட்டது சார். தப்பா எடுத்து கொள்ள வேண்டாம் சார்...'' என்று பேசிய மூன்று வாக்கியத்தில் முப்பது சார் போட்டதோடு என் கணவர் என் மாமியார் என்ற வார்த்தைகளுக்கு கூடுதல் அழுத்தமும் கொடுத்தாள் நிர்மலா.

'தன்னை சார் சார் என்று சொல்லி வேண்டும் என்றே வெறுப்பேற்றி தள்ளி நிறுத்த முயல்கிறாள்' என்ற உணர் வினை புரிந்து கொள்ள முடிந்தது.

''நிர்மலா, இந்த மாதிரி நாலு வாக்கியத்தில் நாற்பது சார் போட்டு பேசினால் நான் மனசு மாறி விடுவேன் என்று நம்புவதற்கு நீ சின்ன குழந்தையா நிர்மலா? என்ன பேசுகிறோம் என்று யோசிக்கவே மாட்டாயா?'' என்றவன் குரலில் சிறிய தவறு செய்து விட்டு விழிக்கும் குழந்தையை கண்டிக்கும் மனநிலையே இருந்தது.

''நான் யோசித்து தான் பேசுகிறேன் சார். நீங்க தான் முன் பின் விளைவுகளை பற்றி யோசிக்காமல் பேசறீங்க?'' என்ற வாக்கியத்தில் அவளுடைய அளவுகோலில் ஒரு சார் குறைந்து இருந்ததை உணர்ந்தவனுக்கு சின்ன புன்னகை மலர்ந்தது.



''ஆழ்ந்து சிந்திக்காமல், எந்த செயலையும், எடுத் தேன், கவிழ்த்தேன் என்று செய்யும் ஆள் நான் இல்லை. நான் சொன்ன வார்த்தைகளில், அதை சொன்ன விதத் தில், உனக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அது வெளிப்பட்ட இடமும், நேரமும், சரியானதாக இல்லா மல், உன் மனம் காயப்பட்டு இருக்கலாம். அதற்கு மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். அனால் அதன் அர்த்தம் உணர்ந்து சொன்னேன் நிர்மலா...''

''சார், என்ன பேசறீங்க நீங்க?'' என்று குரலை உயர்த் தியவள் சூழ்நிலை உணர்ந்து குரலை மட்டும் தணித் தாள்.

''சார், நான் உங்க மேலே நிறைய மரியாதை வைத்து இருந்தேன். நீங்க இந்த மாதிரி பேசுவீங்க என்று நான் எதிர்பார்க்கவில்லை...''

''அம்மா பக்கத்துல நாம் பேசுவது கேட்கும் தூரத்தில் இருக்காங்களா நிர்மலா?'' என்று கேட்டவன் குரலில் இளக்கம் இருந்தது.

''ஆமா, ஏன்...?''

''போனை அம்மாவிடம் கொடு. நீ ஒரு டம்ளர் தண் ணீர் குடிச்சுட்டு வா'' என்று சொல்ல அவள் மங்கை யிடம் போனை நீட்டினாள்.

''சொல்லு சத்யா. சாப்பிட்டாச்சா? உடம்பு நல்லா இருக்கா?''

''சாப்பிட்டாச்சும்மா. உங்க மருமகள் இரண்டு விழா விற்கு நேரில் வர சொல்றாங்க. நீங்க சொல்ல மாட்டீங் களா?'' என்று சிரிப்போடு விசாரித்தான்.

''நீ சொல்லிதானே எல்லா ஏற்பாடும் நடக்குது. அப்புறம் என்ன தனியா கூப்பிடுவது? முடிஞ்சால் வந்துட்டு போ...''

''இப்படி முடிஞ்சால் வந்துட்டு போ என்று போகிற போக்கில் சொன்னால் எப்படி வருவது?''

''வரமாட்டேன் என்று சரக்கு சொல்றதுக்கு இப்படி ஒரு காரணமா? நீயும் நன்றாக பேச கற்று கொண்டாய். அது சரி, சமைக்கிறேன் என்று ஒரு நாள் நிர்மலா உயிரை வாங்கினாயே? இப்பவும் சமைக்கிறாயா இல்லை போதும்டா சாமி என்று சமைப்பதை விட்டுட்டாயா?''

''இத்தனை நாள் தனிக்கட்டை. இஷ்டத்துக்கு செலவு பண்ணிட்டு இருந்தேன். இப்ப குடும்பஸ்தனாகி விட்டேனே! ஒவ்வொரு காசையும் எண்ணி எண்ணி செலவு பண்ணுகிறேனாக்கும். இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன். பாயாசம் வைச்சு கொண்டாட போகிறேன். எப்படி பண்ணனும் என்று சொல்லுங்க...''

''குறிப்பு சொல்றதெல்லாம் நமக்கு வராது. ஒரு பிடி அரிசி ரெண்டு பிடி சர்க்கரை என்று குத்து மதிப்பா போட்டு சமைச்சு தான் பழக்கம். அளவு சொல்ல தெரியாது. நிர்மலாவிடம் கேட்டுக்கோ...'' என்று சொல்லி விட்டு, அருகிலேயே அமர்ந்து தன் முகத்தையே பார்த்து கொண்டு இருந்த மருமகளிடம் போனை நீட்டினார்.

''சத்யா சமையலில் சந்தேகம் கேட்கிறான் பாரு. சொல் லிடு...'' என்று போனை மீண்டும் தன்னிடம் நீட்ட வேறு வழி இன்று வாங்கினாள்.

''சா... ர்...''



''தண்ணி குடிக்கலையா நிர்மலா? கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணி கொள்ளட்டும் என்று தானே சில நிமிடம அம்மாவிடம் பேசினேன். அந்த பதட்டம் கொஞ்சம் கூட மறையாமல் திரும்ப லைனில் வந்தால் என்ன செய்யட்டும்? நான் உன்னிடம் நிறைய பேசணும் நிர்மலா...''

''என்ன சமைக்க போறீங்க சார்...?'' என்று அவன் சொன்னதே காதில் விழாதது போல அம்மாவின் பேச்சை ஒட்டி விசாரித்தாள் நிர்மலா.

''ஒரு மாசத்துக்கு பிறகு உன் குரலை இன்று கேட்டதால் நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன் நிர்மலா. நானே என் கையால் ஸ்வீட் செய்யப் போகி றேன். பாயாசம் செய்யச் சொல்லித் தருகிறாயா?''

''வாயால் சொன்னால் நிறைய சந்தேகம் வரும். அதனால் எஸ்.எம்.எஸ் அனுப்புகிறேன் சார். அதை பார்த்து செய்து கொள்ளுங்க'' என்று முடிக்க முயன்றாள்.

''அனுப்பு நிர்மலா. ஆனால் போனை வைப்பதற்கு முன்னால் நான் சொல்லப் போகிறதை முழுசா கேட்டுடு. நீ இப்படி சில நாட்கள் ஒதுங்கி நிற்பதால், என் மனசு மாறப் போவதில்லை. நான் ஏற்கனவே நம் எதிர்கால வாழ்க்கை குறித்து முடிவெடுத்தாச்சு...'' என்று அழுத்தமான குரலில் சொல்ல, அவளின் அதிர்ச்சியை உணர்ந் தவன் மெலிதாக சிரித்தான்.

''பயப்படாதே, நான் இன்னும் யாரிடமும் வெளிப் படையாக சொல்லவில்லை என்றாலும், அவர்களால் நம் நடவடிக்கையை வைத்து யூகிக்க முடியும். ஆனால் என் மனதை முதலில் உனக்கு தெளிவாக சொல்ல வேண்டியது அவசியம் இல்லையா?''

''சத்யா சார்... என்ன பேசறீங்க?'' என்று தாழ்ந்த குரலில் அவனை எச்சரித்து அடக்க முயன்றதற்கு பலன் இல்லை.

''நான் உன்னை கல்யாண வீட்டில் கணவரோடு சந்தோஷமாக வாழும் ஒரு இல்லத்தரசியாக பார்த்து இருந்தால் இந்த எண்ணம் எனக்கு தோன்றி இருக்காது. கடந்த ஒரு மாதமாக உனக்கு என்ன மறுப்புகள் தோன்றக் கூடும் என்று ஒவ்வொன்றாக யோசித்து யோசித்து பதில் தயார் செய்து வைத்து இருக்கிறேன். நீ உடனே எதுவும் சொல்ல தேவை இல்லை. இப்போதைக்கு உன் உடல் நிலையை பார்த்து கொள். நம்பிக்கையை வளர்த்து கொள். தொழிலில் லாபம் பாரு. சந்தோஷமாக இரு...''

''இப்ப நான் சந்தோஷமாக இல்லை என்று யார் உங்களிடம் சொன்னது?''

''...இன்று இரவு உனக்கு நான் ஒரு கடிதம் எழுது கிறேன். நாளை காலை அனுப்புகிறேன். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் உனக்கு வந்து சேரும். அதை அந்த இரண்டு விழாக்களுக்கான வாழ்த்து செய்தி போல நீ வெளியில் காட்டி கொள்ளலாம். ஆனால் என் மனதில் என்ன இருக்கிறது என்பதை நீ தெளிவாக அறிந்து கொள். உடனே பதில் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் வர இன்னும் ஒன்பது மாதங்கள் ஆகலாம். வரும் போது உன் பதிலை சொன்னால் கூட போதும். உன் பதிலுக்காக நான் இப்போதில் இருந்தே காத்திருக்கிறேன். குட்நைட்...'' என்று அவளின் பதிலை எதிர்பாராமல் போனை வைத்தான். மேஜையில் அமர்ந்து தன் மனதை திறந்து கடிதம் எழுத ஆரம்பித்தான்.

*நி(ர்ம)லா,*



*நான் கேலியாக சொன்னாலும், நீ இனி நம் வாழ்வில் வளர் பிறையாக இருக்க வேண்டும என்று ஆசைப் படுகிறேன்.*

*உனக்கு என்ன வயது என்று ஞாபகம் இருக்கா? நாற்பதோ ஐம்பதோ இல்லை. இருபத்தி மூன்று இருக்கலாம். இந்த வயதில் கல்யாணமே ஆகாத எத்தனையோ பெண்கள் படிப்புக்காகவும் வேலைக்காக வும் வாழ்கின்றனர்.*

*மத்திய தர குடும்பத்தில், முன்னால் ஒரு அண் ணன், பின்னால் ஒரு தங்கை என்ற நிர்ப்பந்தத்தினால் மணம் செய்து, ஓராண்டில் உன் திருமண வாழ்க்கை முடிந்து விட்டால், எஞ்சிய காலத்தை தனிமையில் கழிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை நிலா.*

*நான் தனி ஆள் இல்லை. எனக்கு சம்பாதிக்க ஒரு தொழில் இருக்கு, வழி நடத்த பெற்றோரின் நிலை யில் ஒரு அம்மா இருக்காங்க. எனக்கு வயசாகும் நேரம் தோள் சாய ஒரு வாரிசு எனக்குள் வளர்கிறது என்று நீ சமாதானம் சொல்லலாம். அதெல்லாம் சரி. இவை எல்லாமே உன்னுடன் கூடவே இருக்கக் கூடிய நிலையிலேயே, இன்னொரு உறவினையும் ஏற்று கொள்வதில் என்ன சிரமம் உனக்கு?*

*இந்த வயதில், நான் என்னுடைய முதல் திருமண வாழ்க்கையை நினைத்து கொண்டே இனி எஞ்சி இருக்கும் காலம் முழுவதையும் வாழ்ந்து விடுவேன் என்று சொல்வது பைத்தியக்காரத்தனம்.*

*ஊரார் பேசுவார்கள் என்று அதற்காக மட்டும் யோசிக்க வேண்டாம் நிர்மலா. பேசத்தான் செய்வார் கள். ஒரு நாள், இரண்டு நாள், நாலு மாசம். அதற்கு*

மேல் அவரவருக்கு ஆயிரம் வேலை இருக்கு நிர்மலா. நம்மை மறந்து விடுவார்கள். பிறருக்காக நாம் வாழ முடியாது. நாம் நம் சந்தோஷத்தை எண்ணி பார்க்க வேண்டும்...''

குடும்பம், அதன் சந்தோஷம் என்பது தான் ஒவ்வொரு ஆண் மகனின் முதல் முக்கியமான கடமை. அந்த குடும்பம் எனக்கு இது வரை இல்லை. நான் என் மனைவி, என் குழந்தை, என் அம்மா, இணைந்த என் குடும்பம் என்று முதல் வட்டத்தை, நானே உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இது எந்த பெண்ணை வைத்து வேண்டுமானாலும் உருவாக்கலாமே என்று நீ கேட்கலாம். அது ஏன் நீயாக இருக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

இது நீ இளம் விதவையாக ஆதரவற்று நிற்கிறாய் என்ற அனுதாபத்தினால் வந்த காதல் இல்லை! எனக்கு நீ வேண்டும் என்ற ஆசையினால் வந்த காதல்.

இது உனக்கும் எனக்கும், அம்மாவுக்கும், நம் குழந்தைகளுக்கும் நல்லது என்று நிச்சயமாய் என்னால் சொல்ல முடியும்.

எனக்கும் என் ரத்தத்தில் உருவாகும் குழந்தை வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் அது உனக்கு பிடிக்கவில்லை என்றால், அதனால் உன்னுடைய குழந்தைக்கு ஏதாவது சிரமம் ஏற்படலாம் என்று நீ நினைத்தால், அந்த சந்தேகத்தை போக்க நான் குடும்ப தடை செய்து கொள்ள தயார் என்ற உறுதியை தருகிறேன்.



நமக்கென்று தனியாக ஒரு குழந்தை வேண்டாம். உன் குழந்தையை நான் விலக்கி வைப்பேனோ என்று அஞ்ச தேவை இல்லை. உன்னுடைய கஷ்ட காலத்தில் உன்னுடன் நின்ற அம்மாவை விட்டு நீ விலக தேவை இருக்காது.

உனக்கும், அம்மாவுக்கும், நம் குழந்தைகளுக்கும் தேவைப் படும் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யும் அளவுக்கு என்னால் சம்பாதிக்க முடியும். கோடீஸ்வர வாழ்க்கை இல்லை என்றாலும் உயர் மத்திய தர வாழ்க்கையை தர முடியும்.

செழியன் நினைவுகளை உன்னால் மறக்க முடியவில்லை என்று சொன்னால், நான் மறக்க சொல்லவில்லை. திருமணம் ஆன உடனே, அண்ணன், தங்கை, அம்மா, அப்பா போன்ற உறவுகளை நாம் மறப்பதில்லையே! அதோடு இன்னும் சில உறவுகளை சேர்த்து பராமரிக்க கற்று கொள்கிறோம் இல்லையா? இதுவும் அதே மாதிரி தான்.

போதிய அவகாசம் எடுத்து கொள். உன் நிலையில் இருந்து நான் யோசித்து, உனக்கு தோன்றக் கூடிய கேள்விகளுக்கு என்னால் முடிந்த அளவுக்கு விளக்கம் சொல்லி விட்டேன். இன்னும், உனக்கு கேள்விகள் சந்தேகங்கள் இருந்தால் தாராளமா கேட்கலாம். விளக்கம் சொல்லவும், வாக்கு கொடுக்கவும் காத்திருக்கிறேன்.

வாயால் சொன்னா ஆச்சா என்ற சந்தேகம் உனக்கு வந்தால்... நம்பிக்கை தான் வாழ்க்கை. என் பெயரிலேயே சத்தியம் இருக்கு. அது என் வாக்கிலும் இருக்கும்.

உன் சாதகமான முடிவுக்கு காத்திருக்கும்

சத்யமூர்த்தி

ஒரு மெல்லிய பேப்பரில் கடிதம் எழுதி, 'விழா சிறப்பாக நடைபெற மனமார்ந்த வாழ்த்துக்கள்' என்று சொல்லும், இரண்டு வாழ்த்து அட்டைகளுக்கு இடையே வெளியே தெரியாமல் ஒட்டி, அதை அவளின் பெயருக்கு அனுப்பி வைத்தான் சத்யமூர்த்தி.

## 24

முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளின் நலன் காப்பதற்கான அறக்கட்டளை ஆரம்பிக்கும் விழா, மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தின் துவக்க விழா ஆகிய இரண்டு விழாக்களும் நடைபெறும் நாள் அன்று எழும் போதே நிர்மலாவுக்கு கலவையான உணர்வுகள் தோன்றியது.

இன்று தன் வாழ்வில் ஒரு மைல்கல். அவர் நினைத்து இருந்தால் 'நீ ராசி இல்லாதவள். உன்னால் தான் என் மகன் அல்பாயுசில் போய் விட்டான்' என்று குற்ற பத்திரிகை வாசித்து இருக்கலாம். ஆனால் அதை செய்யாதது மட்டுமில்லை, தனக்காக ஒரு தொழிலை, சில லட்சங்கள் முதலீடு செய்து துவக்க தயாராக இருந்த மாமியாரை நினைக்கையில் பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருந்தாலும் கூடவே ஒரு சின்ன கலக்கமும் இருந்தது.



மூன்று நாட்களாக அவன் அனுப்புவதாக சொன்ன கடிதம் வரவே இல்லை. விழா நேரத்திற்கு முன்பே வந்து விட்டால் தேவலை என்று அவளின் எண்ணம் பலிக்க வில்லை. காலை பதினோரு மணிக்கு சுற்றிலும் இருக்கக் கூடிய நூறு பேர் அடங்கிய கூட்டம் கண்ணில் தோன்றி பயமுறுத்தியது.

கண்டபடி எதுவும் எழுதி விட மாட்டான் என்ற தைரியம் இருந்தாலும், நீ இடம் கொடுக்காமல் தனிப் பட்ட கடிதம் உனக்கு எப்படி வர முடியும் என்ற கேள்வி எழுந்தால் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும் என்ற குழப்பமும் சேர்ந்தே அவளை தாக்க படுக்கையில் இருந்து எழுந்த பிறகும் அப்படியே அமர்ந்து இருந்தாள்.

''என்ன நிர்மலா, தலை சுத்துதா? மணி ஆறுதானே ஆகியது? உன்னை யார் அதுக்குள்ளே எழுந்திரிக்க சொன்னது? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு. அஞ்சாவது மாசம் பிறந்து விட்டால் தலை சுத்தல், வாந்தி எல்லாமே நின்று விடும்...'' என்று குளியல் அறையில் இருந்து வெளியே வந்த மங்கை சொல்ல அவள் அவசரமாக படுக்கையில் இருந்து இறங்கினாள்.

''அதெல்லாம் இல்லைம்மா. நீங்க வெளியே வந்த உடனே குளிக்க போகலாம் என்று காத்திருந்தேன். வசுவும் பிரசன்னாவும் வருவாங்க. வெண்பொங்கலும் சாம்பாரும் வீட்டிலேயே பண்ணிடறேன். அவள் ஆசையா சாப்பிடுவாள்'' என்றபடி குளிக்க போனவளை பார்த்த மங்கையின் முகம் கனிந்தது.

''கொஞ்சம் பளிச்சுன்னு இருக்கும் புடவையா கட்டு நிர்மலா. செழியனை கல்யாணம் பண்ணி இந்த

வீட்டுக்கு வருவதற்கு முன்னாலும் நீ புடவை கட்டி, பூ வச்சுட்டு தானே இருந்தாய். அதெல்லாம் அவனோட போகணும் என்று யார் சொன்னது? நல்ல ட்ரெஸ் பண்ணிக்கோ என்று நானே சொல்றேன். உனக் கென்ன?'' என்று சொல்லி விட்டு, வாசலுக்கு சென்றார்.

நான்கு மணிக்கே எழுந்து ஏழு மணிக்குள் காவேரிப் பாக்கம் வந்து சேர்ந்த வசுந்தராவை, ''வா வசு. வா பிரசன்னா. என்ன மூன்று வாரமா ஆளை காணோமே? வேலை ஜாஸ்தியா? இன்னிக்காவது வரலாம் என்று தோன்றியதே?'' என்று உற்சாகமாக வரவேற்றார்.

''அத்தை சொன்ன பிறகு வராமல் இருக்க முடியுமா? நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று வசுந்தராவும், ''நாலு பேருக்கு நல்லது செய்ற வேலையில் இறங்கிட்டீங் கம்மா. ரொம்ப சந்தோஷம் அசத்துங்க...'' என்று பிரசன் னாவும் தங்களின் உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர்.

''வசு, உங்க அக்காவுக்கு ஒரு நல்ல புடவை கட்டி கூட்டிட்டு வா. யாரும் எதுவும் சொல்லவில்லை என்றால் அவள் டல் கலரில் ஏதாவது காட்டன் புடவையை கட்டிட்டு வந்து நிற்பாள்'' என்றவரை பார்த்து புன்னகை செய்தான் பிரசன்னா.

''சரி அத்தை...'' என்று மங்கையிடம் சொன்னவள், 'அப்படியே கண்ணுக்கு தெரியாமல் கருப்பில் பொட்டு வைக்காமல் கொஞ்சம் பெரிசா வச்சுக்க சொல்லணும்...' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டு, நுழைந்தாள் வசுந்தரா.

''நிர்மலா, உள்ளே உன் ரூமில் புதையல் எடுக் கிறாயா? சென்னையில் இருந்து வரும் தங்கையை



வாசலில் வந்து வரவேற்க மாட்டாயா?'' என்று குரல் நிர்மலாவை எட்ட, தன் அறையில் தயாராகி கொண்டு இருந்தவள் வேகமாக ஓடி வந்தாள்.

''ஹேய்! வசு, வா வா. உன்னை பார்த்து ஒரு மாசம் ஆச்சே? நேற்று நைட்டே வந்து இருக்கலாம் இல்லையா?'' என்று வரவேற்றவள் பிரசன்னாவை பார்த்து புன்னகை செய்து, ''வாங்க...'' என்றாள்.

''ராத்திரி இவர் வீட்டுக்கு வரும் போது மணி ஒன்பதரை. அதற்கு பிறகு எங்கே கிளம்புவது? என்னால முடிஞ்ச அளவுக்கு காலையில் சீக்கிரம் கிளம்பி வந்து இருக்கிறேன். சென்னையில் இருந்து வந்து இருக்கிறேன். முதலில் மணக்க மணக்க ஸ்ட்ராங்கா பில்டர் காபி ஒரு டம்ளர் கொடுக்கணும் என்று தோணுதா? நிற்க வச்சு ஏன் லேட் என்று கேள்வி கேட்கிறாய்?'' என்று அதட்ட சிரிப்பு வந்தது.

''வெறும் காபி போதுமா வசு? உனக்காக ஸ்பெஷலா பொங்கல், மெதுவடை எல்லாம் பண்ணி வச்சு இருக்கே! வா டிபனே சாப்பிடலாம்...'' என்று உபசரித்தாள் நிர்மலா.

''முதலில் காபி, அப்புறம் உனக்கு ட்ரெஸ் பண்ணி விடுறேன். நல்லா பசித்த பிறகு டிபன் சாப்பிடணும்'' என்றபடி அவளின் கையை பிடித்து உள்ளே இழுத்து சென்றவள் நிர்மலா கட்டிலில் உடுத்தி கொள்வதற்காக எடுத்து வைத்த உடையை பார்த்து முகம் சுளித்தாள்.

''காட்டன் புடவை சூப்பரா இருக்கும். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இந்த நல்ல நாளில் கொஞ்சம் கிராண்டா புடவை கட்டினால் என்ன தேய்ந்தா போய் விடுவாய்? இன்னிக்கு நீதான் முதலாளி. அந்த

லுக் இருக்க வேண்டாமா? அழுது வடியக் கூடாது...'' என்றவள் அலமாரியை திறக்க, அவளின் கையை பிடித்து தடுத்தாள் நிர்மலா.

''சின்ன ஃபங்க்ஷன் தானே? இது போதும்...'' என்று சமாளிக்க முயன்றவளை கண்டு கொள்ளாமல் உள்ளே சந்தன வண்ணத்தில் இருந்த மைசூர் சில்க் புடவையை எடுத்தாள்.

''இது ரொம்ப ப்ரைட் கலர் இல்லை. உன் டேஸ்டுக்கு ஏற்ற மாதிரி ஹாப் வைட்டில் இருக்கு. இதை கட்டிக்க...''

''இதுல இவ்வளவு பெரிசா ஜரிகை பார்டர் இருக்கே? அது உன் கண்ணில் படலையா?''

''ஜரிகை பார்டர் மூன்று இன்ச் தான் இருக்கும். இந்த வெளிரிய நிறம் மூன்று அடி அகலத்தில் இருப்பது உன் கண்ணுக்கு தெரியலையா?'' என்று அவளுக்கு மேல் குரலை உயர்த்தி அதட்டினாள்.

''சும்மா அடம் பிடிக்காதே வசு. வேலூரில் இருந்து யாராவது வருவாங்க. அவங்க பார்த்தால் ஏதாவது சொல்லுவாங்க...''

''அட லூசே!'' என்பது போன்ற ஒரு பார்வையை அவள் மீது வீசியவள், அலமாரியை திறந்து ஆராய்ந்து, இளம்பச்சையில் ஜரிகை ஓடிய காஞ்சீபுர பட்டை எடுத்தாள். ''வேலூரில் இருந்து வராங்களா! அவங்க ரேஞ்சுக்கு மைசூர் சில்க் போதுமா? காஞ்சி பட்டு வேண் டாமா? இதை கட்டிக்கோ'' என்று நீட்ட நிர்மலா அலறி னாள்.

''நான் இந்த வீட்டில் நிம்மதியா இருப்பது உனக்கு பிடிக்கலையா?'' என்று மிரட்ட, அவள் சிரித்தாள்.



''இந்த வீட்டுல நிம்மதியா இருக்க மங்கை அத்தை மனசு வச்சால் போதும். உனக்கு நல்ல புடவை கட்டி கூட்டி வர சொன்னதே அவங்க தான். நீதான் தேவை இல்லாமல் கண்டவங்களை நினைத்து பயப்படுகிறாய். நீ இதுவரை செய்த காரியத்திலேயே நான் ரொம்ப சந் தோஷமா நினைத்து பெருமைப் படும் விஷயம் என்றால், இங்கே இருக்கிறேன் என்று அம்மாவிடம் தடாலடியா சொன்னாயே அது தான். அதை பீட் பண்ண ஒரு விஷயம் இருக்கு. அதற்கு நீ சரி என்று சொன்னால் இன்னும் சந்தோஷப் படுவேன்...'' என்றவள் கண்களில் மறுமண குறிப்பு இருக்க அவள் முறைத்தாள்.

''இந்த மாதிரி பேசுவது என்றால், இனிமேல் எந்த விஷேசத்திற்கும் உன்னை கூப்பிடவே மாட்டேன் தெரிஞ்சுக்கோ'' என்று எரிச்சலுடன் அவள் சொல்ல அவள் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

''நீ கூப்பிட்டு தான் இப்ப வந்தோம் என்று நினைத் தாயா? இல்லைம்மா இல்லை...'' என்றவளுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவளின் சிரிப்பை பார்த்து ஹாலில் இருந்த பிரசன்னா அறைக்குள் எட்டி பார்த் தான்.

''நீ கூப்பிடா விட்டாலும், இந்த வீட்டுக்கு எங்களை வா வா என்று விரும்பி அழைக்க நிறைய பேர் இருக் காங்க தெரிஞ்சுக்கோ. சத்யா அவரால் வர முடியலை என்பதால், வீடியோ எடுத்து சீடீ அனுப்ப சொல்லி இருக்கார். அத்தோடு...'' என்று அவள் பேசும் போதே பிரசன்னா உள்ளே வந்தான்.

''ஆரம்பிச்சுட்டியா? சத்யாவோ, நிர்மலாவோ சின்ன குழந்தைகள் இல்லை. அவங்களுக்கு என்ன வேண்டும்

வேண்டாம் என்பதை அவர்களே முடிவு பண்ணி கொள்ளட்டும். நீ சொல்ல தேவை இல்லை. உங்க அக்காவுக்கு நாம் வாங்கி வந்த லாப்டாப் எடுத்துட்டு வந்து கொடுக்கலையா? அதை செய் முதலில்...'' என்று மனைவியை அதட்ட நிர்மலா விழித்தாள்.

''என்ன பார்க்கிறாய்? உனக்கு வழக்கு பார்க்கவும், மெயில் அனுப்பவும், பிரயோஜனமா இருக்குமே என்று கணினி வாங்க சொன்னேன். ஸ்டைலா போகிற இடத்துக்கு எல்லாம் எடுத்துட்டு போகலாம்...'' என்று சிரிக்க அவளுக்கு கண்கள் பனித்தது.

''சரி சரி, நீ கண்ணை கசக்கி கொண்டு நிற்காமல், சீக்கிரம் ரெடியாகி டிபன் எடுத்து வை. வாசலில் நிற்கும் காரில் இருந்து லாப் டாப் பையை எடுத்து வர எவ்வளவு நேரமாகும்? பத்து நிமிஷத்தில் சாப்பிட வந்து விடு வேன்'' என்று அதட்ட அவள் கண்ணீருக்கு இடையே புன்னகை செய்தாள்.

முன்னாள் ராணுவ வீரர்களின் நல வாரியத்தில் இருந்து வந்த அதிகாரி, உள்ளூரில் வசிக்கும் பிரபல புள்ளிகள், ஆகியோரை வைத்து குத்து விளக்கேற்றி எளிமையாக நடைபெற்ற விழாவின் முடிவில் கூரியரில் ஒரு தபாலும், கூடவே ஒரு பூங்கொத்தும் வந்து சேர, அனைவரின் கண்களும் அங்கே சென்றது.

மேடையில் அமர்ந்து இருந்த மங்கையும் நிர்மலாவும் எழ முடியவில்லை என்பதால் வசுந்தரா சென்று தபாலை வாங்க, நிர்மலாவுக்கு வியர்த்தது. அவளை பிரிக்காதே என்று சொல்வதும், வெடிகுண்டை கொளுத்தி போடு வதும் ஒன்று. கடவுளே! அவன் உள்ளே கடிதம் வைத்து இருப்பானே?



அழகான பூங்கொத்தை மேஜை மீது வைத்த வசுந்தரா, கடிதமாக இருந்தால் ஒரு வேளை தயங்கி இருக்கலாம். ஆனால் பெரியதாகவும் ஒட்டப்படாமலும் இருந்த அந்த கவரில் என்ன இருக்கிறது என்பதை பார்ப்பதில் வசுந்தராவுக்கு தயக்கம் எதுவும் இல்லை. சகஜமாக உள்ளே இருந்ததை எடுக்க முயன்றவளை பிரசன்னா வந்து தடுத்தான்.

''வசு உங்க அக்காவுக்கு சத்யா அனுப்பி இருக்கான். அதை நாம் பிரிப்பது நல்லா இருக்காது...'' என்று எச்சரிக்க, அவள் அழகு காட்டினாள்.

''ஹய்ய! உங்களுக்கும் உங்க ப்ரெண்ட் மாதிரிலே செம மூளைங்க. அக்கா பேரில் இருந்தால் என்ன? கவரை ஒட்ட கூட இல்லை பாருங்க. உங்க ப்ரெண்ட் விழா நல்லா நடக்க க்ரீட்டிங்ஸ் அனுப்பி இருக்கார். இப்படிதான் மிலிட்டரியில் ரகசியமா செய்தி சொல்லு வாங்களா?'' என்று சற்றே குரல் உயர்த்தி கணவனை அடக்கியவளால், அந்த அதட்டல் வேண்டாத இன் னொரு காதிலும் விழுந்ததையோ, அந்த வாழ்த்தட்டை அவள் கைக்கு போய் சேர்ந்ததையோ வசுந்தராவால் தடுக்க முடியவில்லை.

* * *

அரை மணி நேரம் நடந்த அந்த சின்ன விழாவினை வீடியோவில் படம் பிடித்ததோடு மட்டும் இல்லாமல், அடுத்த இரண்டு மணி நேரத்தில், எடிட்டிங் பண்ணி, இசை சேர்த்து, அதை அவனின் மின் அஞ்சலுக்கு அனுப்பியும் வைத்து விட்டான் பிரசன்னா.

மாலை அலுவலகத்தில் இருந்து வந்த உடனேயே, அவசரமாக மின் அஞ்சலை திறந்து பார்த்தவன், வீடியோ

காட்சிகளை பார்த்ததும் முகம் மலர்ந்தான். மூன்று மாதங்கள் முன்பு அவனின் போனில் எடுக்கப்பட்ட அந்த புகைப்படத்தில் இருந்த நிர்மலாவுக்கும் இந்த வீடியோ காட்சியில் இருந்த நிர்மலாவுக்கும் இடையே நிறைய வித்தியாசம் இருந்தது. நாற்பது நாட்களுக்கு பிறகு, அவளை நிழலாக என்றாலும் நேரில் பார்ப்பது அவனை சிலிர்க்க வைத்தது.

மேடையில் வீற்றிருந்த சந்தன நிறத்தில் மெரூன் வண்ண பார்டர் போட்ட எளிமையான புடவையில், சற்றே பெரிய மெரூன் வண்ண பொட்டில், முகத்தில் இருந்த புன்னகை கலந்த பெருமித உணர்வில், தாய்மை யின் மெருகுடன் மிளிர்ந்த நிர்மலாவை, ரசித்தான்.

எப்போதும் ஒதுங்கி நிற்கும் அவளை, துவக்க விழாவில், விளக்கை ஏற்ற வைத்த மங்கையர்க்கரசியின் பெருந்தன்மை அவனுக்கு ரொம்பப் பிடித்தது. அதை அவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலி லும், விழா குறித்து விசாரிக்கலாம் என்ற எண்ணத் திலும், அவரை அழைத்தான் சத்யா.

நீண்ட நேரம் மணி அடித்த பிறகு, போன் எடுக்கப் பட்டு, மங்கையின், ''ஹலோ...'' என்ற குரல் கேட்டது. இதுவரை ஊருக்கு கிளம்பிய பிறகு, அவன் இந்த மொபைலுக்கு இருபது முறையாவது அழைத்து இருப் பான். ஒவ்வொரு முறையும், அவனின் அழைப்பு என் பதை அவர்கள் உணர்ந்தே எடுப்பார்கள்.

நிர்மலா நேரடியாக பேசாத போதும் கூட, ''சத்யா...'' என்று சொல்லியே மங்கையிடம் கொடுத்ததால், ''சொல் லுப்பா...'' என்று தான் பேச்சே ஆரம்பிக்கும். இப்ப என்ன



ஆச்சு? ''நான் சத்யா பேசறேன். அதுக்குள்ளே தூங்கிட் டீங்களா?'' என்று தயக்கத்துடன் விசாரித்தான்.

''இல்லை சத்யா. சொல்லு, நல்லா இருக்கியா? நீ அனுப்பினாய் என்று விழாவிற்கு இரண்டு வாழ்த்து அட்டைகளும், பூங்கொத்தும் வந்தது...''

''விழா நல்லா நடந்ததாம்மா? பயிற்சிக்கு எத்தனை பேர் சேர்ந்தாங்க?''

''நல்லா நடந்தது. இருபத்தி ஐந்து பேருக்கு அனுமதி கொடுத்தாங்க இல்லையா? பதினாறு பேர் சேர்ந்து இருக்காங்க. ஒரு நாளில் இவ்வளவு சேர்ந்தது. இந்த சின்ன ஊருக்கு பெரிய விஷயம் தான் சத்யா...'' என்று சொல்ல அவன் ''நிர்மலா இல்லையாம்மா...?'' என்று சுற்றி வளைத்தான். 'கடிதம் பார்த்தாயா என்று கேட்க வேண்டுமே!'

''இருக்கா. காலையில் சீக்கிரம் எழுந்தது அலுப்பாக இருந்தது போல. படுத்து விட்டாள்...'' என்று சொன்ன வரின் குரலில் ஏதோ குறைந்தது.

''அம்மா... ஏதாவது பிரச்னையா...? என்னிடம் எப்படி சொல்வது என்று யோசிக்கிறீங்களா?''

''ச்சே ச்சே! அதெல்லாம் ஒன்றும் இல்லை சத்யா. அவங்க அண்ணி என்ற பேரில், வேலூரில் இருக்கே ஒரு லூசு. அவ வந்து இருந்தா. அவ எதையோ போகிற போக்கில் சொல்லிட்டு போக, நிர்மலா கொஞ்சம் மூட் அவுட். வேறே ஒன்றும் இல்லை. ரெண்டு நாளானால் சரியாகிடும்...''

''நான் இப்ப பேசறேனே... கொடுங்கம்மா...''

''ப்ச்! வேண்டாம் சத்யா. ஏற்கனவே குழப்பத்தில் இருக்கும் போது நீ பேச வேண்டாமே! ரெண்டு மூன்று நாள் கழித்து பேசலாம்'' என்று அவர் தயங்க பெரு மூச்சுடன் போனை வைத்தான் சத்யா.

## 25

'இப்போது நிர்மலாவிடம் பேசவேண்டாம்' என்று சொல்லி விட்டு போனை வைத்ததும், திரும்பி மருமகளை ஆராய்ந்த மங்கையின் முகத்தில் வருத்தத்தின் சாயல் ஒன்று படர்ந்தது. 'பொண்ணுக்கு பொண்ணு தான் எதிரி என்ற சொல் இவள் விஷயத்தில் அவங்க அண்ணி ரூபத்தில் சரியா வேலை செய்யுதே?'' என்று எரிச்சலுடன் எண்ணி தானும் படுத்து கொண்டார்.

தலைமாட்டில் இருந்து போன் விடாமல் அடித்த சப்தத்தில் கண் விழித்த மங்கை மருமகளை தேடினார். படுக்கையில் இல்லை. குளியல் அறையில் சப்தம் கேட்கவே, போனை எடுத்து அழுத்தினார்.

''அம்மா சத்யா பேசறேன். 'எப்படி இருக்கா?' என்று கேட்க நினைத்து, பாதியில் ''எப்படி இருக்கீங்க?'' என்று மாற்றினான்.

''ராத்திரி நீ போனில் பேசிய போது எப்படி இருந்தேனோ? அப்படியே தான் இருக்கேன். படுக்கையில் இருந்து கூட எழுந்திரிக்கவில்லை...'' என்றவாறே மணியை பார்த்தார். ஏழை நெருங்கி கொண்டு இருந்தது.



''அம்மா நான் ஆபீஸ் கிளம்பியாச்சு. நீங்க இன்னும் எழுந்திரிக்கவே இல்லையா? ஏன்? உடம்பு சரி இல்லையா?''

''ஒரு நாள் கூட கொஞ்ச நேரம் தூங்கக் கூடாதா? உடனே உடம்பு சரி இல்லை என்ற முடிவுக்கு வந்துடணுமா? நான் நல்லா இருக்கேன் சத்யா. நைட் யோசனை ஓடிட்டே இருந்ததில் தூங்க நேரமாகி விட்டது. அவ்வளவு தான்...''

''நிர்மலா எழுந்தாச்சாம்மா...?'' என்றவன் குரல் தணிந்து இருந்தது.

''எழுந்து விட்டாள். நான் இப்பதான் விழித்தேன். இன்னும் பார்க்கல.''

''யார் சொல்லும் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கணும், எதை தள்ளணும் என்று கூட தெரியாமல் இருக்க நிர்மலா என்ன சின்ன குழந்தையாம்மா? அவங்க அண்ணி என்ன சொன்னாங்க?'' என்றவன் குரலில் கோபம் இருந்தது.

''அவளுக்கு என்ன! வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்சதோ என்று பேசி விட்டாள். நாலு மாசம் கூட இன்னும் முடியலை. எங்க அப்பா இறந்து ஒரு வருஷம் கழியும் வரை எங்க அம்மா வீட்டை விட்டு வெளியே வரவே இல்லை. இங்கே மூன்றே மாசத்தில், வெளியூர் போவதென்ன? வெளி ஆட்களுடன் சிரிச்சு சிரிச்சு பேசுவதென்ன? இவள் இஷ்டத்திற்கு இருப்பதற்காக தானே நம் வீட்டுக்கு வர மாட்டேன் என்கிறாள்? என்னவோ என்னால் தான் வரவில்லை என்ற மாதிரி என்னை கரிச்சு கொட்டினீங்க... இந்த ரீதியில் பாவம் அவங்க மாமியாரை போட்டு காய்ச்சி எடுத்தாள்...''

''அவ்வளவு தானே? நான் கூட என்னவோ என்று பயந்து விட்டேன். நேற்று நான் அனுப்பிய க்ரீட்டிங்க்ஸ் நிர்மலா பார்த்தாச்சா?'' என்று ஆர்வத்துடன் விசாரித் தான்.

''நிர்மலாவுக்கு தெரியும். அதை பார்த்துட்டு தான் அவ கூட ரெண்டு வார்த்தை சேர்த்து பேசினாள்'' என்று சொல்ல முகம் வாடினான். அடுத்தவரின் வார்த்தை களுக்கு மரியாதை கொடுக்க வேண்டாம் என்று சொன்ன பிறகும், இப்படி முகம் வாடினால் என்ன செய்வது?

''சரிம்மா, ரெண்டு நாள் வசுந்தராவை வந்து இங்கே இருக்க சொல்லுங்க. கலகலன்னு பேசி சிரித்து ஒரு ஆள் கூடவே இருந்தால் மனசு மாறுமே...''

''நிர்மலாவை பற்றி மட்டும் நினைத்தால் பிரசன்னா ஆபீஸ் போக வேண்டாமா? என்ன பேசறே நீ?'' என்று மங்கை அதட்டவும் தான் அவனுக்கு தன் உளறல் புரிந்தது.

''சென்னையில் ஏதாவது அலுவலக வேலை சேர்த்து வச்சுட்டு, நீங்க அங்கே போயிட்டு வாங்க ஒரு மாற்றமா இருக்கட்டும் என்று சொன்னேன்...'' என்று சமாளித் தாலும், அவன் சொன்னது அவர் மனதிலுமே பதிந்தது.

வாழை நாரில் செய்யும் பொருட்களை விற்பது சம்பந் தமா சென்னையில் ஒரு சுய உதவி குழுக்களின் பொருட் களை விற்கும் அங்காடி முகவரி சொல்லி இருந்தாங்க. அதை பார்த்துட்டு வரலாமே? அவள் தயங்கினாலும், ரெண்டு அதட்டல் போட்டு இழுத்துட்டு போக வேண் டியது தான் என்று எண்ணியபடியே எழுந்து தன் வேலை களை கவனிக்க ஆரம்பித்தார். முதல் நாள் இரவில்



பயந்த அளவுக்கு இல்லாமல், குளித்து வந்த நிர்மலா வின் முகம் சாதாரணமாகவே இருந்தது.

''என்னம்மா! அசதியா இருக்கா? இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டியதுதானே? வயல் வேலைக்கு ஆள் வர சொல்லலையே?'' என்று சாதாரணமாக விசா ரிக்க அவருக்கு திருப்தியாக இருந்தது.

''வயலில் வேலை இல்லை நிர்மலா. வேலூர் வரை போகணும்...'' என்றதுமே ''நானும் வரட்டுமா...? எங்க அப்பாவை பார்க்கணும் போல இருக்கு...'' என்று சொல்ல வியப்பாக பார்த்தார். இவள் நிஜமாகவே அப்பாவை பார்க்க விரும்புகிறாளா?

''நிர்மலா என்ன ஆச்சு? ஏன் இன்னும் கிளம்ப லையா? சாவி எடுத்துட்டு வா...'' என்று சத்தம் கொடுத்த மங்கை கிளம்பி வெளியே வந்து சில நிமிடங்கள் ஆகி இருந்தது. பதிலும் வரவில்லை. கடைசி நேரம் வரை இவள் என்ன செய்கிறாள்?

நேற்றைய விழா முடிந்து சாமியானாவை எடுத்து சென்ற பிறகு, அங்கே இருந்த பொருட்களை குவித்து ஹாலில் ஒரு மூலையில் போட்டு இருந்த குவியலில் எதையோ கிளறி கொண்டு இருந்தாள்.

''என்ன தேடுகிறாய்?'' என்றவரின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

''நேற்று விழாவிற்கு வந்த ஆடிட்டர் ஒரு போன் நம்பர் கொடுத்தார். அதை ஒரு பேப்பரில் எழுதி வைத்து இருந்தேன். அதை... தேடினேன்...'' என்று இழுத்தவளின் கண்கள் அந்த குவியலிலே இருந்தது.

''சங்கர் ராமன் சார் தானே? அவர் நம்பர் என்னிடம் இருக்கே? அவருக்கே போன் பண்ணி அந்த நம்பரை திருப்பி கேட்டுக்கலாம். அதுக்கு ஏன் இந்த குப்பையை கிளறுகிறாய்? வா, மணியாச்சு...'' என்று அதட்ட அவள் அரைகுறையாக தலை அசைத்தபடி எழுந்தாள்.

கால்கள் மங்கை அம்மாவுடன் இணைந்து நடந்தாலும், மனம் வேகமாக சிந்தித்தது. எங்கே போய் இருக்கும்? நேற்று மதியம் பனிரெண்டு மணி அளவில் வசுந்தரா வின் கையில் பார்த்தாள். அப்போது பிரசன்னா அவளின் கையில் இருந்து அதை பிடுங்க முயற்சி செய்ததையும் கவனித்தாள்.

அதன் பிறகு ஒன்றரை மணி அளவில், அண்ணி அதை பற்றி கண்ணிய குறைவாக ஏதோ பேசியது காதில் விழுந்தது. ஆனால் அந்த அட்டை அப்போது கண்ணில் படவில்லை. அந்த பேச்சு தனக்குள் ஏற்படுத் திய தாக்கத்தில் அது எங்கே என்று தேட தோன்ற வில்லை.

ஆனால் இரவு எட்டு மணி அளவில், கண்களை மூடி தூங்குவதாக பாவனை செய்தபடி படுத்து இருந்த போது, மங்கை சத்யாவிடம் பேசியதை கேட்ட பிறகே நினைவு வந்தது. 'பார்த்துட்டாள். வசுந்தரா தான் வாங்கியது...' என்று அவர் சொன்ன, தொடர் காதில் விழுந்த பிறகு, அந்த அட்டையை பார்க்கவே இல்லையே என்பது உறைத்தது.

அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து இரண்டு மணி நேரம், மொத்த வீட்டையும் அலசிய பிறகும், அந்த வாழ்த்தட்டை அவள் கண்ணில் படவே இல்லை. அது



சென்னைக்கு வசுந்தராவோடு சென்று விட்டதா? வேலூருக்கு அண்ணியுடன் சென்று விட்டதா என்பதை கண்டறிய வேண்டிய கட்டாயம் என்பதை வெளியே சொல்லவும் முடியவில்லை. வசுந்தரா போன்ற ஓட்டை வாய் தங்கையிடமோ, வம்பு பேசும் அண்ணியிடமோ எப்படி விசாரிப்பது என்று குழம்பியவளுக்கு மண்டை காய்ந்தது.

''நிர்மலா எங்கே பராக்கு பார்த்து கொண்டு நிற் கிறாய்? பஸ் வந்துடுச்சு பாரு...'' என்ற அதட்டலில் கலைந் தவள் பேருந்தில் ஏறினாள். இருக்கையும் கிடைக்க, அமர்ந்த உடனே, ''சங்கர் ராமனிடம் யார் போன் நம் பரோ வாங்கணும் என்று சொன்னாயே? கேளு'' என்று தன்னிடம் இருந்த நம்பரையும், போனையும் அவளிடம் நீட்டினார்.

சில நிமிடங்கள் முயற்சி செய்து விட்டு, 'சிக்னல் இல்லை போலம்மா...' என்ற முணுமுணுப்புடன் டயரியை கொடுத்தவள், அவர் பார்த்து சிக்னல் இருக்கே என்று சொன்னால் என்ன பதில் சொல்வது என்ற பயத்தில், போனை கவனமாக தன்னுடனேயே வைத்து கொண்டாள்.

சில நிமிடங்களிலே போன் அழைக்க, 'ஆடிட்டர் தான் பேசுறார் பேசு...' என்று மங்கை சொல்ல 'தான் முயற்சி செய்யவே இல்லையே? அவர் எப்படி அழைக்க முடி யும்?' என்ற குழப்பத்துடன் போனை பார்த்தாள். திரை யில் சத்யாவின் பெயர் மின்ன, அவளின் குழப்பம் கூடி யது. போனை அவரிடமே நீட்டி, ''சத்யா சார்...'' என்று சொன்னாள்.

''காலையிலேயே என்னிடம் பேசிட்டான். உன்னிடம் தான் ஏதாவது கேட்கணுமா இருக்கும். நீயே பேசு. ஓடுற பஸ்சில் எனக்கு சரியா காதிலும் விழாது'' என்று சொல்லி விட்டு இருக்கையில் சாய்ந்து அமர்ந்தார்.

''ஹலோ...'' என்ற குரல் அவன் காதுகளை சென்றடையும் முன்பே, ''நிர்மலா...'' என்ற கனிவான குரல் அவளின் காதுகளை தழுவி, இதயத்தில் நுழைந்தது.

''நீங்க இந்நேரத்துல போனில்...? ஆபீஸ் போகலையா?'' என்றவள் குரல் மெலிதாக இருந்தாலும், அதில் அக்கறை தென்படவே செய்தது.

''போயிட்டு வந்துட்டேன்...''

''உடம்பு எதுவும்...'' என்று இழுத்தவளின் கண்கள் மங்கை அம்மாவை அளவிட்டது.

''உடம்பு நல்லா தான் இருக்கு. மனசுதான் சரி இல்லாமல் இருந்தது. அதுவும் இப்ப சரியாகிற மாதிரி தெரியுது...'' என்றவன் குரலில் ஆரம்பத்தில் இருந்த குழப்பம் குறைந்து தெளிவு எட்டி பார்த்தது.

''என்ன ஆச்சு...?''

''ப்ச்! அதை விடு. அதான் பாஸ்ட் என்று சொல்லிட்டேனே. நேற்று ரெண்டு விழாக்களும் அமர்க்களமா நடந்தது போல! என்ன ஹாரன் சத்தம் கேட்கிறது? வெளியே எங்கேயாவது போகிறாயா? எங்கே?'' என்ற உற்சாக குரலில் அடுத்தடுத்த கேள்விகளை அடுக்கினான்.

''ம்ம்ம்... வேலூர் வரை போகிறேன். அம்மா வீட்டிற்கு...''



''அம்மா வீட்டிற்கு...? தனியாகவா? என்ன விஷயம்? எதுவும் பிரச்னையா?'' என்றவன் குரலில் கவலை எட்டி பார்த்தது.

''சும்மா அம்மாவை பார்க்க போகிறேன். மங்கை அம்மா என்னுடன் கூட வராங்க...'' என்றவளின் விளக்கத்தை நம்ப முடியவில்லை.

''நிர்மலா... உங்க அம்மாவுக்கு எதுவும்...''

''அதெல்லாம் இல்லை. சும்மா தான் எங்க வீட்டுக்கு போகிறேன். போகக் கூடாதா?'' என்று அவசரமாக மறுத்தவளுக்கு இவன் ஏன் இப்படி நோண்டுகிறான் என்று தோன்றியது.

''போ... க... லா... ம்...'' என்று இழுத்தவனுக்கு அவளாக கடிதம் பற்றி ஏதாவது சொல்ல மாட்டாளா என்ற ஆர்வம் தலை தூக்கியது. ''க்ரீடிங்க்ஸ் பார்த்தாயா நிர்மலா?'' என்று கேட்க, அவள் பதட்டம் கூடியது.

''பார்த்தேன்...''

''அதில் இருந்த லெட்டர்...'' என்று கேட்டவனின் குரலே, தமிழ் தெரியாத ஊரில், தனியாக இருந்து பேசும் சத்யாவின் குரலே இரகசியமாகி விட்டது என்றால், அருகில் மாமியாரை வைத்து கொண்டு பேசும் நிர்மலாவின் நிலையை என்ன சொல்ல?

''இ... ல்... லை...'' என்று முணுமுணுக்க அவனுக்குள் ஏமாற்றம் பரவியது.

''ஓ...! பார்த்துட்டு போன் பண்ணு நிர்மலா. முடிவு சொல்லா விட்டாலும் கூட, பார்த்துட்டேன் என்ற தகவலையாவது சொல்லு நிர்மலா. நான் காத்திருக்கிறேன்''

என்று சொன்னவன் குரலில் எல்லை இல்லாத ஏமாற்றத்தை அவளால் உணர முடிந்தது.

அவன் என்ன சொல்லி இருக்கிறான்? அதை தான் ஒத்துகொள்வோமா இல்லையா என்பதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், அது தங்களுக்கு இடையே நடக்கும் பரிவர்த்தனையாக இருக்க வேண்டும். அது மூன்றாம் நபரின் கையில் பட்டு, அதன் கண்ணியத்தை மதிக்க தெரியாமல் யாராவது ஏதாவது சொல்லி, புதிதாக பிரச்னைகள் வராமல் இருக்க வேண்டுமே!

சத்யாவிடம் பேருந்தில் செல்லும் போது நிர்மலா தாழ்ந்த குரலில் பேசிய வார்த்தைகளில் இருந்து எதையும் மங்கையால் ஊகிக்க முடியவில்லை. அவளின் நடவடிக்கைகளை கவனிக்க ஆரம்பித்தார்.

அம்மாவிடம் முந்தைய நாள் காவேரிப்பாக்கத்தில் இருந்து எப்படி வந்தீர்கள்? பேருந்தா? ஆட்டோவா? கையில் என்ன கொண்டு வந்தீர்கள்? போன்ற கேள்விகளை நிர்மலா கேட்டது வியப்பில் ஆழ்த்தியது.

முன்தினம் தன் வீட்டிற்கே வந்து கௌரவ குறைச்சலாக பேசிய ஒருத்தியின் அறைக்குள் சென்று, அவளின் அலமாரியை ஒதுக்கி தந்த தன் மருமகளின் நடவடிக்கையை ஒத்து கொள்ள முடியவில்லை. எப்போதும் இங்கே வந்தால் செய்யும் உதவி என்றாலும், இன்று செய்ததை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. இவள் என்ன அவளுக்கு அடிமையா? இப்படி சேவகம் செய்தால் அவள் பேசாமல் என்ன செய்வாள் என்ற ஆத்திரமே வந்தது.

அங்கிருந்து மதிய உணவிற்கு பிறகு கிளம்பி வெளியே வந்த உடன், ''நாம் ரெண்டு பேரும்



சென்னைக்கு போய் வருவோமாம்மா?'' என்ற நிர்மலாவின் கேள்வி மங்கையின் எரிச்சலை மறக்க வைத்து வியப்பை கொடுத்தது.

''சென்னைக்கா? என்ன விஷயம்?'' என்று குறுகுறுப்புடன் கேட்க, ''வாழை நார் பொருட்களை விற்பனை செய்வது தொடர்பான அந்த மையத்தை பார்த்து விட்டு வரலாமே...!'' என்று காலையில் தான் சொல்ல நினைத்த சாக்கினை சொல்ல அவரின் வியப்பு கூடியது.

இது உண்மை காரணம் இல்லை என்பது புரிந்து விட்டதாலேயே, மேலே துருவாமல், 'சரிம்மா...' என்று சொல்ல வைத்தது.

# 26



சென்னைக்கான பேருந்தில் ஏறி அமர்ந்த பின்னரே, 'வசுந்தராவுக்கு தகவல் சொல்லாமல் இப்படி திடு திப்பென்று போய் நிற்பது சரியா?' என்ற சந்தேகம் நிர்மலாவுக்கு வந்தது.

கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு அருகில் தான் அந்த விற்பனை வளாகம் இருந்தது. ஐந்து மணிக்கு சென்றால் கூட அங்கே இரண்டு மணி நேரம் செலவு பண்ணினாலும், வசுவின் வீட்டுக்குப் போக எட்டு மணியாகிவிடும். இரவு அங்கே தங்கி விட்டு, அதிகாலையில் கிளம்பி விடலாம் என்பது அவளுடைய திட்டம். அதை மங்கையிடமும் வசுந்தராவிடமும் எப்படி சொல்வது?

''அம்மா, இங்கே ரெண்டு மணி நேரத்தில் அந்த அங்காடி பார்த்து விட்டாலும், வசுந்தராவை பார்க்காமல் கிளம்பினால் அவள் என்னை ஒரு வழி ஆக்கி விடுவாள். அவளையும் ஒரு நடை எட்டி பார்த்துட்டு போகலாமா?'' என்று விசாரித்தாள்.

''அங்கே வீட்டுக்கு போனால் நைட் காவேரிப்பாக்கம் திரும்ப முடியாதே நிர்மலா? வீட்டுல போட்டது போட்ட படி கிடக்கு. இன்னிக்கு வெளியூர் பிரயாணம் முன்னாடியே ப்ளான் பண்ணலையே?'' என்று தயங்கினாலும், கண்கள் கூர்மையாக ஆராய்ந்தது.

''ஆமாம்மா! ஆனால் எட்டு மணிக்கு கிளம்பினாலும், அன்று மாதிரி அங்கே போக நைட் பதினொன்றரை ஆகும். அப்படி அர்த்த ராத்திரியில் போவதற்கு, காலையில் சீக்கிரம் எழுந்து நாலு அஞ்சு மணிக்கு கிளம்பினால் கூட எட்டு மணிக்கு வீட்டுக்கு போய் விடலாமேம்மா. அவளுக்கும் திருப்தியா இருக்கும்...'' என்று சமாதானம் சொல்ல அவர் தலை அசைத்தார்.

''புதுசா கல்யாணம் ஆனவங்க. வெளியே எங்கேயாவது போக நினைக்கலாம். நைட் வேறே தங்க நினைக்கிறோம். திடு திப்புன்னு போய் நிற்கக் கூடாது. போனில் பேசிட்டு முடிவு பண்ணலாம் நிர்மலா...'' என்று சம்மதம் சொல்ல அவளின் முகத்தில் ஸ்விட்ச் போட்ட மாதிரி வெளிச்சம் பரவியது. போனை எடுத்து தங்கையின் அலைபேசிக்கு அழைத்தாள்.

''ஹேய் நிம்மி... நீயா...? மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டி வெள்ளம் பெருகி சென்னையே மூழ்கப் போகுது போ...'' என்ற தங்கையின் குரல் கேட்டதும் புன்னகை செய்தாள்.



''ஏன் வசு அப்படி சொல்ற? நான் உன்னிடம் பேச மாட்டேனா என்ன?''

''பேசுவ. கம்மியா பேசுவ. அதுக்காக அன்பு கம்மி என்று அர்த்தம் இல்லை. அதை விடு. நேற்றைய குண்டு வெடிப்பில் இருந்து மீண்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விட்டாய் போல. குட். எங்கேயோ பஸ்சில் போகிற மாதிரி இருக்கு. வெளி வேலைக்கே கிளம்பியாச்சா? சூப்பர் நிம்மி...'' என்று மூச்சு விடாமல் பேசினாள் வசுந்தரா.

''இதுக்கே சூப்பர் என்றால், அடுத்து நான் சொல்ல போவதை கேட்டால் நீ என்ன செய்வாயோ? நான் இப்போ சென்னைக்கு வரேன். அப்படியே நைட் உன் வீட்டுக்கு வரலாமா?'' என்று நிர்மலா முடிக்கும் முன்பே ''இதென்ன கேள்வி. கட்டாயம் வா. எந்நேரம் வருவாய் சொல்லு. நானே பஸ் ஸ்டாண்டுக்கு வரேன்...'' என்று வசுந்தரா இடையிட்டாள்.

''வசு. என் கூட அத்தை இருக்காங்க. நாங்க போக வேண்டிய இடம் கோயம்பேடு பக்கத்திலேயே இருக்கு. முடிச்சுட்டு எட்டு மணிக்குள்ளே வீட்டுக்கு வந்து விடுவோம். நாளைக்கு காலை நாலு நாலரைக்கு அங்கிருந்து கோயம்பேடு வர ஒரு கால் டாக்சி மட்டும் புக் பண்ணிடு வசு. அது போதும். ஏதாவது தேவை என்றால் நானே போன் பண்ணுகிறேன். பயப்பட வேண்டாம். ஓகே...'' என்று போனை வைத்தாள் நிர்மலா.

சென்னை வருவதற்கு சொன்ன பொய் காரணத்தையும் மெய்யாக்கி, அந்த வணிக வளாகத்தை சுற்றி பார்த்து, கொண்டு வந்த போட்டோ ஆல்பத்தை காட்டி,

விலை விபரம் சொல்லி, விற்பனை செய்வது குறித்து நிர்வாகியுடன் விரிவாகவே கலந்து பேசினார்கள்.

''உங்களுடைய கைவினை பொருட்கள் நல்லா இருக்கு. ஆனால் எந்த அளவுக்கு வரவேற்பு இருக்கும் என்பதை இப்போ சொல்ல முடியாது. நீங்கள் தயார் செய்யும் அனைத்து ரக பொருட்களையும், ஒவ்வொன் றிலும் நூறு பீஸ் கொண்டு வந்து பார்வைக்கு வைங்க. அதன் விற்பனையை பொறுத்து, இரண்டு மாதங்கள் கழித்து லாப சதவிகிதம் நிர்ணயம் செய்யலாம்...''

''பொருட்களை பார்வைக்கு வைத்தால் தானே சார் விற்குமா விற்காதா என்று தெரியும்...'' என்று இடை யிட்டவளை பார்த்து புன்னகை செய்தார்.

''உண்மை தான். ஆனால் நான் முதல் போட்டு ரிஸ்க் எடுக்க தயாரில்லை. இப்போதைக்கு உங்களின் பொருட்களை வைப்பதற்கு வாடகை மாதிரி குறிப்பிட்ட தொகையை கொடுத்து விடுங்க. நீங்க சொல்லும் விலை யில் பொருளை விற்கிறோம். விற்றால் விலையை தருகிறோம். இல்லை என்றால் இரண்டு மாதம் முடிவில் நீங்க பொருட்களை எடுத்து செல்லலாம்'' என்று நிர்வாகி சொன்னதில் அவர்களுக்கும் உடன்பாடு இருந்தது.

''நிச்சயமா இதுக்கு சென்னையில் நல்ல மார்க்கெட் இருக்கும் நிர்மலா. விலையும் சகாயமா தானே இருக்கு. பிசினெஸ் நல்லா போக வாய்ப்பு இருக்கு. ஒத்து கொள் வோம்'' என்று மங்கையும் தைரியம் அளித்தார்.

''ஒரு வாரத்தில் வந்து ஒப்பந்தம் போட்டு கொள் கிறோம்'' என்று சந்தோஷமாக சொல்லி விட்டு,



தங்கையின் வீட்டிற்குள் படபடக்கும் இதயத்தோடு அடி எடுத்து வைத்தாள் நிர்மலா.

''ஹேய் நிம்மி...'' என்ற வசுந்தராவின் உற்சாக வர வேற்பு எதிர் கொண்டது.

''நேற்று நீ எங்களை வழி அனுப்ப கூட வெளியே வரவில்லை என்பதை பார்த்து விட்டு பிரசன்னாவிடம் நான் புலம்பிக் கொண்டே வந்தேன். எனக்கு வந்த ஆத் திரத்தில், அவனிடம் சொல்லி அண்ணியை பேசாமல் தொலைச்சு தலை முழுகிடு' என்று கத்திவிட்டேன் தெரியுமா?'' என்று ஆத்திரத்தோடு அவள் சொன்ன பிறகே இன்று வீட்டில் அவள் ஓரளவிற்கு அமைதியாக இருந்த காரணம் மங்கைக்கும் நிர்மலாவுக்கும் புரிந்தது.

''ஏன் வசு, வீட்டுல எல்லாத்தையும் அப்படி அப்ப டியே போட்டு வச்சு இருக்க? ஊருக்கு போயிட்டு வந்தால், அந்த பையில் இருக்கும் பொருட்களை கூட எடுத்து வைக்க மாட்டாயா?'' என்று அதட்டினாலும் உள்ளுக்குள் நன்றி உணர்வு தோன்றியது.

''நேற்று கட்டின புடவையை துவைக்க போடலை. ஆனால் அத்தை கொடுத்த ஸ்வீட் பாக்சும், ஆப்பிளும் மட்டும் நேற்று நைட்டே எடுத்து விட்டேன்'' என்று பெருமையாக சொல்ல அவள் படபடக்கும் நெஞ்சத் துடன் அந்த பையை எடுத்து ஆராய்ந்தாள்.

நேற்று அங்கே விழாவுக்கு வந்திருந்த மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் தயாரிக்கும் பொருட்கள் குறித்த விபரங்கள், அரசாங்கம் செயல்படுத்தும் நல திட்ட உதவிகள் குறித்த பேப்பர்கள், ஆடிட்டரிடம் வருமான வரி விலக்கு பெற செய்ய வேண்டிய

வேலைகள், என்று தனக்காக விழாவிற்கு வந்திருந்த பலரிடமும் பல்வேறு தகவல்களை சேகரித்த அத்தனை பேப்பர்களும் சத்யா அனுப்பிய வாழ்த்து அட்டையை தவிர அந்த பைக்குள் இருந்தது.

முதல் முறை அவசரமாக ஆராய்ந்தவள், தன் கண்களையே நம்ப முடியாமல் மீண்டும் ஒருமுறை நிதானமாக பார்வையிட்டு அத்தனை காகிதங்களையும் ரக வாரியாக பிரித்து அடுக்கினாள். ஒவ்வொரு பேப்பருக்குள்ளும், ஏதாவது ஒட்டி இருக்கிறதா என்று சோதனை செய்தாள். ம்ஹூம்! இல்லை.

''நீ கிச்சனுக்குள்ளே வரக்கூடாது. உனக்காக நான் சமைக்கிறேன்'' என்று சொல்லி விட்டு உள்ளே இருந்த வசுந்தராவை மனம் கேளாமல், தேடி சென்றாள்.

''சமையலுக்கு வரலை வசு, காய்கறிகளை பிரிட்ஜில் அடுக்கி வைக்கிறேன். 'நேற்று சத்யா அனுப்பி நீ வாங்கிய கிரீட்டிங்க்ஸ்-ல என்ன இருந்தது வசு? நான் பார்க்கலை...'' என்று அக்கறை இல்லாதது போல கேட்டாள்.

''சத்யா அனுப்பியதுல என்ன இருந்தது? வாழ்த்தட்டை தான். கனமா இருந்தது. அன்புள்ள, நட்புள்ள, அந்த மாதிரி தலை வால் எதுவுமே கையெழுத்துக்கு முன்னால் இல்லை. அதை நீ பார்ப்பதும் ஒன்று தான் பார்க்காததும் ஒன்று தான்...'' என்று அலட்சியமாக உதட்டை பிதுக்க அவளுக்கு உள்ளுக்குள் வலித்தது. அவன் சொல்ல வேண்டிய விஷயம் வேறு இடத்தில் அல்லவா இருக்கிறது? அவனின் அன்பையும் கண்ணியத்தையும் இவள் புரிந்து கொள்ளவில்லையே!



''அது இப்போ எங்கே...?'' என்று சமாளித்து அவள் குரலில் இருந்த அதே அலட்சியத்தை காட்டி விசாரித்தாள் நிர்மலா.

''நானா அதை எடுத்துட்டு வந்தேன்? உங்க வீட்டில் தான் இருக்கணும்'' என்று சொல்ல அவளுக்கு தூக்கி வாரி போட்டது.

நேற்று மதிய விருந்து முடிந்த பிறகு சுத்தம் செய்ய பண்ணையாட்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அதை தூக்கி குப்பையில் போட்டு விட்டார்களோ? புத்தம் புது வாழ்த்தட்டையை எப்படி தூக்கி போடுவார்கள் என்ற கேள்வி எழுந்தாலும், சின்ன குழந்தைகள் விளையாட்டு தனமாக இழுத்து கிழிந்து விட்டதோ? என்னென்னவோ எண்ணம் தோன்ற அதற்கு மேல் அந்த வீட்டில் இருக்கவே முடியவில்லை.

''காலையில் நாலு மணிக்கு வண்டி சொல்லி இருக்காயா வசு...?'' என்று மெலிந்த குரலில் விசாரித்தாள்.

''காலை நாலு மணியா...? என்ன விளையாடுகிறாயா? எனக்கு போனில் மாலை நாலு மணி தானே சொன்னாய்? மதிய சாப்பாடு இல்லாமல் கிளம்புவாயா? உதை தான் கிடைக்கும்...'' என்று வசுந்தரா மிரட்ட அவளுக்கு கண்களை கரித்து கொண்டு வந்தது.

''இல்லை வசு, அத்தைக்கு வீட்டில் வேலை இருக்கும். அங்கே வீட்டை பூட்டிப் போடுவது பழக்கமே இல்லை. அதனால் நாங்க சீக்கிரமே கிளம்பணும்...'' என்று தயங்கினாள்.

''இப்ப அத்தை உனக்கு ஓகே சொல்லணும். அவ்வளவு தானே? ரெண்டே நிமிஷத்துல சொல்வாங்க. நீ

இங்கேயே இரு...'' என்று சொல்லி விட்டு வெளியே போனாள். மங்கையிடம் என்ன சொன்னாளோ? அடுத்த வினாடியே அவரும் கூடவே வந்து ''மதிய சாப்பாட்டுக்கு மேலே கிளம்பலாம் நிர்மலா...'' என்று சொல்ல அவளுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''என்னம்மா... சொல்றீங்க...? அங்கே நாம் யாரிடமும்...''

''அதனால் என்ன நிர்மலா? நாளைக்கு எப்படியும் போய்டுவோமே. ஒரு நாள் இங்கே தங்கி இருப்பதில் தப்பே இல்லை. ஏதோ அவளுக்கு ஒரு சந்தோஷம்...'' என்று சொன்னவரின் குரலிலும் குதூகலம் சேர்ந்து இருந்ததை அவளின் மனநிலை சரி இல்லாததால் உணரவே இல்லை.

அடுத்த நாள் காலையில் அலுவலகத்துக்கு செல்லாமல் அவள் பெயரில் ஸ்கைப் கணக்கு ஆரம்பித்து, கணினி மூலம் செலவின்றி, முகம் பார்த்து பேசலாம் என்று கற்று கொடுத்ததோடு, காலை ஏழு மணிக்கு சத்யாவை அழைத்து நேருக்கு நேர் முகம் பார்த்து பேச வைத்து நாளை இனிமையாக துவக்கி வைத்தான் பிரசன்னா.

''ஹேய்! நிர்மலா, நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை...'' என்று கண்கள் மின்ன உற்சாகத்துடன் சொன்ன சத்யாவை பார்த்ததும் தன்னையும் அறியாமல், இதழ்கள் விரிந்து, கண்கள் மலர்ந்தது. இனிய அதிர்வலைகள் தோன்றியது.

பிற்பகல் சமையலுக்கு வசுந்தரா நிர்மலாவை அடுக்களை பக்கம் எட்டி பார்க்க விடாமல் தானே முயன்று



செய்த, ஐந்து வகை கலந்த சாதத்தை தட்டில் வைத்து, கருப்பில் அழகான காட்டன் புடவை கொடுக்க மனம் குழைந்து கண் கலங்கினாள்.

''என்ன வசு இதெல்லாம்...'' என்றவளுள் குரலில் கண்ணீர் இருந்தது.

''பார்த்தால் தெரியலை? பிறந்த வீட்டு சீதனம் இதெல்லாம். இது கருப்பு புடவை. இது கலந்த சாதம். அஞ்சாம் மாசம் இல்லையா? அதனால் ஐந்து சாதம் செஞ்சேன். இது புளியோதரை, இது லெமன் சாதம், இது கறிவேப்பிலை சாதம், இது தேங்காய் சாதம், இது தயிர் சாதம், இதெல்லாம் கூட இத்தனை வருஷம் சமையல் பண்ணி நீ கற்று கொள்ளவில்லையா?'' என்று கேலியாக சிரித்த வசுந்தராவை பெருமையாக பார்த்தான் பிரசன்னா.

''இதெல்லாம்... எனக்கு... அம்மா ஸ்தானத்தில்... இருந்து...'', என்று நிர்மலா திணற, அவளை அணைத்து, ''நேற்று இது செய்யணும் என்று சொன்னதால் தான் சம்மதம் சொன்னேன் நிர்மலா...'' என்று மங்கை சொல்ல அவளின் கண்ணீர் கலந்த கனிவான பார்வை தங்கையின் புறம் திரும்பியது.

''அய்ய! போதும் நிம்மி, உன் வாடர் பால்சை திறக்காதே! இதெல்லாம் இனாம் என்று நினைத்து விடாதே. இதை எல்லாம் கூடிய சீக்கிரமே எனக்கு ஒன்றுக்கு பத்தா பெருக்கி நீ திருப்பி செய்யணும். புரிஞ்சுதா? அதுக்காக தான் நீ காலை நாலு மணி சொன்னதை மாலை நாலு மணி என்று மாற்றினேன். உன்னிடம் சொன்னால் நீ எதுக்கு இதெல்லாம் என்று கண் கலங்குவாய்.

அதனால் தான் உனக்கு சொல்லலை...'' என்று பெரிய மனுஷி தோரணையில், அவள் சொன்ன தொனியில், முதல் நாள் எந்த விஷயத்திற்காக இங்கே வந்தோம் என்ற நினைவே நிர்மலாவுக்கு மறந்து போக, தாயாக மாறிய தங்கையின் அன்பில் நெகிழ்ந்து கரைந்து போனாள்.

# 27



பிற்பகல் உணவிற்கு பிறகு ஏற்பாடு செய்து இருந்த வாடகை வண்டியில் பிரசன்னா-வசுந்தரா, இருவருமே பேருந்து நிலையம் வரை உடன் வந்து உரிய பேருந்தில் முறையாக வழி அனுப்பி வைக்க இருவருக்குமே சந்தோஷமாக இருந்தது.

''வசுந்தரா நீ வரேன் என்று சொன்ன ஒரு வார்த்தையை மட்டும் வைத்து, அரை நாளில், இத்தனை ஏற்பாடு பண்ணுவாள் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை நிர்மலா...'' என்று பெருமையாக சொன்ன மங்கையை பார்த்து புன்னகை செய்தாள்.

''வசுவை பற்றி நிறைய பேர் அப்படி தான் நினைத்து கொண்டு இருக்காங்க அவளுக்கு படிப்பு தான் வராது. நிறைய விஷயங்களில் படு சுட்டிகை. இதுவா அதுவா என்று போட்டு குழப்பி அடிக்காமல், நிமிஷமா முடிவெடுத்து, பிரமாதமா செயல் படுத்துவாள்...''

''உண்மை தான் நிர்மலா. உங்க அம்மாக்கு செய்யணும் என்ற ஆசை, ஊர் என்ன சொல்லுமோ என்ற



பயம், ரெண்டுக்கும் இடையில் அல்லாடி நம்ம வீட்டுக்கு வந்த போது சொல்லி வருத்தப் பட்டாங்க. அதை அவள் கேட்டு, நீ இங்க வரேன் என்றதும் அதை செயல் படுத்திட்டாள். சமத்து தான்...'' என்று பெருமையாகவே ஒத்து கொண்டார்.

''இங்கே கம்பியூட்டரில் சத்யாவை நேரில் பார்த்து பேசுற மாதிரி வந்ததே! இதே மாதிரி நம் வீட்டில் இருக்க லாப் டாப்பிலயும் வருமா?'' என்று ஆர்வத்துடன் கேட்க அவள் தலை அசைத்தாள்.

''வரும்மா...''

''அப்ப வாரத்துக்கு ஒரு தடவை வசுந்தராவுட்னும், சத்யாவுடனுடம் ஞாயிற்றுக் கிழமையா பார்த்து சாவகாசமா பேசிடணும். போட்டு கொடு...'' என்று அவளின் பிரதிபலிப்பை கவனித்தார்.

''செய்யலாம்மா...'' என்ற ஒற்றை வார்த்தையுடன் முடித்தாலும் முகத்தில் சந்தோஷமே இருந்தது.

''இந்த முறை சென்னைக்கு வந்ததில் ஒன்றுக்கு மூன்றா நல்ல விஷயங்கள் நடந்து இருக்கு. உனக்கு சந்தோஷமா?'' என்று மங்கை துருவ அவள் புன்னகை செய்தாள்.

''கையில் இருப்பதை வைத்து சந்தோஷப் படுவது தானேம்மா நல்லது. எது நடந்தாலும் அது நம் நல்லதுக்கு தான் என்று நினைத்தாலே போதும். அத்துடன் நமக்கு எது நல்லது என்று நம்மை விட நம்மை படைத்த ஆண்டவனுக்கு நல்லா தெரியும்மா...''

அவள் தத்துவமாக பதில் சொன்னதிலேயே, வேறு எதையோ எதிர்பார்த்து வந்து இருக்கிறாள் என்பதையும்

அது நடக்கவில்லை என்பதையும் அவரால் ஊகிக்க முடிந்தது. ஆனால் அது என்னவாக இருக்கும் என்று அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

நிர்மலா, தன் வாழ்க்கையில் முதல் முறையாக, சென்னையில் பிரசன்னாவின் உதவியுடன், ஸ்கைப்பில் சத்யாவுடன் நேரில் பேசிய போது எழுந்த இனிய படபடப்பும் ஆர்வமும் அடுத்து ஒவ்வொரு முறை பேசும் போது அவள் கண்ணில் வெளிப்படவே செய்தது.

நடுவே, மங்கை அருகில் இல்லாத ஒரு சமயத்தில், 'லெட்டர் பற்றி எதுவுமே சொல்லவில்லையே நிர்மலா...?' என்ற கேள்வி அவளை வாட்டியது. அவள் தேடாத இடம் பாக்கி இல்லை. இந்த வீட்டின் குப்பை குழி வரை, மங்கை அம்மாவிற்கு சந்தேகம் வராத வகையில் தேடியாச்சு. லெட்டரை கண்டு பிடிக்க முடியவில்லை. அதை தொலைத்து விட்டேன் என்ற உண்மையை சொல்ல வாய் வரவில்லை.

வசுந்தரா, அண்ணி இருவரின் கையிலும் அது மாட்டவில்லை. மற்றவர்களுக்கு அது செய்தி இல்லை. அதனால் தான் இந்த ஒரு வாரத்தில் வேறு வெடிகுண்டு எதுவும் வரவில்லை என்பதால், அதை பற்றி கவலைப் படுவதை விட்டு விட்டாள் நிர்மலா. தனக்கு எது நல்லது என்று ஆண்டவனுக்கு தெரியும். சத்யாவிற்கு தன் வாழ்க்கையில் இடம் உண்டு என்று அவர் நினைத்தால், இது இல்லாமலேயே நடக்கட்டும் என்று எதிர்காலத்தை இறைவன் கையில் கொடுத்து விட்டாள்.

''காலம் நமக்கு என்ன வைத்து இருக்கிறது என்று நமக்கு தெரிவதில்லை. வாழ்க்கையில் எனக்கு எந்த



எதிர்பார்ப்புகளும் இப்போதைக்கு இல்லை. இப் போதைக்கு தொழிலும் என் குழந்தையும் நல்லபடியாக வளரட்டும் என்பது மட்டுமே என் பிரார்த்தனை...'' என்று அவள் பதில் சொல்லும் போதே ஏமாற்றமாக இருந் தாலும், எதிர்மறை பதில் வரவில்லையே என்று திருப்தி பட்டு கொண்டான் சத்யா.

வாரத்திற்கு ஒரு முறை, ஞாயிறு மாலை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, ஏதேதோ கதைகளை பேசி இணைப்பை துண்டித்த பிறகும், அந்த பேச்சின் முடிவி லேயே, அடுத்த ஞாயிறு எப்போது வரும் என்ற ஏக்கம் சத்யாவை தாக்க, அவன் செய்வது அறியாமல் திகைத் தான்.

இரண்டு வாரங்கள் மட்டுமே ஒரு வாரத்தை முழுதாக தள்ளி, ஞாயிறு அன்று பேசியவனால், மூன்றாவது வாரத்தில், புதன் மாலைக்கு மேல் தள்ள முடியவில்லை. அவளிடம பேச முடியா விட்டாலும் பரவாயில்லை, இணைப்பை கொடுக்க வருவாள் கண்ணால் ஒரு சில நிமிடங்களில் பார்க்கவாவது செய்யலாம் என்ற ஆர்வத் திற்கு தடை போட முடியாமல், அன்றே தொலைபேசி யில் சொல்லி விட்டு ஸ்கைப்பில் அழைத்தான்.

''சத்யா, என்ன நடுவிலேயே அழைத்து விட்டாய்? ஏதாவது விசேஷமா?''

''விசேஷம் இருந்தால் தான் அம்மாவிடம் பேசணுமா என்ன?

''அப்போ உடம்பு சரி இல்லையா...?''

''இதென்னம்மா! உங்களோடு வம்பா போச்சு? விசேஷம் இருந்தால் அல்லது உடம்பு சரி இல்லை

என்றால் தான் உங்களிடம் பேச வேண்டுமா? பேச வேறே யார் இருக்கா? நான் தினமும் மாலையில் உங்களை அழைக்கலாமா என்று யோசித்து கொண்டு இருக்கிறேன்...'' என்று சொன்னதும் மங்கையர்க்கரசி ஓரக்கண்ணால் மருமகளை ஆராய்ந்தார். அவள் முகத்தில் கனிவுடன் கூடிய ஒரு சின்ன புன்னகை!

'எனக்கு பெண் பாருங்க' என்று தாம்பரத்தில் கந்தாஸ்ரமத்தில் வைத்து சொல்லிப் போனது அந்த வினாடியில் அவர் நினைவில் ஆடியது. இவளுக்கு மறுமணம் செய்ய ஒருவனை தேட வேண்டும். சத்யாவை விட ஒரு நல்லவனை கண்டு பிடிக்க முடியுமா?

''அம்மா...! என்ன ஆச்சு அங்கே அவர் பேசிட்டே இருக்கார். நீங்க பதில் சொல்லலையா? கனெக்ஷன் விட்டுப் போச்சா என்று கேட்கிறார் பாருங்க...'' என்று அருகே வந்து மங்கையை தொட்டு உலுக்கிய பிறகே சுய நினைவுக்கு வந்தார்.

''ஏதோ யோசனை சத்யா. என்ன கேட்டாய்?''

''உங்க யோசனை முடிவதற்குள் நிர்மலாவிடம் இருந்து எனக்கு வேண்டிய பதிலே வந்து விட்டது. எங்கே காண்பிக்கிறீங்க? அங்கேயே டெலிவரி வைத்துக் கொள்ள வசதி இருக்கா என்று விசாரித்தேன்'' என்றவனின் வார்த்தைகளை கேட்டதும் எடுத்த அவரின் முடிவு மேலும் உறுதியானது.

பேச்சு வாக்கில் சத்யா சொன்ன வார்த்தைகளை மங்கையோ நிர்மலாவோ சீரியஸாக எடுத்துக் கொள்ள வில்லை என்றாலும், இரண்டு மாதம் முடிவடையும் சமயத்தில், தினமுமே மாலை எட்டு மணி முதல் ஒன்பது



வரை, இரவு உணவுடன், அவனுடன் கலந்து பேசுவது மாமியாருக்கும் மருமகளுக்கும் வாடிக்கையாகி போனது.

சென்னையில் காட்சிக்கென வைத்த பொருட்களின் விற்பனை எதிர்பார்த்த மாதிரியே, சூடு பிடிக்க, லாபம் அவர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே கிடைத்தது.

பயிற்சி நிலையத்தில் பெண்கள் சேருவது ஆரம்ப காலத்தில் கம்மியாக இருந்தாலும், அடுத்த இரண்டு மாதங்களில், இலவசமாக கை தொழிலை கற்று கொண்டது மட்டும் இல்லாமல், ஐந்து ஆறு மணி நேரம் வேலை செய்து ஒரு நாளைக்கு நூற்றி ஐம்பது ரூபாய் சர்வ சாதாரணமாக சம்பாதிக்க முடியும் என்பதை கண் கூடாக கண்டதும், மக்களின் ஆர்வமும் கூடியது.

அரசாங்கம் இலவசமாக பயிற்சி அளிக்க நிர்ணயம் செய்த பதினெட்டில் இருந்து இருபத்தி ஐந்துக்குள் என்ற வயது வரம்பை தாண்டியும், பணம் தானே செலவழித்து பயிற்சி மையத்தில் சேரும் பெண்களின் கூட்டம் அதிகரிக்க, தொழில் வளர்ச்சி அமோகமாக இருந்தது.

தன்னுடைய பென்ஷன் பணத்தில் பத்து சதவிகிதமும், பயிற்சி மைய லாபத்தில் பத்து சதவிகிதமும், செழியனின் பெயரில் துவக்கப்பட்ட அறக்கட்டளைக்கு ஒவ்வொரு மாதமும் கொடுத்ததில், அது வரை நிர்மலாவை கடமைக்காக மட்டுமே நிர்வாகக் குழுவில் ஏற்று கொண்டவர்களின் அணுகுமுறை மாறியது.

மார்ச் மாதம் என்பதால், வருமான வரி விலக்கு கிடைக்கும் என்ற அடிப்படையில், வசுந்தரா கணவனுடன் நேரடியாக சென்று அலுவலகத்தில் இருந்தவர்களிடம் பேசி ஐந்து லட்சம் ரூபாயை செக்காக,

கொண்டு வந்து கொடுக்க, மரியாதை கூடிப் போன தோடு, மேடம் என்ற அழைப்பும் சேர்ந்து கொள்ள, அவளின் தன்னம்பிக்கை ஏறி, முகத்தில் பொலிவும் கூடியது.

அடுத்த ஆண்டு தொழிற்கல்வி பயிலும் மாணவர் களில் நூறு பேருக்கு நூறு சதவிகிதம், அறக்கட்டளை மூலம் கட்ட ஏற்பாடு செய்யலாம் என்ற முடிவினை, ஏக மனதாக எடுத்ததிலும் மங்கைக்கும் நிர்மலாவுக்கும் பெருமிதமே!

இந்த தகவலை அன்று இரவு சத்யாவிடம் சந்தோஷ மாக இருவரும் பகிர்ந்து கொண்டனர். அடுத்த முனை யில் மௌனம் கூடுதலாக இருப்பது போல தோன்ற, ''ஏன் சத்யா? என்ன யோசனை?'' என்று நிர்மலா விசாரிக்க, அவளின் கேள்வி இருவருக்குமே வியப்பை அளித்தது.

''நூறு பேருக்கு நூறு சதவிகிதம் பணம் கட்டுவது குறித்து சந்தோஷம்தான். ஆனால் ஒருவேளை அதற்கு மேலும் விண்ணப்பங்கள் வந்தால் என்ன செய்வீங்க? மறுப்பது அவர்களின் எதிர்கால முன்னேற்றத்தை மறுப்பது மாதிரி ஆகாதா?'' என்று கவலையோடு விசா ரித்தான்.

''உலகத்தில் தேவை இருப்பவர்கள் அனைவருக்குமே நம்மால் உதவி செய்ய முடியுமா சத்யா...?'' என்று அவனின் கவலையை இயல்பாகவே அவளும் பகிர்ந்து கொள்ள மங்கை இருவரையும் மாறி மாறி கவனித்தார்.

அவனின் சின்ன சின்ன முக மாற்றங்களை இவள் கவனிப்பதும், இயல்பாக பேசுவதும், இருவருக்குமான



ஒரே அலைவரிசையில் சிந்தனை இருப்பதும், அவர் மனதில் பதிந்தது. தன்னையும், குழந்தையையும், இவ ளையும் சேர்த்து வைத்து பார்த்து கொள்ள இவனை விட ஒரு நல்ல ஆள் கிடைக்குமா?

கூடிய வரையில் குழந்தை பிறப்பதற்கு முன்பே திருமணம் நடந்து விட்டால் நன்றாக இருக்கும். அப்படி இல்லை என்றாலும் அடுத்த முறை அவன் விடுமுறைக்கு வரும்போது இவளை தயார்ப் படுத்தி விட வேண்டும். அதற்கு இன்னும் ஐந்து மாதம் இருக்கிறதே!

சம்பந்தப் பட்ட இருவரின் சம்மதம் மட்டுமே முக்கியம் மற்றவர்களை பற்றி, நிர்மலாவின் பெற்றோர் உட்பட கவலைப் பட தேவை இல்லை என்று முடிவெடுத்தார். மங்கை தன் சிந்தனையில் மூழ்கி இருக்க, அங்கே அவர்களுக்கு இடையே பேச்சு இயல்பாக தொடர்ந்தது.

''தமிழ்நாட்டில் இருந்து வந்து இங்கே வேலை செய்யும் அனைவருமே ஏப்ரல் மாச சம்பளத்தை மொத்தமாக தருகிறேன் என்று சொல்லி இருக்காங்க. எப்படியும் பனிரெண்டு லட்சத்திற்கு மேலே கிடைக் கும். அதே பிக்சட் டெபாசிட்டில் போட்டு விட்டு, அதை ஈடாக நூற்றுக்கு மேலே விண்ணப்பிப்பவர்களுக்கு, வங்கியில் கடனுக்கு ஏற்பாடு செய்யலாம். தனியாக வங்கியில் விண்ணப்பித்து கடன் வாங்குவது ஏழை களுக்கு எட்டா கனவாகவே இருக்கும். அதற்கு நாம் உதவி செய்யலாம்...'' என்று சத்யா சொல்ல அவள் முகம் மட்டும் இல்லாமல் மனசும் சேர்ந்தே மலர்ந்தது.

''நிச்சயமா செய்யலாம். தேவை இருப்பவர்களில் எத்தனை அதிகம் பேருக்கு உதவி செய்ய முடியுமோ, அத்தனைக்கு நல்லது தானே? சத்யா... லைனில்

இருக்கீங்களா?'' என்று அவள் கேட்க அலைபேசி அழைத்தது.

''சிஸ்டமில் ஏதோ பிரச்னை போல நிர்மலா. ஆடியோ மட்டும் வருது. நான் பேசுவதும் உனக்கு கேட்கலையே? சர்வீசுக்கு ஆள் வர சொல்லி போன் பண்ணு. நான் நாளை அழைக்கிறேன்'' என்று விடை பெற்றான்.

'வசுந்தரா லாப் டாப் வாங்கிட்டு வந்த பேக் எங்கே இருக்கும்மா? அதில் தான் வாரண்ட்டி கார்டும் சர்வீஸ் நம்பரும் இருக்கு...'' என்று விசாரித்தாள் நிர்மலா.

''என் பீரோவில் இருக்கா என்று பாரு. சாவி பீரோ மேலேயே இருக்கு'' என்று சொல்லி கையில் மொபைல் போனை எடுத்து கொண்டு மங்கை வெளியே நகர, மங்கையின் பீரோவை திறந்து, அந்த லெதர் பையை தேடி எடுத்தாள்.

உள்ளே, அவள் தேடிய விபரங்கள் மட்டும் இல்லாமல், இரண்டு மாதங்களுக்கு முன்பு, விழாவன்று 'அவன்' அனுப்பிய வாழ்த்து அட்டைகள் இரண்டும், அதற்கு இடையே பதிந்த ஒற்றை சிவப்பு ரோஜா காய்ந்தாலும், மனதை கவரும் வாசனையுடன், அழகாக கொலு வீற்று இருந்தது.

# 28

வீட்டினில் இருந்து வெளியே வந்த மங்கையர்க்கரசி, தோட்டத்தில் இருந்த கல் பெஞ்சில் அமர்ந்து,



சத்யாவை போனில் அழைக்க, முதல் ரிங்கிலேயே எடுத்தான்.

''நிர்மலா...'' என்ற குரலை கேட்டதும் அவர் முகத்தில் சின்ன புன்னகை மலர்ந்தது.

''நான் மங்கை பேசுறேன் சத்யா...''

''அம்மா... நீங்களா...? என்னம்மா... இந்நேரத்துல...''

''நான் உன்னிடம் தனியா ஒரு முக்கியமான விஷயம் பேசணும். அதான் வெளியே வந்தேன்...''

''வீட்டில் இருந்து வெளியே வந்துட்டீங்களா? தனியா இருந்தால், நான் கூட உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்'' என்று ஆர்வத்துடன் சொல்ல அவரின் புன்னகை விரிந்தது.

''பக்கத்தில நிர்மலா இல்லை. என்ன சொல்லணும் சொல்லு...''

''நீங்க முதலில் சொல்லுங்க. நீங்க தானே போன் பண்ணினீங்க...''

''பரவாயில்லை நீயே சொல்லு. சின்ன பசங்களுக்கு தான் முன்னுரிமை நீ பேசுவதை கேட்ட பின் எனக்கு பேச வேண்டிய அவசியம் இல்லாமல் போகலாம்...'' என்று வற்புறுத்த ஒரு வினாடி மௌனமாக இருந்தான்.

''அம்மா, நான் இப்போ சொல்றதை கேட்டு நீங்க தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது. இவன் என்ன நமக்கு சொல்றது என்று நினைக்க வேண்டாம். உங்களுக்கு தெரியாமல் இருக்காது. ஆனாலும்... ஏதாவது காரணத்தினால் நீங்க தயங்கலாம்...''

''விஷயத்தை சொல்லு சத்யா. ரொம்ப பீடிகை போடு றியே?''

''அம்மா... நிர்மலாவுக்கு இது ஏழாம் மாசம் தானே...?''

''ஆமா...!''

''உங்களுக்கு ஏற்கனவே தெரியும். நேற்று நான் நெட்ல குழந்தையின் வளர்ச்சி பற்றி படித்தேன். அதில் ஆறாவது மாதம் பிற்பகுதியில் குழந்தையின் வளர்ச்சி விகிதம் மிக அதிகமாக இருக்கும் என்றும், குழந்தை சப்தங்களை கேட்டு, அதற்கு உரிய பிரதிபலிப்புகளை கொடுக்கும் என்றும் போட்டு இருந்தது...'' என்று மீண் டும் இடைவெளி விட, அவருக்கு வியப்பாக இருந்தது. இவன் திருமணம் பற்றி பேசப் போவதில்லை போல. வேறு என்னவாக இருக்கும்?

''சரி... அதுக்கு என்ன இப்போ?''

''நிர்மலாவோட அம்மா சம்பிரதாயங்களை செய்ய தயங்கியதால், வசுந்தரா ஐந்தாவது மாதம் நிர்மலாவுக்கு கருப்பு புடவை எடுத்து கொடுத்து கலந்த சாதம் எல்லாம் கொடுத்தால் என்று பெருமையா சொன்னீங்களேம்மா! அது மாதிரி ஏழாவது மாத சம்பிரதாயமான வளை காப்பை நிர்மலாவுக்கு நீங்களே செய்தால் என்ன?''

''சத்யா. இதை நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. நிர்மலா மேல இவ்வளவு அக்கறை வைத்து இருக்கும்...''

''அம்மா, இந்த சடங்கு நிர்மலாவுக்காக மட்டு மில்லை. அவளின் வயிற்றில் வளரும் குழந்தைக்காக. நம்முடைய சம்பிரதாயங்கள் சும்மா ஏனோ தானோ



வென்று உருவாக்கப் பட்டவை இல்லை. கை நிறைய கண்ணாடி வளையல்கள் போடுவது, அதன் இனிமை யான சப்தங்களுக்காக. அந்த சப்தங்கள் குழந்தையிடம் தூண்டுதலை ஏற்படுத்தும். கணவன் மனைவிக்கு இடையே அந்த சமயத்தில் தேவையான அன்னியோன் யத்துடன் கூடிய சின்ன இடைவெளியை ஏற்படுத்தும்...'' என்று வேகமாக சொல்ல அவன் சொன்ன இரண்டு வாக் கியங்களுமே அவருக்குள் பிரமிப்பை ஏற்படுத்தியது.

''சத்யா... நானே ரெண்டு மூணு நாளா யோசிச்சுட்டு தான் இருந்தேன். நாளைக்கே கூட முகூர்த்த நாள் தான். வேறே யாரும் இல்லை என்றாலும் வசுவையும், அவங்க அம்மாவையும் கூப்பிட்டு சின்னதா வீட்டு மட்டுக்கு மாவது செஞ்சுடறேன்...''

''ஹய்யோ! அவங்க அம்மாவுக்கு சொல்லி, கூடுதல் இலவச இணைப்பா அவங்க அண்ணியும் வந்து ஏதாவது ஏடா கூடமா சொல்லி நிர்மலாவை மூட் அவுட் பண் ணிட போறாங்கம்மா...'' என்று அவசரமாக பதற அவரின் புன்னகை சிரிப்பாக மலர்ந்தது.

''நிர்மலா அந்த ஸ்டேஜ் எல்லாம் தாண்டியாச்சு என்று நினைக்கிறேன் சத்யா. இனிமேல் பேசுற வார்த்தைகளை துடைத்து போட்டு முன்னால் நடப்பாள் என்று நம்புகிறேன். பிரச்னை வந்தாலும் அதை எதிர் கொண்டு சமாளிக்கவும் அவள் கற்றுக் கொள்ள வேண் டும் இல்லையா? அந்த தன்னம்பிக்கையை வளர்க்க நீ ஒரு காரியம் செய்யணுமே...''

''இதென்னம்மா கேள்வி? என்ன செய்யணும் என்று சொல்லுங்க. உடனே செய்துடலாம்...'' என்று அவன் உற்சாகமாகவே சொல்ல அவர் தயங்கினார்.

''சத்யா... இதை கேட்பதால்... நீ என்னை...''

''என்னம்மா நீங்க...? என் வாழ்க்கையில் நான் மதிக்கும் மிக சில நபர்களில் நீங்களும் ஒருவர். உங்களை தப்பா நினைக்க வாய்ப்பே இல்லை. என்ன விஷயம் சொல்லுங்க...''

''நான்... நான்... நிர்மலாவை பாதிக்கும் முக்கியமான பேச்சே... அவள் விதவை... என்ற அர்த்தத்தில்... உருவானவை தான்... அதனால்... அதை... நீக்கி விட்டால்...''

''நீங்க என்ன சொல்ல வரீங்க என்று ஊகிக்க முடிகிறதும்மா. ஆனால் என் சம்மதம் இங்கே முக்கியமில்லை. என் சம்மதத்தை விட, உங்க சம்மதத்தை விட, நிர்மலாவின் மனப்பூர்வமான சம்மதம் முக்கியம். அதை முதலில் வாங்குங்க. இதை என்னிடம் சொல்ல நீங்க இத்தனை நாள் இத்தனை நேரம் தயங்கி இருக்க வேண்டியதே இல்லை. கந்தாஸ்ரமத்தில் எனக்கு பெண் பாருங்க என்று சொன்ன போதே அங்கேயே நீங்க கட்டுடா தாலியை என்று சொல்லி இருந்தால் கூட நான் ரெடியாக தான் இருந்தேன். நீங்க பேச வேண்டியது நிர்மலாவிடம் தான்'' என்று அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை ஊகித்து, தன் மனதில் இருந்த ஆர்வத்தை, அவரிடம் சொல்ல மங்கையின் முகத்தில் நிம்மதியும் உற்சாகமும் பரவியது.

* * *

கணினியில் கேமரா பழுதாகி இருக்கக் கூடும் என்று சத்யா சுட்டி காட்டியதன் பேரில், அதன் வாரண்டி கார்டை எடுத்து அதனை பழுது நீக்கம் செய்ய அந்த பையை எடுத்த நிர்மலா, அதன் உள்ளே அவள் தேடிய விபரங்களுடன் கூட இருந்தால் வாழ்த்து அட்டையை பார்த்ததும் உறைந்தாள்.



இந்த வாழ்த்து அட்டையை வேலூரிலும் சென்னையிலும் தேடியதும் இறைவன் கையில் பொறுப்பை ஒப்படைத்ததும் நினைவில் வந்தது. இத்தனை நாட்கள் கழித்து இந்த கடிதம் என் கண்ணில் படுகிறது என்றால் என்ன அர்த்தம்? தன் வாழ்வில் அவனுக்கு இடம் உண்டு என்று இறைவன் சுட்டி காட்டுகின்றானா? கால்கள் பலமிழப்பது போல தோன்ற, அப்படியே சரிந்து தரையில் அமர்ந்தாள்.

வாழ்த்தட்டையை கையில் எடுக்கவே கைகள் நடுங்கியது. அதற்குள் கடிதம் இருக்கிறது என்று தெரிந்தாலும், பிரித்து பார்க்க மனம் தடுமாறியது. சில கணங்கள் தடுமாற்றத்தின் பிறகு, கண்கள் அவசரமாக மங்கையை தேடியது. ஹாலில் காணோம்!

படிக்கும்போது வந்து விட்டால்... என்ற நடுக்கம் வந்தாலும், அந்த பேப்பரை இந்த பைக்குள் வைப்பது பெரிய சிரமமாக இருக்காது என்ற தைரியம் வர, 'இதற்குள் கடிதம் எங்கே இருக்கக் கூடும்?' என்று நடுங்கும் கரங்களால் அந்த வாழ்த்தட்டையை கைகளால் தடவி பார்த்தாள்.

கடிதம் இருக்கக் கூடிய இடத்தை உத்தேசமாக கணக்கிட்டவள் அதற்கு பாதிப்பு இல்லாமல் மெல்லிய கத்தரிக்கோலை கொண்டு ஓரமாக அட்டையை வெட்டி அதற்குள் இருந்த அந்த மெல்லிய காகிதத்தை கவனமாக எடுத்து பிரித்தாள். இரண்டு பக்கம் தெளிவான எழுத்துக்களுடன் கடிதம் இருந்தது.

படபடக்கும் இதயத்துடன் முதல் வரியை படித்தவளுக்கு, 'நி(ர்ம)லா' அந்த அழைப்பே கண்ணில் நீர் வரவழைத்தது.

பெருகிய நீரை கண்ணை சிமிட்டி வெளியேற்றியவள், 'நீ இனி நம் வாழ்வில் வளர்பிறையாக இருக்க வேண்டும்' என்று அடுத்த வரியை படித்து முடிக்கும் போது, கடிதத்தை மூடி விட்டாள்.

இவன் ஏன் தன்னை இப்படி தாங்குகிறான்? இவனுக்கு அவள் என்ன செய்தாள்? தன் நலன் நாடும் ஒரு நல்ல இதயத்தை ஆரம்பத்தில் தூக்கி எறிந்து பேசினோமே என்ற குற்ற உணர்வும் தோன்றியது. ஆனால், கணவன் இறந்து காரியம் முடிந்த உடனே, அடுத்த திருமணத்திற்கு பெண் தேடுவதை ஒத்துகொள்ளும் சமூகம், அதே நிலையில் இருக்கும் ஒரு பெண்ணுக்கு மறுமணத்தை சுலபமாக ஏற்று கொள்ளுமா என்ற கேள்வி எழுந்தது. கண்களில் பொங்கி பெருகிய நீரை துடைத்தபடி அடுத்த வரியை படித்தாள்.

''ஊரார் பேசுவார்கள் என்று அதற்காக மட்டும் யோசிக்க வேண்டாம் நிர்மலா. பேசத்தான் செய்வார்கள். ஒரு நாள், இரண்டு நாள், நாலு மாசம். அதற்கு மேல் அவரவருக்கு ஆயிரம் வேலை இருக்கு நிர்மலா. நம்மை மறந்து விடுவார்கள். பிறருக்காக நாம் வாழ முடியாது. நாம் நம் சந்தோஷத்தை எண்ணி பார்க்க வேண்டும்...''

அவள் மனதில் இருந்த கேள்விக்கு ஏற்ற பதில் நேருக்கு நேர் நின்று பேசுவதை போல அவன் யோசித்து எழுதி இருந்த விதம் கண்ணீரை மீண்டும் பெருக வைத்தாலும், இம்முறை அது ஆனந்தத்தினால் வந்தது என்பதை அவளால் உணர முடிந்தது.



சமூகம் பற்றித் தன் கேள்விக்கு மட்டும் இன்றி, தன் மனதில் தோன்றக் கூடிய கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பதில்கள் அந்த கடிதத்தில் அணிவகுத்து நின்றது.

''முன்னால் ஒரு அண்ணன், பின்னால் ஒரு தங்கை என்ற நிர்பந்தத்தினால் மணம் செய்து, ஓராண்டில் உன் திருமண வாழ்க்கை எதிர்பாராமல் முடிந்து விட்டால், எஞ்சிய காலத்தை தனிமையில் கழிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை நிலா'' என்ற வாதத்திற்கு மறுப்பான பதில் அவள் சொல்ல வாய் எடுக்கும் முன்பே அடுத்த வரி அவளின் வாயை மூட வைத்தது.

''சம்பாதிக்க ஒரு தொழில், வழி நடத்த அம்மா, வயசாகும் நேரம் தோள் சாய ஒரு வாரிசு, என்று உன்னுடன் இருக்கக் கூடிய நிலையிலேயே, இன்னொரு உறவினை ஏற்று கொள்வதில் என்ன சிரமம் உனக்கு?'' என்ற கேள்விக்கு பதில் அவளிடம் இல்லை. ஏன் கூடாது என்ற எண்ணமே தோன்றியது.

அந்த வரி வரை தன்னை முன்னிறுத்தி தகவல்கள் பரிமாறிய அந்த கடிதம், முதல் முறையாக, 'நான் என் மனைவி, என் குழந்தை, என் அம்மா, இணைந்த என் குடும்பம் என்ற முதல் வட்டத்தை, நானே உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறேன்...' என்று அவனை பற்றிய ஒரு வாக்கியம் வர, அதை படிக்கும் போது மனம் நெகிழ்ந்து கரைந்தது.

'உனக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்க நான் மட்டும் தான் இந்த உலகத்தில் ஒரே பெண்ணா...?' என்ற அவளின் மனதில் தோன்றிய எண்ணத்திற்கான

பதில், 'அது ஏன் நீயாக இருக்கக் கூடாது?' என்ற அடுத்த வரியில் இருந்தது.

'இது நீ இளம் விதவையாக ஆதரவற்று நிற்கிறாய் என்ற அனுதாபத்தினால் வந்த காதல் நிச்சயம் இல்லை! நீ எனக்கு வேண்டும் என்ற ஆசையினால் வந்த காதல்' என்ற வாக்கியத்தில் கரைந்தாள்.

'உன்னுடைய குழந்தைக்கு ஏதாவது சிரமம் ஏற்படலாம் என்று நீ நினைத்தால், அந்த சந்தேகத்தை போக்குவதற்காக நான் குடும்ப தடை செய்து கொள்ள தய்யார்' என்ற உறுதியில் நெகிழ்ந்தாள்.

'உன்னுடைய கஷ்ட காலத்தில் உன்னுடன் துணை நின்ற அம்மாவை விட்டும் நீ விலக தேவை இருக்காது' என்ற வாக்கியத்தில் குழைந்தாள்.

'உனக்கும், அம்மாவுக்கும், நம் குழந்தைகளுக்கும் தேவைப் படும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுக்கு என்னால் சம்பாதிக்க முடியும்' என்ற நம்பிக்கையில் பூரித்தாள்.

'செழியன் நினைவுகளை உன்னால் மறக்க முடியவில்லை என்று சொன்னால், நான் மறக்க சொல்லவில்லை. திருமணம் ஆன உடனே, அண்ணன், தங்கை, அம்மா, அப்பா போன்ற உறவுகளை நாம் மறப்பதில்லையே! அதோடு இன்னும் சில உறவுகளை சேர்த்து பராமரிக்க கற்று கொள்கிற மாதிரி' என்ற அவனின் வாக்கியத்தில் முழுவதுமாக உடைந்தாள்.

அதுவரை சிரமப்பட்டு, கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்த கண்ணீர் கரை கடந்து வெள்ளமாக பெருகி, அருவியாக கன்னங்களில் இறங்க ஆரம்பித்தது.



துடைக்க துடைக்க கண்ணீர் நிற்கும் வழியை காணோம்! பெருகிய கண்ணீரின் நடுவே, ஆடிய எழுத்துக்களை சிரமத்தோடு படிக்க முயன்றாள்.

'உன்னை நான் அவசரப்படுத்த மாட்டேன். அவகாசம் எடுத்து கொள். என் பெயரிலேயே சத்தியம் இருக்கு. அது என் வாக்கிலும் இருக்கும். உன் சாதகமான முடிவுக்கு காத்திருக்கும் சத்யமூர்த்தி' என்று உணர்ச்சி பொங்க அவன் எழுதி இருந்த அந்த கடிதத்தை படித்து முடிக்கும் போது, அவனை உடனே நேரில் பார்க்க மாட்டோமா என்று தோன்றியது.

இந்த கடிதத்தை காணாமலே இருந்து இருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றி அவளை கலங்க வைத்தது. இவன் இவ்வளவு நல்லவனாக இல்லாமல் இருந்து இருக்கலாமே? இவனை வேண்டாம் என்று தூக்கி எறிய ஏதாவது ஒரு காரணத்தை எனக்கு காட்டி இருக்கக் கூடாதா?

சந்தித்த முதல் நாளில் இருந்த, தனக்காக என்ன எல்லாம் செய்து இருக்கிறான்? வார்த்தையில் உயிரை குழைத்து, உணர்வை சேர்த்து, அன்பை பூசி, அக்கறை கூட்டி, எப்படி செதுக்கி இருக்கிறான்? இந்த அன்பிற்கு தான் தகுதி ஆனவள் தானா?

உயிரிலே எனது உயிரிலே ஒரு துளி தீயை உதறினாய்
உணர்விலே எனது உணர்விலே அனுதினம் உடைந்து சிதறினாய்
ஏன் என்னை மறுத்து போகிறாய்? கானல் நீரோடு சேர்கிறாய்
கொடுத்ததாய் சொன்ன இதயத்தை திருப்பி நான் வாங்க மாட்டேனே!

# 29

சத்யாவிடம் பேசி விட்டு போனை வைத்த மங்கை உடனடியாக வசுந்தராவை அழைத்தார். நிர்மலாவின் தாயை பொறுத்த வரை, தூரமும் குறைவு, வீட்டிலேயே இருப்பவர். அதனால் எந்த நாளாக இருந்தாலும் உடனடியாக கிளம்பி வந்து விட முடியும். ஆனால் வசுந்தராவின் நிலை அப்படி இல்லை.

அவள் இல்லாமல் இந்த நிகழ்ச்சியை நடத்துவதிலும் அவருக்கு விருப்பம் இல்லை. எனவே முதலில் அவளின் வசதியை கேட்டுக்கொண்டு பிறகு சம்பந்திக்கு போன் பண்ணலாம் என்று நினைத்துக் கொண்டு இருக்கும் போதே அவரின் அலைபேசி அழைத்தது.

''ஹலோ, நான் வசு பேசறேன். அத்தையா நிம்மியா? யார் பேசுவது?'' என்ற குரல் கேட்டதும் மங்கைக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''ஹேய்! வசுந்தரா, நூறு வருஷம் இருப்ப. இப்பதான் நினைத்தேன். உடனே லைனில் வந்து விட்டாயே...?'' என்று அந்த பரபரப்பும் சந்தோஷமும் குரலில் வெளிப்பட விசாரித்தார் மங்கை.

''அத்தை நைசா என்ன டெவில் என்று சொல்றீங்க. அதானே?''



''இல்லை வசு, உண்மையிலேயே உனக்கு போன் பண்ண தான் கையில் போனை வைத்து கொண்டு இருக்கிறேன். உங்களை மாதிரி போனிலேயே நம்பர் எடுக்க எனக்கு தெரியலையே? அதான் ஒவ்வொரு நம்பரா நினைவில் இருந்து போட்டு கிட்டு இருக்கேன். அதற்குள் நீயே கூப்பிட்டு விட்டாய்...''

''ஏன் உங்க மருமகள் உங்களுக்கு போன் கூட போட்டு தராமல் அப்படி என்ன வெட்டி முறிக்கிறாள்? அவளிடம் போட்டு தர சொல்ல வேண்டியது தானே?'' என்று அதட்ட அவர் சிரித்தார்.

''நான் வெளியே வந்து அவளுக்கு தெரியாமல் பேசுகிறேன் வசு...''

''ஓ! அப்ப ரகசிய ப்ளானா? சொல்லுங்க பாஸ், என்னோட வேலை என்ன...?'' என்று ரகசிய குரலில் சொல்ல மங்கைக்கு சிரிப்பு மேலும் பொங்கியது.

''நாளைக்கு நீ ப்ரீயா? உன்னால் இங்கே வர முடியுமா என்று கேட்க தான் போன் பண்ண நினைத்தேன். பிரசன்னாவிடம் பேசிட்டு கூப்பிடுகிறாயா?'' என்று தயக்கத்துடன் சொன்னார்.

''பிரசன்னாவிற்கு ஆபீஸ் இருக்கும். அர்ஜென்ட் என்றால் நான் தனியாகவே வருவேன் அத்தை. நீங்க என்ன விஷயம் என்று சொல்லுங்க. அவரும் வேண்டுமா?''

''வந்தாலும் சந்தோஷம். வராவிட்டாலும் இது பெண்களுக்கான நிகழ்ச்சிதான்'' என்று தயக்கத்துடன் சொல்ல, எதிர்முனையில் துள்ளி குதித்தாள் வசு.

''கை கொடுங்கத்தை. நீங்க சொல்லப் போகும் இதே விஷயம் பற்றி பேச தான் நானும் போன் பண்ணினேன். நான் ஞாயிற்றுக் கிழமை இங்கே ரெண்டு பேரும் வரீங்களா என்று கேட்க நினைத்தேன். நீங்க நாளைக்கு என்னை அங்கே வர சொல்றீங்க. அவ்வளவு தான் வித்தியாசம்...'' என்று உற்சாகமாக சொல்ல அவர் தயங்கினார்.

''நாங்க அங்கே வந்தால் உங்க அம்மாவால் நினைத்த உடனே அவ்வளவு தூரம் வர முடியாதே வசு? அதோடு நிர்மலாவும் அதிகம் பயணம் செய்ய வேண்டாமே என்று பார்த்தேன்...''

''நோ ப்ராப்ளம் அத்தை. நான் பிரசன்னாவை ஆபீஸ் அனுப்பி விட்டு பனிரெண்டு மணிக்குள் வந்து விடுகிறேன். ஒரு புடவையும் ரெண்டு டஜன் வளையலும் நானே வாங்கி வந்து என் கையால் போட்டு விடுகிறேன். ஓகே?'' என்று உற்சாகமாக சொல்ல அவரும் சம்மதம் சொல்லி விட்டு அவளின் அம்மாவை அழைத்தார்.

* * *

மாலையில் அலுவலகத்தில் இருந்து வந்த பிரசன்னா கையோடு கொண்டு வந்த வேலையை செய்து கொண்டு இருக்க, அலைபேசி அழைத்தது.

''டேய்! சத்யா, என்னடா இந்நேரத்துல? லேட் நைட் ஆகிடுச்சே! வழக்கமா ஒன்பது மணிக்குள் கூப்பிடுவாய். இன்னிக்கு நீ பேசலை என்று நினைத்தேன். சொல்லுடா...'' என்று விசாரித்தான்.

''இன்று மங்கை அம்மா அழைத்தாங்க...'' என்ற சத்யாவின் குரலில் குதூகலம் இருந்தது.



''என்ன சொன்னாங்க...?'' என்று ஆர்வமாக விசாரித்தவனுக்கு, அது கல்யாணம் பற்றிய பேச்சு என்பதில் மாற்று கருத்து இல்லை.

''நீ அப்பப்போ என்னை கேட்ட கேள்வி தான்... நிர்மலாவை மறுமணம் செய்து கொள்கிறாயா என்று கேட்டாங்க...''

''வாவ்! நீ என்னடா சொன்னாய்...? ஓகே தானே...?'' என்று பரபரப்பாக கேட்க அவன் சிரித்தான்.

''எனக்கு மட்டும் ஓகேயா இருந்தால் போதுமா பிரசன்னா? நிர்மலாவின் சம்மதம் கேட்க சொல்லி இருக்கிறேன். அம்மா மட்டுமில்லாமல் வசுந்தராவும் சேர்ந்து பேசினால், சாதகமான முடிவு சீக்கிரம் கிடைக்கலாம் என்று தோன்றியது. அதான்...''

''இதை தானேடா நாலு மாசத்துக்கு முன்னாடி நீ வளையல் செலக்ட் பண்ணினா நாளில் இருந்து ரெண்டு பேரும் மாறி மாறி கேட்டுட்டே இருக்கோம்? நீ தான் மூடி மறைத்தாய்?''

''இன்று அம்மாவே நேரில் கேட்டுட்டாங்க. இந்த நேரத்தில் திருமணம் பேசி முடித்தால் நல்லா இருக்கும் என்று நினைத்தேன். எனக்கு இருப்பது நீதானே? என் சார்பில் மங்கை அம்மாவிடம் எனக்காக பெண் கேட்டு திருமணம் நடத்தி வைப்பாயா என்று கேட்க போன் பண்ணினேன்...''

''இதென்னடா கேள்வி? கட்டாயம் செய்யறேன். இந்த சனி ஞாயிறு, காவேரிப்பாக்கத்தில் டெண்ட் போட்டுடறேன். நிர்மலா ஓகே சொன்ன உடனே அங்கே இருந்து அப்படியே வேலூர் பயணம். அவங்க பேரண்ட்ஸ்

பார்த்து நாள் குறித்து விட்டு உனக்கு சொல்றேன். போதுமா...?''

''ஹேய் இவ்வளவு வேகமா? கொஞ்சம் பொறுமையா இருடா...''

''இன்னும் பொறுமை புண்ணாக்கு என்று பேசின, அங்கே தேடி வந்து உதைப்பேன். என்னிடம் சொல் லிட்ட இல்ல? நான் பார்த்து கொள்கிறேன். சொல்ற அன்னிக்கு இங்கே வரணும். லீவு சொல்லிடு. இதுக்கு மேலே உனக்கும் எனக்கும் பேச்சு இல்லை. வச்சுடு போனை...'' என்று அதட்டினான்.

''ஒரு நிமிஷம் சொல்றதை கேட்டுட்டு வை! பத்து பதினஞ்சு நாள் லீவெல்லாம் இப்ப கேட்பது நல்லா இருக்காது. ஒன்று ரெண்டு நாள் கல்யாணத்திற்கு மட் டும் என்றால் ஓகே. டிசம்பரில் ஆண்டு விடுமுறைக்கு வரும்போது பார்த்து கொள்ளலாம்.''

''அதற்குள் நிர்மலாவுக்கும் டெலிவரி ஆகி உடல் நிலை தேறிடும். அதானே...''

''அதுவும் தான். ஆனால் அதை விட முக்கியம். அவள் என்னை கணவனா ஏற்றுக் கொள்ள மனதளவிலும் தயாராகணும். அதுக்கு அவளுக்கு அவகாசம் வேண்டும். அதை ஞாபகம் வைத்து பேசு...''

''சரி. சனி ஞாயிறு போனால் ஓகே தானே??''

''நாள் நாளைக்கே நல்லா இருக்கு. நிர்மலாவுக்கு வளைகாப்பு நடத்த போறதா சொன்னாங்க. அவங்க அம்மா அங்கே வரலாம். அதனால் நாளைக்கே நீ போக முடிந்தால்...'' என்று பாதியில் நிறுத்த அவன் சத்தமாக சிரித்தான்.



''உனக்காக இதை கூட செய்ய மாட்டேனா சத்யா? என்னிடம் இத்தனை கெஞ்ச வேண்டுமா நீ? 'எனக்கு இது வேண்டும் செய்' என்று உத்தரவே போடலாமேடா! நாளைக்கே ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு, வசுந்தரா வோடு காவேரிப்பாக்கம் போகிறேன். அங்கே பேசி முடிச்சுட்டு உனக்கு போன் பண்றேன் ஓகே?'' என்று கேட்க, ''நாட் ஓகே'' என்று அவன் அழுத்தமாக அதி காரத்துடன் சொல்ல பிரசன்னா விழித்தான்.

''என்ன ஆச்சுடா? ஏன் நாட் ஓகே என்று சொல் கிறாய்...'' என்று குழப்பத்துடன் பிரசன்னா விசாரிக்க, ''அது மட்டும் போதாது, இன்னொரு வேலையும் சேர்த்து செய்ய வேண்டும்'' என்று சிரித்தான் சத்யா.

''மை காட்...! ஒரு நிமிஷம் நான் கன்பியூசாகி விட் டேன். அந்த இன்னொரு வேலை என்ன என்று சொல் லுங்க... சார்...'' என்று பவ்யமாக கேட்டான்.

''அங்கே லாப் டாப்பில் வெப் கேம் வேலை செய் யலை. அதனால் உன்னுடைய லாப் டாப்பை எடுத் துட்டு போ. அங்கே ஸ்கைப் கனெக்ட் பண்ணி நாளைய வளைகாப்பு நிகழ்ச்சியையும், நீங்க பேசுறதையும் நான் லைவா பார்க்கிறேன். நானும் நாளைக்கு ஆபீசுக்கு லீவ்...'' என்று கூச்சத்துடன் சிரித்தான்.

அவனுடைய சந்தோஷத்தையும் ஆர்வத்தையும், உணர்ந்த தோழனாக, ''அப்படியே செய்து விடுகிறேன் சார்...'' என்று சப்தமாக சிரித்தான் பிரசன்னா.

''ஹேய்! ஆபீஸ் வேலை பார்க்கிறீங்க என்று நான் உங்களை தொந்தரவு பண்ணாமல் ஹாலில் இருந்தால், இங்கே யாருடன் அரட்டை அடித்துக் கொண்டு இருக்கி

நீங்க?'' என்று கேட்டபடி உள்ளே வந்தவளை அருகே இழுத்து அமர வைத்தான்.

''வா வா... நீ ஆர்வமா குடைஞ்சு குடைஞ்சு கேட்டுட்டு இருந்த விஷயத்தை வெளிப்படையா ஆமா என்று சத்யா ஒத்து கொண்டான்...'' என்று மனைவியிடம் அவன் சொல்லும் குரல் கேட்டதுமே, ''ஓகே பிரசன்னா குட்நைட் நாளைக்கு பேசுறேன்...'' என்று வைத்து விட்டான் சத்யா.

அவனின் கூச்சமான நழுவலும், பிரசன்னாவின் முகத்தில் இருந்த பிரகாசமும், சற்று முன்பு மங்கை அம்மா வளைகாப்பிற்கு அழைத்து சொன்ன விஷயமும் சேர்ந்து, இரண்டும் இரண்டும் நான்கு என்று முடிவுக்கு வர வசுந்தராவிற்கு சிரமமாக இல்லை.

* * *

சத்யாவின் கடிதத்தை படித்து விட்டு, சத்யாவை மணம் செய்வது குறித்த முடிவை எடுக்க முடியாமல் தடுமாறினாள் நிர்மலா. இதை பற்றி யாரிடமாவது பேசினால் தேவலை என்று தோன்றியது. தன் நலம் நாடும் இதயங்கள் நிறைய இருந்தாலும், இந்த முடிவினால் பாதிக்கப் படக் கூடிய மங்கையிடம் கட்டாயம் பேச வேண்டும் என்று தோன்றியது. அவரிடம் சத்யா அனுப்பிய கடிதத்தை காட்டி விடலாம் என்று மங்கையை தேடி தோட்டத்திற்கு வந்தாள் நிர்மலா.

வசுந்தராவிடம் மறுநாள் வளைகாப்பு தவிரவும், அவள் வர வேண்டிய அவசியத்தை ஜாடையாக அவளுக்கு உணர்த்திய மங்கை, சம்பந்தி அம்மாவுடன் பேசும் போது அங்கே வந்த நிர்மலாவின் காதுகளில்,



'நாளைக்கு உங்க பொண்ணுக்கு வளையல் அடுக்கலாம் என்று நினைக்கிறேன். உங்க பொண்ணு நல்ல படியா பெற்று பிழைக்க வேண்டும் என்று ஆசீர்வாதம் பண்ண நீங்க மறக்காமல் வந்துடுங்க' என்ற மங்கையின் வார்த்தைகள் விழுந்து உறைய வைத்தது.

சில வினாடிகள் நின்றாலும் அவர் பேச்சை முடிக்க போகிறார் என்பதை உணர்ந்த உடனே வேகமாக தன் அறைக்கு திரும்பி கட்டிலில் முடங்கவும் வைத்தது. தன்னையே முழு முதல் துணையாக கொண்டு, ஒவ்வொரு நிமிஷமும் தனக்கு என்ன தேவை என்று எண்ணி செயல்படும் இவரிடம், எப்படி சொல்வது என்ற தயக்கம் அவளை பின்னால் இழுக்க, மறுமணம் செய்து கொள்ளலாமா என்ற யோசனையில், இருந்தவளின் அரை குறையான சம்மதம் அந்த வினாடியே ஆழ் மனதில் சமாதி ஆனது.

வசுந்தராவிடமும் அவளின் தாயிடமும் பேசி விஷயத்தை சொல்லி விட்டு சந்தோஷமாக உள்ளே வந்த மங்கை மருமகளை தேடினார்.

''நிர்மலா, என்ன அதற்குள் படுத்து விட்டாய்?''

''கால் கொஞ்சம் வீக்கமா லேசா வலிக்கிற மாதிரி இருந்தது. அதான் படுத்துட்டேன்...'' என்று சாக்கு சொல்ல அவர் அடுக்களைக்கு சென்றார்.

''கால் வலிக்குது என்றால் முன்னாடியே சொல்றது இல்லையா? தாராளமா நீர் பிரிந்தால் கால் வீங்காது. உனக்கு பார்லி வாட்டர் போட்டு வைத்து இருந்தேன். கொடுக்க மறந்துட்டேன். இந்தா...'' என்று நீட்ட அவளின் கண்கள் கலங்கியது.

''இப்ப என்ன? நாளைக்கே எனக்கு உடம்பு சரி இல்ல என்று படுத்த படுக்கையாக கிடந்தால் எனக்கு படுக் கையில் சாப்பாடோ காபி டீயோ கொடுக்க மாட்டியா?'' என்று முடிக்கும் முன்பு, ''அம்மா...'' என்ற அலறலுடன் அருகே வந்து வாயை மூடி இருந்தாள்.

''ஏன்மா இப்படி எல்லாம் பேசறீங்க? நீங்க இன்னும் நூறு வருஷம் நல்லா இருக்கணும்'' என்றவளின் கண்ணில் நீர் பெருகியது. அது இவர் தன் மேல் வைத்து இருக்கும் அன்பினாலா அல்லது சத்யாவின் கோரிக் கையை தான் நிராகரிக்க போவதாலா என்று அவளால் பிரித்தறிய இயலவில்லை.

''சும்மா கண்ணை கசக்காமல் குடி. காலையில் நாளைக்கு உனக்கு வேறே ஏதாவது வேலை வைத்து இருக்கிறாயா?'' என்று கேட்டவர் அடுத்த என்ன சொல் வார் என்பது புரிந்தே இருந்ததால் 'இல்லைம்மா...' என்று மறுப்பாக தலை அசைத்தாள்.

''நாளைக்கு எட்டில் இருந்து ஒன்பது மணிக்குள், உங்க அம்மாவையும் வசுந்தராவையும் வர சொல்லி இருக் கிறேன். உனக்கு நாளைக்கு வளையல் அடுக்கலாம் என்று நினைத்தேன். சும்மா வேண்டாம், தேவை இல்லை என்று பாட்டு எதுவும் படிக்காதே. இது வயிற் றில் வளரும் என் பேர குழந்தைக்கு நல்லது புரிஞ்சுதா?'' என்று சொல்ல, அவள் மௌனமாக தலை அசைத்தாள்.

அதிகாலை ஐந்து மணி அளவில் அவளை எழுப்பி, ''வசுந்தரா கல்யாணத்திற்கு உங்க அம்மா எடுத்து கொடுத்த பட்டு புடவை கட்டாமல் தானே வைத்து இருக்கிறாய்? குளிச்சுட்டு, அதை கட்டிக்கோ. வெளி ஆட்கள் யாரும் வர போவதில்லை'' என்று உத்தரவாக சொல்லி விட்டு வெளியேறினார்.



அதிகாலையில் கிளம்பி, காரிலேயே காவேரிப்பாக்கம் வந்து சேர்ந்த பிரசன்னா வசுந்தரா ஜோடியை, வாசலில் இருந்த வாழை கன்றும் தோரணமாக தொங்கிய தென்னம்பாளைகளும், வரவேற்றன. அடுக்களைக்குள் இருந்த மங்கையை சத்தம் இல்லாமல் தேடி வந்து, 'நிர்மலாவிடம் பேசி சம்மதம் வாங்கியாச்சா?' என்று ரகசியமான குரலில் விசாரித்தாள் வசுந்தரா.

''இன்னும் இல்லையே... ஏன்?''

''அப்படி என்றால் நானே பேச்சை ஆரம்பிக்கிறேன். சத்யா கொடுத்த வளையல்களை என்னிடம் கொடுங்க...'' என்று கேட்டு வாங்கி கொண்டு ஹாலில் அமர்ந்தவள், நிர்மலாவை சென்று பார்க்கவே இல்லை.

லாப் டாப்பில் ஸ்கைப் இணைப்பை கொடுத்து இங்கே நடக்கும் நிகழ்ச்சிகளை நேரே பார்க்க ஏற்பாடு செய்து கொண்டு இருந்த கணவன்-மனைவியை, வெளியே வந்த நிர்மலா பார்த்து விட்டு வியப்படைந் தாள்.

''ஹேய் வசு! எப்ப வந்தாய்...?''

''இப்பதான் வந்தேன். உங்க அம்மா வந்தாச்சா? வளையல் போடலாமா...?'' என்று கெத்தாக சொல்ல அவள் விழித்தாள்.

''அத்தை... நல்ல நேரம் முடிவதற்குள் சீக்கிரம் ஆரம்பிங்க...'' என்று மங்கையை விரட்ட அவர் மூலிகை சாறுடன் வந்தார்.

''இது ஐந்து வகை மூலிகைகளில் இருந்து எடுத்த மருந்து. துளி அவளின் உள்ளங்கையில் வைத்து குடிக்க சொல்லிவிட்டு வளையல் போடுங்கம்மா. நீங்க

போட்டுட்டு, உங்க மருமகளையும் மகளையும் போட சொல்லுங்க...'' என்று சம்பந்தியை அழைத்தார் மங்கை. அம்மாவும் அண்ணியும், கண்ணாடி வளையல் அடுக்கிய பிறகு, சத்யா வாங்கிய தங்க வளையல்களோடு நிர்மலா வின் அருகில் வந்தாள் வசுந்தரா.

''எல்லோரும் பொண்ணு பார்த்து முடிவு பண்ணிட்டு பரிசம் போடுவாங்க. ஆனால் எங்க மாப்பிள்ளை, பரி சத்தை போட்டு கொடுத்து விட்டு பொண்ணை முடிவு பண்ணி இருக்கிறார். பையன் பேர் சத்யமூர்த்தி. B.E. படித்து விட்டு, இந்தோ திபெதியன் பார்டர் போர்சில், ஐந்து வருஷமா வேலை செய்கிறார். கை நிறைய சம்பளம். உங்க பெண்ணையும், அவள் வயிற்றில் வளரும் குழந்தையையும், உங்களையும், கண் கலங் காமல் பார்த்து கொள்வார் என்று உத்திரவாதம் கொடுக் கிறேன். சம்மதமா என்று சொல்லுங்க'' என்று மங்கை யிடம் கேட்ட வசுந்தராவை, நிர்மலா மட்டுமில்லாமல், ஆன்லைனில் பார்த்து கொண்டு இருந்த சத்யா உட்பட அனைவருமே விழிகள் தெறித்து விடும்படி பார்த்தனர்.

# 30



'சத்யமூர்த்திக்கு, நிர்மலாவை திருமணம் முடித்து தருவீர்களா?' என்ற கேள்வியை வசுந்தரா மங்கை அம்மா விடம் தடாலடியாக கேட்கக் கூடும் என்பதை கடந்த ஆறு மாதங்கள் தொலைபேசி பேச்சிலும், அடுத்த ஆறு



மாதங்களை கணவனாக அருகில் இருந்தும் பார்த்த பிரசன்னா எதிர்பார்த்தான்.

சுற்றி இருந்தவர்களின் பாவனையை ஆராய்ந்தான். நிர்மலாவுக்கு அவளின் அதிரடி பழக்கமே என்ற போதிலும் இந்த மாதிரி திருமண விஷயத்தில் அத்து மீறி மூக்கை நுழைப்பாள் என்று எதிர்பார்க்காததால், அதிர்ச்சி அங்கே ஆட்சி செய்தது. கண்களை இமைக்க மறந்து பிரமை பிடித்தவள் போல தங்கையை வெறித்து பார்த்த நிர்மலா மட்டும் இல்லாமல், அவங்க அம்மா, மங்கை, அண்ணி என்று அனைவரின் முகத்திலுமே அந்த அதிர்ச்சி நிலவ, பிரசன்னாவின் கண்கள் கணினியை பார்த்தது.

ஸ்கைப்பில் நேரடியாக இங்கே நடக்கும் நிகழ்ச்சி களை பார்த்து கொண்டு இருந்த சத்யாவின் புறம் அவனின் பார்வை பாய்ந்தது. அங்கே அதிர்ச்சி என்று சொல்ல முடியா விட்டாலும் அவசரப் பட்டு விட்டாளோ என்ற குழப்பம் இருந்தது.

சபையில் இல்லாமல், அறையில் அம்மாவையும் நிர்மலாவையும் வைத்து பேசி இருக்கலாமோ என்ற ஆதங்கம் தோன்றினாலும், கணவன் இறந்து பதினா றாவது நாள் காரியம் முடிந்த உடனே தன் திருமணத் திற்கு கிளம்ப வைக்க அவள் ஆடிய நாடகத்தின் வெற்றி யும் நினைவில் ஆட அவன் ஆண்டவனை சரணடைந் தான்.

அறையில் கேள்வி கேட்ட வசுந்தராவை தவிர, அங்கே ஐந்து பேர் இருந்தாலும் பிரசன்னா வந்தவுடன் இசைதட்டில் சுழல விட்ட நாதஸ்வர இசையை தவிர

முதல் சில நிமிடங்கள் அங்கே சத்தமே இல்லை. அந்த அமைதியை கிழித்துக் கொண்டு வந்தது நிர்மலாவின் அண்ணியின் குரல்.

''அம்மாடி! முளைச்சு மூணு இலை விடல. இவளை இந்த மாதிரி விழாக்கு கூப்பிட்டதே தப்பு. முதலில் இந்த மாதிரி ஆளுக்கு இந்த மாதிரி சம்பிரதாயங்களை செய் றதே தப்பு. அதுக்கு ஒரு பாரம்பரியம் இருக்குல்ல...'' என்று நீட்டி முழக்க, அங்கே இருந்த ஐந்து பேரில் யாருக்கு கோபம் அதிகம் வந்தது என்பதை நிர்ணயம் செய்ய இயலவில்லை.

தூரத்தில் இருந்தாலும் அருகே இருந்தவர்களின் கோபத்திற்கு கொஞ்சமும் குறையாமல் சத்யாவின் மனம் குமுறியது. இந்த பெண்ணின் நாக்கு ஏன் இப்படி அடுத்தவர் மனம் பற்றிய எண்ணமே இல்லாமல் சாட்டையாய் சுழல்கிறது? இதே சம்பிரதாயம் தான் அவனை மங்கையிடம் சொல்லி இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்ய சொன்னது. சாஸ்திர சம்பிரதாயங்களை பற்றி பேசும் ஆளை பார்! அதன் உள் அர்த்தம் புரியாமல் மேம்போக்காக கடைபிடிக்கும் இந்த மாதிரி பெண் களால்... பெண் என்றும் பாராமல் ஓங்கி... ப்சூ... மை காட்! இந்த மாதிரி நினைத்தது தான் தானா...? கட்டுப் படுத்த முடியாமல் ஆத்திரம் வந்தது.

''... போகட்டும் பிள்ளை தாச்சி பொண்ணு என்று பார்த்தாலும், ஆண்டு அனுபவித்த பழுத்த சுமங்கலி களை பார்த்து வளையல் போட சொல்லாமல் இந்த மாதிரி வயசுல சின்னவங்களை வளையல் போட சொல் வாங்களா? இன்னும் அவ வயித்துல இரு புழு பூச்சி கூட வராத நிலையில இவளுக்கு இவ்வளவு பெரிய கௌரவம் கொடுத்தால் பேசாமல் என்ன செய்வா...?'' என்று நொடிக்க வசுந்தராவின் பொறுமை பறந்தது.



''உங்களுக்கு ஏன் இவ்வளவு பொறாமை? உங்களையே கூப்பிட்டு இருக்காங்க. என்னை கூப்பிட்டால் என்ன? வளையல் போடுறதுக்கு ரெண்டு கையும், வாழ்த்த நல்ல மனசும் தான் வேண்டும்...'' என்று ஆத்திரமாக சொன்னாள் வசுந்தரா.

''வசு, காரியம் பெரிசு. முக்கியமான விஷயம் டைவர்ட் ஆக கூடாது...'' என்று மெல்லிய குரலில் சொல்லி விட்டு கை பற்றி பிரசன்னா அழுத்த, கோபத்தை அடக்கி வாயை மூடி கொண்டாள்.

''... பேசுற பேச்சை பாரேன். நரிக்கு நாட்டாமை கொடுத்தால் கிடைக்கு ரெண்டு ஆடு கேட்கும் கதை யால்ல இருக்கு. அவதான் சின்னப் பிள்ளை விவரம் தெரியாமல் பேசுறா என்று பார்த்தால், 'இப்படி எல்லாம் பேசாதே' என்று தட்டி கேட்க கூட ஆள் இல்லை போல? இவங்களே என்னை இப்படி மட்டம் தட்டி பேச சொல்லி கொடுத்து கூட்டி வச்சு இருக்காங்க போல. அதான் அந்த ஆழாக்கு வெடுக் வெடுக் என்று பேசு வதை வேடிக்கை பார்த்து கொண்டு நிக்குது இந்த பெரிய மனுஷி...'' என்று மங்கையின் புறம் கை நீட்டியவளின் கன்னத்தில் இடி இறங்கியது.

''அவங்களை கை நீட்டி பேசுற அளவுக்கு நீ பெரிய ஆளா! அவங்க வயசுக்கு ஒரு மரியாதை இல்லை? நாலு பேருக்கு நல்லது செய்ய நினைக்கும் அந்த மன சுக்கு மரியாதை இல்லை? அவங்க கால் தூசி பெறு வியா நீ...?'' என்று அதட்டியபடி அம்மா கை நீட்டி

மருமகளை அடிக்கக் கூடும் என்பதை எதிர்பார்க்க வில்லை.

''அப்பா! இப்பவாவது வம்பு பேசும் மருமகளை தட்டி கேட்கணும் என்ற எண்ணம் உங்களுக்கு வந்ததே...'' என்று வசுந்தரா சொல்ல, ''ஹய்யோ! அம்மா... என்ன பண்றீங்க...?'' என்று அலறியபடி நிர்மலா எழுந்து ஓடி வந்தாள்.

''நம்ம வீட்டு பொண்ணு கஷ்டத்தில் இருக்கிறாள் என்று வருத்தப்படணும். மாட்டாய். சரி நம் கையை எதிர்பார்க்கவில்லை. தானாக எதையோ செய்து பிழைக் கிறாள் என்று நிம்மதியாக இருக்கணும். அதுவும் மாட் டாய். கடவுளா பார்த்து அவளுக்கு ஒரு நல்ல எதிர் காலத்தை காட்டுகிறான் என்று சந்தோஷப் படுவியா, அதை விட்டுட்டு வாய்க்கு வந்தபடி பேசுகிறாய். இன் னொரு வார்த்தை அவங்களை பற்றி பேசினால் அந்த வாயை இழுத்து தச்சுடுவேன்...'' என்று எரிமலையாக பொங்கிய அம்மாவை அமைதிப் படுத்த முடியாமல் தவித்தாள் நிர்மலா.

''மனுஷங்க தராதரம் தெரிந்து மரியாதை பேச முடிஞ் சால் இங்கே இரு. இல்லை என்றால் உன் வீட்டுக்கு போய்டு. என் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி முடிந்த கையோடு, என் பையனுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப் பட்ட ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுத் துட்டு போகிறேன்'' என்று பொரிந்த மாமியாரை அவள் இதற்கு முன் இவ்வளவு கோபத்துடன் பார்த்ததே இல்லை என்பதால் நிலை குலைந்து போய் விட்டாள்.

''அ... ம்... மா...! என்னம்மா நீங்க...? அவங்களுக்கு சரியா நீங்களும் இறங்கி பேசிட்டு...'' என்று அவரின்



தோளை அணைத்து ஆறுதல் சொல்லி விட்டு அண்ணி யின் புறம் திரும்பினாள் நிர்மலா.

''அண்ணி என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று உங்களுக்கு தெரியுமா? அண்ணி என்றால் அம்மாவின் மறு உருவம். அம்மா என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா? தன்னால் எல்லா நேரத்திலும் எல்லாரின் அருகிலும் இருக்க முடியாது என்பதனால் தனக்கு ஈடாக அது கடவுள் படைத்த ஒரு அற்புதமான உறவு அது...''

''ஹூம்! இதெல்லாம் தெரிந்து இருந்தால் இவங்க ஏன் இப்படி பேச போறாங்க...?'' என்று ஆத்திரமாக இடையிட்ட வசுந்தராவை கட்டுப்படுத்தினான் பிரசன்னா.

''நீங்க அம்மாவா இருக்க வேண்டாம். ஏன் அண் ணியா கூட எங்க நல்லதை நினைக்க வேண்டாம். ஆனால் ஒரு மனுஷியா இருக்க முயற்சி பண்ணுங்க. ஒரு நல்ல மனுஷி எப்படி இருக்கணும் தெரியுமா? நம்மை சுற்றி இருக்கும் நாலு பேர் நல்லா இருக்கணும் என்று நினைக்கணும். அடுத்தவங்க மனசு கஷ்டப் படாமல் பேசணும். அது முடியாத தருணத்தில், பேசாம லேயே இருக்கணும்...''

அதுவரை அங்கே நிமிடத்தில் நடந்து விட்ட நிகழ்ச்சி களை கண்டு திகைத்து போய் அமைதியாக இருந்த மங்கை, ''நிர்மலா, போதும் நம்ம வீட்டுக்கு வந்தவங் களிடம் இப்படி விவாதம் பண்ணலாமா? வா வந்து சேரில் உட்கார். இன்னும் வளையல் போட்டு முடிக்கலை...'' என்று தடுக்க முயன்றார்.

''பாருங்க. உங்களை மரியாதையை குறைச்சலா பேசுகிறேன் என்று என்னை அடக்க வந்துட்டாங்க.

இவங்க அம்மா! தான் பத்து மாதம் சுமந்து பெற்ற ஒற்றை பிள்ளை கல்யாணம் முடிந்த ஒரு வருஷத்தில் இறந்ததற்கு உன் ராசிதான் காரணம் என்று இவங்க ஒரு வார்த்தை இது வரைக்கும் சொல்லி இருப்பாங்களா? பிள்ளையின் இழப்பை தாங்கியதோடு மட்டுமில்லை, அதையும் தாண்டி எனக்கு ஒரு கல்யாணம் பண்ணி பார்க்கணும் என்று நினைக்கும் இந்த தாயின் மனசின் உயரத்தை உங்களால் எந்த காலத்திலும் புரிஞ்சுக்கவே முடியாது. அவங்களை பார்த்து... ச்சே ச்சே...'' என்று முகம் திருப்பியவளின் கண்களில் கண்ணீர் சுரந்தது.

''நிர்மலா... நான் சொல்ற பேச்சு கேட்க போகிறாயா இல்லையா?''

''சாரிம்மா, உங்களை மறுத்து பேசறதுக்கு மன்னிச்சுடுங்க. நம்ம வீட்டுக்கு வந்தவங்களுக்கு ஒரு கௌரவ குறைச்சல் ஏற்பட கூடாது என்று நினைக்கும் பட்சத்தில் இது வசுந்தராவுக்கும் பொருந்தும்மா. அவளை இன்னொருத்தர் அவமானப் படுத்த விடுவது மட்டும் என்ன நியாயம்?'' என்று அவரிடம் மறுத்து விட்டு மீண்டும் அண்ணியிடம் திரும்பினாள் நிர்மலா.

''முளைச்சு மூணு இலை விடாத சின்ன பொண்ணுக்கு, இருக்கும் அக்கறை கூட என் மேலே காட்ட அம்மா ஸ்தானத்துல இருக்கும் உங்களுக்கு தோன்றவில்லையே? உங்க நரம்பில்லாத நாக்கு பேசும் கொடுமையான வார்த்தைகளுக்கு அஞ்சி வாழும் கட்டாயத்தில் இருக்க எங்க அம்மாவையே இன்று பொங்கி எழ வச்சுட்டீங்க. அதுக்கு காரணம் நீங்க மங்கை அம்மாவை கை நீட்டி பேசியது தான். ஒரு மனிதாபிமானம் உள்ள



மருமகளா, சேவை உள்ளம் கொண்ட நல்ல தாயா, மருமகளை மகளாக எண்ணி மறுமணம் செய்து பார்க்க நினைக்கும் ஒரு அபூர்வமான மாமியாரா, வறுமையில் சிக்கி மேல் படிப்பை தொடர முடியாமல் தவிக்கும் இளம் தலைமுறையினருக்கு சொந்த காசை செலவு பண்ணி நல்ல வழி காட்ட நினைக்கும் ஒரு நல்ல மனுஷியா இருக்கக் கூடிய இவங்களை பார்த்து என்ன வார்த்தை சொல்லிட்டீங்க அண்ணி...?''

''நிர்மலா, அவள் செய்த அதே தப்பை இப்போ நீயும் செய்யாதே! ஏதோ தெரியாமல் பேசிட்டா விடு...'' என்று அவளின் கையை பற்றி இழுத்த மங்கை அம்மாவிற்கு கட்டுப்பட்டு முன்பு அமர்ந்து இருந்த இருக்கைக்கு வந்தாலும் அவளின் மனம் ஆறவில்லை.

''அம்மா... ப்ளீஸ்... என்னை பேச விடுங்க...''

''நீ பேச வேண்டியது உங்க அண்ணியிடம் இல்லை. அவள் பேசுவதற்கு முன்னாடி வசுந்தரா என்னை ஒரு கேள்வி கேட்டாளே! அதுக்கு என்ன பதில் சொல்லலாம் என்று என்னிடம் சொல்லு...'' என்று பேச்சை திசை திருப்ப முயன்ற மங்கையின் குரலை மீறிக் கொண்டு 'நிர்மலா...' என்ற அழைப்பு அவளின் காதுகளை எட்டியது.

இது சத்யாவின் குரல் அல்லவா...? அவன் இங்கே எங்கே வந்தான்? நேற்று மாலை பேசும் போது கூட இங்கே வருவதாக சொல்லவில்லையே...? அவளின் கண்கள் ஹால் முழுவதையும் சுற்றி வர ஸ்கைப் இணைப்பில் இருந்த சத்யா கண்ணில் பட்டான்.

அந்த கடிதத்தை படித்த பிறகு முதன் முதலாக அவனை கண்ணால் கண்டவள் உணர்ச்சி பெருக்கில்

நெகிழ்ந்து போனாள். ''ச... த்... யா...'' என்று அவனின் பெயரை உச்சரித்தவளுக்கு அவ்வளவு நேரம் அம்மாவை அதட்டும் போதும், அண்ணியிடம் விளக்கும் போதும், இருந்த தைரியம் காணாமல் போய் கண்கள் கசிந்தது.

''ஷ்! நிர்மலா, முதலில் கண்ணை கசக்குவதை நிறுத்து. என் சார்பா வசுந்தரா, அம்மாவிடம் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லலை...''

''அது... வந்து...'' என்று இழுத்தவளின் கண்கள் அவசரமாக ஹாலை ஒரு முறை சுற்றி வந்தது. அம்மா தனக்கு சம்மதம் என்பதை அண்ணியை அதட்டிய கோபத்திலே காட்டி விட்டார்கள். வசு பிரசன்னா மாப்பிள்ளை சார்பாகவே பேச வந்து இருப்பவர்கள். அவள் எப்போது சம்மதம் சொல்வாள் என்று காத்திருப்பவர்கள் மங்கை அம்மாவிடம் பார்வை வந்து நிலைத்தது.

அவரின் முகத்தில் சம்மதமான புன்னகையே நிலவ, நிர்மலாவின் முகத்தில் திருப்தி பரவியது. ஆனாலும் மனதில் இருக்கும் வார்த்தைகள் வெளியே வார்த்தையாக வர 'தகினதோம்' தாளம் போட அவள் தடுமாறினாள்.

''சத்யா, ஒருவேளை நீயே அவளிடம் நேரில் சம்மதம் கேட்கலை என்ற கோபமா இருக்கலாம். ஒரு வார்த்தை கேளேண்டா...'' என்று அதுவரை அமைதியாக நின்ற பிரசன்னா எடுத்து கொடுக்க, சத்யாவிற்கு சின்ன புன்னகை மலர்ந்தது.

''நிலா, நான் ஏற்கனவே உன்னிடம் சொல்லி இருந்தாலும், இந்த சபையில் உன் அம்மா, என் அம்மாவின்



முன்னிலையில் மீண்டும் ஒரு முறை சொல்கிறேன். உன்னை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உன்னுடைய சம்மதத்திற்காக காத்திருக்கிறேன்...'' என்று சத்யா புன்னகையோடு கேட்க, அதுவரை நிர்மலாவின் மனதில் இருந்த சங்கடங்கள் எல்லாம் சூரியனை கண்ட பனித்துளி போல காணாமல் போனது.

''எங்க அம்மாவுக்கும் உங்க அம்மாவுக்கும் சம்மதம் என்றால், எனக்கும் சம்மதம்...'' என்று சொல்லி முடிக்கும் முன்பே அவர்கள் இருவரின் வாயில் இருந்தும் சம்மதம் என்ற குரல் கோரசாக வெளி வர, சில நிமிடங்கள் முன்பு நிலவிய சங்கடமான சூழ்நிலை மறைந்து சந்தோஷ அலைகள் பரவியது.

# 31

வளைகாப்பு நடத்த வந்த இடத்தில், தடாலடியாக வசுந்தரா ஒரு குண்டை போட, தொடர்ந்து சில நிமிடங்களில் என்னென்னவோ நடந்த போதிலும், விவாதத்தின் முடிவில், நிர்மலாவின் சம்மதம் வெளிவர உற்சாகத்தில் துள்ளி குதித்து ஓடி வந்தாள் வசுந்தரா.

''ஹேய்! சூப்பர் ஸ்மார்ட்டீ ஒருவழியா சம்மதம் சொல்லிட்டா...'' என்று ஓடி வந்து அவளின் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்ட தங்கையை பார்த்து நிர்மலாவிற்கு சந்தோஷம் பொங்கி வழிந்தது.

''எல்லாம் உன்னால தான் வசு...'' என்று உருக்கமான குரலில் நிர்மலா சொல்ல, ''ஹாய்! இந்த மாதிரி

வாயாலே வடை சுடும் வார்த்தை ஜாலம் எல்லாம் நம்ம கிட்டே செல்லாது...'' என்று அழகு காட்ட நிர்மலா விழித்தாள்.

''என்ன வசு... என்ன ஆச்சு...?''

''என்னால தான் இந்த திருமணம் நடந்தது என்று உண்மையாகவே நீ உணர்ந்தால் அதுக்கு தகுந்த சன்மானம் வேண்டும் எடு...'' என்று இடுப்பில் கை வைத்து வசுந்தரா மிரட்ட பட்டென்று அங்கே ஒரு சிரிப்பலை எழுந்தது.

''நீ இங்கே கேட்டால் பெயராதே வசு! அதை விட நம்ம கல்யாணத்தில் அலங்கார தட்டு செய்து வைத்த கைகளுக்கு பனிரெண்டு தங்க வளையல்கள் வாங்கி கொடுத்த இடத்தில் கேட்டால் லட்டு மாதிரி அள்ளலாம்'' என்று கணினி திரையை காட்டி சிரித்த பிரசன்னாவின் பேச்சை தொடர்ந்து மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

''நீ சத்யாவிடம் புதுசா கேட்பது இருக்கட்டும். அவன் ஏற்கனவே வாங்கி கொடுத்த பரிசத்தை முதலில் மருமகளுக்கு போடு. அப்பதான் ஆரத்தி சுத்தி மனையில் இருந்து எழுப்ப முடியும்...'' என்று மங்கை சொல்ல மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

'கொடுக்காமல் எங்கே போகப் போகிறேன்? என்னையே 420 ஆக்கிட்டீங்களே!'' என்று சலித்த படி அந்த வளையல்களை அவளின் கரத்தில் அடுக்கினாள் வசுந்தரா.

''இது கல்விக்கு, இது குறையாத ஆயுளுக்கு, இது உன் நலம் நாடும் நட்பு கிடைக்க, இது செல்வம் பெருக, இது



என்றென்றும் இளமையாக இருக்க, இது ஆரோக்கியத்திற்கு...'' என்று சொல்லியபடி ஒவ்வொரு வளையலாக அவளின் வலது கரத்தில் முதல் ஆறு வளையல்களை அடுக்கினாள் வசுந்தரா.

அமர்ந்து இருந்த அனைவரும் வியப்போடு பார்த்தாலும் தூரத்தில் இருந்த அதை பார்த்த சத்யாவின் கண்கள் என்ன மாதிரி பொண்ணு என்று வியந்து பாராட்டியது.

''இந்த கையில் போடலாமா?'' என்று கேட்டபடி அவளின் இடது கரத்தை பற்றினாள்.

''இது ரொம்ப முக்கியம் மன வலிமைக்கு...'' என்று சொல்லியபடி அண்ணியை ஓரக்கண்ணால் பார்க்க அவள் முகத்தில் சின்ன வருத்தம் இருந்ததா? 'ஆஹா இந்த அண்ணியால் கூட சலிப்போ கோபமோ இல்லாமல் பார்க்க முடியுமே' என்ற வியப்பு வசுவின் கண்ணில் தெரிய, நிர்மலாவின் பார்வை அவளை தொடர்ந்தது.

''அங்கே என்ன பார்வை? இங்கே பாரு. எல்லாத்தையும் விட முக்கியம். இந்த வளையல் அன்பான வாழ்க்கை துணை அமைய...'' என்று சொல்லியவளின் கண்கள் திரும்பி பிரசன்னாவை பார்க்க, தன் கட்டை விரலை உயர்த்தி புன்னகை செய்தான்.

''ஹலோ... அங்கே என்ன பார்வை...? இங்கே கையை பார்த்து மிச்ச நாலு வளையலையும் போடு...'' என்று சிரித்த மங்கை அம்மாவின் குரலில் அவசரமாக திரும்பினாள்.

''ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில் கண் அத்தை நீங்க!'' என்று கொஞ்சி விட்டு, ''இது குறைவில்லாத

மக்கட் செல்வம் அடைய, இது புகழுக்கு, இது சொன்ன சொல்லை காப்பாற்றும் நேர்மைக்கு...'' என்று நிறுத்தி, கணினியில் சத்யாவை முறைத்தாள்.

''என்ன மாமா நீங்க? பனிரெண்டு வளையல் தான் வாங்கி இருக்கீங்க. நான் பதினாறு வகையான செல்வம் சொல்லணுமே...! இன்னும் நாலு வளையலுக்கு நான் என்ன பண்ணுவேன்?'' என்று தன் கையில் இருந்த ஒரு வளையலை காட்டி சிணுங்கினாள்.

''உன் கையில் இருப்பதை போடு, அதுக்கு பதிலா நான் இரண்டு மடங்கு வாங்கி தருகிறேன். இது நீ கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணியதற்கு நீ கேட்கா மலே, உனக்கு நான் தரும் ஸ்பெஷல் பரிசு'' என்று சத்யா புன்னகை செய்ய, இங்கே இருந்த அனைவரும் வியப்பின் உச்சியை தொட்டனர்.

''உன் கையில் இருப்பதை நீ கழட்ட வேண்டாம் வசு. மிச்சம் நாலுக்கு நான் ஏற்பாடு பண்றேன்...'' என்று மங்கை அவசரமாக தன் கைகளில் இருந்த இரண்டு வளையல்களை கழட்டியபடி நிர்மலாவின் அம்மாவை ஆராய, அங்கே அவர் கண்ட காட்சி வியப்பாக அழைத்தது.

அங்கே தன் கையில் இருந்த வளையல்களை கழட்டிய நிர்மலா அம்மாவிடம், ''வேண்டாம் அத்தை. நீங்க ரெண்டு தானே போட்டு இருக்கீங்க. என்னிடம் நாலு இருக்கு. நான் இரண்டை தருகிறேன்'' என்று அணிந்து இருந்த வளையல்களை நீட்டியவளை நம்ப முடியாமல் பார்த்தார்.

''என்ன அத்தை! என்னிடம் வாங்கினால் தானே ஒன் றுக்கு இரண்டா கொடுக்கணும்? பையனுக்கு செலவு



கம்மியாகட்டும் என்று வளையலே வாங்க வேண்டாம் என்று சொல்றீங்களா...?'' என்ற வசுந்தராவின் கேலிக்கு மங்கை அம்மாவிடம் பதில் இல்லை என்பதால், எல் லோரும் திரும்பினர்.

அங்கே தன் மருமகள் நீட்டிய வளையல்களை வாங்கு வதா வேண்டாமா என்று தயங்கிக் கொண்டு இருந்த அம்மாவை பார்த்து ஒரு முடிவுக்கு வந்த நிர்மலா, ''இங்கே வாங்க அண்ணி! பரவாயில்லை, நீங்களே வந்து உங்க கையால் போடுங்க. எதுக்கு அம்மாவை தூது அனுப்பு றீங்க...?'' என்று கேட்க அங்கே ஊசி விழுந்தால் சப்தம் கேட்கும் அளவுக்கு அமைதி நிலவியது.

''இல்லை... நான்...'' என்று தயங்க, மங்கை எழுந்து அவள் இருந்த இடம் சென்று கை கொடுத்து எழுப்பி னார்.

''வா, வந்து போடு, உன்னை யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க. வா...'' என்று அழைத்தவர் கண்ணாலேயே வசுந்தராவுக்கு செய்தியும் சொன்னார்.

''ஓகே...'' என்று தோளை குலுக்கியவள், ''இது தொடரும் கொடைக்கு... ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம். வாங்கினால் மட்டும் போதாது திருப்பி கொடுக்கவும் வேண்டும். அதை நம்பி இங்கே நிறைய பேர் இருக்காங்க...'' என்று சொல்லி விட்டு கையில் இருந்த பனிரெண்டாவது வளையலை நிர்மலாவின் கையில் அணிவித்தாள் வசுந்தரா.

''இன்னும் இருக்கும், தொலையாத நிதியம், நடுநிலை தவறாத நிலை, துன்பம் அறியாத வாழ்க்கை, இறை அருள்...'' ஆகியவற்றிற்கு யார் வளையலை கொடுக்

கிறாங்களோ அவங்களே போடட்டும்'' என்று சொல்லி விட்டு பிரசன்னாவின் அருகே சென்று நின்றாள்.

தயங்கி தயங்கி அருகே வந்தவள், ''ஆல் தி பெஸ்ட்'' என்று சொல்லி தன் கையில் இருந்த இரு வளையலை யும் அணிவிக்க, ''தேங்க்ஸ் அண்ணி. இந்த வளையலுக் காக மட்டுமில்லை, நான் சொன்னதை சரியா புரிந்து கொண்டதுக்கும் சேர்த்து ரொம்ப தேங்க்ஸ்'' என்று அவளின் கையை பற்றி தன் கண்களில் நிர்மலா ஒற்றி கொள்ள, அவள் கண்களிலும் லேசாக ஈரம் துளிர்த்தது.

மங்கை தன் கையில் இருந்த வளையலை வசுந்தரா அம்மாவிடம் நீட்டி போட சொல்ல, ''என்னம்மா நீங்க? உங்க மருமகள் அவங்களுக்கு சொன்ன லாஜிக் உங் களுக்கு அப்ளை ஆகாதா? கொடுக்கிறவங்க தான் போடணும். அவளை வாழ்த்த உங்களை விட அதிகமா யாருக்குமே தகுதி இல்லை. போடுங்க...'' என்று சத்யா சொல்ல, நிர்மலா புன்னகை செய்தாள்.

''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா'' என்று காலில் விழுந்த மருமகளை தூக்கி அணைத்து, ''நல்ல படியா பிள்ளையை பெற்று அவனையும் ராணுவத்துக்கு அனுப்பணும்...'' என்று சொல்லி மருமகளுக்கு தன் கையால் இரண்டு வளையல்களையும் போட்டு, நெற்றி யில் நீறு பூசி வாழ்த்தினார்.

''நிர்மலாவும் சத்யாவும் பேசி கல்யாணம் எப்போ வைத்து கொள்ளலாம் என்று முடிவு பண்ணி சொல்லட் டும். நீங்க வாங்க, சமையலை பார்க்கலாம்...'' என்று அங்கே இருந்தவர்களை நகர்த்திய மங்கையை பார்த்து வசுந்தரா கேலியாக சிரித்தாலும், ''நடக்கட்டும்...



நடக்கட்டும்... ஆனால் எனக்கு நாலு வளையல் டியூ மாமோய்...'' என்று சத்தமாக சத்யாவிடம் சொல்ல தயங்கவில்லை.

சுற்றிலும் இருந்தவர்கள் நகர, ஹாலில் தனியாக விடப்பட்ட சில வினாடிகள் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமைதியாக இருந்தனர். நீண்ட அமைதியை கலைக்க விருப்பமே இல்லை என்றாலும், தன் மனதில் இருப் பதை சொல்ல வேண்டும் என்ற எண்ணம் உந்த பேச்சை துவக்கினான் சத்யா.

''இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் நிலா...'' என்ற ஒற்றை வாக்கியம் கனிந்த குரலில் வர, நிர்மலா புன்னகை செய்தாள். ''நானும் தான்...'' என்று அதை விட கனிவான குரலில் சொல்ல அடுத்து பேச்சை தொடர்வது அவசியம் என்றே அவர்களுக்கு தோன்ற வில்லை.

ஆழ்ந்த அமைதியுடன் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு இருந்தாலே மனதின் எண்ணங்கள் அடுத்த வரை சுலபமாக சென்றடையும் என்ற எண்ணம் தோன் றியது. ஒரு சந்தோஷ பெருமூச்சை வெளியேற்றி, ''கல்யாணம் எப்போ வச்சுக்கலாம் நிலா...?'' என்று விசாரித்தான்.

''அதென்ன நிலா...? எல்லோரும் நிர்மலா என்றால் உங்களுக்கு மட்டும் நிலாவா...?

''ஆமா! எனக்கு மட்டும் நிலா. ஸ்பெஷல் தான். அதிலும் தேய்தல் இல்லாத முழு நிலா. என் வானில் என்றென்றும் ஒளி வீசும் வண்ண நிலா...''

''ஆஹா! இதை கேட்க வசு இல்லாமல் போயிட்டாளே...'' என்ற அவனின் கவித்துவமான வரிகளை கேட்டு கேலி செய்த நிர்மலாவை பார்த்து கூச்சத்துடன் சிரித்தான்.

''நம் இருவரையும் ஒன்று சேர்த்ததில் வசுந்தராவுக்கு பெரும் பங்கு இருக்கு. அவளுக்கு அந்த நாலு வளையலை வாங்கி கொடுத்துடணும்'' என்று சொன்னவனை பெருமையாக பார்த்து சிரித்தாள் நிர்மலா.

''நழுவாதே! கல்யாணம் எப்போ வச்சுக்கலாம் என்று சொல்லு...'' என்று அதிலேயே குறியாக நிற்க அவள் புன்னகை செய்தாள்.

''இனிமேல் கல்யாணம் என்பது ஊராருக்கு நம் உறவை தெரிவிக்கும் ஒரு சடங்கு தானே சத்யா? எப்போ வேண்டுமானாலும் வைத்து கொள்ளலாம். உங்களால் எப்போ வர முடியும் என்று சொல்லுங்க. அப்ப வச்சுக் கலாம்...''

''கரெக்ட், வெறும் சடங்கு தானே! உடனே அதை செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. இப்ப உடனே வந்தால் டெலிவரி சமயத்தில் குழந்தையை பார்க்க ஆசையாக இருக்கும். ஆண்டு விடுமுறைக்கு நான்கு மாதம் இருக்கும் சமயத்தில், இரண்டு முறை நீண்ட விடுப்பு கேட்டால் நல்லா இருக்காது. அதனால், குழந்தை பிறந்த உடனே வருகிறேன். திருமணம் பதிவு பண்ணலாம். குழந்தைக்கு ஐயர் வைத்து புண்ணியார்ச் சனை செய்வதை சாக்கா வைத்தே உறவினர்களை அழைத்து, விருந்து கொடுத்து சொல்லி விடலாம் நிர் மலா. தனியா திருமணம் என்று செய்ய தேவை இல்லை



என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?'' என்று அவளின் அபிப்ராயம் கேட்டான் சத்யா.

''நான் சொல்றதுக்கு ஒன்றும் இல்லை. ரெண்டையும் சேர்த்து வைத்து கொள்வதில் எனக்கும் சந்தோஷம் தான்...'' என்று சம்மதம் தெரிவிக்க, அந்த முடிவினை அனைவரும் ஏற்று கொண்டனர்.

அடுத்த இரண்டு மாதங்கள் இறக்கை இல்லாமல் பறக்க, ஒரு நல்ல நாளில் யாருக்கும் தன்னால் சிரமம் இருக்கக் கூடாது என்று நினைக்கும் அன்பே உருவான தாய்க்கும், தன்னால் நாலு பேருக்கு பயன் இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையுடன் இன்னுயிரை தியாகம் செய்த பொறுப்பு மிக்க கடமை வீரனான தந்தைக்கும் உருவான வீர திருமகன், இந்த உலகத்தில் தன் காலடி பதித்தான்.

பிற்பகல் உணவு வேளையில், தன் ஜனனத்திற்கான வாசல் கதவை தட்டி முயற்சியை துவக்கிய அந்த சிசு, நான்கு மணி நேரம் தன் தாயை அவ்வப்போது வலியில் துடிக்க வைத்து விட்டு சுபமான வேளையில் சுக பிரசவத்தில் வெளியே வந்து தாயும் சேயும் நலம் என்ற செய்தியை சுற்றி இருந்த அனைவருக்கும் சொல்லி அவர்கள் வயிற்றில் பால் வார்த்தான்.

'என் மகன் வந்தான்' என்ற செய்தி காதில் விழுவதற்கு முன்பே, கிளம்பி, உண்மையிலேயே விமானத்தில் பறந்து வந்து, நள்ளிரவில் அந்த சின்ன மருத்துவ மனை யில் சத்யமூர்த்தி காலடி பதித்த போது, தூக்கத்தில் மழலையும், தூங்காமல் மனைவியும் சிரித்த முகத்துடன் வரவேற்றனர்.

# 32

நள்ளிரவு தாண்டிய நேரத்தில் மருத்துவ மனைக்கு சத்யமூர்த்தி வந்து சேர்ந்த போது கிடைத்த மரியாதை அவனை ஆச்சரியப் படுத்தியது. சின்ன ஊரில் செல்வாக்கான குடும்பம் என்பதால் மங்கையை ஏற்கனவே தெரிந்து இருந்ததும், அவன் ராணுவ வீரன் என்பதாலும், நிர்மலாவின் கணவனாக போகிறவன் என்ற தகவலும் ஏற்கனவே ஊருக்கும் கசிந்து இருந்ததால், மரியாதை கூடுதலாகவே இருந்தது.

அவன் நள்ளிரவில் வரக்கூடும் என்று மங்கை சொல்லி வைத்து இருந்ததால், சென்னை விமான நிலையத்தில் இருந்து வாடகை கார் பிடித்து அங்கே வந்து இறங்கிய போது அவன் வரவை அங்கீகரித்து சல்யூட் வைத்த காவலாளியை பார்க்க வியப்பாக இருந்தது.

''லெப்ட்ல இரண்டாவது ரூம் சார். ரெண்டு பேரும் நல்லா இருக்காங்க சார்...'' என்று தகவலும் சொல்லி வழி காட்டியது வியப்பை கூட்டியது.

''வேண்டாம்! அவங்க தூங்கிக் கொண்டு இருந்தால், நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ப்ளீஸ்...'' என்று சொல்லி, கூட வந்து வழி காட்ட முயன்ற காவலாளியை தடுத்து நிறுத்தி விட்டு காலடி சத்தம் அதிர்ந்து ஒலிக்காமல் மெல்ல நடந்து அவன் காட்டிய அறை கதவை தள்ளி திறந்தான்.



திறந்த வினாடியில், ''சத்யா...'' என்ற சத்தம் குறைவாக இருந்தாலும், ஆர்வமாக வெளிவந்த நிர்மலாவின் குரல் கேட்டு நெகிழ்ந்து, அடுத்த வினாடி ஒரே எட்டில் கட்டிலின் அருகே தாவி சென்று குனிந்தான்.

அவ்வப்போது தொலைபேசியில் குரலைக் கேட்டு இருந்தாலும், நவீன தொழில் நுட்பத்தின் உதவியால், முகத்தையே பார்த்து பேசினாலும், நீண்ட இடைவெளிக்கு பிறகு, நேருக்கு நேர் சந்தித்த அந்த முதல் வினாடி இருவருக்கும், அளவில்லா ஆனந்தத்தை தந்தது.

''எப்படி இருக்க நிலா? குழந்தை எங்கே?'' என்று கேட்க நினைத்து, சத்தம் வெளி வராமல், வெறுமனே வாய் மட்டும் அசைய, அவள் தனது வலது கரத்தை அருகே இருந்த தொட்டிலின் புறம் நீட்டி, ''நல்லா இருக்கேன்...'' என்று அவளும் தலையை மட்டுமே அசைத்தாள்.

குழந்தை இருந்த தொட்டிலை நெருங்கி குனிந்து, வெள்ளை துணியில் சுற்றிய பஞ்சு பொதியாய், ரோஜா பூவின் நிறம் மற்றும் மென்மையோடு, தாயின் கருவறையில் இருந்து வெளி வந்து சில மணி நேரங்களே ஆகி இருந்ததால், தோலில் சுருக்கத்தோடு, கண் மூடி அழகாக துயில் கொண்டிருந்த குழந்தையை ஒற்றை விரலால் வருடியவன் விழிகளில் நீர் துளியோடு நிமிர்ந்தான்.

''ஸ்வீட் பேபி...'' என்று பரவசத்துடன் சொன்னவன் குரல் அவனையும் அறியாமல் சற்றே உயர்ந்து இருக்க, சப்தத்தில் மங்கையும் எழுந்தார்.

''ஹேய்! சத்யா... வா வா... எப்ப வந்தாய்...? குழந்தையை பார்த்தாயா?'' என்று ஆர்வமாக விசாரிக்க அவன் புன்னகைத்தான்.

''இப்பதான் நுழைந்து ஒரு நிமிஷம் கூட ஆக வில்லை. நேரே குழந்தையைதான் பார்க்கிறேன்...'' என்று சொல்லி விட்டு, அருகே வந்து குனிந்து கால் களை தொட்டு கண்ணில் ஒற்றி கொண்டான்.

''இதை நீ இன்னும் மறக்கலையா...? நல்லா இரு... சாப்பிட்டாயா...?'' என்று மங்கை விசாரித்தபடி எழ, அவன் அவரின் தோளைப் பற்றி அழுத்தி கட்டிலில் படுக்க வைத்தான்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். எல்லாம் பிளைட்டி லேயே கொடுத்தாங்க. நீங்க ரெஸ்ட் எடுங்க...'' என்று சொல்லி விட்டு கட்டிலின் அருகே இருந்த ஸ்டூலில் வந்து அமர்ந்தான்.

''ஹார்லிக்ஸ் வேண்டுமானால் தரட்டுமா...?'' என்ற நிர்மலாவின் உபசரிப்பை கேட்டு அவன் புன்னகை செய்தான்.

''எனக்கு பசியே இல்லை. உனக்கென்ன தூக்கம் வரலையா? இந்த அர்த்த ராத்திரியில் இப்படி விழித்து இருக்கிறாய்?''

''ம்ம்ம், இப்பதான் குட்டி பசிக்கு விழித்தார். பால் குடிச்சுட்டு, அவர் சமத்தா தூங்கிட்டார். எனக்கு தூக்கம் வரலை. நீங்க வருவீங்க என்று மணியை பார்த்து கொண்டு இருந்தேன்...'' என்று இயல்பாக சொன்ன நிர்மலாவை சந்தோஷத்தோடு அவன் பார்க்க மங்கை யின் முகத்தில் சின்ன புன்னகை மலர, மறுபுறம் திரும்பி படுத்து கொண்டார்.

''வசு, குட் நியூஸ் சொல்லி இருக்கிறாள் போல! எப்படி இருக்கிறாள்?'' என்று ஆர்வமாக விசாரிக்க அவள் சந்தோஷமாக தலை அசைத்தாள்.



''ஆமா! அவளுக்கு தரேன் என்று சொன்ன கிப்ட் வாங்கிட்டீங்களா? கல்யாணத்துக்கு முன்னாடியே கொடுத்துடணும்...'' என்று சொன்னவளின் முகம் மலர்ந்து இருந்தது.

''குழந்தைக்கு சங்கிலி, உனக்கு கொலுசு, வசுந்தரா வுக்கு வளையல், அம்மாக்கு மோதிரம் எல்லாம் ரெடியா இருக்கு நிலா...'' என்று அவளின் மலர்ந்த முகத்தை ரசித்த படியே சந்தோஷமாக சொன்னவன் கண்கள் அவளின் கரங்களை ஆராய்ந்தது. வளையல்களை காணோம். லேசாக வாடிய முகத்தை அவசரமாக சீர் படுத் தினான்.

''வசுந்தராவுக்கு, குழந்தைக்கு ஓகே. எனக்கு எதுக்கு...?'' என்று அவள் இயல்பாக கேட்க அவன் முகம் மேலும் வாடியது. தன்னிடம் இருந்து எதையும் பெற்று கொள்ள வேண்டாம் என்று நினைக்கிறாளா? 'ச்சே ச்சே... அப்படி இருக்காது...' என்று தலையை குனிந்து மனசை தேற்றி கொள்ளும்போது, அவனின் முகத்திற்கு நேரே கையில் பனிரெண்டு வளையல்களை பிடித் திருந்த நிர்மலாவின் கரத்தை கண்டதும் வியப்புடன் நிமிர்ந்தான்.

''டெலிவரிக்கு போவதற்கு முன்பு எல்லா நகையும் கழட்ட சொன்னாங்க. அதனால் கழட்டினேன். நீங்க நைட்டே வருவீங்க என்பதால், உங்களுக்காக காத்திருந் தேன்...''

இவள் தன் மனதை அப்படியே படிக்கிறாளா என்ன? கண்கள் கசிய, உள்ளம் உருக, கைகள் நடுங்க, ஆர்வத் துடன் அதை வாங்கி, அவளின் கையில் ஒவ்வொன்றாக அணிவித்தான்.

அக்னி சாட்சி இல்லாமல், அம்மி மிதிக்காமல், அருந்ததி பார்க்காமல், மேள தாளம் முழங்காமல், திருமண மந்திரம் இல்லாமல், முப்பது முக்கோடி தேவர்களின் சாட்சியாக, இன்னாருக்கு இன்னாரென்று இறைவன் விதித்த விதிப்படி, அங்கே மீண்டும் ஒரு திருமண பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

**நீ என்பதே இங்கு நானடி. நான் என்பதே இங்கே நாமடி.**

**ஒரு பாதி கதவு நீயடி. மறு பாதி கதவு நானடி**

**பார்த்து கொண்டே திறந்து இருந்தோம்**

**சேர்த்து வைக்க காத்திருந்தோம்**

**ஒரு பாதி கதவு நீயடா, மறு பாதி கதவு நானடா**

**தாழ் திறந்தே காத்திருந்தோம். காற்று வீச பார்த்திருந்தோம்**

**இதயம் ஒன்றாகிப் போனதே! கதவே இல்லாமல் ஆனதே!**

**இனிமேல் நம் வீட்டிலே பூங்காற்று தினம் வீசுமே!**

அடுத்த மூன்று தினங்களிலேயே மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு தாயும் சேயும் அழைத்து வரப்பட்டனர். அடுத்த இரண்டு நாளில், நல்ல மூகூர்த்தத்தில், பிரசன்னா எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்து இருக்க, பதிவாளர் அலுவலகம் சென்று கையொப்பமிட்டு, ஏற்கனவே அவர்களிடையே இருந்த உணர்வு பூர்வ திருமண பந்தம் அரசாங்க காகிதத்தில் உறுதி செய்யப்பட்டது.

சத்யமூர்த்தி இரு வாரங்கள் மட்டுமே விடுப்பு எடுத்து வந்து இருந்ததால், குழந்தை பிறந்த பதினோராவது நாள், ஐயர் வைத்து குழந்தை பிறந்த தீட்டினை கழிக்கும்



சம்பிரதாயங்களும், கூடவே திருமண பந்தத்தை உறவினர்களுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சியும் இனிதே முடிந்தது.

நிர்மலாவின் இள வயதும், சத்யா ராணுவ வீரன் என்ற பதவியும், குழந்தையை அவன் கொண்டாடிய விதமும், ஏற்கனவே அவன் சில முறை வந்து இருந்த போது பேசிய பேச்சுக்களும், செய்த செயல்களும், செவி வழி செய்தியாக பண்ணையாட்கள் மூலமாக சின்ன ஊரில் பலரையும் சென்று அடைந்து இருந்ததால், அவர்களை வாழ்த்த நிறைய இதயங்கள் அன்றைய விழாவிற்கு வருகை தந்தனர்.

அதனாலேயே, செழியன் மறைவிற்கு பிறகு ஓராண்டு கூட நிறைவு பெறாத நிலையில், இப்படி ஒரு மறுமணமா? இதுக்கு இந்த அம்மாவும் சம்மதித்தாங்களா என்று வம்பு பேசும் சில வீணர்களின் பேச்சினை காதில் வாங்கி கொள்வோர் யாரும் இல்லை.

மதிய விருந்து முடிந்து, உறவினர்கள் விடை பெற்று சென்ற பிறகு, ''குழந்தை என்னிடம் இருக்கட்டும் நிர்மலா, ஒரு மணி நேரம் தூங்குங்க. குழந்தை அழுதால் கொண்டு வந்து கொடுக்கிறேன்...'' என்று சொல்லி விட்டு சென்ற மங்கையை புன்னகை மிளிர பெருமையோடு பார்த்தார்கள்.

மருத்துவ மனையில் இருந்து வீட்டிற்கு திரும்பியது முதல், நிர்மலா மங்கை அறையில் குழந்தையோடு தங்கி இருந்ததால், அந்த வீட்டில் அவன் தங்கி இருந்த அந்த பதினோரு நாட்களில், முதல் முறையாக முன்பு செழியன் தங்கி இருந்த அறைக்குள் தனியாக இருவரும்

அப்போது தான் செல்ல, நிர்மலாவின் கால்கள் லேசாக தடுமாறியது.

அவளை தாங்கிப் பிடித்து தோளோடு சேர்த்து அணைத்து உள்ளே சென்று அவளை கட்டிலில் அமர வைத்தவன் தானும் அருகில் அமர்ந்தான். வெகு நேரம் வரை இருவரும் படுக்கவும் இல்லை பேசவும் இல்லை. அவளின் உணர்வுகள் புரிந்தது.

''நான் இங்கிருந்து விடுமுறை முடிந்து கிளம்பிய போது, உன் மனம் எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கும் என்று புரிகிறது. நான் ஒரு மடையன், அன்று யூனிபார்மை இங்கே போடாமல் சென்னைக்கு சென்று ஸ்டேஷனில் கூட மாற்றி இருக்கலாம். ஐ ஆம் சாரி நிலா...'' என்று வருத்தமாக சொன்னான்.

''இல்லை சத்யா. நீங்க சாரி சொல்ல அவசியம் இல்லை. என்ன நடக்கும் என்பதை ஆண்டவன் ஏற்கனவே தீர்மானித்து விட்டான் தானே? அந்த நேரத்தில் நானும் என் மனதை புரிந்து கொண்டேன். நான் தான் உங்களிடம் சாரி சொல்ல வேண்டும். உங்களை நீங்க முதல் முறை இங்கே வந்தபோது, பேசாமலும், டெல்லியில் இருக்கும்போது, தேவை இல்லாமல் கடுமையாக பேசியும், நிறையப் படுத்தி இருக்கிறேன். ஐ ஆம் சாரி சத்யா...''

''நிலா, இந்த சாரி நம் இரண்டு பேரிடமும் மாறி மாறி படும் பாடு இருக்கே? பாவம் நிலா. அதை விட்டுடுவோம். வேறே ஏதாவது சந்தோஷமா பேசுவோமே?''

''நீங்க முதலில் சென்னையில் பார்த்த போது என்னை நிறைய விதங்களில் பாதித்து இருக்கீங்க என்று பேசலாமா?'' என்று கேட்க அவன் விழி விரித்தான்.

''நிஜமாவா...? சொல்லு...'' என்று பரபரக்க லேசாக முகம் சிவந்தாள்.



''பாதிப்புன்னா, காதல் கல்யாணம் என்ற மாதிரி இல்லை. கோபம். அந்த கோபத்திலும், உங்களை மாதிரி மிலிட்டரி ஆபீசர் ஆக வேண்டும் என்ற எண்ணம் வந்தது. என் மன உணர்வுகளை வெளியில் அதிகம் பகிர்ந்து கொள்ள மாட்டேன் என்பதால், டயரி எனக்கு புகலிடம்'' என்றபடி, அவளின் டயரியை எடுத்து நீட்டினாள்.

''ஹேய் நீயும் டயரி எழுதுவியா...?''

''நீயும்... என்றால்... நீங்களும் எழுதுவீங்களா...?'' என்று அவள் ஆச்சரியத்துடன் கேட்க அவன் வெட்கத்துடன் புன்னகை செய்தான்.

அவள் கொடுத்த டயரியை வாங்கி புரட்டியவனுக்கு, அவளின் மன போராட்டமும், அவளின் மனதில் தான் எத்தனை உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து இருக்கிறோம் என்பதும் புரிந்தது.

''நானும் எழுதுவேன் நிலா. சந்தோஷம் என்றாலும், துக்கம் என்றாலும், என் மனதை பாதிக்கும் எல்லா விஷயமும் இதில் இருக்கும்'' என்று சொல்லியபடி பெட்டியில் இருந்து டயரியை எடுத்து நீட்ட, அவள் சின்ன வியப்புடன் வாங்கினாள்.

பதினெட்டு வயதில், தன் பெற்றோர் கொடுத்த சொத்து ஏற்படுத்திய காயத்தில் இருந்து, அவளை தேவை இல்லாமல் மிரட்டி விட்டோம் என்ற குற்ற உணர்வு, வீட்டை காப்பாற்றி தந்ததற்கான நன்றி, திருமண வீட்டில் அவளை கண்டதும் அவன் பட்ட அவஸ்தை, சோளிங்கரில் அவளுடைய தகவலை கண்டு அடைந்த உற்சாகம், விடுமுறை முடிந்து கிளம்பும்போது இருந்து அவனுடைய உணர்வுகள், என்று அவனின் எழுத்துக்களில், அவன் இது வரை சொல்லாத பல செய்திகளை

யும் உணர்வுகளையும் உரக்க சொல்ல, அவள் நெகிழ்ந்து கரைந்தாள்.

''நீங்க... அப்போதில் இருந்தேன்... என்னை...'' என்று சொன்னவள் குற்ற உணர்வில் தவிப்பது புரிய, அவன் பேச்சை மாற்றினான்.

''அது கடந்த காலம் நிர்மலா. நம் எதிர்காலம் பற்றி ஏதாவது பேசலாம்'' என்று அவன் சொல்ல அவள் தலை அசைத்து புன்னகைத்தாள்.

''வெறுமனே சிரித்தால் என்ன அர்த்தம்? எதிர்காலம் பற்றி பேசுவோம் என்று சொன்னேன். எதிர்காலம் என்று நான் சொன்னது அடுத்த குழந்தையை பற்றி...'' என்று அவளின் முகத்தை ஆர்வமாக பார்த்தான்.

''அவன் சொல்ல வந்தது புரிய, அந்த கடிதத்தின் நினைவு வந்தது. என்ன எல்லாம் சொல்லி இருந்தான்? தன் நலத்தை முன்னிலைபடுத்தி என்ன எல்லாம் உறுதி அளித்தான்? இவன் தனக்காக இவ்வளவு தூரம் செய்ய, தான் இவனுக்கு என்ன செய்தோம்?

''நான் உங்களுக்கு என்ன செய்தேன் சத்யா...? ஏன் நீங்க என்னை போய்...? ஊர் உலகத்தில், என்னை விட அழகா... என்னை விட நிறைய படித்த...'' என்று ஆரம்பித்தவளை வேகமாக இடையிட்டான்.

''என்ன பேசற நிலா...? அழகு பார்த்து காதல் வருவதில்லை. அழகு பார்க்கும் கண்களில் இருக்கு. அந்த கண்ணில் காதல் இருந்தால் தான் நீ அழகா தெரிவாய். படிப்பு எப்போ வேண்டுமானாலும் படிக்கலாம். அதோடு, நாலு பேருக்கு நல்லது செய்யணும் என்ற எண்ணம் இருக்கும் வாழ்க்கை பாடத்தை நீ ஏற்கனவே படிச்சாச்சு. எனக்கு அது போதும்...''



''சத்யா, இதை ஒரு விவாதத்துக்காக கேட்கிறேன். ஒருவேளை நான் சம்மதம் சொல்லாமல் இருந்தால்...'' என்று கேட்க அவன் புன்னகை செய்தான்.

''கஷ்டமா இருந்து இருக்கும் நிர்மலா. அன்பு இன்னொரு அன்பை தவிர வேறு எங்கும் தோற்பதில்லை. நீ என் அன்பை மறுக்க நினைப்பதற்கும் அது செழியன் மேலேயோ, அல்லது மங்கை அம்மா மேலேயோ நீ வைத்த அன்பு தான் காரணமாக இருக்க முடியும்? அதனால், உன் முடிவினை ஏற்று கொண்டு இருப்பேன். ஆனால் இன்னொரு கல்யாணம் பண்ணி இருப்பேனா? எனக்கு பதில் சொல்ல தெரியலை...'' என்று எதார்த்தமாக சொன்னவனை கண்ணில் நீரோடு பார்த்தாள்.

'உனக்காக எதையும் இழக்கிறவர்களை விட, எதற்காகவும் உன்னை இழக்காதவர்களை நேசி' என்று எங்கோ படித்த வாசகம் நினைவில் வந்தது. இவன் தனக்காக எதையும் செய்பவன். இவனுக்காக தானும் ஏதாவது செய்ய வேண்டாமா? இவனுக்கு ஒரு நார்மலான திருமண வாழ்க்கையை கொடுப்பது தன் கடமை அல்லவா?

அவளின் நீண்ட யோசனையை பார்த்து விட்டு, ''நிர்மலா என்னிடம் எப்படி சொல்வது என்று யோசிக்க வேண்டாம். உனக்கு எது சௌகரியமாக இருக்கோ அதை தாராளமா சொல்லலாம். இப்பவே சொல்லணும் என்று கூட அவசியமில்லை. ஆனால்...'' என்று இழுத்தவனின் மனம், இயல்பான திருமண வாழ்க்கைக்கு ஏங்குகிறது என்பதை கூட புரிந்து கொள்ள முடியாத மக்கா அவள்?

''எனக்கு ஒரு ஆசை சத்யா. அதை நிறைவேற்றி வைப்பீங்களா?'' என்று சின்ன சிரிப்புடன் கேட்டாள்.

''கட்டாயம். என் கையில் இருந்தால் நிச்சயம் செய்வேன். சொல்லு...''

''ஏற்கனவே அம்மா சின்னவரை மிலிட்டரிக்கு அனுப்ப சொல்லிட்டாங்க. ஆனால் இவங்க எல்லாருமே ஆண் பிள்ளையை சந்தோஷமா அனுப்பும் அளவுக்கு பெண்ணை அனுப்பற மாதிரி தெரியலை. அதனால் நாம் ஒரு பெண்ணை பெற்று, அந்த பெண்ணை, கம்பீரமா வளர்த்து ஆளாக்கி அவளை ராணுவ சேவைக்கு அனுப்பணும் என்று ஆசையா இருக்கு...'' என்று சொல்ல அவன் விழிகள் மலர்ந்தது.

''பண்ணிட்டால் போச்சு. என் வண்ண நிலா சொல்லி ஒரு விஷயம் நான் செய்யாமல் இருப்பேனா? கட்டாயம் செய்வோம். இப்ப எனக்கு ஒரு ஆசை வந்துடுச்சே!'' என்று இழுத்தவனை வியப்போடு பார்த்தாள்.

''சத்யா சொல்லி நிலா செய்யாமல் இருப்பாளா? சொல்லுங்க...'' என்று அவளும் புன்னகையோடு ஊக்கினாள்.

''ஆல்ரெடி ஒருத்தர் ரெடி, இன்னொரு பெண்ணை அனுப்பணும் என்று சொல்லி விட்டாய். அப்புறம் ஒன்றை மட்டும் மிச்சம் வைப்பானேன்? இன்னொரு பையனை பெற்று, மூவரையும், தரைப் படை, விமானப் படை, கப்பல் படை என்று மூன்று படைக்கும், அனுப்ப எனக்கு ஆசை...'' என்று சொல்ல அவள் பெருமை பொங்க அவனை பார்த்தாள்.

''நான் நினைத்ததை விட நீங்க கிரேட் சத்யா. உங்களுக்கு என்னுடைய சல்யூட்'' என்று எழுந்து நின்று நெற்றியில் கைவைத்து சலாமிட, அவன் சிரிப்போடு எழுந்து அவளின் கையை நெற்றியில இருந்து விலக்கி தன் கன்னத்தில் வைத்து அழுத்த, ''நிர்மலா... குழந்தை



முழித்து கொண்டான் பாரு...'' என்ற மங்கையின் குரல் கேட்டது.

''இதோ வரேன்மா...'' என்ற பதிலோடு வெளியே சென்றவளை புன்னகையோடும், நிறைந்த மனதோடும் தொடர்ந்தான் சத்யா.

நிர்மலா அறைக்குள், குழந்தைக்கு பசியாற்றி கொண்டு இருக்க, அடுக்களையில் மங்கை காபி போட, வாசலுக்கு சென்ற சத்யா, அங்கே வேலை செய்து கொண்டு இருந்த அந்த பாட்டியை அழைத்தான்.

''பாட்டி, இன்னிக்கு விழா நடந்தது இல்லையா? குழந்தைக்கு திருஷ்டி பட்டு இருக்கலாம். அதனால் சுத்தி போடுங்க பாட்டி...'' என்று சொல்ல, ''ராசா! இதெல்லாம் பார்க்கிறாயா நீ? ஆறு மணிக்கு மேலே சுற்றிப் போட ஏற்கனவே பெரியம்மா சொல்லிட்டாங்கப்பா. நீ போ நான் வரேன்...'' என்று அவனை திருப்பி அனுப்பியவர் சொன்ன நேரத்திற்கு வந்தார்.

அவர்கள் நாலு பேரையும் சோபாவில் அமர வைத்து, தோட்டத்தில் விளைந்த பூசணியில் சின்னதாக கீறி, அதில் சூடம் ஏற்றி, சுற்றி திருஷ்டி கழித்து உடைத்தார்.

''திருஷ்டி கழித்த இடத்தில இருந்து கொஞ்சம் நகர்ந்து உட்காரணும்'' என்று சொல்லி அவர்களுக்கு தனிமை கொடுத்து, குழந்தையுடன் எழுந்த மங்கை அம்மாவின் கை பற்றி இழுத்தான் சத்யா.

''நகர்ந்து உட்காரணும் என்று சொல்லிட்டு எங்கே போறீங்க...? வாங்க. நீங்க நடுவில் உட்காருங்க. நாங்க ரெண்டு பேரும் இடம் வலமா மாறி உட்கார்ந்து கொள்கிறோம்...'' என்று சொல்ல, ''அடுப்படியில் வேலை இருக்கு சத்யா...'' என்று நகர முயன்றார்.

''நைட் சாப்பாடு தானேம்மா? எட்டு மணிக்கு சாப்பிட் டால் போதும். அதுக்கு ஏழே முக்காலுக்கு எழுந்தால் போதும். இப்ப உட்காருங்க'' என்று அழுத்தமாக நிர்மலா சொல்ல, அவர் அமர்ந்தார்.

குழந்தையை அவர் மடியில் கிடத்திய நிர்மலா, ''நீங்க எங்களுக்கு தனிமை கொடுப்பதா நினைத்து எங்கேயும் போக வேண்டாம். இந்த குடும்பத்தில், ஒருத்தர் இல்லா மல் இன்னொருத்தருக்கு தனிமை தேவை இல்லைம்மா'' என்று சொல்லி விட்டு அவரின் கன்னத்தில் முத்தமிட் டாள் நிர்மலா.

''நிலா சொல்றதுக்கு நம்ம வீட்டில் அப்பீல் இருக்காம்மா?'' என்று மங்கையிடம் சொன்னவன், நிர்மலாவை பார்த்து, 'அதென்ன! வலது கன்னத்திற்கு மட்டும் கொடுத்தால் இடது கன்னம் என்ன பாவம் செய்தது' என்று சிரித்து விட்டு தானும் முத்தமிட்டான் சத்யா.

கண்களில் பொங்கிய ஆனந்த கண்ணீருடன், மடியில் தன் மகனின் வாரிசான மழலையுடன், இரண்டு கைகளாலும், மகனாக மாறியவனையும், மருமகளையும் அணைத்து கொண்டார் மங்கையர்க்கரசி.

**பச்சை கிளிகள் தோளோடு, பாட்டு குயிலோ மடியோடு**
**பூலோகம் ஆனந்தத்தின் எல்லை.**
**இந்த பூமிக்கு கண்ணீர் சொந்தமில்லை**
**சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளே சொர்க்கம் இருக்கு**
**அட சின்ன சின்ன அன்பில் தானே ஜீவன் இன்னும் இருக்கு,**
**பட்டாம்பூச்சி கூட்டத்துக்கு பட்டா எதுக்கு?**
**அட பாசம் மட்டும் போதும் கண்ணே,**
**காசு பணம் என்னாத்துக்கு?**

★ இனி எல்லாம் சுகமே! ★


மௌனம்
பேசியதே!
அமுதவல்லி கல்யாணசுந்தரம்